6B
12-56

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY

வாய்மையே வெல்லும்

TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு

சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

VOL: 29. NO: 3 YEAR: 1990

DATE: 21 April 1990

D
V2 11, 31. N. N90
N.90. 29.3.
213995

வெளியீடு 16—2—1991 Issued 16-2-1991

983

POLLUTION CONTROL BO
LIBRARY.
MADRAS 4

23 ஏப் 1991
சென்னை - 600 004.

தமிழ்நாடு
சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
செயலக வெளியீடு

TAMIL NADU
LEGISLATIVE ASSEMBLY DEBATES

OFFICIAL REPORT

சனிக்கிழமை, ஏப்ரல் 21, 1990 - தொகுதி 29 - எண் 3

Saturday, the 21st April, 1990-Volume 29-No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat, Fort St. George
Madras-600 009

[Price Rs. 3-00

உள்ளடக்கம்.

21—4—1990.

POLLUTION CONTROL BOARD LIBRARY 23/4/91 MADRAS 4

பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் 453-491

2. தகவல் கோரல்—

காவிரி நீர்ப் பிரச்சினை பற்றி விவாதிக்க 19-4-1990 ஆம் நாளன்று நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட அ.இ.அ.தி.மு.க. வினரின் புகைப்படங்கள் பத்திரிகைகளில் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுவது குறித்து .. 492-494

3. ஒத்திவைப்புத் தீர்மானம்—

இராமேஸ்வரம் கடல் பகுதியில் மீனவர்கள் சிலர் கடத்தப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து 494-503

4. உரிமை மீறல் பிரச்சினை—

"தினமலர்" நாளிதழ் மீது (அவை நடவடிக்கைகள் பற்றி வெளியிடப்பட்டுள்ள செய்தி குறித்து)—பேரவைத் தலைவரின் தீர்ப்பு 504-505

5. 113-வது விதியின் கீழ் உறுப்பினரின் அறிக்கை—

சாத்தூரில் சில வகுப்பினரிடையே ஏற்பட்ட மோதலையொட்டிச் சிலர் உயிரிழந்ததால் பொது மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்த ஒத்தி வைப்புத் தீர்மானத்திற்கு 11—4—1990 ஆம் நாளன்று முதலமைச்சர் அளித்த பதிலுரை மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அதுபற்றித் தெரிவித்த கருத்து ஆகியவை குறித்து 505-507, 509-510

பக்கங்க

6. விதி 110-இன் கீழ் சட்டத்துறை அமைச்சரின் அறிக்கை—

ஹஜ் பயணிகளுக்கு விமானப் பயண வசதிகள் செய்யப்பட்டுள்ளது குறித்து. 508–5

7. அறிவிப்புகள்—

(அ) உறுப்பினர்களுக்கு பேரவை, மேலவை வளாகங்களில் செய்யப்பட்டுள்ள இட வசதி குறித்து 510

(ஆ) அவைக்குள்ளே அமைச்சர்களிடம் உறுப்பினர்கள் மனுக்கள், கடிதங்கள் அளிப்பது குறித்து .. — 510–5

(இ) பேரவை அலுவல்கள் 573–5

8. கவன ஈர்ப்பு—

(அ) மாதவரத்தில் சில பகுதிகளை வீட்டு வசதி வாரியம் கையகப்படுத்துவதால் அப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதிப்பு. 516–5

(ஆ) ஆதி திராவிடர் நலத்துறைப் பள்ளிகளில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளது குறித்து .. 518–5

9. சட்ட முன்வடிவு—(அறிமுகம் செய்தல்)

மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு, 1990 ... — — 520

10. மானியக் கோரிக்கைகள், 1990–91—விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 20—வேளாண்மை.
(ஆ) கோரிக்கை எண் 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு. } 521–6

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம். 521,522,5 536,623–6

திரு. க. பழனிசுவாமி. 623–5

*திரு. அன்பில் பொய்யாமொழி. 527–5

திரு. கே. ஆர். இராமசாமி. 533–5

[1990 ஏப்ரல் 17

துகள் வெர்மிகுலைட்டை தொழில்நுட்பத்தை மேம்படுத்தித் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டு உள்ளது. சில அயல் நாட்டு நிறுவனங்கள் கூட்டு முயற்சியில் வெர்மிகுலைட் அட்டை தயாரிக்கும் தொழிற்சாலை கழகம் நிறுவுவதில் ஆர்வம் காட்டியுள்ளன.

புவியியல் மற்றும் சுரங்கத்துறை
Department of Geology and Mining

1957 ஆம் ஆண்டிலிருந்து தொழில் வணிக இயக்குநரகத்தின் ஒரு பிரிவாக இயங்கி வந்த புவியியல் மற்றும் சுரங்கத்துறை 1983 ஆம் ஆண்டிலிருந்து தனித் துறையாக இயங்க ஆரம்பித்தது.

தென்னாற்காடு மாட்டம் விருத்தாசலம் வட்டத்தில் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் குத்தகைப் பகுதிகளுக்கு வெளியே 16.5 ச.கி.மீ. பரப்பில் பழுப்பு நிலக்கரி கண்டறிவதற்கென விரிவான துரப்பண ஆய்வை இத்துறை மேற்கொண்டுள்ளது.

திருச்சி அருகில் இருங்களூரில் திருவாளர்கள் வைரம் மற்றும் மணிக்கற்கள் வளர்ச்சி நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் செயற்கை மணிக்கற்கள் மையம் ஒன்றை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கென இருங்களூரில் 10 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் தோவாலா வட்டம் அருமாநல்லூரைச் சுற்றியுள்ள பகுதிகளில் கிராபைட் கனிமத்தைக் கண்டறிய 8 புவிபௌதிக வரிசைக் கோடுகளில் விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

புவியியல் மற்றும் சுரங்கத்துறை 1990-91 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட புதிய ஆய்வுகளை மேற்கொள்ள உத்தேசித்துள்ளது :

(1) திருச்சி மாவட்டத்தில் ஜெயங்கொண்டசோழபுரம் பகுதியில் பழுப்பு நிலக்கரி கண்டறிவதற்கென விரிவான துரப்பண ஆய்வு.

(2) நெல்லை-கட்டபொம்மன் மாவட்டத்தில் தென்காசி மற்றும் திருநெல்வேலிக்கு இடைப்பட்ட மலைப் பகுதிகளில் வெள்ளீயம் மற்றும் பிளாட்டினம் கண்டறிவதற்கென புவி இரசாயன ஆய்வு.

(3) நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம் நாங்குநேரி வட்டம் பனங்குடிக்கருகிலும் மற்றும் அம்பாசமுத்திரம் வட்டம் சிங்கம்பட்டி மற்றும் களக்காடு பகுதிக்கு அருகிலும் கிராபைட் கனிமத்தைக் கண்டறிவதற்கென புவி பௌதிக ஆய்வு.

[1990 ஏப்ரல் 17

(4) வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் கொரட்டி பகுதியிலும் மற்றும் தருமபுரி மாவட்டத்தில் சாமல் பட்டியை சுற்றியுள்ள பகுதிகளிலும் கார்பொனடைட் பாறை களில் (காந்தவகை மற்றும் ரேடியோமெட்ரிக்) புவி பௌதிக ஆய்வு.

(5) ஒப்பந்தப்புள்ளி முறையில் இரண்டாம் கட்ட குத்தகை வழங்கும் முறைக்கென மீதமுள்ள 1,000 ஹெக்டேர் அரசு புறம்போக்கு நிலங்களில் 600 ஹெக்டேர் பரப்பளவில் (காப்புக்காடு பகுதிகளில் தமிழ்நாடு கனிம நிறுவனம் வைத்துள்ள பகுதிகள் நீங்கலாக) கருப்புக்கல் இருப்பு பற்றிய ஆய்வு.

(6) தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் தற்போதுள்ள குத்தகைப் பகுதிகளில் கருப்புக்கல் இருப்பு பற்றி மறு மதிப்பீடு.

கருப்புக் கற்கள் பற்றிய புதுக் கொள்கை (New granite Policy.)

1975 ஆம் ஆண்டு முதற்கொண்டு கருப்புக் கற்கள் வெட்டி எடுப்பதற்கு நேரடி குத்தகை முறை அனுசரிக்கப்பட்டு வந்தது. இதன் மூலம் தனி நபரோ அல்லது நிறுவனமோ, எவ்வளவு பரப்பளவு கொண்ட நிலத்திற்கும், வரையறை இல்லாமல் ரூபாய் 100 மட்டும், கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்கலாம். உரிமத் தொகை கன மீட்டருக்கு ரூபாய் 50 என நிர்ணயிக்கப் பட்டது. தனது சொந்த தொழிற்சாலையிலேயே தனி நபரோ அல்லது நிறுவனங்கள் வெட்டி எடுக்கப்பட்ட கருப்புக் கற்களை பயன்படுத்த வேண்டும் என்ற கட்டாயம் இல்லாதிருந்த காரணத்தால், குத்தகைதாரர்கள் ஒழுங்குப் படுத்தப்படாத நிலையில் கற்பாறைகளை வெட்டி எடுத்து அவற்றை ஏற்றுமதி செய்து வந்தார்கள். இவ்வாறு திட்டம் ஏதுமில்லாது கற்களை வெட்டி எடுக்கும் பணிகள் செய்து வந்தமையால், கற்குவாரிகளில் உள்ள கற்களின் இருப்பு ஆயுட்காலம் 10 அல்லது 15 ஆண்டு களுக்கு இருந்த போதிலும் நான்கு ஐந்து ஆண்டுகளுக்கு பிறகு பயனற்றதாக போய்விடுகிறது. ஏற்றுமதி சந்தையில் கருங் கல்லுக்கு பெருகிவரும் தேவையை கருத்திற் கொண்டும் தமிழ்நாட்டில் மிகப் பெரிய அளவிற்கு கருங்கற்கள் இருப்பு இருப்பதாலும், அக்கற்கள் மிகச் சிறந்த தரக்கற்களாக இருப்ப தாலும் அவைகளுக்கு ஏற்றுமதி வாய்ப்பும் அதிகமாக இருப்ப தாலும், இன்றைய அரசு, கருங்கற்கள் குத்தகை விடும் முறையை சீராக்கி மாநில அரசிற்கு மேலும் வருவாயை ஈட்டுவதோடு அல்லாமல் மாநிலத்திலேயே பல தொழிற்சாலை களை ஏற்படுத்தி வேலை வாய்ப்புகளையும் பெருக்கவும் நினைத்தது. இதன் மூலம் அதிக அளவு அந்நியச் செலாவணியும் கிடைக்க வழிவகுத்தது. கருங்கற்கள் வெட்டி எடுப்பதற்கு குத்தகை விடும்போது நிபந்தனைகளை ஏற்படுத்தி இத்தொழிலினை

		பக்கங்கள்
*திரு. கி. வேணு	..	537–541
*திரு. வி. தம்புசாமி	..	542–549
திரு. ஏ. எம். இராமசாமி	..	549–552
திரு. சோ. அழகர்சாமி	..	553–562
*திரு. ஆர். பஞ்சாட்சரம்	..	562–568
திரு. அ. பாப்பா சுந்தரம்	..	568–573
திரு. ஆர். ஈஸ்வரன்	..	575–579
*திரு. பொ. முருகேசன்	..	579–584
திரு. வி. கே. இராசு	..	585–589
*திரு. கொ. மாதப்பன்	..	589–592
*திரு. டி. சி. விஜயேந்திரையா	..	593–594
திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம்	..	594–599
*திரு. எம். அண்ணாமலை	..	599–602
திரு. எம். முகமது சித்திக்	..	603–606
திரு. பொ. நடராசன்	..	606–609
திரு. கே. ஏ. மணி	..	610–614
*திரு. கே. ஏ. செங்கோட்டையன்	..	614, 615, 618–623
11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்	..	658–659

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
23995
சென்னை-600 008

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சித்திரை 8, பிரமோதூத–திருவள்ளுவர் ஆண்டு 2021

1990 ஏப்ரல் 21, சனிக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் முன்னவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

" சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை. "

பல தொழில்கள் செய்து சுற்றிச் சுழன்றாலும் உலகம் ஏர்த்தொழிலின் பின்னால்தான் நிற்கின்றது. அதனால் எவ்வளவு துன்புற்றாலும் உழவுத் தொழிலே, அதாவது வேளாண்மையே சிறந்ததாகும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

சோவியத் யூனியன் ஆர்மேனியா பகுதியில் நில நடுக்கத்தால் பாதிப்புக்குள்ளான மக்களுக்குத் தமிழகம் சார்பாக செய்யப்பட்ட உதவிகள்.

* *2569* திரு. என். பழனிவேல் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சோவியத் யூனியன் ஆர்மேனியா பகுதியில் நில நடுக்கத்தால் பாதிப்புக்குள்ளான மக்களுக்குத் தமிழகம் சார்பாக செய்யப்பட்ட உதவிகளின் விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

சோவியத் யூனியனில் ஆர்மேனியா நகரத்தில் ஏற்பட்ட நில நடுக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காக *14—12—1988* நாளிட்ட பொதுத்துறை அரசாணை எண் *2160*ல் (G. O. Ms. No. 2160, Public Department, dated 14th December 1988) மேதகு ஆளுநர் அவர்கள் தலைமையிலான

குழு ஒன்று அமைக்கப்பட்டது. அதன் பிறகு 3–1–1989 நாளிட்ட நிதித்துறையின் அரசாணை எண் 10ல் [G.O. Ms. No. 10, Finance (CMPRF) Department, dated 3rd January 1989.] ஆர்மேனிய நில நடுக்க நிவாரண நிதி ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது. இந் நில நடுக்க நிவாரண நிதிக்கு நன்கொடையாகப் பெறப்பட்ட ரூ. 20,87,008.36-ம் கேட்பு வரைவோலை மூலம் இந்தியப் பிரதமர் ஆர்மேனிய நிவாரண நிதிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோவியத் யூனியனில் ஆர்மேனிய நகரத்தில் ஏற்பட்ட அந்த நிலநடுக்கத்தின்போது, இந்தியாவில் இருந்து கல்வி கற்கச் சென்றவர்கள் யாரேனும் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்களா? அப்படி ஆகியிருந்தால் அவர்களுக்கு நம்முடைய அரசு சார்பில் ஏதேனும் உதவிகள் செய்யப்பட்டனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மூலக் கேள்வி நிதி திரட்டியது, நிதி அனுப்பப்பட்டது தொடர்புடையதாகும். உறுப்பினர் கேட்பதற்கு விவரங்கள் என்னிடத்திலே இல்லை.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ரூ. 20,87,000 நம்முடைய தமிழகத்தின் சார்பிலே சோவியத் யூனியனுக்கு இந்தியப் பிரதமர் மூலமாக அனுப்பியதாக நம்முடைய முதல்வர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அந்தப் பணம் எந்த முறையிலே வசூல் செய்யப்பட்டது? வசூல் செய்த தொகை முழுவதும் கொடுக்கப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஒரு குழு அமைக்கப்பட்டது. 1988இல் அமைக்கப்பட்ட அந்தக் குழுவிற்கு மேதகு ஆளுநர் தலைவராக இருந்தார். அந்தக் குழுவில் ஆளுநருடைய அப்போதைய இரு ஆலோசகர்கள், தலைமைச் செயலர், நிதிச் செயலர், பொதுத் துறைச் செயலர் ஆகிய 5 பேர் அலுவல்முறை உறுப்பினர்களாகவும், சென்னை ஷெரீப் மற்றும் திருமதி சரோஜினி வரதப்பன், திருமதி ஆண்டாள் தாமோதரன், திருமதி இந்திரா கோத்தாரி, திரு. ஜி. வெங்கடேஸ்வரன், திரு. எஸ். லக்ஷ்மணன், திரு. அரி ஈஸ்வரன், திரு. அசோக் கும்பத், திரு. ஆர். காந்தி மற்றும் திரு. வி. சி. குழந்தைசாமி ஆகிய 10 பேர் அலுவல் சார்பற்ற உறுப்பினர்களாகவும் இருந்து அதை வசூலித்தார்கள். அந்தத் தொகை இரண்டு தடவையாக இந்தியப் பிரதமருடைய நிதிக்கு அனுப்பி வைக்கப்பட்டது. 26–7–1989இல் 20,73,232 ரூபாயும், 8–11–1989இல் 13,775 ரூபாயும் அனுப்பி வைக்கப்பட்டது. இங்கே

தனிப்பட்டவர்கள், சில மக்கள் நல ஸ்தாபனங்கள், அரசியல் கட்சிகள், இவைகளெல்லாம்கூட, இந்த நிதிக்குப் பணம் தந்து இருக்கிறார்கள்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆர்மேனியா பகுதியில் நிலநடுக்கத்தால் ஏற்பட்ட விபத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தமிழகத்திலே உள்ள அரசியல் கட்சிகள் சார்பில் நிதி அனுப்பியது குறித்த விவரம் ஏதேனும் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

9-05 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொன்னேன், அரசியல் கட்சிகளிடம் நிதி திரட்டப்பட்டது என்று, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், திருமதி ஜானகி அணியின் சார்பாக அப்போது 50 ஆயிரம் ரூபாய் இந்த நிதிக்கு நன்கொடை வழங்கப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, பிரதமர் தேசிய நிவாரண நிதி என்ற பெயரில் 50 ஆயிரம் ரூபாய்க்கு 'டிமாண்ட் டிராப்ட்' எடுக்கப்பட்டு, 14-12-1988-ல் அனுப்பப்பட்டது. காங்கிரஸ் கட்சியின் சார்பாகவும், நேரடியாக மத்திய அரசுக்கு ஒரு லட்சம் ரூபாய் அனுப்பப்பட்டதாகத் தகவல் இருக்கிறது.

ஓய்வுபெறும் நாளில் தற்காலிக பணிநீக்கம்,

*2680 திரு. எஸ். டி. உகம்சந்த் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரசுத்துறை மற்றும் அரசு நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் ஓய்வுபெறும் நாளில் அவர்கள் மீது உள்ள குற்றச்சாட்டுகளுக்கு முன்னறிவிப்பு ஏதுமில்லாமல் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்படும் முறையை மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர். மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட வேண்டிய நிகழ்வுகளில் அவர்கள் பணியிலிருந்து ஓய்வுபெறும் நாளுக்கு குறைந்தபட்சம் பதினைந்து நாட்களுக்கு முன்பாகவே தேவைப்படின் தற்காலிக

தனிப்பட்டவர்கள், சில மக்கள் நல ஸ்தாபனங்கள், அரசியல் கட்சிகள், இவைகளெல்லாம்கூட, இந்த நிதிக்குப் பணம் தந்து இருக்கிறார்கள்.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆர்மேனியா பகுதியில் நிலநடுக்கத்தால் ஏற்பட்ட விபத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தமிழகத்திலே உள்ள அரசியல் கட்சிகள் சார்பில் நிதி அனுப்பியது குறித்த விவரம் ஏதேனும் அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

9-05 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே சொன்னேன், அரசியல் கட்சிகளிடம் நிதி திரட்டப்பட்டது என்று, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், திருமதி ஜானகி அணியின் சார்பாக அப்போது 50 ஆயிரம் ரூபாய் இந்த நிதிக்கு நன்கொடை வழங்கப்பட்டது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக, பிரதமர் தேசிய நிவாரண நிதி என்ற பெயரில் 50 ஆயிரம் ரூபாய்க்கு 'டிமாண்ட் டிராப்ட்' எடுக்கப்பட்டு, 14-12-1988-ல் அனுப்பப்பட்டது. காங்கிரஸ் கட்சியின் சார்பாகவும், நேரடியாக மத்திய அரசுக்கு ஒரு லட்சம் ரூபாய் அனுப்பப்பட்டதாகத் தகவல் இருக்கிறது.

ஓய்வுபெறும் நாளில் தற்காலிக பணிநீக்கம்,

***2680 திரு. எஸ். டி. உகம்சந்த் :**

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரசுத்துறை மற்றும் அரசு நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்கள் ஓய்வுபெறும் நாளில் அவர்கள் மீது உள்ள குற்றச்சாட்டுகளுக்கு முன்னறிவிப்பு ஏதுமில்லாமல் தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்படும் முறையை மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர். மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட வேண்டிய நிகழ்வுகளில் அவர்கள் பணியிலிருந்து ஓய்வுபெறும் நாளுக்கு குறைந்தபட்சம் பதினைந்து நாட்களுக்கு முன்பாகவே தேவைப்படின் தற்காலிக

பணிநீக்கம் செய்யப்படவேண்டும் என 27-7-1989 நாளிடப்பட்ட பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த துறை அரசாணை நிலை எண் 439-ல் ஆணை வெளியிடப் பட்டுள்ளது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியை நான் கேட்டு, ஓராண்டுக் காலம் ஆகியிருக்கிறது. அரசாங்கம் 27-7-1989 அன்று உத்தரவுகள் பிறப்பித்திருக்கின்றது என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்லாமல், இன்றைக்கு அரசு ஊழியர்களாக இருப்பவர்கள், தங்கள் பணிமுடிந்து, ஓய்வுபெறுகின்ற நேரத்திலே தான் பணிநீக்கம் செய்யப்படுகிறார்கள் என்ற காரணத்தினால்தான், அரசிலே பல்வேறு தவறுகள் ஏற்படுகின்றன. இதைக் கருத்தில் கொண்டு, 15 தினங்களுக்கு முன்புதான் அவர்கள் எந்தக் காரணத்திற்காக தற்காலிகப் பணிநீக்கம் செய்யப்படுகிறார்கள் என்ற குறிப்பைத் தருகிறார்கள். அதைவிட, 6 மாதங்களுக்கு முன்னதாக காரணத்தை விளக்கி, அவர்கள்மீது என்னென்ன சார்ஜ்கள் இருக்கின்றன என்பதைக் குறிப்புரையிலே விளக்கி, அவர்களுக்கு ஒரு வாய்ப்பு தந்து, அதற்கான பதில் அவர்கள் அளிக்கின்ற வகையிலே அரசாங்கம் உத்தரவுகள் வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர். மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு அலுவலகங்களிலே உள்ள பல்வேறு அதிகாரிகள் நிலையில், விழிப்புப் பணி மற்றும் லஞ்ச ஒழிப்பு இயக்குநரகம், ஒழுங்குமுறை தீர்ப்பாயம், துறைத் தலைவர்கள் மற்றும் அரசு போன்ற பல்வேறு நிலையிலே தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டியிருப்பதால், ஏதாவது ஒரு நிலையில் காலதாமதம் ஏற்பட்டாலும், இதனால் பணியாளர் ஓய்வுபெறும் நாளில் ஆணை பிறப்பிக்க இயலாததாக ஆகிறது. அந்தக் காரணத்தினாலேதான், கடந்த காலத்திலே அவர்கள் ஓய்வு பெறுவதற்கு முதல் நாள் அவர்களை சஸ்பெண்ட் செய்வது என்ற ஒரு நிலை இருந்தது. அப்படிக் கடந்த ஆட்சியிலே, இதுவரை எனக்குக் கிடைத்த விவரங்களின்படி, 25 பேருக்குமேல் அதுபோல் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பிறகு, அமைச்சரவைக் கூட்டத்திலே, The following decision was taken :

"As a general Rule issue of suspension orders on the date of retirement should be avoided. In cases of Discriplinary Proceedings Director of Vigilance and Anti-corruption enquiry, Administrative Tribunal Proceedings and prosecution in the Courts, if it is necessary to place a Government employee under suspension

before his retirment advance action for suspension should be taken early enough so that such suspension orders should be passed atleast 15 days prior to the date of his retirment' At least 15 நாட்களுக்கு முன்னால், என்று சொல்லப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல விசாரணை ஓரளவுக்கு ஒரு முடிவுக்கு வந்துவிடுமேயானால், 3 மாதம் அல்லது 6 மாதத்திற்கு முன்பாகவேகூட அத்தகைய சஸ்பென்ஷன் செய்கின்ற அந்தநேர்வை நாம் தேர்ந்தெடுக்க முடியும். இருந்தாலும், இந்த அரசு, ஓய்வு பெறுவதற்கு முதல் நாள் அவர்களை சஸ்பெண்ட் செய்கின்ற அந்த முறை கூடாது என்ற முடிவு எடுத்திருக்கிறது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே 25 ஊழியர்கள் ஓய்வுபெறுவதற்கு முந்தைய நாள் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட ஊழியர்களுடைய அந்த சஸ்பென்ஷனை பரிசீலனை செய்து, அவர்களுக்கு வேண்டிய உண்மையான நியாயம் கிடைக்கின்ற அளவுக்கு, அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விவரத்தைதான் சொன்னேன். ஏற்கனவே இப்படி நடந்தது. ஒருவர் காலையிலே ஓய்வுபெறுகிறார் என்றால், மாலையிலே ஓய்வு பெறுவதற்கான விழாக்கள் எல்லாம் கொண்டாடுவதற்காக ஏற்பாடுகள் ஆகியிருக்கும். முதல்நாள் சஸ்பெண்ட் ஆர்டர் வந்துவிட்டால், அவர்கள் மிகவும் வேதனைக்கு ஆளாவார்கள். அந்த நிலை வேண்டாம் என்பதற்காகத்தான், முன்னதாகவே குறைந்தபட்சம் 15 தினங்களுக்கு முன்பாகவே ''சஸ்பெண்ட்'' என்று குறிப்பிடுகிறோம்.

9-10 மணி

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அலுவலர்கள்மீது நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இருக்கின்ற நல்லெண்ணத்தின் காரணமாக இந்தத் திட்டத்தை அறிவித்து இருக்கிறார்கள். ஆனால் இன்றையதினம் ஓய்வுபெற இருக்கின்ற பல அதிகாரிகள் அதை ஒருவிதமாகப் பயன்படுத்திக்கொண்டு பெரும் தவறு செய்ய முனைகிறார்கள். இதுபற்றி அரசிற்குத் தகவல் வந்துள்ளதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி ஏதாவது தகவல் இருந்தால், குறிப்பிட்டு உறுப்பினர் தெரிவித்தால், அவருடைய கடமையைச் செய்தவராக அவர் ஆவார்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வு பெறுவதற்கு முன்பு 15 நாட்களுக்கு முன்பு சஸ்பெண்ட் பண்ணினால் அதை விட்டுவிடுங்கள். ஆனால் ஒரு நாள், இரண்டு நாளைக்கு முன்னால் சஸ்பெண்ட் பண்ணி அவர்களை ரிட்டயர் ஆவதற்கு அனுமதி கொடுக்காமல் இருக்கிறார்களே, அப்படி இருப்பவர்களுக்கு அந்த ரிட்டயர் ஆவதற்கு அனுமதி வழங்கினால்தான் பென்ஷன் கிடைக்கும். அதையாவது செய்வதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது அவ்வப்போது உருவாகின்ற நேர்வுகளைப் பொறுத்தது. அதற்கேற்றவாறு அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வு பெறுகிற நாளைக் கருத்தில் கொள்ளாமல் குற்றம் சுமத்தப்பட்ட 6 மாதங்களுக்குள்ளாக இறுதித் தீர்ப்பு வழங்கப்பட வேண்டுமென்ற உத்தரவை அரசு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, முதலிலேயே நான் குறிப்பிட்டிருக்கிறேன். சில குற்ற நேர்வுகளில் விசாரணை முடிந்து, அதுகுறித்த அறிக்கை அரசிற்கு வருவதற்குத் தாமதமாகிறது. எனவே, இதை அவ்வளவு சரியாக ஏற்றுக் கொள்வதற்கு இயலவில்லை.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுத் துறையிலே பணியாற்றுகிறவர்கள் ஓய்வு பெறுகிற நாளுக்கு முன்னாலேயே சஸ்பெண்ட் செய்யப்படுவதைத் தடுப்பதற்கு ஆணையிட்டிருப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நமது அரசு ஏற்பட்டதற்குப் பிறகு, ஓய்வு பெறுவதற்கு ஒரு தினமோ, இரண்டு தினமோ முன்னாலே தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டவர்கள் விஷயத்தைப் பரிவுடன் கவனித்து உதவி செய்ய ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் எழுப்புகின்ற பிரச்சினை வேறானது. ஆனால் ஓய்வு பெறுவதற்கு 4, 5 நாட்களோ அல்லது 10 நாட்களோ இருப்பதற்கு இடையிலே யாரும் குற்றம் புரிவார்களேயானால், அவர்களை ஓய்வு பெறுவதற்கு முதல் நாள் சஸ்பெண்ட் செய்யத்தேவையில்லை என்றாலும் இதுகுறித்து என்னிடத்திலே வந்த நேர்வுகளில்—நான் என்ன குறிப்பிட்டிருக்கிறேன் என்றால்—அவர்களை ஓய்வு பெற விட்டு விட்டு, விசாரணையைத் தொடரலாம் என்றுதான் முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

1990 ஏப்ரல் 21]

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால அரசில் 25 அதிகாரிகள் காரணம் இல்லாமல் உடனேயே சஸ்பெண்ட் செய்யப்பட்டு இருப்பதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதிலே வீட்டிலே நோட்டீஸ் ஒட்டப்பட்டு தற்காலிக சஸ்பென்ஷன் செய்யப்பட்ட அதிகாரிகள் எவ்வளவு பேர்? ஏதாவது விவரம் இருந்தாலும் அப்படி செய்யப்பட்ட அந்த அதிகாரிகளில் தவறே செய்யாத அதிகாரிகள் எத்தனை பேர் என்பதையும் அரசு அறிவிக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர். மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, காரணமே இல்லாமல் சஸ்பெண்ட் செய்யப்பட்டார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார். அதை முழுவதுமாக நான் ஏற்றுக்கொள்வதற்கு இல்லை. எதற்கும் ஒரு காரணம் காட்டப்படுவது உண்டு. அப்படிக் காரணம் காட்டப்பட்டுத் தான் சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர் கேட்ட மேல் விவரங்கள் என்னிடத்திலே இல்லை.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, ஒய்வு பெறுவதற்கு முன்னால் அவர்களைப் பதவியிலிருந்து தற்காலிகமாக வேலைநீக்கம் செய்வதற்குக் காரணம், பதவி நீக்கம் செய்யாமல் இருந்தால் அவர்கள் மேல் வருகிற குற்றச்சாட்டுக்கள் அவர்களைக் கட்டுப்படுத்தாமல் போய்விடும் என்ற அச்சம்தான். அதன் காரணமாக அரசாங்கத்தில் இப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கிறார்கள். அதைவிட, அவர்களை நியாயமான முறையில் ஒய்வு பெறச் செய்துவிட்டு, அவர்கள் பதவிக் காலத்திலே செய்திருக்கிற தவறுகளுக்கு அவர்கள் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும் என்ற வகையில் ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்து, அதன்மூலமாக அவர்கள் ஒய்வு பெற்றாலும், அவர்கள் மீது நடவடிக்கை எடுத்து, அந்த நடவடிக்கைக்கு அவர்களை உள்ளாக்கவேண்டும் என்ற அளவுக்கு ஒரு சட்டத்திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு அரசு முயற்சிக்குமா என்று விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இதற்குச் சட்டத் திருத்தம் தேவையில்லை. நான் இதற்கு முன்பு கேட்கப்பட்ட வினாவிற்கு விடையளித்து இருக்கின்றேன். சட்டத் திருத்தம் அதற்கு ஒன்றும் தேவையில்லை. ஓய்வு பெறுவதற்கு அவர்களை விட்டுவிட்டு, விசாரணையைத் தொடரலாம் என்றுதான் இந்த அரசு முடிவினை மேற்கொண்டிருக்கிறது.

[1990 ஏப்ரல் 21

மதுரையில் சென்னை உயர்நீதிமன்றத்தின் கிளை.

*5509 திரு. திரு. அ. லெ. சுப்பிரமணியன் :

திரு. துரை சந்திரசேகரன் :

பேராசிரியர் க. பொன்னுசாமி :

திரு. ஆ. அறிவழகன் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை உயர்நீதி மன்றத்தின் கிளை ஒன்றை ஒய்வு பெற்ற உச்சமன்ற நீதிபதி திரு. ஜஸ்வந்த சிங் கமிஷன் பரிந்துரையின்படி மதுரையில் அமைக்கின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதனை தாமதமின்றி அமைக்க மத்திய அரசைத் தமிழக அரசு வலியுறுத்துமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : சென்னை உயர்நீதிமன்றத்தின் ஆயம் ஒன்றினை மதுரையில் நிறுவும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ரத்தினவேல் பாண்டியன் அவர்கள் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்த போது இந்த அறிக்கை விவாதிக்கப்பட்டு, நீதிபதிகளுக்கு மதுரையில் வசதியான வீடுகள் இல்லை, அவர்கள் பிள்ளைகள் படிப்பதற்கு வாய்ப்பில்லை என்று கருதி, இந்தத் தீர்மானத்தையே ஒத்தி வைத்தார்கள். உயர்நீதிமன்ற வழக்கறிஞர்களும் தங்களுடைய தொழில் பாதிக்கப்படும் என்று இதற்கு எதிராக இருக்கிறார்கள். ஆனால் இன்றைய சூழ்நிலையில் 25 நீதிபதிகள் என்பதை 32 நீதிபதிகளாக உயர்த்தி இருக்கிறோம். மேலும் உயர்நீதிமன்றத்தில் இட நெருக்கடி இருக்கிறது. மதுரை நீதிமன்றத்தில் ஏராளமான இடம் இருக்கிறது. இதையெல்லாம் கருத்திலே கொண்டு, மீண்டும் அரசு வலியுறுத்தி, மதுரையில் கிளையை அமைக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

9-15 மணி

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர்நீதிமன்றத்திற்கு மேலும் கூடுதலாக 7 நீதிபதிகளை நியமிப்பதற்கு இந்த

1990 ஏப்ரல் 21]

அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்திருப்பதாலும், இது தொடர்பாக இதற்கு முன் விவரித்த காரணங்களினாலும், மற்றும் ஜஸ்வந்த் சிங் குழுவின் சிபாரிசு அடிப்படையிலும், சென்னை உயர்நீதி மன்றத்தின் ஆயத்தை மதுரையில் நிறுவ, அதன் மூலம் மாநிலத்தின் தெற்குப் பகுதியிலுள்ள மக்கள் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றிட வேண்டுமென்று, மத்திய சட்ட அமைச்சருக்கு 2—10—1989ஆம் தேதியன்று நமது முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதியிருந்தார். அந்தக் கடிதத்திற்கு பதிலாக, தற்போதுள்ள மத்திய சட்ட அமைச்சர் 8–2–1990ஆம் நாளிட்ட கடிதத்தில், மதுரையில், உயர்நீதி மன்றத்தின் ஆயத்தை அமைப்பதற்கு உரிய வசதிகள், மற்றும் உயர்நீதி மன்றத்தின் தலைமை நீதிபதி, ஆளுநர் ஆகியோருடைய கருத்துக்களைக் கேட்டு அனுப்பும்படி சொல்லியிருக்கிறார். உயர் நீதிமன்றத்தினுடைய கருத்துக்களை நாம் கேட்டிருக்கிறோம். ஒரு சாதகமான சூழ்நிலை ஏற்படுமென்று எதிர்பார்க்கிறேன்.

திரு. துரை சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிபதி ஜஸ்வந்த் சிங் கமிஷன் எப்போது பரிந்துரை செய்துள்ளது. எவ்வளவு காலமாக இக்கோரிக்கை தொடர்பாக மத்திய அரசை, மாநில அரசு வலியுறுத்தி வந்தது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கையை முதன்முதலாக நம்முடைய அரசு 1973ஆம் ஆண்டிலே வற்புறுத்தி வந்திருக்கிறது. ஜஸ்வந்த் சிங் கமிஷன் 1981-ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டது. ஜஸ்வந்த் சிங் கமிஷனுடைய அறிக்கை 1984-ல் கிடைக்கப்பெற்றது. இந்த அறிக்கைக்குப் பிறகு, மாநில அரசு மத்திய அரசினுடைய கருத்துக்களையும், மாநில உயர்நீதி மன்றத்தினுடைய கருத்துக்களையும் கேட்டிருக்கிறது.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு, சில கருத்துக்களைக் கேட்டிருக்கிறது. இப்போது பந்து மாநில அரசாங்கத்தின் மைதானத்தில்தான் இருக்கிறது என்று மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். 2 மாதங்களுக்கு முன்பே கடிதம் வந்திருக்கிறது. இதை விரைவுபடுத்தி, தென் மாவட்டங்களிலே உள்ள மக்களின் நன்மைக்காக உடனடியாக ஏற்பாடுகளை இந்த அரசு விரைந்து செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை விரைந்து செய்வதற்காகத்தான் 2–10–1989-ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய சட்ட அமைச்சருக்குக் கடிதம் எழுதினார்கள்.

அந்தக் கடிதத்திற்கு பதில் 8-2-1990 அன்று மத்திய சட்ட அமைச்சர் அனுப்பினார்கள். மத்திய சட்ட அமைச்ச ருடைய கடிதம் மூலமாக, அதேபோல் நம்முடைய அரசாங்கம் ஆளுநருடைய கருத்துக்கள், தலைமை நீதிபதியினுடைய கருத்துக்கள் எல்லாம் கேட்டு அனுப்பியிருக்கிறோம். அதை உடனடியாகப் பெற்று, மத்திய அரசுக்கு அனுப்ப மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் ஏற்பாடு செய்யப்படும்.

திரு. ஆ. அறிவழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜஸ்வந்த் சிங் கமிஷனின் அறிக்கை எந்த ஆண்டு கிடைத்தது? என்ன காரணத்தினால், மத்திய அரசு பச்சைக் கொடி காட்டவில்லை. மதுரையில், உயர்நீதிமன்றத்தின் கிளை அமைக்கப்பட்டால், அது தென்மாவட்ட மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும். குறைந்த செலவில், நீதி மக்களுக்குக் கிடைத்தால்தான், நீதித்துறையின் மீது மக்களுக்கு நம்பிக்கை நிலைத்திருக்கும். அதற்காக, மதுரை கிளை உறுதுணையாக இருக்கும். மேலும், சென்னை உயர் நீதிமன்றத்திற்குக் கூடுதலாக 7 நீதிபதிகளை நியமிக்க மத்திய அரசு ஒத்துக்கொண்டுள்ளது என்று சில தினங்களுக்கு முன்னால் நம்முடைய சட்ட அமைச்சர் அறிவித்துள்ளார். இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, மதுரையில் கிளை அமைக்க மத்திய அரசை மாநில அரசு ஆணித்தரமாக வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் கிளை அமைக்க வேண்டும் என்பது 1972ஆம் ஆண்டில் வற்புறுத்தப்பட்டது. அதற்குப் பிறகு, ஜஸ்வந்த் சிங் கமிஷன் நியமிக்கப்பட்டது. அதனுடைய அறிக்கையும் பெறப்பட்டது. ஆனால் அரசியல் சட்டம் 346-வது பிரிவின் படி உயர்நீதிமன்றத்தின் கிளை அமைக்க வேண்டிய அதிகாரம், மத்திய அரசிடம்தான் இருக்கிறது. எனவேதான் மத்திய அரசிடம் தொடர்பு கொண்டிருக்கிறோம். நாம் மீண்டும் மீண்டும் கடந்த 1972-லிருந்து வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். இப்போது சாதகமான சூழ்நிலை இருப்பதாகக் கருதுகிறோம்.

திரு. அ. மலர்மன்னன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை உயர்நீதிமன்றத்தினுடைய கிளை ஒன்றை மதுரையிலே அமைப்பதற்கு ஜஸ்வந்த் சிங் குழு பரிந்துரை செய்ததாகச் சொன்னார்கள். அது சென்னைக்கும், கன்னியா குமரிக்கும் இடையிலே—மதுரையை விட திருச்சிதான் சிறந்த இடம் என்று அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற இடம்—ஆகவே, கடந்த ஆட்சியிலே கூட, இரண்டாவது தலை நகரமாக இருப்பதற்கு திருச்சிதான் பொருத்தமானஇடம் என்றும்

சொல்லப்பட்டது. இந்த நிலையிலே, அந்த உயர்நீதிமன்றத்தினுடைய கிளையை திருச்சியிலே அமைக்கின்ற செயற்குறிப்பை நம்முடைய அரசு சிபாரிசு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

9-20 மணி.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பெயரே மலர்மன்னன். மன்னர்கள் ஆட்சி நடைபெற்றால் அப்படிச் செய்யலாம். மக்கள் ஆட்சியில் அப்படி குறிப்பிட்ட ஒரு முடிவை எடுத்தபின் மாற்றுவதற்கு வாய்ப்பு இல்லை.

திரு. பி. என். வல்லரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத்தின் பிரிவை மதுரையில் ஏற்படுத்த வேண்டுமென்ற கோரிக்கை மிக நீண்டகாலமாக வலியுறுத்தப்பட்டு வருகிற காரணத்தாலும், தென் மாவட்டங்களுக்கு அது முக்கிய தலைநகராக இருப்பதாலும் மதுரையிலேயே அதை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரச்சினையே மதுரையில் அமைப்பதைப் பற்றித்தான். வேறு ஒன்றுமல்ல.

திரு. உ. ரா. வரதராசன் : தலைவர் அவர்களே, மத்திய அமைச்சர் அவர்கள் எழுதிய கடிதத்தில், சென்னை உயர்நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி மற்றும் ஆளுநர் அவர்களின் கருத்தும் கோரப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆளுநரும், உயர்நீதிமன்ற நீதிபதியும் இதற்கு இசைவான கருத்தைத் தெரிவித்திருக்கிறார்களா இல்லையா என்பதை இந்த அவைக்கு அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில உயர்நீதிமன்றத்தின் ரிஜிஸ்திரார் மூலமாகக் கேட்கப்பட்டிருக்கிறது. இன்னும் பதில் வரவில்லை. அவர்கள் கருத்து இன்னும் கிடைக்கப் பெறவில்லை.

மாநில சட்டக் கமிஷன்.

* 7053 பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாநில சட்டக் கமிஷன் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மாநிலச் சட்ட ஆணையம் அமைத்தல் தொடர்பான செயற்குறிப்பு இன்னும் அரசின் பரிசீலனையில் உள்ளது.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசின் மிகப் பழமையான சட்டங்கள் தற்கால சமூக அமைப்பு மாற்றங்கள் தேவைக் கேற்ப மாற்றி அமைக்கப்படுகின்ற வகையில், மீண்டும் புதுப்பிக்கப்படுகின்ற சூழ்நிலையில், அவைகளை ஏற்படுத்துவதற்காக இந்தச் சட்ட ஆணையம் மிக விரைவில் கொண்டுவர அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல, the proposed Law Commissions functions are :

(a) to suggest suitable modifications or amendments to plug loopholes existing in the laws ;

(b) to ensure suitable social and economic legislative measures;

(c) to suggest different ways and means for inter-State relations and Centre-State relations;

(d) to make suggestions and recommendations for better and expeditious procedures for the judicial administrative reforms; and

(e) suggest modifications or amendments not only to the State laws but also to the Central laws having application to this State.

அதை அடிப்படையாகக் கொண்டுதான் மாநில Law Commission அமைக்கும் குறிப்பு இருக்கிறது.

1990 ஏப்ரல் 21]

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, இந்தச் சட்டக் கமிஷன் அமைக்க வேண்டுமென்ற கோப்பு நகர்த்தப்பட்டு அப்போது முடிவடைந்த நிலையில் இருந்ததாகக் கேள்விப் பட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையில் அதை மிக விரைந்து கொண்டுவர முயற்சிகள் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் போன்ற ஒரு சட்ட ஆணையம் மத்திய அரசில் இயங்கி வருகிறது. மற்ற மாநிலங்களில் இதுபோன்று இருக்கிறதா என்பதை நாம் கேட்டோம். அப்படிக் கேட்டபோது, மத்தியப் பிரதேசம், ஒரிசா, அசாம், மேற்கு வங்காளம், மகாராஷ்டிரா, சிக்கிம் ஆகிய மாநிலங்களில் மாநில சட்ட ஆணையங்கள் அமைக்கப் பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. அவைகளைக் கவனத்தில் கொண்டு, நமது மாநிலத்திலும் விரைவாகக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும்.

திருச்சி மாவட்டத்தைப் பிரித்தல்.

*448 திரு. ரெ. பிச்சைமுத்து :

திரு. எஸ். டி. உகம்சந்த் :

திரு. ஆர். அறிவழகன் :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருச்சி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து பெரம்ப லூரைத் தலைநகராகக் கொண்டு திருவள்ளுவர் மாவட்டம் அமைக்கும் செயற்குறிப்பு எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே,

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைப் பிரிப்பது குறித்த வல்லுநர் குழுவின் அறிக்கை பெறப்பட்டுள்ளது. அதை ஆராய்ந்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கிற வல்லுநர் அறிக்கை அரசுக்கு வந்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதன் விபரம் என்ன? மாவட்டம் எப்போது பிரிக்கப்படும்? மாவட்டம் பிரிக்கப்படுகின்ற நேரத்தில் பெரம்பலூர் நகரத்தில் அமைய

1990 ஏப்ரல் 21]

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, இந்தச் சட்டக் கமிஷன் அமைக்க வேண்டுமென்ற கோப்பு நகர்த்தப்பட்டு அப்போது முடிவடைந்த நிலையில் இருந்ததாகக் கேள்விப் பட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையில் அதை மிக விரைந்து கொண்டுவர முயற்சிகள் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைப் போன்ற ஒரு சட்ட ஆணையம் மத்திய அரசில் இயங்கி வருகிறது. மற்ற மாநிலங்களில் இதுபோன்று இருக்கிறதா என்பதை நாம் கேட்டோம். அப்படிக் கேட்டபோது, மத்தியப் பிரதேசம், ஒரிசா, அசாம், மேற்கு வங்காளம், மகாராஷ்டிரா, சிக்கிம் ஆகிய மாநிலங்களில் மாநில சட்ட ஆணையங்கள் அமைக்கப் பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. அவைகளைக் கவனத்தில் கொண்டு, நமது மாநிலத்திலும் விரைவாகக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும்.

திருச்சி மாவட்டத்தைப் பிரித்தல்.

*448 திரு. ரெ. பிச்சைமுத்து :

திரு. எஸ். டி. உகம்சந்த் :

திரு. ஆர். அறிவழகன் :

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருச்சி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து பெரம்பலூரைத் தலைநகராகக் கொண்டு திருவள்ளுவர் மாவட்டம் அமைக்கும் செயற்குறிப்பு எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே,

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தைப் பிரிப்பது குறித்த வல்லுநர் குழுவின் அறிக்கை பெறப்பட்டுள்ளது. அதை ஆராய்ந்து மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கிற வல்லுநர் அறிக்கை அரசுக்கு வந்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதன் விபரம் என்ன? மாவட்டம் எப்போது பிரிக்கப்படும்? மாவட்டம் பிரிக்கப்படுகின்ற நேரத்தில் பெரம்பலூர் நகரத்தில் அமைய

இருக்கிற தலைநகரத்திற்கு வேண்டிய குடிநீர் வசதியும் மற்ற வசதிகளும் செய்து தர அரசிடம் குறிப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

9–25 மணி

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உகம்சந்த் அவர்கள் கேட்ட கேள்விக்குப் பதில். இந்த மாவட்டப் பிரிவினை குறித்துப் பெறப்பட்ட வல்லுநர் குழுவின் அறிக்கையை ஆராய்ந்து பின்னர் மேல் நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் தொடர்ந்து அவர் கேட்ட விளக்கங்களுக்குப் பதில் இல்லை.

திரு. ஆ. அறிவழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, அதிகாரத்தைப் பரவலாக்குவதுதான் வெற்றிகரமான நிர்வாகத்திற்கு அடையாளம். மேலும் ஜனநாயக நாட்டில் ஆட்சி அதிகாரம் மக்கள் இருக்கும் திசை நோக்கிச் செல்ல வேண்டும். அதற்கு இந்த மாவட்டப் பிரிவினை உதவியாக இருக்கும். எனவே கூடிய விரைவில் திருச்சி மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் முடிவுக்கு செயல் வடிவம் தரப்படுமா? அப்படிப் பிரிக்கும்போது புதிய மாவட்டத்தில் எந்தெந்த வட்டங்கள் சேர்க்கப்படும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் ஜனநாயக விளக்கத்திற்கு வாழ்த்து.

திரு. ஓ். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்த மாவட்டத்தைப் பிரிக்கும்போது பல வட்டங்கள் சேர்கின்றன. அப்படிச் சேர்க்கும்போது துறையூர், அரியலூர், லால்குடி, பெரம்பலூர் போன்றவையும் சேரும். அதிலே பெரம்பலூரைத் தவிர்த்து பாக்கி ஏதாவது இடங்களில் மெய்ன் அலுவலகம் வைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, வல்லுநர் குழுவின் அறிக்கையை ஆராய்ந்த பின்னர் மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஏற்கெனவே தெரிவித்ததற்குப் பிறகு ஸ்ரீரங்கம் சீற வேண்டிய அவசியம் இல்லை.

திரு. த. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரியலூரில் 50-க்கு மேற்பட்ட அலுவலகங்கள் இருப்பதாலும், அரசுக்குச் சொந்தமான நிலங்கள் வாரணவாசியில் 200 ஏக்கர் நிலம் இருக்கிற காரணத்தால் அரியலூரைத் தலைமையிடமாக வைப்பதா? அல்லது பெரம்பலூரைத் தலைமை

இடமாக வைப்பதா என்று ஒரு போரே நடந்து கொண்டு இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக எந்த வட்டத்தில் அது வைக்கப்படும் என்பதை அறிவிக்க இயலுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் போரில் நான் ஈடுபட விரும்பவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் போரில் குறைந்தது நடுவராகவாவது இருப்பீர்களா ? (சிரிப்பு).

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூரைத் தலைநகரமாகக் கொண்டு திருவள்ளுவர் மாவட்டம் அமைக்கப்படும் என்று நீண்ட காலத்திற்கு முன்பு அறிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால் அமைச்சர் அவர்கள் வல்லுநர் குழுவின் அறிக்கையை ஆய்வு செய்ய வேண்டியிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆய்வு செய்வதற்கு எவ்வளவு நாட்கள்தான் ஆகும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அது ஆய்வின் அளவைப் பொறுத்தது.

திரு. மொஞ்சனூர் ப. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கிறபோது அந்த மாவட்டத்தில் இரண்டாவது பெரிய நகரமாகவும், தொழில் நகரமாகவும் இருக்கின்ற கரூரைத் தலைமையிடமாகக் கொண்டு மாவட்டம் அமைக்க அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, கேட்ட கேள்வியையே திருப்பித் திருப்பிக் கேட்கும் அவையாக இந்த அவை மாறக்கூடாது என்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அது ஆய்வில் இருக்கிறது.

இராம நிர்வாக அலுவலர்களுக்கு குடியிருப்புகள்.

* 2471 திரு. வெ. இராசு :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிராம நிர்வாக அலுவலர்களுக்குக் குடியிருப்பு கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

இடமாக வைப்பதா என்று ஒரு போரே நடந்து கொண்டு இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திட்டவட்டமாக எந்த வட்டத்தில் அது வைக்கப்படும் என்பதை அறிவிக்க இயலுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் போரில் நான் ஈடுபட விரும்பவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தப் போரில் குறைந்தது நடுவராகவாவது இருப்பீர்களா ? (சிரிப்பு).

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூரைத் தலைநகரமாகக் கொண்டு திருவள்ளுவர் மாவட்டம் அமைக்கப்படும் என்று நீண்ட காலத்திற்கு முன்பு அறிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால் அமைச்சர் அவர்கள் வல்லுநர் குழுவின் அறிக்கையை ஆய்வு செய்ய வேண்டியிருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆய்வு செய்வதற்கு எவ்வளவு நாட்கள்தான் ஆகும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, அது ஆய்வின் அளவைப் பொறுத்தது.

திரு. மொஞ்சனூர் ப. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கிறபோது அந்த மாவட்டத்தில் இரண்டாவது பெரிய நகரமாகவும், தொழில் நகரமாகவும் இருக்கின்ற கரூரைத் தலைமையிடமாகக் கொண்டு மாவட்டம் அமைக்க அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, கேட்ட கேள்வியையே திருப்பித் திருப்பிக் கேட்கும் அவையாக இந்த அவை மாறக்கூடாது என்று நான் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். அது ஆய்வில் இருக்கிறது.

கிராம நிர்வாக அலுவலர்களுக்கு குடியிருப்புகள்.

* 2471 **திரு. வெ. இராசு :**

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கிராம நிர்வாக அலுவலர்களுக்குக் குடியிருப்பு கட்டித் தர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது இத்திட்டம் அமலுக்கு வரும்?

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கிராம நிருவாக அலுவலர்களுக்குக் குடியிருப்புக் கட்டுவதற்கான செயற் குறிப்பு தற்போது அரசிடம் இல்லை.

திரு. வெ. இராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம நிர்வாக அலுவலர்கள் என்பவர்கள் அரசாங்கத்திலே இருக்கக்கூடிய அடிப்படையான ஊழியர்கள் ஆவார்கள். இவர்கள் தங்களுடைய சொந்த கிராமங்களில் தங்கி இருந்தால் தான் அந்தக் கிராம மக்களுக்குத் தேவையான சான்றிதழ்கள் போன்றவற்றை வழங்குவதற்கும், கிராமத்தில் ஏற்படக்கூடிய சட்டம், ஒழுங்குப் பிரச்சினைகளைக் கவனிப்பதற்கும் ஏதுவாக இருக்கும். அவர்கள் சொந்தக் கிராமங்களில் இருந்தால் உடனுக்குடன் தலையிட்டு அதைச் செய்வதற்கு ஏதுவாக இருக்கும். இவர்கள் அங்கே குடியிருக்கச் சரியான குடியிருப்பு வசதிகள் இல்லை என்ற காரணத்தால் டவுனில் போய் தங்கி இருக்கிறார்கள். அதனால் கிராம மக்கள் அவர்களிடத்திலே சென்று கையொப்பம் வாங்குவதற்குச் சிரமமாக இருக்கிறது என்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் கூடப் பேசி இருக்கிறார்கள். எனவே அவர்களுக்குக் குடியிருப்பு கட்டிக் கொடுப்பதைப் பற்றி அரசு பரிசீலனை செய்து அவர்கள் தங்குவதற்கான வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

9.30 மணி

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, கிராம நிர்வாக அலுவலர்களைப் பொறுத்தவரையில் அவர்களது பணி, அவர்கள் மேற்கொண்டு இருக்கிற பளு, அவர்கள் ஆற்றுகிற தீவிரமான கடமை அனைத்தையும் இந்த அரசு உணர்ந்திருக்கிறது. தமிழ்நாட்டில் 12,498 கிராம நல அலுவலர்கள் உள்ளனர். படிப்படியான முறையில் கிராம நிர்வாக அலுவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்டலாம் என்ற அடிப்படையில் 1989-90 ஆம் ஆண்டு பார்ட் 2 ஸ்கீமில் கிராம நிர்வாக அலுவலர்களுக்காக 90 இலட்ச ரூபாய் மதிப்பீட்டில் 100 குடியிருப்புகள் கட்டலாம் என்ற செயற் குறிப்பை சிறப்பு ஆணையாளர் மற்றும் வருவாய்த் துறை ஆணையாளர் அரசுக்கு அனுப்பியிருந்தார். அவருடைய செயற்குறிப்பு, நிதிநிலை காரணமாக பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. மேலும், அரசின் நிதிநிலை காரணமாக 1990-91-லும் பார்ட் 2 ஸ்கீமிலும் பரிந்துரைக்கப்படவில்லை என்று சிறப்பு ஆணையாளர் மற்றும் வருவாய்த்துறை ஆணையாளர் தெரித்துள்ளார்,

1990 ஏப்ரல் 21]

திரு. வெ. இராசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னதைப் போல தமிழ்நாட்டில் இருக்கின்ற 12,498 கிராம நிர்வாக அலுவலர்களுக்கும் ஒரே சமயத்தில் குடியிருப்புகள் கட்டித் தருவது சாத்தியக்கூறு இல்லையென்றாலும்கூட வருடத்தில் இவ்வளவு குடியிருப்புகள் என்று நிர்ணயித்து அவர்களுக்குக் கட்டித் தர வேண்டும். அதுவரை, அவர்கள் கிராமங்களிலேயே தங்கியிருந்து பணியாற்றும் வகையில், 100 ரூபாய், 200 ரூபாய் என்கிற வகையில் அவர்கள் வாடகை கொடுக்கிறார்களே, அதை அரசு ஏற்றுக் கொள்ள முன்வருமா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் ஆலோசனையை அரசு பரிசீலிக்கும்.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம நிர்வாக அலுவலர்கள்மீது பெரிய சுமை சுமத்தப்படுகின்ற அளவுக்கு நிலைமைகள் இருப்பதாக அடிக்கடி வருத்தத்தோடு சொல்கிறார்கள். ஜமாபந்தி . . (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது கிராம நிர்வாக அலுவலர்களைப் பற்றிய விரிவுரை வேண்டாம். வீடு கட்ட வேண்டுமா, வேண்டாமா என்பதை மட்டும் சொல்லுங்கள்.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீடு தேவை என்றாலும், பரவலாக அவர்களால் சொல்லப்படுகிற குறைகளைப்பற்றியும் . . (மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது எல்லாம் வினா-விடையில் வராது.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜமாபந்தி சமயத்தில் அவர்களுக்கு நிறைய செலவு செய்ய வேண்டிய நிலைமை ஏற்படுவதாகக் குறை சொல்கிறார்கள். அரசு பொறுப்பேற்று அவர்களுக்குச் செலவாகின்றதைக் கொடுத்தால் அவர்கள் வேதனைப்படுகின்ற நிலை ஏற்படாது. ஆகையால் இது குறித்து அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ரமணி நல்லதம்பி அவர்கள் அடிக்கடி என்னிடத்தில் கேள்விகள் கேட்பதுண்டு. (சிரிப்பு) ஆனால் இப்போது முதல் முதலாக கேள்வி கேட்கிறபோது மூலக் கேள்விக்கும், அவர் கேட்ட கேள்விக்கும் சம்பந்தமில்லாமல் இருப்பதற்காக நான் வருத்தப்படுகிறேன்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 12 ஆயிரத்திற்கு மேற்பட்ட கிராம நிர்வாக அலுவலர்கள் தமிழகத்தில் பணியாற்றுவதாகவும், அவர்களுக்கு 100 வீடுகள் கட்டுகின்ற திட்டம் அரசிடம் இருப்பதாகவும் குறிப்பிட்டார்கள். இந்த 12 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு ஒரே சமயத்தில் வீடுகள் கட்ட முடியாது என்பது உண்மை. அவர்கள் சொந்த ஊரில் வேலை பார்க்காமல் சொந்தத் தாலுக்காவில் வேலை பார்க்கலாம் என்பதுதான் தற்போதுள்ள நடைமுறை. ஒவ்வொரு கிராமம் பற்றிய முழு விவரங்கள் அடங்கிய தஸ்தாவேஜுகள் எல்லாம் அவர்கள் வசம்தான் இருக்கின்றன. அவை பாதுகாப்பாக இருக்க வேண்டியது மிகவும் அவசியம். ஆகவே ஒரே இடத்தில் இந்த ஆவணங்கள் எல்லாம் பாதுகாப்பாக இருக்கும் வகையில், உரிய இட வசதியை அரசு செய்து கொடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரையன் அவர்களுடைய கேள்வியில் இருக்கிற நியாயத்தை அரசு புரிந்து, அவர் கேட்ட கேள்விக்கு ஏற்ப, ஆவன செய்யப்படும் என்ற உறுதியை நான் வழங்குகின்றேன்.

தண்டத் தீர்வையைக் குறைத்தல்.

* 7078 **திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், காளிங்கராயன், கோபிசெட்டிபாளையம், பவானி போன்ற இடங்களில் மின்சார பம்ப்செட் மூலமாக இறவைப் பாசனம் செய்கின்ற மஞ்சள் போன்ற பயிர்களுக்குத் தண்டத் தீர்வை பல மடங்கு விதிக்கப்படுவதைக் குறைக்கும்படி கேட்கும் மனுக்கள் வந்தனவா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். தண்டத் தீர்வை பல மடங்கு விதிக்கப்படுவதைக் குறைக்கும்படி கேட்டு மனுக்கள் வந்திருந்தன.

(ஆ) பெரியார் மாவட்டத்தில், காளிங்கராயன் வாய்க்கால், பவானி மற்றும் காவிரி ஆறுகள் போன்ற அரசு பாசன ஆதாரங்களிலிருந்து அனுமதியின்றி ஆயில் எஞ்சின்/மின் மோட்டார் வைத்து பாசனம் செய்யப்படும் முறையற்ற பாசனங்களுக்கு நீர்ப்பாசன விதிகளின்படி, தண்டத் தீர்வை விகிதங்கள் அரசாணை (பல்வகை) 1668, வருவாய், நாள் 6-11-1987ல்

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 12 ஆயிரத்திற்கு மேற்பட்ட கிராம நிர்வாக அலுவலர்கள் தமிழகத்தில் பணியாற்றுவதாகவும், அவர்களுக்கு 100 வீடுகள் கட்டுகின்ற திட்டம் அரசிடம் இருப்பதாகவும் குறிப்பிட்டார்கள். இந்த 12 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு ஒரே சமயத்தில் வீடுகள் கட்ட முடியாது என்பது உண்மை. அவர்கள் சொந்த ஊரில் வேலை பார்க்காமல் சொந்தத் தாலுக்காவில் வேலை பார்க்கலாம் என்பதுதான் தற்போதுள்ள நடைமுறை. ஒவ்வொரு கிராமம் பற்றிய முழு விவரங்கள் அடங்கிய தஸ்தாவேஜுகள் எல்லாம் அவர்கள் வசம்தான் இருக்கின்றன. அவை பாதுகாப்பாக இருக்க வேண்டியது மிகவும் அவசியம். ஆகவே ஒரே இடத்தில் இந்த ஆவணங்கள் எல்லாம் பாதுகாப்பாக இருக்கும் வகையில், உரிய இட வசதியை அரசு செய்து கொடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரையன் அவர்களுடைய கேள்வியில் இருக்கிற நியாயத்தை அரசு புரிந்து, அவர் கேட்ட கேள்விக்கு ஏற்ப, ஆவன செய்யப்படும் என்ற உறுதியை நான் வழங்குகின்றேன்.

தண்டத் தீர்வையைக் குறைத்தல்.

* 7078 **திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் :** மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், காளிங்கராயன், கோபி செட்டிபாளையம், பவானி போன்ற இடங்களில் மின்சார பம்ப்செட் மூலமாக இறவைப் பாசனம் செய்கின்ற மஞ்சள் போன்ற பயிர்களுக்குத் தண்டத் தீர்வை பல மடங்கு விதிக்கப்படுவதைக் குறைக்கும்படி கேட்கும் மனுக்கள் வந்தனவா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். தண்டத் தீர்வை பல மடங்கு விதிக்கப்படுவதைக் குறைக்கும்படி கேட்டு மனுக்கள் வந்திருந்தன.

(ஆ) பெரியார் மாவட்டத்தில், காளிங்கராயன் வாய்க்கால், பவானி மற்றும் காவிரி ஆறுகள் போன்ற அரசு பாசன ஆதாரங்களிலிருந்து அனுமதியின்றி ஆயில் எஞ்சின்/மின் மோட்டார் வைத்து பாசனம் செய்யப்படும் முறையற்ற பாசனங்களுக்கு நீர்ப்பாசன விதிகளின்படி, தண்டத் தீர்வை விகிதங்கள் அரசாணை (பல்வகை) 1668, வருவாய், நாள் 6-11-1987ல்

1990 ஏப்ரல் 21]

திருத்தியமைக்கப்பட்டு, திருத்தியமைக்கப்பட்டபடி விதிக்கப்படுகின்றன. இத்திருத்தப்பட்ட தீர்வை அதிகமென, இதனை எதிர்த்து சிலர், அரசுக்கு மனு கொடுத்தனர், சிலர் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்துள்ளனர். அரசிடம் கொடுக்கப்பட்ட மனுமீது, அரசாணைப்படி திருத்தியமைக்கப்பட்டபடி, வரியினை வசூலிக்க முதலில் தடையாணை பிறப்பிக்கப்பட்டது. பின்னர் இதனை, அரசு ஆய்வு செய்து, பழைய தண்ணீர் தீர்வை வீதங்கள், நடைமுறையில் இருக்கும் விலைவாசிகள், சிறிய நீர்ப்பாசனத் திட்ட வேலைகளுக்கு விதிக்கப்படும் வீதங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது மிகவும் சிறிய தொகை என்பதால், அரசின் 11-12-1989ஆம் தேதியிட்ட கடிதத்தில் மேற்படி தடையாணையை விலக்கிக்கொண்டது.

9-35 மணி

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, பவானி ஆற்றிலிருந்து பாசனத்திற்காக கோபி இரிகேஷன் சேனல், காளிங்கராயன் இரிகேஷன் சேனல் என்று இரண்டு சேனல்களாகப் பிரிகின்றது. காளிங்கராயன் சேனலைப் பொறுத்தவரையில் இடது புறமாக இருக்கிற நிலங்களுக்குத் திறந்துவிட்டால் போதும், தானாகத் தண்ணீர் பாயும். வலது புறம் தண்ணீரை இறைத்து, இறைவைப் பாசனம் தான் நடந்து கொண்டிருக்கிறது. இனியும் அப்படித் தான் நடக்கப் போகிறது. அங்கே மஞ்சள் போன்றவற்றைப் பயிர் செய்கிறார்கள். பவானி ஆற்றிலிருந்து தண்ணீர் சென்று நொய்யல் ஆற்றில் வடியும்வரை வலது பக்கத்தில் தண்ணீரை இறைத்துத்தான் பாசனம் செய்கிறார்கள். அதுவும் பம்ப் செட்டைதான் உபயோகிக்கிறார்கள். கரன்ட் கொடுக்கிறீர்களோ இல்லையோ, டீசல் செட் வைத்து பாசனம் பண்ணும்போது, அதை இல்லிசிட் இர்ரிகேஷன் என்று சொல்லி பல மடங்கு பெனால்ட்டி போடுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்விதான் கேட்கிறார்களா ?

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு அமைச்சரவர்கள் அதை முறைப்படுத்தினால் ரொம்ப சவுகரியமாக இருக்கும். அப்படி இதுவரை முறைப்படுத்தவில்லை என்றால் அதை முறைப்படுத்துவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தீட்சிதர் அவர்கள் நீண்ட நேரம் கேள்வி கேட்ட காரணத்தால் நானும் நீண்ட நேரம் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பெரியார் மாவட்டத்தில் காளிங்கராயன் வாய்க்கால், பவானி ஆறு, காவிரி ஆறு போன்ற அரசுப் பாசன ஆதாரங்களிலிருந்து அனுமதியின்றி, ஆயில் இன்ஜின், மின் மோட்டார் வைத்து

தண்ணீர் எடுத்து பாசனம் செய்யப்படும் முறையற்ற பாசனங்களுக்கு நீர்ப்பாசன வரி விதிகளின்படி, தடவையை அனுசரித்து தண்டத் தீர்வை விதிக்கப்பட்டு வருகிறது. நான்காம் தடவையும் அதற்கு மேற்கொண்டும் முறையற்ற பாசனம் செய்யப்படும் இனங்களுக்கு, அதிகபட்சம் 20 மடங்கு தண்ணீர்த் தீர்வை விதிக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு தண்டத் தீர்வை விதிக்கப்பட்டு வரும் முறை தொன்றுதொட்டே அமுலில் இருந்து வருகிறது. மேற்கண்ட பாசனங்களுக்குரிய தண்ணீர் தீர்வை விகிதம் பன்னெடுங்காலத்திற்கு முன்பு நிர்ணயம் செய்யப்பட்ட மிகமிகக் குறைந்த தொகையாக இருந்தது. இத்தீர்வை விகிதங்கள் வருவாய் நிலை ஆணை எண். 4(2) அனுபந்தம் 1 (அ)-ன்படி விதிக்கப்படுகிறது. பின்னர் நடைமுறையில் உள்ள விலைவாசிப் புள்ளி விபரங்கள், சிறிய நீர்ப்பாசனத் திட்டங்களில் விதிக்கப்படும் தண்ணீர் தீர்வை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டும், பாசனத் திட்டங்களின் பராமரிப்புச் செலவுகளைக் கருத்தில் கொண்டும் அரசு ஆணை எண். 1668, வருவாய்த் துறை, நாள் 6-11-1987ன்படி மேற்கண்ட தீர்வை விகிதங்களை உயர்த்தி, வருவாய் நிலை ஆணை எண். 4(2) அனுபந்தம் 1 (அ)—க்குத் திருத்தம் வெளியிடப்பட்டது. இப்புதிய தீர்வை விகிதங்கள் பெரியார் மாவட்டத்திற்கு மட்டும் நிர்ணயம் செய்யப்படவில்லை. தமிழ் நாடு முழுவதற்கும் இத்தீர்வை விகிதங்கள் பொருந்தக்கூடியதாகும். 1397 பசலி முதல் இப்புதிய தீர்வை விகிதங்கள் அமுலுக்கு வந்துள்ளன. பழைய தீர்வை விகிதங்கள் மிகவும் குறைவாக இருந்ததால் அவற்றின் அடிப்படையில் தண்டத் தீர்வை விதித்தபோது விவசாயிகளுக்கு அது பெரியதாகத் தோன்றவில்லை. தொடர்ந்து அனுமதியற்ற பாசனம் செய்து வரலாயினர். ஆனால் 1397 பசலி முதல் உயர்த்தப்பட்ட புதிய தீர்வை விகிதங்களின் அடிப்படையில் தண்டத் தீர்வை விதிக்கப்பட்டபோதுதான் அது விவசாயிகளின் கவனத்தை ஈர்த்துள்ளது. நான் ஏற்கெனவே குறிப்பிட்டுள்ளதுபோல், சிலர் சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனுக்கள் தாக்கல் செய்தும், சிலர்அரசுக்கு முறையீடுசெய்தும் மனுகொடுத்தார்கள்.

9-40 மணி

அதன் பேரில் அரசு ஆணை 1268, வருவாய், நாள் 6-12-1987ல் திருத்தப்பட்ட தீர்வை விகிதங்கள் அடிப்படையிலான தண்ணீர்த் தீர்வை வசூலிப்பதற்கு அரசு கடித எண் 415841/81-1, நாள் 9-5-1989-ல் தடை ஆணை போடப்பட்டது. இவ்வாறு அரசால் தடை ஆணை வழங்கப்பட்ட இனத்தில் அரசு பின்னர் ஆய்வு செய்தது. அரசு ஆணை நிலை எண் 1268, வருவாய், நாள் 6-12-1987-ல் வெளியிடப்பட்டு திருத்திய தண்ணீர் விகிதங்கள் பெரியார் மாவட்டத்துக்கு மட்டும் அல்லாது இம்மாநிலம் முழுவதற்கும் அமல்படுத்தப்பட்டுள்ளது. பழைய தண்ணீர்த் தீர்வை விகிதங்கள், நடைமுறையில் இருக்கும் விலைவாசி, சிறிய நீர்ப்பாசனத் திட்ட வேலைகளுக்கு

1990 ஏப்ரல் 21]

விதிக்கப்படும் வரி விகிதம் இவைகளை ஒப்பிட்டுப் பார்க்கும் போது மிகவும் சிறிய தொகையாக உள்ளதால் தடை ஆணை உள்ளதால் விலக்கிக்கொண்டோம் என்பதை நான் ஏற்கெனவே தெரிவித்தேன் ; அதையே தீட்சிதர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் அப்படிப்பட்ட தவறான பாசனமாக தண்ணீரைப் பயன்படுத்திச் செய்ய மாட்டீர்கள் என்று நான் நம்புகிறேன். அப்படிச் செய்வதாக அரசுக்குத் தெரிவிக்கப்பட்டால் அதற்குரிய தண்டனையை நீங்கள் அனுபவிக்க வேண்டி இருக்கும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வெங்கடேஸ்வர தீட்சிதர் அதற்குத் தயார் என்கிறார்களா ?

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : சபாநாயகர் அவர்களே, காளிங்கராயன் வாய்க்கால் என்பது இன்றைக்கு ஏற்பட்டதல்ல. எத்தனையோ தலைமுறை, தலைமுறையாக அந்த வாய்க்கால் இருந்து இருக்கிறது. அதெல்லாம் பழைய ஆயக்கட்டு. நான் அமைச்சர் அவர்களைக் கேட்கிறேன், அந்த வாய்க்காலின் ஆயக்கட்டு அப்படி இருந்தால் அதற்கு மேல் பெனால்ட்டி 20 மடங்கு விதிக்க வேண்டுமா? அதாவது பெனால்ட்டி விதிப்பதால் ஏதாவது 'இன்ட்ரிக்கஸி' எனக்கு மட்டுமா இருக்கிறது ? ஆயிரக்கணக்கான பேருக்கு அங்கு சாகுபடி இருக்கிறது. அவர்கள் இறவைப் பாசனம் தான் பண்ணி ஆக வேண்டும். வேறு வழியில்லை. நடை நீர்ப் பாசனம் நிறைய இருக்கிறது. அது போல் 10 பங்கு இருக்கிறது. ஒரு பங்குக்கு ஏதோ 5 பங்கு பண்ணினோம். அது கூடத் தேவையில்லை. இன்றைக்கு விவசாய மானியம் வருகிறது. விவசாயிகளுக்கு நாம் உதவப் போகிறோம் ; விவசாயிகளுக்காகத் தான் ஆட்சி நடக்கின்றது என்கிற போது, நீங்கள் கருணை கூர்ந்து இந்த பெனால்ட்டியையாவது தள்ளுபடி செய்து அரசு உத்திரவு போடுமா என்று கேட்டுக் கொள்கின்றேன். அதோடு அல்லாமல் காவிரிப் பாசனத்தில் இலட்சக் கணக்கான ஏக்கரை நீங்கள் முறைப்படுத்தி இருக்கிறீர்கள். அப்படி இலட்சக் கணக்கான ஏக்கருக்கு முறைப்படுத்தும் போது, ஆயிரத்துக்குக் குறைவான ஏக்கருக்கு ஏன் முறைப்படுத்தக் கூடாது என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தீட்சிதர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். தண்ணீரை வழியிலேயே எடுத்துக் கொள்வதும், தவறான முறையிலே எடுத்துக் கொள்வதும், மின் இணைப்பை வைத்து தண்ணீரைப் பிடித்துக் கொள்வதும், போய்ச் சேர வேண்டியவர்களுக்கு போய்ச் சேர விடாமல்

தடுப்பதும், முறையற்ற காரியம் என்பதை முழுமையாகத் தெரிந்து இருக்கிற திரு. தீட்சிதர் அவர்கள் தவறுகளுக்காக வாதாடக் கூடாது என்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள் கிறேன். அதோடு அவர் கேள்வியை நிறுத்திக் கொள்வார் என்றும் நான் நம்புகிறேன்.

திரு. ஏ. கணேசமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கிற போது அரசு அனுமதியின்றி முறையற்ற பாசனத்திற்குத் தண்ணீர் எடுக்கிற காரணத்தால் தண்டத் தீர்வை விதிப்பதாகக் கூறி னார்கள். காளிங்கராயன் பாசனப் பகுதியில் ஆரம்ப காலம் தொட்டே மாட்டு இறைவை மூலமாகத் தண்ணீர் எடுப்பதற்கு அரசு அனுமதி வழங்கி உள்ளது. அப்படிப் பெற்ற அனுமதி களை வைத்துக் கொண்டு, விஞ்ஞான யுகத்தில் முன்னேறி இருக் கிற இந்தக் காலத்தில், மின்சார பம்ப் செட் வைத்து தண்ணீர் எடுக்கிற அவர்களுக்கு அந்தத் தண்டத் தீர்வையை ரத்து செய்ய வேண்டும் — அல்லது குறைப்பதற்கான குறிப்பு அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன். அது போல இது பற்றி அதிகாரிகள் அரசுக்கு அறிக்கை தருகிறபோது தவறான தகவல்களைத் தருகிறார்கள். மக்களின் கருத்தைத் தெரிந்து கொள்வதற்கு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் நேரடியாக அவர் களைச் சந்தித்துக் கருத்துக் கேட்பதற்கு, கருத்தை ஆய்வு செய் வதற்கான முயற்சியை இந்த அரசாங்கம் எடுத்துக் கொள்ளுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசமூர்த்தி அவர்கள், Same side goal அடிக்கக் கூடாது.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இருக்கின்ற பிரச்சினை, உழுதவன் கணக்குப் பார்த்தால் உழவு கோல் கூட மிச்சம் ஆகாத நிலைமை தான் தமிழ் நாட்டிலே இருந்து கொண்டிருக்கிறது

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட மிஞ்சாது.

திரு. வி. கே. சின்னசாமி : உழக்குக் கூட மிச்சம் ஆகாது என்ற நிலைமை தமிழ் நாட்டில் இருக்கின்றது. அங்கே இருக் கின்ற விவசாயிகளின் நிலைமை அப்படித்தான் இருக்கின்றது. ஆகவே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது, அவர் மாண்புமிகு கணேசமூர்த்தியை Same side goal என்கிறார். விவசாயிகள் என்று எடுத்துக் கொள்வோமேயானால்.........

1990 ஏப்ரல் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இப்போது எதிர்த் தரப்பிலிருந்து ''goal'' போடுகிறீர்கள் ; போடுங்கள்.

9–45 மணி

திரு. வி. கே. சின்னசாமி : நான் அமைச்சர் அவர்களுக்குப் பணிவுடன் தெரிவித்துக் கொள்வது, அந்தத் தண்ணீரை எடுப்பதற்குக் காரணமே விவசாயிகள் பாதிக்கின்ற காரணத்தால் தான். எப்படியாவது விவசாயம் வளர வேண்டும் என்ற எண்ணத்திலே நாங்கள் இருந்து கொண்டு இருக்கின்றோம். கீழ் பவானி பகுதியிலேயும் இதைக் கடைப்பிடிக்கிறார்கள். ஆகவே, சுறுசுறுப்பாகச் செயல் படக் கூடிய அமைச்சர் என்பதோடு மட்டுமல்லாமல், நீண்ட அனுபவம் வாய்ந்த அமைச்சர் என்ற காரணத்தினாலும், அவர் மத்தியிலும் வாதாடி இருக்கிறார், மாநிலத்திலேயும் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்ற காரணத்தினாலும் இதை நன்கு ஆய்வு செய்து, இதை அறவே ரத்து செய்வதோடு, இந்தத் தண்ணீர் எடுக்கின்ற விவசாயிகளை வீணாக அதிகாரிகள் தொந்திரவு செய்து கொண்டிருக்கிறார்கள். அதையும் கருத்திற் கொண்டு நடவடிக்கை எடுக்க பொதுப் பணித் துறை அமைச்சரவர்களும் முன் வர வேண்டும் ; வருவாய்த் துறை அமைச்சரவர்களும் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சின்னசாமி அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும். அதற்காக அவர் பெரியசாமி ஆக வேண்டிய அவசியமில்லை.

பெரியார் போக்குவரத்து கழகப் பணிமனை.

*1665 திரு. கோ. பூவராகன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விருத்தாசலத்தில் உள்ள பெரியார் போக்குவரத்துக் கழகத்திற்கு பஸ்கள் நிற்பதற்கு எத்தனை ஏக்கர் நிலம், எவ்வளவு தொகைக்கு, எப்பொழுது வாங்கப்பட்டது ?

(ஆ) அந்த இடத்தை தற்பொழுது பயன்படுத்துகின்றார்களா ?

(இ) தனியார் இடம் பயன்படுத்தப்பட்டால் அதற்காக வாடகை பிரதி மாதம் எவ்வளவு கொடுக்கப்படுகிறது ?

1990 ஏப்ரல் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இப்போது எதிர்த் தரப்பிலிருந்து ''goal'' போடுகிறீர்கள் ; போடுங்கள்.

9–45 மணி

திரு. வி. கே. சின்னசாமி : நான் அமைச்சர் அவர்களுக்குப் பணிவுடன் தெரிவித்துக் கொள்வது, அந்தத் தண்ணீரை எடுப்பதற்குக் காரணமே விவசாயிகள் பாதிக்கின்ற காரணத்தால் தான். எப்படியாவது விவசாயம் வளர வேண்டும் என்ற எண்ணத்திலே நாங்கள் இருந்து கொண்டு இருக்கின்றோம். கீழ் பவானி பகுதியிலேயும் இதைக் கடைப்பிடிக்கிறார்கள். ஆகவே, சுறுசுறுப்பாகச் செயல் படக் கூடிய அமைச்சர் என்பதோடு மட்டுமல்லாமல், நீண்ட அனுபவம் வாய்ந்த அமைச்சர் என்ற காரணத்தினாலும், அவர் மத்தியிலும் வாதாடி இருக்கிறார், மாநிலத்திலேயும் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்ற காரணத்தினாலும் இதை நன்கு ஆய்வு செய்து, இதை அறவே ரத்து செய்வதோடு, இந்தத் தண்ணீர் எடுக்கின்ற விவசாயிகளை வீணாக அதிகாரிகள் தொந்திரவு செய்து கொண்டிருக்கிறார்கள். அதையும் கருத்திற் கொண்டு நடவடிக்கை எடுக்க பொதுப் பணித் துறை அமைச்சரவர்களும் முன் வர வேண்டும் ; வருவாய்த் துறை அமைச்சரவர்களும் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சின்னசாமி அவர்களின் கோரிக்கை பரிசீலிக்கப்படும். அதற்காக அவர் பெரியசாமி ஆக வேண்டிய அவசியமில்லை.

பெரியார் போக்குவரத்து கழகப் பணிமனை.

***1665 திரு. கோ. பூவராகன் :**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விருத்தாசலத்தில் உள்ள பெரியார் போக்குவரத்துக் கழகத்திற்கு பஸ்கள் நிற்பதற்கு எத்தனை ஏக்கர் நிலம், எவ்வளவு தொகைக்கு, எப்பொழுது வாங்கப்பட்டது ?

(ஆ) அந்த இடத்தை தற்பொழுது பயன்படுத்துகின்றார்களா ?

(இ) தனியார் இடம் பயன்படுத்தப்பட்டால் அதற்காக வாடகை பிரதி மாதம் எவ்வளவு கொடுக்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே,

(அ) விருத்தாசலத்தில் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக பணிமனைக்காக 0.89 ஏக்கர் நிலம் நில எடுப்பு அலுவலரால் நிர்ணயம் செய்யப்பட்ட விலையில் அதாவது ரூ. 1,59,230.60-ல் 6—8—1981 தேதியில் வாங்கப்பட்டது. பின்னர், நில உரிமையாளர் தொடர்ந்த உயர் மதிப்பீடு வழக்கின் தீர்ப்பின்படி, மேலும் ரூ. 2,29,548 வழங்க ஆணையிடப்பட்டது. உயர்நீதி மன்றத்தில் செய்து கொண்ட மேல் முறையீட்டில் உயர் நீதிமன்றம் ரூ. 2,00,000-ஐ உடனடியாக செலுத்த ஆணையிட்டதில் 17—9—1986-ல் அத்தொகை செலுத்தப்பட்டது. மீதமுள்ள தொகை உயர்நீதிமன்ற இறுதி ஆணையின்படி செலுத்தப்பட வேண்டும்.

(ஆ) ஆம்.

(இ) தனியார் நிலத்திற்கு கொடுக்கப்படும் வாடகை பிரதி மாதம் ரூ. 1,600.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, தற்போது நிலம் வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட இடம், அந்த நகரத்தையொட்டி மிக நெருக்கடியான பகுதியிலே இருப்பதனாலே அதுவும் அது போதுமான வசதியாக இல்லாமல் அவ்வளவு குறுகிய இடத்திலே இருப்பதனாலே அந்த இடத்தைத் தவிர்த்து, வேறு நல்ல போக்குவரத்திற்கு வசதியாக, எல்லா பஸ்களும் போய் வருவதற்கு இடைஞ்சல் இல்லாமல் இருக்கக் கூடிய வேறு இடத்தைத் தேர்ந்தெடுத்து, அந்த இடத்திலே இந்த பஸ் நிறுத்தும் இடத்தை ஏற்பாடு செய்வதற்கு முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இந்த நில எடுப்பு 1981-வது ஆண்டிலேயே நிறைவடைந்து விட்டது. நஷ்டயீடு கொடுக்கின்ற தொகையிலேதான் வேறுபாடு ஏற்பட்டு, நிலச் சொந்தக்காரர்கள், விருத்தாசலத்திலே இருக்கின்ற நீதிமன்றத்திலேயும், அதற்குப் பின்னாலே உயர்நீதி மன்றத்திலேயும், மேல் முறையீடுகள் செய்ததற்குப் பிறகு, கடைசியாக உயர் நீதிமன்றத்தினுடைய தீர்ப்புப்படி, அதற்குண்டான நஷ்ட ஈட்டுத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. இறுதியாகச் செலுத்த வேண்டிய 29,548 ரூபாய் 20 பைசா மட்டுமே போக்குவரத்துக் கழகம் செலுத்த வேண்டும். ஆனால், உயர்நீதிமன்றம் ஒரு இலட்சம் செலுத்த வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறார்கள். இந்தத் தொகை அதிகமான அளவிலே இருக்கின்ற காரணத்தால் அந்த உத்தரவு மாற்றப்பட வேண்டுமென்று போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் உயர்நீதி மன்றத்தைக் கேட்டிருக்கிறோம். ஆகவே, கையகப்படுத்துவதற்கான எல்லா நடவடிக்கைகளும் முடிந்து விட்ட காரணத்தினால், இந்த நில எடுப்பை நம்மாலே கைவிட முடியாது.

1990 ஏப்ரல் 21]

82 பேருந்துகள் தற்போது விருத்தாசலம் பணி மனையிலே யிருந்து இயக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இடவசதிக் குறைவாக இருந்தால், தேவைப்பட்டால் நகரத்திற்கு அப் பாலேயும் கூடுதலாக இடம் வாங்குவதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்ளலாம்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது கையகப்படுத்தப்பட்ட இடம் நீதிமன்றத்திலே இருக்கிறது. அந்த இடத்திற்கு உரிமை யானவர் அவர் இல்லை. அது கோயிலுக்கு, ஒரு தர்ம ஸ்தாப னத்திற்கு உள்ள இடம். அது கூட தனிப்பட்ட முறையிலே வழக்கிலே இருக்கிறது. அந்த இடத்திலே நாம் இந்த பஸ் நிறுத்துவதற்கு இடத்தைப் பெறுவதை விட ஊருக்கு வெளிப் புறத்திலே, நகரத்திற்கு வெளிப் புறத்திலே நல்ல தகுதியான பெரிய இடத்தை வாங்கி அங்கே இந்த ஏற்பாட்டைச் செய் வதற்கு அமைச்சரவர்கள் இந்த ஆண்டு முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இந்த நில எடுப்பு சம்பந்தமாக நஷ்டயீட்டோடு சேர்த்து வட்டி யும் செலுத்த வேண்டுமென்றுதான் நீதிமன்றம் உத்தரவிட்டு, *1,59,230* ரூபாய் என்று நில எடுப்பு அலுவலரால் நிர்ணயம் செய்யப்பட்டது. கடைசியிலே அது உயர்நீதி மன்றத்திற்குச் சென்று, வட்டியெல்லாம் சேர்த்துச் செலுத்த வேண்டுமென்று, கடைசியாக *3,10,500* ரூபாய் என்கின்ற அளவிலே கொண்டு போய் நிறுத்தி, அதற்குண்டான நஷ்டயீட்டுத் தொகையும் கட்டப்பட்டாகி விட்டது. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலை யில் அந்த நில எடுப்பை விட முடியுமா என்பதைப் பற்றி அரசு யோசித்துதான் பதில் சொல்ல வேண்டும்.

கம்பன் ரயிலை ராமேஸ்வரம் வரை விடுதல்.

***7443—டாக்டர் எஸ். சுந்தரராஜ்** : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

கம்பன் ரயிலை ராமேஸ்வரம் வரை விட மத்திய அரசுக்கு மாநில அரசு சிபாரிசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, மானாமதுரை வரை செல்லும் கம்பன் இரயில் சென்னை- இராமேஸ்வரம் இரயிலைத் தொடர்ந்தே இயக்கப்பட்டு வருவ தால் கம்பன் இரயிலை இராமேஸ்வரம் வரை விட மத்திய அரசினைக் கோர அவசியமில்லையென கருதப்படுகிறது.

1990 ஏப்ரல் 21]

82 பேருந்துகள் தற்போது விருத்தாசலம் பணி மனையிலே யிருந்து இயக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இடவசதிக் குறைவாக இருந்தால், தேவைப்பட்டால் நகரத்திற்கு அப்பாலேயும் கூடுதலாக இடம் வாங்குவதற்கான முயற்சிகளை நாம் மேற்கொள்ளலாம்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது கையகப்படுத்தப்பட்ட இடம் நீதிமன்றத்திலே இருக்கிறது. அந்த இடத்திற்கு உரிமையானவர் அவர் இல்லை. அது கோயிலுக்கு, ஒரு தர்ம ஸ்தாபனத்திற்கு உள்ள இடம். அது கூட தனிப்பட்ட முறையிலே வழக்கிலே இருக்கிறது. அந்த இடத்திலே நாம் இந்த பஸ் நிறுத்துவதற்கு இடத்தைப் பெறுவதை விட ஊருக்கு வெளிப்புறத்திலே, நகரத்திற்கு வெளிப் புறத்திலே நல்ல தகுதியான பெரிய இடத்தை வாங்கி அங்கே இந்த ஏற்பாட்டைச் செய்வதற்கு அமைச்சரவர்கள் இந்த ஆண்டு முன் வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே, இந்த நில எடுப்பு சம்பந்தமாக நஷ்டயீட்டோடு சேர்த்து வட்டியும் செலுத்த வேண்டுமென்றுதான் நீதிமன்றம் உத்தரவிட்டு, 1,59,230 ரூபாய் என்று நில எடுப்பு அலுவலரால் நிர்ணயம் செய்யப்பட்டது. கடைசியிலே அது உயர்நீதி மன்றத்திற்குச் சென்று, வட்டியெல்லாம் சேர்த்துச் செலுத்த வேண்டுமென்று, கடைசியாக 3,10,500 ரூபாய் என்கின்ற அளவிலே கொண்டு போய் நிறுத்தி, அதற்குண்டான நஷ்டயீட்டுத் தொகையும் கட்டப்பட்டாகி விட்டது. ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்த நில எடுப்பை விட முடியுமா என்பதைப் பற்றி அரசு யோசித்துதான் பதில் சொல்ல வேண்டும்.

கம்பன் ரயில ராமேஸ்வரம் வரை விடுதல்.

*7443—டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கம்பன் ரயிலை ராமேஸ்வரம் வரை விட மத்திய அரசுக்கு மாநில அரசு சிபாரிசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, மானாமதுரை வரை செல்லும் கம்பன் இரயில் சென்னை-இராமேஸ்வரம் இரயிலைத் தொடர்ந்தே இயக்கப்பட்டு வருவதால் கம்பன் இரயிலை இராமேஸ்வரம் வரை விட மத்திய அரசினைக் கோர அவசியமில்லையென கருதப்படுகிறது.

TRUTH ALONE TRIUMPHS

[1990 ஏப்ரல் 21

9-50 மணி

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடநாட்டு பயணிகள் ஆயிரக்கணக்கில் இராமேஸ்வரம் வந்து சுவாமி தரிசனம் செய்துவிட்டு ரெயில் மூலம் திரும்புவதற்குக் காத்து இருக்கிறார்கள். இராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ், சேது எக்ஸ்பிரஸ் இரண்டும் மாலையில்தான் செல்கின்றன. பகல் நேரத்தில் ரெயில் போக்குவரத்து இல்லை. மானாமதுரை வரும் கம்பன் எக்ஸ்பிரஸ் ரெயிலை இராமேஸ்வரம் வரையில் விட்டால் பகல் காலங்களில் மக்கள் ரெயில் பயணம் செய்ய வசதியாக இருக்கும். ஆகவே, ரெயில் பயண இட நெருக்கடியைக் கருத்தில் கொண்டு, கம்பன் எக்ஸ்பிரசை இராமேஸ்வரம் வரையில் விட மாநில அரசு மீண்டும் ஒரு முறை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, கம்பன் ரெயிலும், இராமேஸ்வரம் விரைவு வண்டியும் சென்னையிலிருந்து புறப்பட்டுச் செல்வதும், அதைப் போல அங்கேயிருந்து திரும்பி வருவதும், இந்த இரண்டு ரெயில்களுக்கும் உள்ள இயக்க இடைப்பட்ட காலம் மிகக் குறுகிய காலமாகும். எனவே, இந்தக் குறுகிய கால இடைவெளிக்குள் மேலும் நாம் அதை நீட்டிப்பு செய்வதால் போதுமான பயணிகள் கிடைப்பார்களா என்ற சந்தேகம் இருக்கிறது. எனவேதான், தற்போதைய சூழ்நிலையில் அந்தக் கம்பன் ரெயிலை நீட்டிக்க வேண்டிய அவசியம் இல்லையென்று ரெயில்வே துறையும் கருதுகிற காரணத்தால் மத்திய அரசை இது சம்பந்தமாக வற்புறுத்த வேண்டிய அவசியம் இல்லையென்றும் அரசாங்கம் கருதுகிறது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: தலைவர் அவர்களே, ஒவ்வொரு நாளும் சேது எக்ஸ்பிரஸ் புகை வண்டிக்கு ஆயிரக் கணக்கில் பயணிகள் டிக்கட் கிடைக்காமல் அலைய வேண்டிய சூழ்நிலை இன்றைக்கும் இருந்து வருகிறது. ஆகவே, பயணிகள் இட நெருக்கடி காரணமாக மிகவும் அல்லல்படுகிறார்கள். பகல் காலத்தில் இராமேஸ்வரத்திலிருந்து சென்னை வருவதற்கு ஒரு வண்டியும் இல்லை. உதாரணமாக மதுரையை எடுத்துக் கொண்டால் மதுரையிலிருந்து வைகை எக்ஸ்பிரஸ் பகலில், வருகிறது, பாண்டியன் எக்ஸ்பிரஸ் இரயில் வருகிறது. ஆகவே, கிழக்கு இராமநாதபுரத்திலிருந்து சென்னை வருவதற்கு பகல் காலங்களில் விசேஷ பஸ்கள் கூட ஒன்றும் இல்லை. அதை கருத்திற் கொண்டு இராமேஸ்வரத்திலே இருந்து சென்னைக்குப் பகல் காலத்தில் பயணம் செய்ய வேறு ஏதாவது ரெயில் போக்குவரத்து ஆரம்பிக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

1990 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இவ்வளவு தூரம் சொல்கிற காரணத்தால் பேருந்துகளை வேண்டுமானால் விடலாம்.

அருள்மிகு மகர நெடுங்குழைநாதர் கோவில்.

* 7980 திரு. குமரி அனந்தன்:

திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரனார் மாவட்டம் தென்திருப்பேரை அருள்மிகு மகரநெடுங்குழைநாதர் கோயிலின் அர்த்த மண்டபத்தில் வைத்து வழிபாடு செய்த உலா மூர்த்தி (உத்ஸவர்) இப்போது அதிகாரிகளால் இடமாற்றம் செய்யப்பட்டதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், பக்தர்களின் வேண்டுகோளை ஏற்று முன்பிருந்த நடைமுறைக்கே அரசு கொண்டுவருமா?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சிதம்பரனார் மாவட்டம், திருச்செந்தூர் வட்டம், தென் திருப்பேரை, அருள்மிகு மகரநெடுங்குழைநாதர் திருக்கோயிலின் அர்த்த மண்டபத்தில் சுமார் 26 உற்சவ விக்கிரகங்கள் கட்டிலின் மேல் வைத்து வழிபாடு நடத்தப்பட்டு வந்ததால், பக்தர்கள் அர்த்த மண்டபத்திற்கு வெளியே நின்று கருவரையில் உள்ள சுவாமி மற்றும் தாயார் விக்கிரகங்களைப் பார்த்து சேவிக்க இயலாமல் இருந்தது. இது தவிர இந்த இடத்தில் விக்கிரகங்களுக்கு பாதுகாப்பும் இல்லாது இருந்தது. ஆகவே, 23—7—1986-ல் ஆலயத்தில் நகைகள் களவு போனதைக் கருத்தில் கொண்டும், உற்சவ விக்கிரகங்களை திருக்கோயில் கருவறைக்கும், அர்த்த மண்டபத்திற்கும் இடையில் உள்ள ''இடைநாழி'' என்று அழைக்கப்படும் சன்னதியில் பாதுகாப்பாக வைத்து எல்லோரும் நல்ல முறையில் தரிசனம் செய்ய வசதி செய்யப்பட்டு உள்ளது.

திரு. குமரி அனந்தன்: தலைவர் அவர்களே, தென் திருப்பேரை அருள்மிகு மகரநெடுங்குழைகாதர் சன்னதி நவ திருப்பதிகளில் ஒன்று. இது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நெடுங்குழைக்காதரா, நாதரா? பட்டியலில் நாதர் என்று இருக்கிறது.

திரு. குமரி அனந்தன்: தலைவர் அவர்களே, மகரநெடுங்குழைக்காதர், அதாவது காதை உடையவர். இது நவ திருப்பதிகளில் ஒன்று. இதிலே முக்கியமாக அமைச்சர் பெருமகன்

சொல்கிறபோது அர்த்த மண்டபத்தில் இருந்த உற்சவ விக்கிரகங்களை எடுத்து மூலக் கிரகத்திற்கு இடையே உள்ள ''இடைநாழி''யில் வைக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். இந்தக் கோயிலின் தத்துவம் வேத ஒலி கேட்பதும், விழா ஒலி கேட்பதும், அதோடு பிள்ளைக் குழாம் விளையாட்டைக் காண்பதும் என்று இருக்கிறது. அந்த ஊர்ப் பிள்ளைகள் விளையாட்டைக் காண வேண்டும் என்பதற்காக அந்த அர்த்த மண்டபத்தில் இந்த உத்சவ மூர்த்தி ஸ்ரீதேவி, பூதேவி சமேதரராக வைக்கப்பட்டு இருக்கிறார்கள்.

9–55 மணி

அதுமட்டுமல்லாது, இந்தச் சன்னதியிலே கருடன் கூட கிடையாது. ஏன் என்றால், கருடன் கூட இந்த மகரநெடுங்குழைக் காதர் பிள்ளை விளையாட்டைப் பார்க்க முடியாது என்பதற்காக கருடனைக் கூட அங்கே வைப்பதில்லை. எனவே இவ்வளவு தத்துவம் நிறைந்த ஒரு உத்ஸவர் அந்த இடத்தில் வைக்கப்பட்டு இருப்பதை மாற்றியது அதிகாரிகள் செய்த செயலாக இருந்தாலும், அமைச்சர் அவர்கள் அதற்கு நியாயங்கள் எதையும் சொல்லாமல் மீண்டும் அதை பழைய இடத்திலே வைப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே அதிகாரிகள் செய்கின்ற போது, அங்கே கோவிலிலே இருக்கக்கூடிய குருக்களையும் கலந்துதான் செய்யப்படுகின்றது என்று நான் கருதுகிறேன். ஆகவே நம்முடைய காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அனந்தனார் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப் போல மீண்டும் அர்த்த மண்டபத்திலேதான் இருக்க வேண்டும் என்று அங்கே உள்ள குருக்கள் அங்கே உள்ள அந்த ஊரைச் சேர்ந்த பெரியவர்கள் முடிவு செய்தால் நிச்சயமாக அங்கே வைப்பதற்கு எவ்விதமான ஆட்சேபணையும் இருக்க முடியாது.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்திருப்பேரை, அருள்மிகு மகரநெடுங்குழைக் காதர் நெடுங்குழையும், நீள்முடியும், வைர வைடூரிய முத்து மாலையையும் இழந்து கடந்த காலத்தில் வெறும் காதராக ஆக்கப்பட்டார்கள் என்பதை அரசு அறியுமா? வரகுண பாண்டியன் காலம் முதல் வரலாற்றுப் பெருமை மிக்க இந்தத் திருகோவிலில் களவுகள் போகாமல் காத்திடவும், கள்வரைக் கண்டுபிடிக்கவும் இதுவரையில் என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, இது சம்பந்தப்பட்ட வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. ஆனால் கொள்ளை அடிக்கப்பட்ட நகைகளை மீட்டு வழக்கு மன்றத்திலே இருப்பதை, அந்தக் கோவிலின் சார்பில் ஒரு மனுச் செய்தால்

1990 ஏப்ரல் 21]

அதைக் கோவிலுக்குத் திருப்பிக் கொடுத்துவிடுவதான நிலைமை வந்திருக்கிறது. இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். அந்த கொள்ளையிலே ஈடுபட்ட—இங்கே நம்முடைய அனந்தன் அவர்கள் அடிக்கடி குறிப்பிடுவார்களே—ஃபூல் பாண்டியன், அவன் சில மாதங்களுக்கு முன்பு தீக்குளித்து தற்கொலை செய்து கொள்ளக்கூடிய நிலைமை ஏற்பட்டு இருக்கிறது.

பார்வையற்றவர்களுக்கு பள்ளிக்கூடம்

*2648 திரு. வீ. தமிழ்மணி :
மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செங்கற்பட்டில் பார்வையற்றவர்களுக்குப் பள்ளிக்கூடம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசுக்கு உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செங்கற்பட்டு மாவட்டத்தில் பார்வையற்றோர் பள்ளிக்கூடத்தைப் புதிதாக ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இடத்தில் பார்வையற்றோர் பள்ளிக்கூடம் துவங்க என்னென்ன விதிமுறைகள் கையாளப்படுகின்றன என்பதை அறிவிக்க இயலுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் பூவிருந்தவல்லியில் ஏற்கனவே ஒரு பார்வையற்றோருக்கான பள்ளி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒரு இடத்திலே புதிதாக பார்வையற்றோர் பள்ளியைத் துவக்குவதற்கு வேறு எந்த விதியும் தேவையில்லை, அரசு நிதிதான் தேவைப்படுகிறது.

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு அதைச் சுற்றி 6 தொகுதிகள் அடங்கி இருக்கின்றன. பூவிருந்தவல்லியில் படிப்பதற்கு சுமார் 60 கிலோ மீட்டர் தூரம் அவர்கள் வந்து பள்ளிக்குச் செல்ல வேண்டிய இக்கட்டான சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே மையமாக இருக்கிற செங்கற்பட்டு நகரத்தில் ஒரு பார்வையற்றோர் பள்ளியைத் துவக்கும் செயற் குறிப்பை அரசு மேற்கொள்ளுமா என நான் அறிய விரும்புகிறேன்.

1990 ஏப்ரல் 21]

அதைக் கோவிலுக்குத் திருப்பிக் கொடுத்துவிடுவதான நிலைமை வந்திருக்கிறது. இன்னொன்றையும் நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். அந்த கொள்ளையிலே ஈடுபட்ட— இங்கே நம்முடைய அனந்தன் அவர்கள் அடிக்கடி குறிப்பிடு வார்களே—ஃபூல் பாண்டியன், அவன் சில மாதங்களுக்கு முன்பு தீக்குளித்து தற்கொலை செய்து கொள்ளக்கூடிய நிலைமை ஏற் பட்டு இருக்கிறது.

பார்வையற்றவர்களுக்கு பள்ளிக்கூடம்

*2648 திரு. வீ. தமிழ்மணி :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செங்கற்பட்டில் பார்வையற்றவர்களுக்குப் பள்ளிக்கூடம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசுக்கு உள்ளதா ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செங்கற்பட்டு மாவட்டத்தில் பார்வையற்றோர் பள்ளிக் கூடத்தைப் புதிதாக ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீல னையில் இல்லை.

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இடத்தில் பார்வையற்றோர் பள்ளிக்கூடம் துவங்க என்னென்ன விதிமுறைகள் கையாளப்படுகின்றன என் பதை அறிவிக்க இயலுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தில் பூவிருந்த வல்லியில் ஏற்கனவே ஒரு பார்வையற்றோருக்கான பள்ளி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஒரு இடத்திலே புதிதாக பார்வையற்றோர் பள்ளியைத் துவக்குவதற்கு வேறு எந்த விதி யும் தேவையில்லை, அரசு நிதிதான் தேவைப்படுகிறது.

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு அதைச் சுற்றி 6 தொகுதிகள் அடங்கி இருக்கின்றன. பூவிருந்தவல்லியில் படிப்பதற்கு சுமார் 60 கிலோ மீட்டர் தூரம் அவர்கள் வந்து பள்ளிக்குச் செல்ல வேண்டிய இக்கட்டான சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே மைய மாக இருக்கிற செங்கற்பட்டு நகரத்தில் ஒரு பார்வையற்றோர் பள்ளியைத் துவக்கும் செயற் குறிப்பை அரசு மேற்கொள்ளுமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூவிருந்தவல்லி அரசு பார்வையற்றோர் பள்ளியில் மாணவர்கள் அங்கேயே தங்கிப் பயிலுவதற்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு இருக்கின்றன. எனவே பார்வையற்ற மாணவர்கள் 60 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்து பள்ளியிலே வந்து படிக்க வேண்டிய அவசியம் இல்லை. இதைப் போன்ற பார்வையற்ற குழந்தைகளுக்குக் கல்வி வசதியைச் செய்து தர சில தனியார் தொண்டு நிறுவனங்கள் மைய மாநில அரசினுடைய நிதி உதவியைப் பெற்று அவர்களும் செயல்படுத்தி வருகிறார்கள். எனவே மாண்புமிகு உறுப்பினர் ஏதாவது ஒரு பகுதியிலே இதைப் போன்ற பள்ளிகள் அவசியம் தேவை என்று விரும்பினால், தனியார் தொண்டு நிறுவனங்கள் மூலம் அப்படிப்பட்ட பள்ளிகளை அமைப்பதற்கு அவர்கள் ஏற்பாடு செய்யலாம். மாணவர்கள் இப்போது பூவிருந்தவல்லி அரசு பார்வையற்றோர் பள்ளியில் தங்கிப் பயில்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. யாராவது மாணவர்கள் அந்தப் பள்ளியில் தங்கிப் பயில வேண்டும் என்றால், சம்பந்தப்பட்டத் தலைமை ஆசிரியர் அவர்களை அணுகி அந்த மாணவர்களை அந்தப் பள்ளியிலே சேர்த்துப் பயில வைக்க மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நடவடிக்கை எடுக்கலாம்.

சத்துணவு மையங்களுக்கு முட்டைகள்

*3724 திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் : மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் சத்துணவு மையங்களுக்கு வழங்க இருக்கும் முட்டைகளை தனியார் நிறுவனங்களில் வாங்கி விநியோகம் செய்யப்படுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாட்டில் சத்துணவு மையங்களுக்கு வழங்க இருக்கும் முட்டைகளை தனியார் நிறுவனங்களில் இருந்து வாங்கி வினியோகம் செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

10-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு வினா நேரம் சற்று நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூவிருந்தவல்லி அரசு பார்வை யற்றோர் பள்ளியில் மாணவர்கள் அங்கேயே தங்கிப் பயிலு வதற்குத் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு இருக் கின்றன. எனவே பார்வையற்ற மாணவர்கள் 60 கிலோ மீட்டர் தூரம் பயணம் செய்து பள்ளியிலே வந்து படிக்க வேண்டிய அவசியம் இல்லை. இதைப் போன்ற பார்வையற்ற குழந்தை களுக்குக் கல்வி வசதியைச் செய்து தர சில தனியார் தொண்டு நிறுவனங்கள் மைய மாநில அரசினுடைய நிதி உதவியைப் பெற்று அவர்களும் செயல்படுத்தி வருகிறார்கள். எனவே மாண்புமிகு உறுப்பினர் ஏதாவது ஒரு பகுதியிலே இதைப் போன்ற பள்ளிகள் அவசியம் தேவை என்று விரும்பினால், தனி யார் தொண்டு நிறுவனங்கள் மூலம் அப்படிப்பட்ட பள்ளிகளை அமைப்பதற்கு அவர்கள் ஏற்பாடு செய்யலாம். மாணவர்கள் இப்போது பூவிருந்தவல்லி அரசு பார்வையற்றோர் பள்ளியில் தங்கிப் பயில்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. யாராவது மாணவர்கள் அந்தப் பள்ளியில் தங்கிப் பயில வேண்டும் என்றால், சம்பந்தப்பட்டத் தலைமை ஆசிரியர் அவர்களை அணுகி அந்த மாணவர்களை அந்தப் பள்ளியிலே சேர்த்துப் பயில வைக்க மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நடவடிக்கை எடுக்கலாம்.

சத்துணவு மையங்களுக்கு முட்டைகள்

*3724 திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் : மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் சத்துணவு மையங்களுக்கு வழங்க இருக் கும் முட்டைகளை தனியார் நிறுவனங்களில் வாங்கி விநியோகம் செய்யப்படுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தமிழ்நாட்டில் சத்துணவு மையங்களுக்கு வழங்க இருக்கும் முட்டைகளை தனியார் நிறுவனங்களில் இருந்து வாங்கி வினியோகம் செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனை யில் இல்லை.

10-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அனுமதி யோடு வினா நேரம் சற்று நீட்டிக்கப்பட்டிருக்கிறது.

TRUTH ALONE TRIUMPHS

1990 ஏப்ரல் 21]

திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சத்துணவு மையங்களில் முட்டைகளை சத்துணவு அமைப்பாளர்களே நேரில் சென்று வாங்கி வருவதால் முட்டைகள் அதிகமான அளவில் உடைந்து, அமைப்பாளர்கள் நஷ்டத்திற்கு உள்ளாகின்றனர். இதைப் போக்கும் வகையில், சத்துணவு மையங்களுக்கு ''டேப்கோ'' நிறுவனம் மூலமாக அரசு நேரடியாக விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு மாவட்டத்திலும் அந்தந்த மாவட்டத்திற்கு உட்பட்ட மையங்களுக்கு முட்டைகளைப் பெற்று, வழங்குகிற, விநியோகம் செய்கிற உரிமை அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. 10 மாவட்டங்களில் ''டேப்கோ'' நிறுவனம் முட்டைகளை விநியோகம் செய்திருக்கிறார்கள். ''டேப்கோ'' நிறுவனம் விநியோகம் செய்கிற மாவட்டங்கள் தவிர, ஏனைய மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ஒப்பந்தம் மூலம் குறைந்த விலைக்கு முட்டைகளை விநியோகம் செய்கின்றவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களின் மூலமாக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் முட்டைகள் வழங்கப்படுகின்றன. ஊராட்சி ஒன்றியத்திலிருந்து சத்துணவு மையங்களுக்கு முட்டைகளை எடுத்துச் செல்ல, முட்டைக்கு 5 பைசா வீதம் போக்குவரத்துச் செலவாக அரசு தந்து விடுகிறது. எனவே ஆங்காங்கே இருக்கக் கூடிய ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் வாகனங்களை அமர்த்தி முட்டைகளைச் சத்துணவு மையங்களுக்கே கொண்டு செல்ல வேண்டும் என்று அரசு உத்திரவிட்டிருக்கிறது. இது பல மாவட்டங்களில் பின்பற்றப்பட்டு வருகிறது. சில மாவட்டங்களில் ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் சத்துணவு அமைப்பாளர்களை நேரடியாக ஒன்றியத்திற்கு வந்து முட்டைகளை எடுத்துச் செல்ல வேண்டுமென்று கூறுகிறார்கள். அதனால் அவர்களுக்குச் சிரமம் ஏற்படுகின்றது என்ற பிரச்சினை அரசின் கவனத்திற்கு வந்த பிறகு, ஒன்றிய ஆணையாளர்களுக்கு இப்போது அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. எந்தக் காரணத்தைக் கொண்டும் அமைப்பாளர்களை இந்த முட்டைகளை எடுத்துச் செல்கிற பணியில் ஈடுபடுத்தக் கூடாது, நீங்களே வாகனங்களுக்கு ஏற்பாடு செய்து மையங்களுக்கு முட்டைகளைக் கொண்டு போய் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். கூடிய விரைவில் எல்லா மாவட்டங்களிலும் இந்த முறை அமல்படுத்தப்படும்.

திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சத்துணவு மையங்களுக்கு வழங்கப்படும் முட்டைகளுக்கு என்ன விலை கொடுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களுக்கு முட்டைகளை வழங்கு வதற்கு ஒரு குறிப்பிட்ட விலை நிர்ணயம் செய்யப்படவில்லை. அந்தந்த வாரம் N.E.C.C. —'National Egg Co-Ordination Committee' முட்டைகளுக்கு என்ன விலையை நிர்ணயம் செய்திருக் கிறார்களோ, அந்த விலையோடு போக்குவரத்துச் செலவாக 5 பைசா சேர்த்துத் தரப்படுகிறது.

கூடலூர் பேரூராட்சிப் பகுதிக்குக் குடிநீர்.

* 627 திரு. எம். கே. கரீம் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் பேரூராட்சிப் பகுதிக்குக் குடிநீர் வழங்க உலக வங்கி உதவியுடன் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நட வடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திட்டப் பணிகள் நடந்து வருகின்றன.

திரு. எம். கே. கரீம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியின் உதவியோடு 11—8—1987-ஆம் ஆண்டில் ரூ. 2,821 இலட்சம் செலவில் நடைபெறவிருக்கும் 'ஹெலன் வாட்டர் ஸ்கீம்' இதுவரையிலும் முறையான வகை யில் வேலையைத் துவங்கவில்லை. அது எப்போது துவங்கப் படும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் 1987-லே துவக்கப்பட்டாலும் இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் சென்ற ஆண்டு நேரிலும்கூட சென்று இந்தப் பணிகள் துவக்கப்படுவதற்கு விரைவுபடுத்தப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டதன் விளைவாக இப்போது அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அடுத்த மாதம்

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களுக்கு முட்டைகளை வழங்கு வதற்கு ஒரு குறிப்பிட்ட விலை நிர்ணயம் செய்யப்படவில்லை. அந்தந்த வாரம் N.E.C.C. —'National Egg Co-Ordination Committee' முட்டைகளுக்கு என்ன விலையை நிர்ணயம் செய்திருக் கிறார்களோ, அந்த விலையோடு போக்குவரத்துச் செலவாக 5 பைசா சேர்த்துத் தரப்படுகிறது.

கூடலூர் பேரூராட்சிப் பகுதிக்குக் குடிநீர்.

*** 627 திரு. எம். கே. கரீம் :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் பேரூராட்சிப் பகுதிக்குக் குடிநீர் வழங்க உலக வங்கி உதவியுடன் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நட வடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திட்டப் பணிகள் நடந்து வருகின்றன.

திரு. எம். கே. கரீம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியின் உதவியோடு 11—8—1987-ஆம் ஆண்டில் ரூ. 2,821 இலட்சம் செலவில் நடைபெறவிருக்கும் 'ஹெலன் வாட்டர் ஸ்கீம்' இதுவரையிலும் முறையான வகை யில் வேலையைத் துவங்கவில்லை. அது எப்போது துவங்கப் படும் என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் 1987-லே துவக்கப்பட்டாலும் இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகுதான் சென்ற ஆண்டு நேரிலும்கூட சென்று இந்தப் பணிகள் துவக்கப்படுவதற்கு விரைவுபடுத்தப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகள் விரைவுபடுத்தப்பட்டதன் விளைவாக இப்போது அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அடுத்த மாதம்

கூட நேரடியாக குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய இயக்கு நரும், நானும் சென்று அந்தப் பணிகளைப் பார்வையிட இருக்கிறோம். இந்தப் பணிகள் செப்டம்பர் மாதம் 1991-க் குள்ளாக முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எம். கே. கரீம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987-ஆம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்டு, மூன்று ஆண்டுகளாக இது 4 ஸ்டேஜ்களாக .கோக்கல் 30 ஆயிரம் லிட்டர், எல்.பி.எம். என்பது 1,50,000 லிட்டர், கூடலூர் பசார் 2 இலட்சம் லிட்டர், தேவர்சோலை - 10 மைல், 60,000 லிட்டர் என்ற அடிப்படையில் தொட்டிகள் கட்டப்பட வேண்டும். இந்த 3 ஆண்டுகளாக தேவர்சோலை—10 மைல் என்ற இடத்தில் மட்டும்தான் ஒரேயொரு தொட்டியைக் கட்டியிருக்கிறார்கள், இந்த அளவில் 3 ஆண்டுகளுக்கு ஒரு தொட்டி என்ற கணக்கில் இனி மீதியிருக்கக்கூடிய 3 தொட்டிகள் வருவதற்கு ஏறத்தாழ 9 ஆண்டுகள் ஆகுமா என்று நான் சந்தேகிக்கிறேன். (குறுக்கீடு)

10-05 மணி

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே, கலைஞருடைய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்று ஒரு ஆண்டு ஆகிறது. இந்த ஒரு தொட்டி கட்டப்பட்டது, இந்த ஓர் ஆண்டிலேதான். ஆகவே மற்ற பணிகள் விரைவுபடுத்தப்படும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிநீர்த் திட்டம்

* 3053—திரு. எஸ். எஸ். ராமசுப்பு :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கீழப்பாவூர் ஒன்றியப் பகுதிக்குச் சிற்றாற்றிலிருந்து குடிநீர் கொண்டுவரும் திட்டப் பணி முடங்கியுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : கீழப்பாவூர் பேரூராட்சிக்கு மட்டும் சிற்றாற்றிலிருந்து குடிநீர் வழங்குவதற்காக ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன,

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கூட நேரடியாக குடிநீர் வடிகால் வாரியத்தினுடைய இயக்குநரும், நானும் சென்று அந்தப் பணிகளைப் பார்வையிட இருக்கிறோம். இந்தப் பணிகள் செப்டம்பர் மாதம் 1991-க்குள்ளாக முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எம். கே. கரீம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1987-ஆம் ஆண்டிலே ஆரம்பிக்கப்பட்டு, மூன்று ஆண்டுகளாக இது 4 ஸ்டேஜ்களாக .கோக்கல் 30 ஆயிரம் லிட்டர், எல்.பி.எம். என்பது 1,50,000 லிட்டர், கூடலூர் பசார் 2 இலட்சம் லிட்டர், தேவர்சோலை - 10 மைல், 60,000 லிட்டர் என்ற அடிப்படையில் தொட்டிகள் கட்டப்பட வேண்டும். இந்த 3 ஆண்டுகளாக தேவர்சோலை—10 மைல் என்ற இடத்தில் மட்டும்தான் ஒரேயொரு தொட்டியைக் கட்டியிருக்கிறார்கள், இந்த அளவில் 3 ஆண்டுகளுக்கு ஒரு தொட்டி என்ற கணக்கில் இனி மீதியிருக்கக்கூடிய 3 தொட்டிகள் வருவதற்கு ஏறத்தாழ 9 ஆண்டுகள் ஆகுமா என்று நான் சந்தேகிக்கிறேன். (குறுக்கீடு)

10-05 மணி

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: பேரவைத் தலைவர் அவர்களே, கலைஞருடைய அரசு ஆட்சிப் பொறுப்பை ஏற்று ஒரு ஆண்டு ஆகிறது. இந்த ஒரு தொட்டி கட்டப்பட்டது, இந்த ஓர் ஆண்டிலேதான். ஆகவே மற்ற பணிகள் விரைவுபடுத்தப்படும் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிநீர்த் திட்டம்

* 3053—திரு. எஸ். எஸ். ராமசுப்பு:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கீழப்பாவூர் ஒன்றியப் பகுதிக்குச் சிற்றாற்றிலிருந்து குடிநீர் கொண்டுவரும் திட்டப் பணி முடங்கியுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விரைவில் நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கீழப்பாவூர் பேரூராட்சிக்கு மட்டும் சிற்றாற்றிலிருந்து குடிநீர் வழங்குவதற்காக ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன,

குழந்தைகள் மருத்துவமனை

*3106—திரு. வி. பி. இராசன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராசபாளையத்தில் குழந்தைகள் மருத்துவமனை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே,

இல்லை.

நோயாளிகளுக்கான இதய வால்வுகள்

* 9024—டாக்டர் க. காஞ்சனா :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் .கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை பொது மருத்துவமனையில் இதய வால்வுகள் பாதிக்கப்பட்டு உயிருக்குப் போராடும் நோயாளிகளுக்கு மருத்துவமனையில் 'வால்வு' இல்லாத காரணத்தால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதற்காக எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வால்வுகளும் தேவையான உபகரணங்களும் தொடர்ந்து கிடைக்கத்தக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

டாக்டர் க. காஞ்சனா : தலைவர் அவர்களே, இதயத்திலே உள்ள பழுதுபட்ட ஈறுகள், வால்வுகளை அகற்றிவிட்டு செயற்கை ஈறுகள், வால்வுகளைப் பொருத்துகின்றபோது கடந்த 20 ஆண்டுகளாக குறைந்தபட்சம் 10 ஆண்டுகளுக்கு பொருத்திக்கொண்ட நோயாளிகளுக்கு எந்த உடல் .கோளாறும் ஏற்படாது என்ற

குழந்தைகள் மருத்துவமனை

*3106—திரு. வி. பி. இராசன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராசபாளையத்தில் குழந்தைகள் மருத்துவமனை ஏற் படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகா**மணி :** தலைவர் அவர்களே,

இல்லை.

நோயாளிகளுக்கான இதய வால்வுகள்

* 9024—டாக்டர் க. காஞ்சனா :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் .கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னை பொது மருத்துவமனையில் இதய வால்வுகள் பாதிக்கப்பட்டு உயிருக்குப் போராடும் நோயாளிகளுக்கு மருத்துவமனையில் 'வால்வு' இல்லாத காரணத்தால் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதற்காக எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகா**மணி :** தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வால்வுகளும் தேவையான உபகரணங்களும் தொடர்ந்து கிடைக்கத்தக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

டாக்டர் க. காஞ்சனா : தலைவர் அவர்களே, இதயத்திலே உள்ள பழுதுபட்ட ஈறுகள், வால்வுகளை அகற்றிவிட்டு செயற்கை ஈறுகள், வால்வுகளைப் பொருத்துகின்றபோது கடந்த 20 ஆண்டு களாக குறைந்தபட்சம் 10 ஆண்டுகளுக்கு பொருத்திக்கொண்ட நோயாளிகளுக்கு எந்த உடல் .கோளாறும் ஏற்படாது என்ற

1990 ஏப்ரல் 21]

உத்திரவாதத்துடன் உலகம் முழுவதும் உபயோகப்படுத்தப் படுகின்ற, ஒரு வால்வினுடைய விலை 9,020 ரூபாய் என்று வாங்கப்பட்டுவந்த ஸ்டார் எட்வர்டு வால்வு வாங்கப்படுவது நிறுத்தப்பட்டு, விற்பனைக்கு வந்து இரண்டு வருடங்களே ஆகின்ற உழைப்புக்கு எந்தவிதமான உத்திரவாதமும் தரப் படாத நிலையில் சோரின் வால்வுகள் சென்னை பொது மருத்துவ மனை இதய நோய்ப் பிரிவில் வாங்கப்படுவதை அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு வாங்கப்பட்ட வால்வி னுடைய எண்ணிக்கையே 10 தான். ஆகவே இது அதிகமாக வாங்கப்பட்டது போன்ற குறிப்புகளை எல்லாம் கொடுப்பார்கள் என்று சொன்னால் எங்கேயிருந்து வாங்கப்பட்டது என்ற குறிப்புகளும் கொடுக்கப்படும். இதனுடைய விலை ரூ. 8,528. டில்டிங் டைப் வால்வு ஒன்று 10,575 ரூபாயாக இருக்கிறது. ஆகவே வால்வுகளைப் பொறுத்தவரையில் சென்ற ஆண்டு வாங்கப்பட்டு இருப்பது 10 தான் என்ற காரணத்தினால் மேலும் 50 வால்வுகளை வாங்குவதற்காக அரசு முயற்சிகளை மேற் கொண்டிருக்கிறது. மருத்துவர் என்ற முறையிலே அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற கருத்துக்களையும் அரசு கருத்தில் கொள்ளும்.

டாக்டர் க. காஞ்சனா : தலைவர் அவர்களே;, இந்த ஸ்டார் எட்வர்டு வால்வு ஒன்றின் விலை 8,528 ரூபாய் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இப்போது வாங்கப்படுகின்ற சோரின் வால்வு ஒன்றின் விலை 12,000 ரூபாய் என்று ஆகிறது. கிட்டத்தட்ட 3,000 ரூபாய் வித்தியாசம் வருகின்றது. அப்படிப் பார்த்தால் வாங்க இருக் கின்ற 50 வால்வுகளில் அரசுக்கு இழப்பு இலட்சத்து ஐம்பதா யிரம் ரூபாய் என்ற அளவிற்கு வருகிறது. இதனை அரசு கருத் தில் கொள்ளுமா ? இப்படி இந்த பிராண்டை மாற்றி வாங்கு வதற்குக் காரணம் ஏதேனும் உண்டா ? ஹாஸ்பிடல் அத்தா ரிட்டீஸ் காரணமா அல்லது டிபார்ட்மெண்ட் அதிகாரிகள் காரணமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, வால்வு கம்பெனிக்காரர்கள் மருத்துவரை அணுகி எங்களுடைய கம்பெனிக்காக வேண்டுமானால் பரிந்துரை செய்யுங்கள் என்று சொல்லியிருக்கலாம். அந்த வால்வுகளை வாங்குவதைப் .பொறுத்த வரையில் அங்கே பர்சேஸ் கமிட்டி என்ற ஒரு கமிட்டி இருக்கிறது. அவர்களுடைய பரிந்துரையின் அடிப்படையில்தான் வால்வுகள் வாங்கப்படுகின்றன.

[1990 ஏப்ரல் 21

தோணித்துறை பாலம்

* **3527** திரு. இ. புகழேந்தி :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கடலூர் சொத்திக்குப்பம், ராசாபேட்டை பகுதியில் ஜெட்டி (தோணித்துறை பாலம்) அமைக்கும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. இ. புகழேந்தி : பேரவைத் தலைவர் அவர்களே, சொத்திக்குப்பம், ராசாப்பேட்டை என்ற இரண்டு கிராம மக்களும் நகர்ப்புறத்திற்கு வரவிருப்பினும் மற்றைய அனைத்துப் பகுதிகளுக்கும் செல்லவிருப்பினும் ஆற்றைக் கடந்து வர வேண்டிய நிலையிலே இருக்கிறார்கள். அவர்கள் ஆற்றைக் கடந்து வருவதற்காக தோணிகளிலே வருகின்ற காலங்களில் அவர்களுக்கு ஜெட்டி வசதி இல்லாத காரணத்தினால் தோணி களிலே ஏறுகின்ற போது கர்ப்பிணிப் பெண்களும், சின்னஞ்சிறு குழந்தைகளும் நீண்டதூரம் நீரிலே நடந்து வந்து ஏற வேண்டிய ஒரு நிலை இருப்பதினால்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வர்ணனைகளைக் குறைத்து வினாத் தொடுங்கள். ஏற்கெனவே நேரம் ஆகி விட்டது.

திரு. இ. புகழேந்தி : இந்த நிலைமைகளை மாற்றுகின்ற வண்ணமாக அரசு அங்கே ஜெட்டி அமைக்கின்ற நிலைக்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவர் அவர் களே, மீனவர்களுக்குப் பயன் அளிக்கின்ற வகையிலே ஜெட்டி அமைக்கின்ற திட்டம்தான் மீனளத் துறை பரிசீலனை செய் யும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வேறு காரணங்களுக் காக தோணி துறைமுகம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக் கையினை இங்கே வைத்து இருக்கிறார். அது குறித்து போக்கு வரத்துத் துறை அமைச்சர் அவர்களைத் தொடர்பு கொண்டு அந்த வினாவிற்குப் பதிலினைப் பெற்றுக்கொள்ளலாம் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1990 ஏப்ரல் 21]

கால்நடை மருத்துவர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்குதல்

* 3744 திரு. வி. தம்புசாமி :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கால்நடை மருத்துவர்களுக்கு மோட்டார் சைக்கிள் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. வி. தம்புசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை மருத்துவர்கள் தங்குவதற்கு மருத்துவமனைக்கு அருகாமையில் வீடும் கிடையாது. நீண்ட தூரத்தில் இருந்து வரவேண்டியுள்ளது. கிராமங்களுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. அவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். ஆகவே மருத்துவப் பணி சிறப்பாக நடைபெறுவதற்கு அவர்களுக்கு கடனுக்காவது மோட்டார் சைக்கிள் வாங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : தலைவர் அவர்களே, ஏற்கனவே அவர்கள் கடன் பெற்று மோட்டார் சைக்கிள் வாங்குகின்ற திட்டம் அரசிடம் இருக்கிறது. அதன் மூலம் பயன் அடையலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

10–10 மணி

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி அளிக்கப்படுகின்ற மோட்டார் சைக்கிளுக்கு பெட்ரோல் வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய நிதி நிலைமை அதற்கு இடம் தராது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1990 ஏப்ரல் 21

காலநடை மருத்துவக் கல்லூரி.

* 7215 திரு. ப. சுந்தரம் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மறைமலை நகர் நகரியத்தில் உள்ள காட்டுப் பாக்கம் விவசாயப் பண்ணையில் கால்நடை மருத்துவ கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அத்திட்டம் செயல்படுத்தப் படும் ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

நலிவடைந்த கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்.

* 4044 திரு. இரெ. இராசமாணிக்கம் :
டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் உள்ள நலிவடைந்த கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை ?

(ஆ) அவற்றை அரசே ஏற்று நடத்தி அதன் உறுப்பினர் களை வாழவைக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழகத்தில் 189 நலிவடைந்த கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன.

(ஆ) மேலே குறிப்பிடப்பட்டுள்ள சங்கங்களை அரசு ஏற்றுக் கொள்ளும் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை

[1990 ஏப்ரல் 21

கால்நடை மருத்துவக் கல்லூரி.

* 7215 திரு. ப. சுந்தரம் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மறைமலை நகர் நகரியத்தில் உள்ள காட்டுப் பாக்கம் விவசாயப் பண்ணையில் கால்நடை மருத்துவ கல்லூரி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது அத்திட்டம் செயல்படுத்தப் படும் ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழாது.

நலிவடைந்த கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்.

* 4044 திரு. இரெ. இராசமாணிக்கம் :
டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு கைத்தறி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் உள்ள நலிவடைந்த கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை ?

(ஆ) அவற்றை அரசே ஏற்று நடத்தி அதன் உறுப்பினர்களை வாழவைக்க அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழகத்தில் 189 நலிவடைந்த கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன.

(ஆ) மேலே குறிப்பிடப்பட்டுள்ள சங்கங்களை அரசு ஏற்றுக் கொள்ளும் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை

1990 ஏப்ரல் 21]

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் 189 நலிவடைந்த கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவைகளை அரசு ஏற்று நடத்தக்கூடிய ஆய்வு இல்லை என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கூட்டுறவு நெசவாளர்களுடைய நியாயமான கோரிக்கையை ஏற்று நலிவடைந்த கூட்டுறவுச் சங்கங்களை அரசு ஏற்றுக்கொள்ள மீண்டும் ஆவன செய்யுமா என நான் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்ககளை அரசு ஏற்று நடத்துவது என்பது கூட்டுறவுக் கொள்கைக்கு முரண்பட்டது. கூட்டுறவுச் சங்கங்கள் உறுப்பினர்களை சேர்த்து அவர்கள் தேர்ந்தெடுக்கும் நிர்வாகக் குழுவின் அமைப்பின் கீழ் அந்த நெசவாளர் சங்கங்கள் இயங்க வேண்டும். அரசு ஏற்றுக்கொள்ளுவது என்றால் அது கூட்டுறவு கொள்கைக்கு முரண்பாடாக அமையும். இருப்பினும் நலிவடைந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசு பங்குத் தொகை மற்றும் பங்கு மூலதனத் தொகை தள்ளுபடி மானியம் முதலிய உதவிகளைச் செய்ய அரசு முன் வந்திருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக சங்கங்களைத் திறப்பதைக் காட்டிலும், நலிந்த சங்கங்களில் இப்போது புதிய உறுப்பினர்களைச் சேர்க்க அரசு உத்தரவிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாக உறுப்பினர்களைச் சேர்க்கின்ற அந்தப் பணி முன்பு நடைபெற்றது. தற்போது அந்தச் சங்கம் இல்லை. ஆனால் இந்த அரசைப் பொறுத்த வரையில் கூட்டுறவு அமைப்புகளில் நெசவாளர்களைக் கொண்டு வருவதுதான் இந்த அரசினுடைய கொள்கை. புதிதாக நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்துவதை இந்த அரசு வரமவற்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

காவிரி நீர்ப் பிரச்சினை பற்றி விவாதிக்க 19—4—1990 ஆம் நாளன்று நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட அ.இ.அ.தி.மு.க.வினரின் புகைப்படங்கள் பத்திரிகைகளில் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுவது குறித்து,

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி நீர் பங்கீடு தொடர்பாக 19—4—1990ல் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட்டிய சர்வ கட்சிக் கூட்டத்தில் பிரதான எதிர்க்கட்சியாக இயங்கும் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா அவர்கள் கலந்து கொண்டார்கள். தொலைக்காட்சியில் இந்தச் செய்தி ஒளிபரப்பப்பட்டது. ஆனால் பத்திரிகைகளில் அவரது படம் இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளது. தமிழகத்தில் தலையாயப் பிரச்சினையாக உள்ள காவிரி நீர்ப் பிரச்சினையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் கலந்து கொள்ளாதது போன்ற கருத்தும், தமிழக அரசின் முடிவு தமிழ் மக்களின் ஒட்டு மொத்தமான கருத்து அல்ல என்றும் மக்கள் மத்தியில் எழுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. ஆகவே, இது போன்ற நிகழ்வுகள் தவிர்க்கப்படும் வகையில் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கோள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பத்திரிகைகளைப் பொறுத்த விஷயம். இருந்தாலும் கூட நான் நடைபெற்றதைச் சொல்ல விரும்புகிறேன். அன்றையதினம் முதல் நாள் நடைபெற்ற, 19 ஆம் தேதி நடைபெற்ற அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கு மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் தாமதமாக வந்தார்கள். ஏன் என்றால் அவர்கள் கூடிப்பேசி கலந்து கொள்ளுவதைப் பற்றி ஒரு முடிவு எடுத்து வருவதற்கு தாமதம் ஆகிவிட்டது. அதற்கு முன்பாகவே புகைப்படக்காரர்கள் புகைப்படம் எடுத்து விட்டார்கள். இந்த புகைப்படக்காரர்கள் எப்போதுமே படத்தை எடுத்த உடன் விரைவாக அவர்கள் அங்கிருந்து சென்று விடுவது வழக்கம். ஏன் என்றால் மாலைப் பத்திரிகைகளில் வந்து விடவேண்டும் என்பதற்காக அவர்கள் எடுத்துக் கொண்டு சென்று விட்டார்கள். அதன் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் வந்த உடன் நான் உடனடியாகச் சென்று புகைப்படக்காரர்களையும், டி.வி.

நிலையத்திலிருந்து வந்தவர்களையும் அழைத்து வர நானே சொன்னேன். அவர் வருவதை விட அவர் வந்தார் என்று நிரூபிக்கவேண்டியது எனக்கு ரொம்ப முக்கியம் (சிரிப்பு) அதனால் உடனடியாக டி.வி.-க்காரர்களை அழைத்து வந்து மீண்டும் ஒருமுறை டி.வி. எடுக்கும்படி செய்யச் சொன்னேன். அது டி.வி. யிலே வந்துவிட்டது. ஆனால், புகைப்படம் எடுக்கப்பட்டது இருட்டடிப்புச் செய்யப்படவில்லை. நிச்சயமாக அப்படி நடைபெறவில்லை. இதைப் பெரிதுபடுத்த வேண்டாம். ஏனென்றால் நாம் எல்லோரும் இந்தப் பிரச்சினையிலே ஒன்றாக இருக்கின்றோம். நாளையதினம் மாலையிலேகூட எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களும் டெல்லிக்குச் செல்ல இருக்கிறார்கள். எல்லா கட்சிகளும், திராவிட முன்னேற்றக் கழகம், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், காங்கிரஸ், சி.பி.எம்., சி.பி.ஐ., இந்திய ஐக்கிய பொதுவுடமைக் கட்சி, இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கினுடைய சமது பிரிவு ஆகிய எல்லா எம்.பி.-க்களும் நாளை மாலையிலே டெல்லி செல்ல இருக்கிறார்கள். 23 ஆம் தேதி பிரதமரைச் சந்தித்து இந்த முறையீட்டைச் செய்ய இருக்கிறார்கள். இப்படி ஒரு ஒற்றுமையான சூழ்நிலை இருக்கிறது. (குறுக்கீடு) சொல்லி விட்டேன். சமது பிரிவு என்று சொல்லிவிட்டேன். இந்திய யூனியன் முஸ்லீம் லீக்கினுடைய சமது பிரிவு என்று சொன்னேன். நீங்கள் சமர்த்தாகக் கவனிக்கவில்லை. (சிரிப்பு) ஆகவே, எல்லோரும் ஒன்றாக இந்தப் பணியிலே, நம்முடைய கட்சி கருத்துவேறுபாடுகள் அத்தனையும் மறந்துவிட்டு இதிலே ஒன்று கூடி இருக்கிறோம். ஆகவே, வேண்டுமென்றே அது இருட்டடிப்புச் செய்யப்படவில்லை.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

10-15 மணி

*திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்ன கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். நான் வர தாமதமாகிவிட்டது என்பது உண்மை. ஆனால் நான் வந்ததும் சொன்னேன் ; தாமதத்திற்குரிய காரணம் நாங்கள் காலை 7 மணிக்கே அந்தப் பிரச்சினையிலே பேச ஆரம்பித்து, தலைமைக் கழகத்திலே எங்கள் கட்சியிலே கூடிப்பேசி முடிவு செய்து விட்டு அவசரமாக வரவேண்டிய நிலைமைதான் இருந்தது. ஆனால் முதல்வர் அவர்கள் என்மீது கவனக் குறைவாக இருக்கிற காரணத்தாலே கார் அடிக்கடி பழுதாகிக் கொண்டிருக்கிறது. இத்தோடு நான் ஐந்தாவது காரை வைத்திருக்கிறேன். எதிர்க் கட்சித் தலைவருக்குக் கொடுத்த கார் பழுதாகிவிட்ட காரணத்தாலேதான் அந்தத் தாமதமே ஏற்பட்டது.

[1990 ஏப்ரல் 21

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அன்றைக்கு என்னுடைய இல்லத் திருமணத்திற்கு வரும்போதுகூட உங்களுடைய கார் பழுதாகிவிட்டது. (சிரிப்பு).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தங்கள் இல்லத் திருமணத்திற்கு அவர் வீட்டிலேயிருந்து நேரடியாக வரவில்லை. கே. கே. நகர் போய் சுற்றிக் கொண்டு வந்த காரணத்தால் பழுதாகிவிட்டது. (சிரிப்பு)

திரு. எஸ். ஆர், இராதா : தலைவர் அவர்களே, காலையிலே வந்துவிட்டேன். வந்து நிகழ்ச்சியைப் பார்த்து விட்டு தலைவர்களெல்லாம் மேடையில் இருந்தார்கள் என்று திரும்பி வந்துவிட்டேன். மறுபடியும் மாலை வரும் பொழுதுதான் இந்த விபத்து ஏற்பட்டது. (சிரிப்பு)

மாண்புமிகு டாக்டர். மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவருக்கு பழுதாகி விட்டது. மற்ற அ.தி.மு.க. உறுப்பினர்கள் வந்த பஸ் பழுதாகி விட்டதா? (சிரிப்பு) (குறுக்கீடு) மற்ற அ.தி.மு.க. உறுப்பினர்களும்தான் திருமணத்திற்கு வரவில்லையே, ஒரு வேளை அவர்கள் வந்த பஸ் பழுதாகிவிட்டதா ? (சிரிப்பு)

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, பல பேர் வந்திருக்கிறார்கள். முதல் நாளே கூட எங்கள் கட்சியைச் சேர்ந்த டாக்டர் அவர்கள் குடும்பத்தோடு போயிருக்கிறார். பலபேர் போயிருக்கிறார்கள். தலைவரைப் பொறுத்தவரையிலே எங்களிடத்திலே எந்தக் கருத்துவேறுபாடும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுந்தரராஜ் அவர்கள் திருமணத்திற்கு வந்திருந்தார், அனைவருடைய சார்பிலும். (சிரிப்பு)

3. ஒத்திவைப்புத் தீர்மானம்

இராமேஸ்வரம் கடல் பகுதியில் மீனவர்கள் சிலர் கடத்தப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் எஸ். ஆர். இராதா, குமரி அனந்தன், எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், ஆர். சிங்காரம், எஸ். டி. உகம்சந்த், சோ. அழகர்சாமி, கே. ஆர். இராமசாமி ஆகியோர் ''இராமேஸ்வரம் பகுதியில் மீன்

[1990 ஏப்ரல் 21

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அன்றைக்கு என்னுடைய இல்லத் திருமணத்திற்கு வரும்போதுகூட உங்களுடைய கார் பழுதாகிவிட்டது. (சிரிப்பு).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தங்கள் இல்லத் திருமணத்திற்கு அவர் வீட்டிலேயிருந்து நேரடியாக வரவில்லை. கே. கே. நகர் போய் சுற்றிக் கொண்டு வந்த காரணத்தால் பழுதாகிவிட்டது. (சிரிப்பு)

திரு. எஸ். ஆர், இராதா : தலைவர் அவர்களே, காலையிலே வந்துவிட்டேன். வந்து நிகழ்ச்சியைப் பார்த்து விட்டு தலைவர்களெல்லாம் மேடையில் இருந்தார்கள் என்று திரும்பி வந்துவிட்டேன். மறுபடியும் மாலை வரும் பொழுதுதான் இந்த விபத்து ஏற்பட்டது. (சிரிப்பு)

மாண்புமிகு டாக்டர். மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, எதிர்க் கட்சித் தலைவருக்கு பழுதாகி விட்டது. மற்ற அ.தி.மு.க. உறுப்பினர்கள் வந்த பஸ் பழுதாகி விட்டதா? (சிரிப்பு) (குறுக்கீடு) மற்ற அ.தி.மு.க. உறுப்பினர்களும்தான் திருமணத்திற்கு வரவில்லையே, ஒரு வேளை அவர்கள் வந்த பஸ் பழுதாகிவிட்டதா ? (சிரிப்பு)

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, பல பேர் வந்திருக்கிறார்கள். முதல் நாளே கூட எங்கள் கட்சியைச் சேர்ந்த டாக்டர் அவர்கள் குடும்பத்தோடு போயிருக்கிறார். பலபேர் போயிருக்கிறார்கள். தலைவரைப் பொறுத்தவரையிலே எங்களிடத்திலே எந்தக் கருத்துவேறுபாடும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சுந்தரராஜ் அவர்கள் திருமணத்திற்கு வந்திருந்தார், அனைவருடைய சார்பிலும். (சிரிப்பு)

3. ஒத்திவைப்புத் தீர்மானம்

இராமேஸ்வரம் கடல் பகுதியில் மீனவர்கள் சிலர் கடத்தப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் எஸ். ஆர். இராதா, குமரி அனந்தன், எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், ஆர். சிங்காரம், எஸ். டி. உகம்சந்த், சோ. அழகர்சாமி, கே. ஆர். இராமசாமி ஆகியோர் ‘‘இராமேஸ்வரம் பகுதியில் மீன்

1990 ஏப்ரல் 21] [பேரவைத் தலைவர்]

பிடிக்கச் சென்ற மீனவர்கள், சிலரால் 18–4–1990 அன்று கடத்தப்பட்டதால் மீனவர்கள் நடுவில் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கவேண்டும்'' என்ற தீர்மானத்தை மொழிய அனுமதி கோரி முன்னறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து மிகச் சுருக்கமாகக் கூறும்படி அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமேஸ்வரத்திலேயிருந்து மீன் பிடிக்கச் சென்ற மீனவர்கள் கடத்தப்பட்டதாகவும் அவர்களை தேடுகிற முயற்சியில் ஈடுபட்டதாகவும் செய்திகள் வந்தன. இராமேஸ்வரத்தில் இருக்கிற மீனவர்கள் சங்கத்தின் சார்பில் அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் ஒரு தந்தி மூலம் இந்தச் செய்தி தரப்பட்டிருந்தது. அந்தச் செய்தி எனக்கும் வந்தது. அதைப்போல எல்லா பத்திரிகைகளிலும், இராமேஸ்வரத்திலேயிருந்து மீன் பிடிக்கச் சென்றவர்கள் கடத்தப்பட்டார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது. ஆனால் இன்றைக்குக் காலையிலேகூட வானொலியிலே மீனவர்கள் திரும்பி வருகிறார்கள் என்ற தகவலும், அந்த மீனவர்கள் திரும்பிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இலங்கையிலே இருக்கின்ற அரசு அறிவித்ததாகவும்—அவர்கள் எப்படி தலைமன்னார் பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டார்கள், கொண்டு செல்வதற்கு என்ன காரணம் என்ற அந்த விவரங்கள் எல்லாம் இல்லாமல் இருக்கின்றன. நாகை மீனவர்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைக்கு இன்னும் சரியான அளவிற்கு ஒரு தீர்வு ஏற்படவில்லை. ஆனால் இன்றைக்கு மறுபடியும் இராமேஸ்வரத்திலே இருக்கிற மீனவர்கள் இந்த நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். தொடர்ந்து கடற்கரைப் பகுதியிலே இருக்கிற மீனவர்கள் தங்கள் தொழிலை செய்து ஒரு நிம்மதியான வாழ்க்கை வாழ்கின்ற ஒரு நிலையிலிருந்து இப்படிப் பட்ட சூழ்நிலைகள் ஏற்பட்டால் அவர்களுடைய வாழ்க்கை நிச்சயமாக பாதிக்கப்படும்.

10-20 மணி

ஆனால் இந்த நிலை எதற்காக ஏற்பட்டிருக்கிறது என்பதையும், நாம் கொஞ்சம் கவனித்தாக வேண்டும். சமீபத்திலே இலங்கையில் ஏற்பட்டிருக்கின்ற மாற்றத்தின் காரணமாக, விடுதலைப்புலிகள் நம்முடைய மீனவர்களைக் கடத்திக் கொண்டு போகிறார்கள் என்ற நிலை இருக்கிறது. இங்கே தெளிவாகக் குறிப்பிட விரும்புகிறேன் — விடுதலைப்புலிகளின் தலைவராக இருக்கின்ற பிரபாகரன் அவர்களின் தலைமையில் இருக்கிற விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையிலும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்தில் பிரபாகரன் **அவர்**

களுக்கு பல்வேறு வகைகளில் உதவிகள் செய்யப்பட்டு, அந்த உதவிகளின் காரணமாக பல்வேறு சாதனைகளை அவர் செய்திருக்கிறார். அதை நாங்களும் மறக்க மாட்டோம், அவர்களும் மறுக்க மாட்டார்கள். ஆனால் இன்றைக்கு எழுந்திருக்கிற நிலைமை, தமிழ்நாட்டில் இருக்கிற மீனவர்கள், தொழில் செய்வதற்குப் பாதுகாப்பு இல்லை என்று வருகிற நேரத்தில், பிரபாகரன் மீதோ விடுதலைப்புலிகளின் மீதோ நாம் எவ்வளவுதான் அன்பு வைத்திருந்தாலும் கூட, நம்முடைய வீட்டில் இருப்பவர்களுக்கு அவர்களால் ஆபத்து என்ற ஒரு சூழ்நிலை ஏற்படும்போது, அந்த ஆபத்திலிருந்து நம் மீனவர்களைக் காப்பாற்றவேண்டுமென்ற உணர்வோடு நாம் இதிலே நடவடிக்கை எடுக்கவேண்டும். அப்படி நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொன்னால், அதிலே இருக்கிற ஒரு முக்கியப் பிரச்சினை, கடலில் மீன் பிடிக்கிற எல்லை நிர்ணயிக்கப்படாமல் இருக்கிறது என்று காரணம் சொல்லப்படுகிறது.

தெளிவுபடுத்த விரும்புகிறேன், 1984 ஆம் ஆண்டில் கடலில் மீன்பிடிக்கிற எல்லையைக் குறிப்பிடுகிற நேரத்தில், காற்று அடைக்கப்பட்ட பிளாஸ்டிக் குடுவைகளில் கொடி கட்டி, அது கடலில் பறக்க விடப்பட்டு இருந்தது. ஆனால் விடுதலைப் புலிகள் பிரச்சினைகள் ஏற்பட்ட காரணத்தாலோ, அல்லது இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை ஏற்பட்ட காரணத்தாலோ அப்படிப்பட்ட எல்லைகளைக் காட்டுகின்ற கொடிகள் அழிக்கப் பட்டுவிட்ட காரணத்தால், இன்றைக்கு அந்த எல்லைகள் தெரியாமல் இருக்கின்றன. நாம் அதற்கு செய்யவேண்டிய முயற்சி நம்முடைய மீனவர்கள் தொழில் செய்வதற்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமானால், இந்திய அரசாங்கத்தை வற்புறுத்தி நம்முடைய கடற்பகுதிகளில் நம்முடைய இராணுவ வீரர்கள் நம்முடைய மீனவர்களைக் காப்பாற்றுவதற்கான முயற்சிகளை எடுத்தாக வேண்டும்.

அதேபோல, நம்முடைய மீனவர்கள், நம்முடைய எல்லைகளைத் தெரிந்து கொள்ளும் வகையில் மறுபடியும் அந்த அடையாளம் காட்டுகின்ற கொடிகளை நிர்ணயிக்க வழிகளை மேற்கொள்ள வேண்டும். அதேபோல, நாம் விடுதலைப் புலிகளின் மீது என்னதான் அன்பு வைத்திருந்தாலும் நம்மவர்களுக்கு நம்முடைய இல்லத்தில் இருப்பவர்களுக்கு நம் நாட்டு மீனவர்களுக்கு ஆபத்து என்று சொன்னால் மிகப் பெரிய பிரச்சினையாக அது உருவாகிவிடும் என்பதை அவர்களுக்குத் தெரிவித்து அவர்கள், அவர்களுடைய தாயகத்தில் எவ்வளவு நம்பிகையும் அன்பும் வைத்திருக்கிறார்களோ அதேபோல, நம்முடைய தாயகத்தில் இருக்கிற மக்கள்மீது நாம் அன்பும் நம்பிக்கையும் வைத்திருப்பதை நாம் காட்ட வேண்டிய நிலையில் இருக்கிற காரணத்தால், அந்த நிலைமைகளைத் தவிர்ப்பதற்கு பிரபாகரனோ அல்லது மற்றவர்களோ அந்த நிலைமையை எடுக்காமல் செய்வதற்கு நாம் வேண்டுகோள் விட்டு,

நம்முடைய தமிழகத்தில் இருக்கிற மீனவர்கள் தொழில் செய்கின்ற அந்த உரிமையை, அந்த பாதுகாப்பை நாம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுகுறித்து விவாதிப்பதற்காக அவையினுடைய மற்ற அலுவல்களை ஒத்தி வைத்து விவாதிக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இலங்கை இராணுவம் அடித்தது என்றால், கண்ணீரோடும் செந்நீரோடும் வந்தால் பாதுகாக்கிற தாய் வீடாக இருந்து கொண்டு இருந்தது இந்தியத் திருநாடு, இந்தியத் திருநாட்டின் கடற்கரை, எல்லை, தமிழகம். அங்கே இருக்கிற மீனவர்கள் இலங்கைப் போராளிகளால், அது புலிகளாக இருந்தாலும், மற்றவர்களாக இருந்தாலும் ஆதரித்து அவர்களுக்கு உணவளித்து, உடுக்க வைத்து, உறைவிடம் கொடுத்து பாதுகாத்தவர்கள். அப்படிப்பட்ட மீனவர்களே இன்று அஞ்சி நடுங்குகிற வகையில் புலிகளின் செயல்பாடுகள் இருக்கின்றன என்பதையும் அன்று வந்த செய்திகளும், தோழர் போஸ் அவர்கள் கொடுத்து இருக்கிற தந்தியும் நமக்குத் தெரிவித்துக் கொண்டிருக்கின்றன. இந்தத் தந்தி சமீபத்தில் வந்தது. மீண்டும் பிடித்துக் கொண்டு போய் இருக்கிறார்கள் என்று சொல்கிற தந்தி அது. எனவே நான் ஒத்திவைப்புத் தீர்மானத்தில் சொன்னதைத்தான் சொல்கிறேன். அவர்கள் மிக விரைவாக வருகிற இயந்திரப் படகுகளிலே வந்து அங்கே சர்வ சாதாரணமாக பெட்ரோல் வாங்கிக் கொண்டு இங்கிருந்து போகிறபோது அவர்களுடைய தோற்றத்தையும் அவர்கள் கையில் வைத்திருக்கிற பயங்கரமான ஆயுதங்களையும் பார்க்கிறபோது நம்முடைய மீனவர்கள் அச்சப்படுகிறார்கள். ஏற்கனவே காற்றுக்கும் புயலுக்கும் மழைக்கும் கடல் அலைக்கும் பயந்து பயந்து வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கிற நமது மீனவப் பெருமக்கள், தமிழ் பேசுகிற இன்னொரு கூட்டத்தாரால் புலிகளால் துன்புறுத்தப்படுவோமோ என்கின்ற அச்சத்தில் வாழ வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அச்சமில்லாமல் வாழ்கிற வாழ்க்கை சுதந்திரம் என்றால் அவர்கள் அச்சத்தோடு வாழ்கிறார்கள்.

10—25 மணி

இதற்குக் காரணம் என்ன என்கிறபோது இவர்கள் எல்லை மீறி மீன் பிடிக்கப் போவதுதான் காரணம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இவர்கள் எல்லை மீறிப் போகாமல் இருக்க வேண்டும். இவர்களுடைய எல்லை எது என்று நிர்ணயிக்கின்ற பொறுப்பை மத்திய அரசு எடுத்துக் கொள்ள வேண்டும். அதற்காக மாண்புமிகு திரு. மனோகரன் அவர்களை நான் டெல்லிக்கு அனுப்புகிறேன். அவர்கள் நல்ல முடிவோடு வருவார்கள் என்று சொன்னார்கள். அவர் என்ன முடிவோடு வந்து இருக்கிறார் என்று எனக்குத் தெரியாது.

[திரு. குமரி அனந்தன்] [1990 ஏப்ரல் 21

ஆனாலும் எப்போதும் மீன்பிடிக்கிற இடத்திலே இவர்கள் மீன் பிடித்தாலும் கூட இவர்களைப் பிடித்துக்கொண்டு சென்று விடுகிறார்கள். அதற்குக் காரணம் என்னவென்று சொன்னால் புலிகள் எந்தெந்த இடங்களுக்குப் போகவேண்டும் என்று தங்களுக்கு என்று எந்தெந்தப் பாதைகளை வகுத்துக் கொண் டிருக்கிறார்களோ, எதை எதை எடுத்துச் செல்ல வேண்டுமென்று அல்லது இறக்கிவிட வேண்டும் என்று விரும்புகிறார்களோ அந்தப் பாதையிலே இவர்கள் மீன்பிடிக்கச் சென்று விடுகிறார்கள். இப்படி தெரியாமல் போகிற நேரத்திலே அவர்களுடைய கோபத்திற்கு ஆளாக வேண்டிய நிலை ஏற்படுகிறது. நான் இப்போது ஒரே ஒரு வேண்டுகோளைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கின்ற காரணத்தாலே, கப்பலில் வந்த பெண்களும், குழந்தைகளும் மான் போலே மருகி அழுதனர். ஒருவேளை கலவரம் வந்துவிடும் அல்லது சட்டம் ஒழுங்குப் பிரச்சினை வந்துவிடும் என்று கருதி நாம் அவர்களை ஒரிஸ்ஸாவுக்கு அனுப்புகிறோம். ஆனால் புலிகள் போலே சீறியே அவர்கள் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களைப் பற்றி நமது முதல்வர் அவர்கள் அன்றைக்கே ஒரு எச்சரிக்கை கொடுத்திருப்பார் என்றால், அதாவது மீனவர்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்று சொன்னதற்குப் பதிலாக, புலிகள் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்று சொல்லி இருந்தால் ஒரு வேளை நமது முதலமைச்சருடைய அறிவிப்பைப் பார்த்து, தமிழ் மக்களின் ஏகோபித்த குரல் அது என்று கருதி அவர்கள் இங்கே வராமல் இருந்திருக்கக்கூடும்.

இன்னொன்றையும் நான் புலிகளுக்காகவே இங்கே சொல்ல விரும்புகிறேன். பிரேமதாசாவினுடைய சதித் திட்டத்திலே அவர்கள் விழுகிறார்களோ என்கிற அச்சம் எனக்கு இருக்கிறது. இந்தப் புலிகள், இப்படி கொண்டு போனார்கள், கொண்டு போகிற இடத்திலே தாக்கினார்கள் என்கின்ற நாடாவைக் கூட திரு. சிங்காரம் அவர்கள் எடுத்துக் கொண்டு வந்திருக் கிறார்கள். ஆகவே எல்லை நெடுகிலும் இருக்கிற நமது மீனவர் களைப் பாதுகாக்க வேண்டும். நமது குடிமக்களைக் கடத்திச் செல்கின்ற காரணத்தாலே நமது முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய கோபத்திற்கு ஆளாவதோடு நமது குடிமக்களைக் கடத்திச் செல்கின்ற காரணத்தாலே மத்திய அரசினுடைய கோபத்தையும் பெற்றுக்கொள்கிறார்கள். எனவே மீனவர்களின் ஆதரவும் கிடையாது. மாநில அரசினுடைய ஆதரவும்கிடையாது, மத்திய அரசினுடைய ஆதரவும் கிடையாது. எனவே நாளைக்கு, மற்றவர்களை எல்லாம் ஒழித்ததற்குப் பிறகு புலிகளை ஒழிப்பதற்கு பிரேமதாசா முடிவெடுத்தால் இங்கே வந்து சேர்வதற்குக்கூட இடம் இல்லாமல் போகட்டும் என்று சதி வலை விரிக்கிறார்களோ என்ற சந்தேகம் கூட, நானும் தமிழன் என்ற நிலையிலே என்னுடைய உள்ளத்திலும் ஏற்படுகிறது. எது எப்படி இருந்தாலும் நமது நாட்டினுடைய

பாதுகாப்பு முக்கியம். நம்து மீனவர்களுடைய பாதுகாப்பும் முக்கியம். தமிழ்நாடு அமைதிப் பூங்காவாக இருக்க வேண்டும் என்றால் இப்படி வந்து துன்பப்படுத்துகிற புலிகளுக்கு கடுமையான எச்சரிக்கை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்வதற்கும் இன்னும் பிற செய்திகளை எல்லாம் இங்கே விவாதிப்பதற்கும் இந்த அவையின் பிற அலுவல்களை எல்லாம் ஒத்திவைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கடற்கரைப் பகுதியில் வாழக் கூடிய மீனவர்கள் சமீப காலமாக ஒரு அச்சத்துடன் வாழக்கூடிய நிலைமை இருக்கிறது. இரண்டு மூன்று தடவையாக இந்த மாதிரி படகிலே மீன் பிடிக்கச் சென்றவர்களைக் கடத்திச் சென்று அங்கே இலங்கை அரசாங்கமும், மற்ற அரசாங்கங்களும் தலையிட்டு அல்லது முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு திருப்பிக் கொண்டு வந்தார்கள் என்றெல்லாம் சொல்லக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இப்போதும் கூட இராமேஸ்வரம் சென்றவர்கள் இன்றைக்குப் பத்திரமாகத் திருப்பி அனுப்பப்பட்டதாகச் சொல்கிறார்கள். இப்படி ஒரு அச்சத்தோடு வாழக்கூடிய நிலைமை போக வேண்டுமென்றால் மத்திய அரசோடு தொடர்பு கொண்டு ஆவன செய்ய வேண்டி இருக்கிறது. நம்முடைய மீனவர்கள் கடற்கரையில் அச்சம் இல்லாமல் தங்களுடைய தொழிலைச் செய்ய வேண்டும். அப்படிப்பட்ட பாதுகாப்பான, சரியான ஏற்பாடுகளைச் செய்கின்ற வகையில் மாநில அரசு என்னென்ன ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்றெல்லாம் சிந்திக்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம்.

இன்றைக்கு இலங்கையில் நடக்கின்ற சம்பவங்கள் என்னென்னவோ நடக்கின்றன. அந்தப் பிரச்சினை பற்றி எல்லாம் இங்கே வாதிப்பது சரியல்ல என்று நான் கருதுகிறேன். நம்முடைய தமிழகத்திலே இருக்கின்ற மீனவர்கள் வாழ்க்கையை நடத்துவதற்குக் கூட முடியாமல் கடலிலே சென்று மீன் பிடிப்பதில் இடைஞ்சலும், தொந்தரவும் இருக்கின்றது என்று சொன்னால் அது தமிழகத்திலே இருக்கக்கூடிய நமக்கெல்லாம் பெருத்த கவலை அளிக்கக்கூடிய விஷயமாகும். ஆகவே இது சம்பந்தமாக நாம் என்ன செய்யவேண்டும்? மத்திய அரசை அணுகி இவர்களுக்குப் பாதுகாப்பு ஏற்பாடு செய்யவேண்டும். கடலிலே இதுதான் எல்லை என்று காண்பிப்பது கொஞ்சம் கஷ்டம்தான். ஆகவே மீன் பிடிக்கக்கூடியவர்கள் அங்கே கொஞ்சம், இங்கே கொஞ்சம் என்று தள்ளிச் செல்லலாம். மீன்கள் கூட இந்தப் பக்கம், அந்தப் பக்கம் என்று போகக்கூடும். ஏனென்றால் மீன்களுக்கு எல்லை தெரியாது. எனவே இதற்காகக் கடத்திக் கொண்டு செல்வது என்பது நியாயம் இல்லை. எனவே விடுதலை புலிகள் இந்த மாதிரி காரியங்களில் ஈடுபடுவது கண்டிக்கக்கூடிய

விஷயமாக எனக்குப் படுகிறது. ஆகவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதிலே சரியான நடவடிக்கை எடுத்து மீனவர்கள் அச்சம் இல்லாமல் தங்களுடைய தொழிலைச் செய்வதற்கு என்னென்ன செய்யவேண்டுமோ அவற்றைச் செய்து சரியான முடிவு எடுக்க வேண்டும். இது சம்பந்தமாக மேலும் சில விவரங்களைப்பற்றி இங்கே விவாதித்து முடிவு எடுக்க வேண்டிய அவசியம் இருப்பதன் காரணத்தால் இந்த அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

10–30 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை குறித்து முதலில் இந்த நிகழ்வினையும், அது தொடர்பாக நாங்கள் மேற் கொண்டுள்ள முயற்சிகளையும், விளைந்துள்ள நிலையையும் சுருக்கமாக இங்கே சொல்ல விரும்புகிறேன். அதற்குப் பிறகு இங்கே எழுப்பப்பட்ட பிரச்சினைகளுக்கு இயன்ற அளவுக்கு விளக்கம் அளிக்கவும் நான் முன்வருகின்றேன்.

தமிழக மீன் வளத் துறை இயக்குநர் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தோடு தொடர்பு கொண்டு காணாமல் போன மீனவர்களை மீட்க துரித நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். தமிழக அரசு இந்த விஷயத்தில் முழுக் கவனம் செலுத்தி, காணாமல் போன மீனவர்களை மீட்பதற்கு விரைவான முயற்சி களை எல்லாம் எடுத்துள்ளது. காணாமல் போன மீனவர் களைப் பற்றிய தகவல்களைப் பெறவும், அவர்களை மீட்கவும், இராமநாதபுரம் மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் முயற்சிகளை எடுத்து வருகிறார். 20—4—1990 அன்று காலை பேசாலை மீனவர் சங்கத்திலிருந்து இராமேஸ்வரம் மீனவர் சங்கத் தலைவருக்கு ஒரு அயல்நாட்டுத் தந்தி வந்துள்ளது. அதில் 12 படகுகளும், 57 தமிழக மீனவர்களும், பேசாலை மீனவர் சங்கக் கட்டிடத்தில் பத்திரமாக இருப்பதாகத் தகவல் தெரிவிக்கப் பட்டுள்ளது. பேசாலை என்ற இடம் இலங்கையின் வடக்குப் பகுதியான தலைமன்னாரிலிருந்து 12 கிலோ மீட்டர் கிழக்கிலே உள்ளது. இந்த இடம் தனுஷ்கோடியிலிருந்து சுமார் 30 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. காணாமல் போன நமது மீனவர்கள் மன்னார் அருகில், இலங்கைக்கு அருகே பத்திரமாக உள்ளதாகவும், அவர்களைப் பாதுகாப்பாக ராமேஸ்வரத்திற்கு அனுப்பிவைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் இலங்கையிலுள்ள பாதுகாப்பு அமைச்சகத்திடமிருந்து இலங்கையி லுள்ள இந்தியத் தூதுவர் மூலமாக சென்னை மீன் வளத் துறை இயக்குநர் அலுவலகத்திற்கு நேற்று மாலை தகவல் வந்துள்ளது. தனுஷ்கோடிக்கு அப்பால் கடல் பகுதியில் பலத்த காற்று மற்றும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ள காரணத்

தினால் மீனவர்கள் திரும்பி வருவதில் தாமதம் ஏற்பட்டுள்ள தாகவும், தகவல் பெறப்பட்டுள்ளது. தனுஷ்கோடிக்கும், தலை மன்னாருக்கும் இடையே கடல் பரப்பிலே தூரம் மிகக் குறை வாக இருப்பதால் எல்லை பற்றிய வரையறையை துல்லியமாக மதிப்பிடுவதில் மீனவர்களுக்கு சிரமங்கள் இருக்கின்றன என் பதையும் அவர்கள் நமக்குத் தகவலாகத் தந்துள்ளார்கள். இந்த எல்லை சரியாக வகுக்கப்படாத காரணத்தாலே, அல்லது வகுக்கப்படுகின்ற எல்லையிலே சில நேரங்களில் குழப்பம் ஏற்படுகின்ற காரணத்தினாலே, சில நேரங்களில் வேண்டு மென்றே எல்லையை மீறிச் செல்கின்ற காரணத்தினாலே ஒரு நாட்டு மீனவர்கள் இன்னொரு நாட்டு மீனவர்களால் சிறை பிடிக்கப்படுவது அல்லது கடத்திச் செல்லப்படுவது என்பது இயற்கையாக நடைபெற்று வரும் ஒன்று. நம்முடைய கடற் கரை ஓரங்களில் 12 nautical Miles-Territorial Waters என்று பொருள். அது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு மிக நன்றாகத் தெரியும். ஆனால் அப்படி அதைக் கடந்து சென்றால் பாஸ்போர்ட் மற்றும் எமிகிரேசன் சட்டங்களின் படி அது குற்றமாக ஆக்கப்படுகிறது. 12 nautical Miles எல்லை என்கின்ற இந்த நிலைமை நம்முடைய இந்தியாவிற் கும் இலங்கைக்கும் இடையே மிகுந்த குழப்பத்தை சில இடங்களில் ஏற்படுத்துகின்றது. வேதாரண்யத்திலிருந்து இலங்கையினுடைய எல்லை, ராமேஸ்வரத்திலிருந்து இலங்கை யினுடைய எல்லை குறிப்பிடப்பட்ட 12 மைலுக்குக் குறை வாக இருப்பதால் அங்கே சரிபாதியாக 12 மைல் எது என்று வகுக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதனால்தான் பிரச்சினை அடிக்கடி ஏற்பட்டிருக்கிறது. அவைகளைப் பற்றி எல்லாம் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் டெல்லிக்குச் சென்று அங்குள்ள அமைச்சரிடம் பேசுவார் என்று அறிவித் தீர்களே, அது என்ன ஆயிற்று என்று இங்கே காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் ஒரு வினாவை எழுப்பினார். மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் டெல்லிக்குச் சென்று மாண்புமிகு வெளியுறவு அமைச்சர் திரு. குஜ்ரால் அவர்களைச் சந்தித்து இது குறித்து அவரிடத் திலே நீண்ட நேரம் விவாதித்திருக்கிறார். அதை பற்றிய குறிப்பை மாத்திரம் இங்கே இப்போது குறிப்பிட விரும்பு கிறேன். மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் நாஞ்சிலார் அவர்கள் தேசிய ஒருமைப்பாடு மாநாட்டிற்கு ஏப்ரல் 11, 12 தேதிகளில் டெல்லிக்குச் சென்றிருந்தபோது மீனவர் பிரச் சினை குறித்து மாண்புமிகு வெளியுறவு அமைச்சர் திரு. குஜ் ரால் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தினார். பின்னர் வெளியுறவு அதிகாரிகளோடும் இது பற்றிப் பேச்சு வார்த்தை நடத்தி, தமிழக மீனவர்கள் இலங்கைக்கு கடத்தப்படுவதைத் தடுக்க, மேலும் தீவிரமாக கடலோர கப்பல் படையை (Coast Guard) உபயோகிக்க வேண்டுமென்றும், இந்திய இலங்கை கடல் எல்லையைத் தெளிவாக மீனவர்கள் தெரிந்து

கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமென்றும், அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டதை அடுத்து, மத்திய அரசும் உடனடியாக இதைப் பரிசீலித்து ஆவன செய்வதாக உறுதியளித்துள்ளது.

10-35 மணி

இலங்கை அரசோடு உடனடியாகத் தொடர்பு கொண்டு, நமது மீனவர்கள் கடத்தப்பட்டு, இன்னல்களுக்கு ஆளாக்கப்படக் கூடாது என்று மத்திய அரசு வலியுறுத்தும் என்றும் திரு. குஜ்ரால் அவர்கள் நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடத்திலே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். நான் சில நிகழ்ச்சிகளை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அத்துமீறி நம்முடைய எல்லைக்குள்ளே மீன் பிடிக்க வந்தவர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளில், சில நிகழ்வுகளிலே இங்கே கைது செய்யப்பட்டு, வைக்கப்பட்டிருக்கிறார்கள். 7-12-1988-இல் கவர்னர் ஆட்சி நடைபெற்ற போதுகூட இரவு மூன்று மணி அளவில் பர்மாவைச் சேர்ந்த 12 மீனவர்கள் நவீன மீன் படகிலே நமது கடல் எல்லைக்குள்ளே நுழைந்து மீன் பிடித்ததற்காகக் கைது செயயப்பட்டு, 13-3-1989 அன்று அவர்கள் மீது மேல் நடவடிக்கை கைவிடப்பட்டு, திருப்பி அனுப்பப்பட்டார்கள். 7-12-1988-லே கைது செய்யப்பட்டவர்கள் அவர்கள். அதற்குப் பிறகு 28-3-1989, இந்த ஆட்சி வந்த பிறகுகூட, காலை 10-15 மணிக்கு ஸ்ரீலங்காவிலிருந்து எரிக்காலம்பட்டி மன்னாரைச் சேர்ந்த நஷிர் என்பவர் இப்படி எல்லையை மீறி இங்கே வந்ததற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு, பிறகு விசாரணை செய்யப்பட்டு 29-5-1989 அன்று அவர்கள் மீது மேல் நடவடிக்கை கைவிடப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு 7-1-1990 அன்று மாலை 4 மணி அளவில் '' சாவின் '' என்ற ஒரு மீன்பிடிப் படகிலே வந்தவர் இங்கே கைது செயயப்பட்டார். அது பர்மாவிலிருந்து வந்த படகாகும். அதற்குப் பிறகு அவர் ஜாமீனிலே விடுதலை ஆனார். இருப்பினும் அந்தப் படகு இன்னும் திருப்பி அனுப்பி வைக்கப்படவில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் எல்லைகளை மீறுவது பெரும் குற்றமாகக் கருதப்படுகிறது. கடந்த காலத்திலே 4, 5 ஆண்டுக்காலத்திலே, இடையிலே ஐ.பி.கே.எப்.., கப்பல்கள் நின்று கொண்டிருந்த காரணத்தால் நம்முடைய மீனவர்களேகூட அதைத் தாண்டிச் செல்லாத ஒரு சூழ்நிலை இருந்தது. இப்போது அந்தக் காவல் படை அங்கேயில்லை. இவர்கள் தெரியாமலோ அல்லது தெரிந்தோ, எப்படியோ அந்த இடத்திற்குச் சென்றுவிடுகிறார்கள். ஆனால் அப்படிச் செல்கிறவர்களை அங்கே எச்சரித்து, நீங்கள் வராதீர்கள் என்று சொல்லி திருப்பி அனுப்புவதற்குப் பதிலாக அவர்களை அங்குள்ள சிலர்—அவர்கள் விடுதலைப் புலிகளாக இருந்தாலும்

1990 ஏப்ரல் 21] [டாக்டர் மு. கருணாநிதி]

சரி, அல்லது இலங்கை இராணுவ வீரர்களாக இருந்தாலும் சரி, அல்லது வேறு எந்தப் போராளிகளாக இருந்தாலும் சரி, அவர்களை எச்சரித்து அங்கேயிருந்து திருப்பியனுப்பாமல், அவர்களைக் கைது செய்து கொண்டு போய், அங்கே வைப்பதும், அது ஒரு பெரிய பரபரப்பான செய்தியாக தமிழகத்திலே பரவுவதும் நல்லதல்ல என்ற அந்த உணர்வில் எதிர்க் கட்சித் தலைவரவர்கள் சொன்ன அந்தக் கருத்துக்களையும், காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர், சி. பி. ஐ. சார்பாக நண்பர் அழகர்சாமி அவர்கள் ஆகியோர் சொன்ன அந்தக் கருத்துக்கள் எனக்கு உடன்பாடான கருத்துக்களே தவிர, அதிலே நான் வேறுபடவில்லை. அவர்கள் எச்சரித்து அனுப்பப்பட வேண்டும். நீங்கள் எல்லையைத் தாண்டி வரக் கூடாது என்று எச்சரித்து அனுப்பப்பட வேண்டுமேயல்லாமல், இப்படி அவர்களை அங்கேயே வைத்து, இரண்டு நாள் விளையாட்டு காட்டுவதோ அல்லது நல்லமுறையில் நாங்கள் உபசரித்து அனுப்பினோம் என்று சொல்லுவதோ இங்குள்ள தமிழர்களுக்குத் திருப்தியை அளிக்காது என்பதை நான் எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விடுதலைப் புலிகளுக்கு எச்சரிக்கை விடுக்கவில்லை என்று நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். நான் அன்றைக்கே சொல்லி இருக்கிறேன். எந்தப் போராளிகளாக இருந்தாலும், அவர்கள் ஆயுதங்களோடு தமிழகத்திலே உலவுவதற்கு இந்த அரசு இடம் தராது என்பதை நான் மீண்டும் ஒரு முறை வற்புறுத்திக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அது மாத்திரமல்ல, விடுதலைப் புலிகளுடைய பெயரால் இங்கே நடைபெறுகின்ற சில தீவிர பிரச்சாரங்களைப் பற்றிகூட காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் சொல்லி, பத்திரிக்கைகளைக் காட்டி நினைவுபடுத்தியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பிரச்சாரங்களும் தடை செய்யப்படும் என்பது மாத்திரமல்ல. இன்றைக்கு நான் சொல்லுகின்ற கருத்துக்களை எச்சரிக்கையாக அவர்கள் ஏற்றுக் கொள்ளாமல், தொடர்ந்து அப்படிப்பட்ட காரியங்களிலே ஈடுபடுவார்களானால், யாராக இருந்தாலும் அவர்களை சட்டம் விட்டு வைக்காது என்பதையும் நான் தெரிவித்துக் கொண்டு, நீங்கள் எல்லாம் எடுத்துச் சொன்ன அந்தக் கருத்திலே உங்களுடைய உணர்வுகளோடு நானும் ஒன்றுபடுகிறேன் என்று கூறி, இதற்கு மேல் இது குறித்து விவாதிக்க அவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டிய அவசியமில்லை என்று தலைவரவர்களுக்குத் தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முதலமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பின் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து, இது குறித்து விவாதிக்கத் தேவையில்லை என்பதால், இதற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

4. உரிமை மீறல் பிரச்சனை

'' தினமலர் '' நாளிதழ் மீது (அவை நடவடிக்கைகள் பற்றி வெளியிடப்பட்டுள்ள செய்தி குறித்து)—பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் அவர்கள் சட்டப் பேரவையில் 31-3-1990-ஆம் நாளன்று, திருநெல்வேலிப் பதிப்பு 21-3-1990 தேதிய தினமலர் நாளிதழில் 20-3-1990 சட்டப் பேரவை நடவடிக்கைகளைத் திரித்துப் பிரசுரித்துள்ளது என்று அவை உரிமை மீறல் பிரச்சினை ஒன்றினை எழுப்பினார். அதற்கு நான், நாளிதழ் ஆசிரியரிடமிருந்து விளக்கம் பெற்று என்னுடைய தீர்ப்பினை அளிப்பதாகக் குறிப்பிட்டிருந்தேன். 'தின மலர்' நாளிதழ் ஆசிரியர், தனது 6-4-1990 நாளிட்ட கடிதத்தில் கீழ்க் கண்டவாறு தெரிவித்துள்ளார் :

10-40 மணி

''21–3–1990 ஆம் நாளிட்ட நெல்லைப் பதிப்பு தினமலர் இதழில் வெளியான திரு. குமரி அனந்தன் பேச்சு தொடர்பாக 31–3––1990 அன்று சட்டப் பேரவையில் திரு. கதிரவன் எழுப்பிய அவை உரிமை மீறல் பிரச்சினை பற்றி அதே நாளில் எமது நிருபர்கள் என் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். மேற்படி செய்தியில் பாண்டியனும் அ.தி.மு.க. உறுப்பினரும் என்பதற்கு மாறாக பாண்டியனும் தி.மு.க. உறுப்பினர்கள் என்ற சொற்கள் இடம் பெற்று உள்ளன. சென்னையிலிருந்து தொலை அச்சு 'டெலிபிரிண்டர்' மூலம் இச்செய்தியை எமது இதர பதிப்புகளுக்கு அனுப்பும் போது நெல்லை தொலை அச்சில் மட்டும் 'அ' என்ற எழுத்து விடப்பட்டதால் இப்பிழை நேர்ந்துள்ளது என்று விசாரணை மூலம் அறிந்தேன். மற்றப் பதிப்புகளில் இப்பிழை இடம் பெறவில்லை. எனினும் தவறுக்குப் பொறுப்பேற்று உடனடியாக இந்த விளக்கத்தை 'வாசகர்களின் கவனத்துக்கு' என்று தலைப்பிட்டு 1–4–1990 ஆம் நாளிட்ட இதழ்களில் வெளியிடப்பட்டுள்ளது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் கடிதம் வரும் வரையில் காத்து இராமல், அவையில் பிரச்சினை எழுப்பப்பட்ட மறுநாளே, நெல்லை பதிப்பு மட்டுமின்றி சென்னை, ஈரோடு, திருச்சி, மதுரை ஆகிய பதிப்புகளிலே விளக்கம் அளித்ததன் மூலம் திரு. கதிரவன் கருதுவது போல் தி.மு. கழக உறுப்பினர்கள் மீது களங்கம் கற்பிக்கும் நோக்கம் எமக்கு எள்ளளவும் இல்லை என்று தெளிவாக்க விரும்புகிறேன். செய்திகளில் ஏற்பட்ட பிழையால் யார் பாதிக்கப்பட்டு இருந்தாலும் அதற்காக வருந்துகிறேன்'' என்று

குறிப்பிட்டார்கள். இதழ் ஆசிரியர் தவறு எப்படி நேர்ந்தது என்று விளக்கியதுடன் தவறுக்கு வருத்தம் தெரிவித்து அந்தச் செய்தியும் இதழ்களில் வெளியிடப்பட்டுள்ளதால் இப்பிரச்சினை இத்துடன் முடிக்கப்படுகிறது.

5. 113-வது விதியின் கீழ் உறுப்பினரின் அறிக்கை.

சாத்தூரில் சில வகுப்பினரிடையே ஏற்பட்ட மோதலையொட்டிச் சிலர் உயிரிழந்ததால் பொது மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு 11—4—1990 ஆம் நாளன்று முதலமைச்சர் அளித்த பதிலுரை மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அதுபற்றித் தெரிவித்த கருத்து ஆகியவை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 113-வது விதியின் கீழ் மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் ஓர் அறிவிப்பினைத் தந்து இருக்கிறார்கள். அந்த அறிவிப்பினை இப்போது அவையில் வைப்பார்கள்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இதற்கு முன்னுரை, விளக்க உரை எல்லாம் கிடையாது என்பது எனக்குத் தெரியும். எனவே நான் அதனை அப்படியே படிக்க வேண்டியவனாக இருக்கின்றேன்.

ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது நேற்று-அதாவது நான் எழுதிய கடிதத்தின் செய்தியை வைத்து 12-4-1990 காலை நானும் நமது மாண்புமிகு உறுப்பினர்கள் சிலரும் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருக்கன்குடி கோயிலில் நடைபெற்ற கோயில் திருவிழாவையொட்டி அங்கே சென்றிருந்த நத்தத்துப் பட்டி தேவர் பெருமக்கள் சிலர் ஒரு கடையிலே தொப்பி வாங்க முனைந்தபோது அங்கே இருந்த ஆதிதிராவிடர்களோடு தகராறு ஏற்பட்டு இருக்கிறது: தகராறுக்கு இது காரணம் என்றார்கள். ஆனால் அதே நாள் தமது துறையின் மானியக் கோரிக்கை மீது பேசிய மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், இருக்கன்குடியைப் பொறுத்தவரையிலும் சிக்கல்கள், தகராறுகளுக்கு எல்லாம் காரணம்—நான் நினைப்பது—அங்கே ஏதோ சாதிக் கலவரம், எப்படியோ தொப்பி வாங்கப் போன இடத்தில் அது ஏற்பட்டது என்று இங்கே சொல்லப்பட்டது. ஆனால் அதைவிட ஒரு ஆழமான ஒரு காரணம் இருக்கக் கூடும் என்று நான் கருதுகிறேன் என்றும், இந்தப் பிரச்சினை வந்த பிறகு அவர்கள் அதாவது முதல்வர் அறிக்கை தயாரித்த பிறகு இதைப் பற்றி பேசவில்லை; பேசி இருந்தால் நான் அவர்களிடத்திலே

1990 ஏப்ரல் 21] [பேரவைத் தலைவர்]

குறிப்பிட்டார்கள். இதழ் ஆசிரியர் தவறு எப்படி நேர்ந்தது என்று விளக்கியதுடன் தவறுக்கு வருத்தம் தெரிவித்து அந்தச் செய்தியும் இதழ்களில் வெளியிடப்பட்டுள்ளதால் இப்பிரச்சினை இத்துடன் முடிக்கப்படுகிறது.

5. 113-வது விதியின் கீழ் உறுப்பினரின் அறிக்கை.

சாத்தூரில் சில வகுப்பினரிடையே ஏற்பட்ட மோதலையொட்டிச் சிலர் உயிரிழந்ததால் பொது மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு 11—4—1990 ஆம் நாளன்று முதலமைச்சர் அளித்த பதிலுரை மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அதுபற்றித் தெரிவித்த கருத்து ஆகியவை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 113-வது விதியின் கீழ் மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் ஓர் அறிவிப்பினைத் தந்து இருக்கிறார்கள். அந்த அறிவிப்பினை இப்போது அவையில் வைப்பார்கள்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இதற்கு முன்னுரை, விளக்க உரை எல்லாம் கிடையாது என்பது எனக்குத் தெரியும். எனவே நான் அதனை அப்படியே படிக்க வேண்டியவனாக இருக்கின்றேன்.

ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது நேற்று-அதாவது நான் எழுதிய கடிதத்தின் செய்தியை வைத்து 12-4-1990 காலை நானும் நமது மாண்புமிகு உறுப்பினர்கள் சிலரும் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருக்கன்குடி கோயிலில் நடைபெற்ற கோயில் திருவிழாவையொட்டி அங்கே சென்றிருந்த நத்தத்துப் பட்டி தேவர் பெருமக்கள் சிலர் ஒரு கடையிலே தொப்பி வாங்க முனைந்தபோது அங்கே இருந்த ஆதிதிராவிடர்களோடு தகராறு ஏற்பட்டு இருக்கிறது: தகராறுக்கு இது காரணம் என்றார்கள். ஆனால் அதே நாள் தமது துறையின் மானியக் கோரிக்கை மீது பேசிய மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், இருக்கன்குடியைப் பொறுத்தவரையிலும் சிக்கல்கள், தகராறுகளுக்கு எல்லாம் காரணம்—நான் நினைப்பது—அங்கே ஏதோ சாதிக் கலவரம், எப்படியோ தொப்பி வாங்கப் போன இடத்தில் அது ஏற்பட்டது என்று இங்கே சொல்லப்பட்டது. ஆனால் அதைவிட ஒரு ஆழமான ஒரு காரணம் இருக்கக் கூடும் என்று நான் கருதுகிறேன் என்றும், இந்தப் பிரச்சினை வந்த பிறகு அவர்கள் அதாவது முதல்வர் அறிக்கை தயாரித்த பிறகு இதைப் பற்றி பேசவில்லை; பேசி இருந்தால் நான் அவர்களிடத்திலே

சொல்லி இருப்பேன் என்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கூறி இருக்கிறார். ஆழமான புரிபடும் காரணம் இருக்கும் நிலையில் அதை விட்டுவிட்டு தொப்பி வாங்கியதில் தகராறு என்று முதலமைச்சர் கூறிய அந்தத் தகவலை இங்கே சுட்டிக் காட்டிப் பேசவே இந்த அறிக்கையை இங்கே நான் படிக்கின்றேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி தங்களிடம் இருந்து 17–4–1990 தேதியிட்ட கடிதம் எனக்கு வந்தது. மறுநாள் 18–4–1990 தேதியிட்ட கடிதத்தை நான் தங்களுக்கு அனுப்பி இருக்கின்றேன். அதை அப்படியே நான் இங்கே படிக்கின்றேன்.

தாங்கள் ஏப்ரல் 17 ஆம் தேதி எழுதிய கடிதத்தையும் அத்துடன் சட்டமன்ற உறுப்பினர் குமரி அனந்தன் அவர்களின் 12–4–1990 தேதியிட்ட, பேரவை விதி 113-ன் கீழ் எழுப்பிய அறிக்கையின் நகலையும் இன்று நான் பார்த்தேன். இதே பிரச்சினையை மதிப்புமிகு குமரி அனந்தன் அவர்கள் 11–4–1990-ல் சட்டப்பேரவை விவாதத்தின் போது கீழ்க் கண்டவாறு எழுப்பி உள்ளார்.

இருக்கன்குடி கோயிலைப் பொறுத்தவரையில் நல்ல விளக்கங்கள் எங்களுக்குக் தந்தாலும் கூட காலையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன போது அந்தத் திரு விழாவுக்கு வந்தவர்கள் ஒரு கடையில் தொப்பி வாங்கிய விஷயத்தில் ஏற்பட்டது தான் இந்தச் சண்டை என்றும், அதிலிருந்து அது பெருகிப் போயிற்று என்றும், சாத்தூர் வரை பரவிற்று என்றும் சொன்னார்கள். எனவே, முதலமைச்சரவர்கள் சொன்னதைத்தான் நாங்கள் இத்தனை நேரமும் ஏற்றுக் கொண்டிருக்கின்றோம். இப்போது அறநிலையத் துறை அமைச்சவர்கள் கோயில் சம்பந்தப்பட்ட விழாவோடு தொடர்புபடுத்தி, எனவே, இதற்குச் சிலர் தொப்பிதான் காரணம் என்று சொல்கிறார்கள். நான் அதைவிட வேறொரு காரணம் இருப்பதாகச் சொல்கிறேன். என்று அறங்காவல் குழு நியமித்ததிலேதான் இது ஆரம்பித்தது என்று சொல்கிறார்கள். எனவே, நாங்கள் முதலமைச்சரவர்கள் சொல்வதை எடுத்துக் கொள்வதா அல்லது அறநிலையத் துறை அமைச்சர் சொல்வதை எடுத்துக் கொள்வதா என எது உண்மை என்பதை இந்த அவை அறிவதற்கு அவையிலே. இதுபற்றி அன்றைய விவாதத்திலேயே நான் தெரிவித்த கருத்துக்கள் கீழே தொகுத்துத் தரப்படுகின்றன.

காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. குமரி அனந்தன் முதலமைச்சரவர்களுக்கும் எனக்கும் முடிச்சு மிக நன்றாகவே போடுகிறார். அந்த முடிச்சு வெற்றிகரமாக ஆகாது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்

இங்கே பேசிய உறுப்பினர்கள் தொப்பி வாங்கப் போன இடத்தில் தகராறு ஆரம்பித்தது என்று சொன்னார்கள். நான் மறுக்கவில்லை. மறுக்கவே இல்லை. அதற்கும் ஆழமான ஒரு காரணம் இருக்கலாம். ஒரு சமாதானக் குழு போடும்போது அதையும் சேர்த்துப் பார்க்க வேண்டுமென்றுதான் நான் சொல்கின்றேனே தவிர வேறு இல்லை. இந்தப் பிரச்சினை வந்த பிறகு மாண்புமிகு முதல்வரிடம் இதுபற்றிப் பேச எனக்கு வாய்ப்பு ஏற்படவில்லை. பேசியிருந்தால் நான் அவர்களிடத்திலேயே சொல்லியிருப்பேன். இருக்கன்குடி கோயில் திருவிழாவில் தொப்பி வாங்கப் போன இடத்தில் தகராறு ஆரம்பித்து ஏழு பேர் கொலை செய்யப்பட்டு உள்ளார்கள். அந்தக் கோயிலில் உள்ள பரம்பரை அறங்காவலர்கள் சங்கையா பூசாரி தலைமையிலும், சேதுலிங்க பூசாரி தலைமையிலும் இரு குழுவினராகப் பிரிந்து, கடந்த பத்தாண்டுகளுக்கு மேல் நீதிமன்றங்களிலே வழக்கு தொடர்ந்து வருகிறார்கள். இந்தக் கோயிலுக்கு வரக்கூடிய பல இலட்சக் கணக்கான ரூபாய் வருமானத்தில், நிர்வாகத்தில் இருக்கும் பரம்பரை அறங்காவலருக்குப் பங்கு தர ஒரு நீதிமன்றத் திட்டம் இருக்கிறது. ஆகவே, நிர்வாகத்தினைப் பிடிப்பதற்கு இந்த இரண்டு குழுவினரிடையே போட்டி நிலவுகிறது. இந்தப் போட்டியையும் ஒரு முடிவுக்குக் கொண்டு வருவது, அந்தக் கோயில் திருவிழாக்களிலே தகராறு ஏற்படுவதை நிரந்தரமாகத் தடுப்பதற்கு வழிவகை செய்யும். இந்தக் கோயில் பரம்பரை அறங்காவலர்கள் ஒழுங்காக இயங்கினால் அங்கே சட்டம் ஒழுங்கு இந்த அளவிற்குச் சீர்கெடாதபடி பார்த்துக் கொள்ள முடியும் என்று நான் சொன்னேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

10-45 மணி

பேரவை விதி 113-இன் கீழ், நான் அவைக்குத் தந்த தகவல்களில் தவறு Mistake அல்லது பிழை Inaccuracy இருந்தால்தான் ஒரு உறுப்பினர் அதைச் சுட்டிக்காட்ட முடியும். இதுபற்றி நான் அவைக்குத் தந்த அறிக்கை—தகவல்களில் ஏதோ தவறோ அல்லது பிழையோ இல்லை.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இத்துடன் இப்பிரச்சினை முடிவுக்கு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

6. விதி 110-இன் கீழ் சட்டத்துறை அமைச்சரின் அறிக்கை

ஹஜ் பயணிகளுக்கு விமானப் பயண வசதிகள் செய்யப் பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 110-இன் கீழ் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சரவர்கள் ஓர் அறிக்கை யினைப் படைப்பார்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பேரவைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டைச் சேர்ந்த ஹஜ் பயணிகள் சென்னையிலிருந்து ஜித்தாவிற்கும், ஜித்தாவிலிருந்து சென்னைக்கும் நேரடி விமானங்கள் விடும்படி விரும்புகின்றபடியால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் முயற்சியின் பயனாக சென்ற வருடம் சென்னை—ஜித்தாவிற்கு நேரடியாக விமானங்கள் விடப்பட்டன. ஆனால், ஜித்தாவிலிருந்து சென்னை திரும்பும் வழியில் ஹஜ் பயணிகள் பம்பாயில் இறங்கி, பிறகு வேறு விமானம் மூலம் சென்னை வந்து சேரும்படி நேர்ந்தது. இது ஹாஜிகளுக்கு வசதியாக இருக்கவில்லை என்பதால் இவ்வருடம் நேரடியாக ஹஜ் விமானங்கள் விடப்படவேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பாரதப் பிரதமரைக் கேட்டுக் கொண்டார்.

தமிழக முதலமைச்சரின் கோரிக்கையை ஏற்று 20-5-1990 முதல் ஒவ்வொரு ஞாயிறும், ஏர் பஸ் விமானங்கள் சென்னையிலிருந்து ஹாஜிகளை ஏற்றிக்கொண்டு செல்லஏர் இந்திய நிறுவனம் ஏற்பாடு செய்திருக்கிறது. இவ்விமானங்கள் தொழில்நுட்பக் காரணமாகச் சிறிது நேரம் பம்பாயில் நிற்கும். ஆனால், பயணிகள் பம்பாயில் இறங்க வேண்டிய தேவையில்லை. இவ்வாறு ஆறு விமானங்கள் ஞாயிறுதோறும் சென்னையிலிருந்து புறப்பட்டு ஜித்தாவிற்கு மொத்தம் 1,242 பயணிகளை ஏற்றிச் செல்லும். ஹஜ் விமானங்கள் சென்னையிலிருந்து ஞாயிறு மதியம் 12-50 மணிக்குப் புறப்பட்டு அதே நாள் உள்ளூர் நேரப்படி மாலை 7 மணிக்கு ஜித்தா சென்றடையும். ஒவ்வொரு விமானத்திலும் 207 பயணிகள் பயணம் செய்வார்கள்.

ஹஜ் முடிந்து திரும்பி வரும்பொழுது ஹாஜிகள் ஜம்போ ஜெட் மூலம் ஜித்தாவிலிருந்து சென்னைக்கு நேரடியாக வருவார்கள்.

7—7—1990, 21—7—1990 மற்றும் 4—8—1990 ஆகிய சனிக்கிழமைகளில் இவ்விமானங்கள் விடப்படும். இவ்விமானங்கள் உள்ளூர் நேரப்படி மாலை 4-15 மணிக்கு ஜித்தாவிலிருந்து புறப்பட்டு சனி, ஞாயிறு நள்ளிரவு 12-30 மணிக்கு சென்னை வந்து சேரும். ஒவ்வொரு விமானத்திலும் 377 பயணிகள் பயணம் மேற்கொள்வர். மீதமுள்ள பயணிகள் சென்னை வருவதற்கு தனி ஏற்பாடு செய்யப்படும்.

10-50 மணி

ஹஜ் புனிதப் பயணிகளின் நலனைக் கருத்திற்கொண்டு இந்த அறிக்கை தகவலுக்காக பேரவையின்முன் வைக்கப் படுகிறது. இந்த முயற்சியை எடுத்துக்கொண்ட முதலமைச்சர் அவர்களுக்கும், அனுமதி அளித்த பாரதப் பிரதமர் அவர்களுக்கும் ஹஜ் குழுவின் சார்பாகவும், ஹஜ் பயணிகள் சார்பாகவும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

5.113-வது விதியின் கீழ் உறுப்பினரின் அறிக்கை.

சாத்தூரில் சில வகுப்பினரிடையே ஏற்பட்ட மோதலை யொட்டி சிலர் உயிரிழந்ததால் பொதுமக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு 11—4—1990 ஆம் நாளன்று முதலமைச்சர் அளித்த பதிலுரை மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அது பற்றித் தெரிவித்த கருத்து ஆகியவை குறித்து—தொடர்ச்சி

*திரு. உ. ரா. வரதராசன் : தலைவர் அவர்களே, பேரவை விதி 113-ன் கீழ் மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்களை நீங்கள் அனுமதித்தீர்கள். ஆனால் அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்கிறபோது, தன்னுடைய கடைசிப்பகுதியாக** குறிப்பிட்டிருக்கிறார். தங்கள் அனுமதியோடு எழுப்பப்பட்டி ருக்கிறபோது இந்த வரிகள் அவை குறிப்பிலிருந்து நீக்கப்படு வதுதான் பொருத்தமாக இருக்கும் என்ற ஒழுங்குப் பிரச் சினையை தங்களுடைய தீர்ப்பிற்காகக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த வரி நீக்கப்படும்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, நான் தங்களுக்கு எழுதிய கடிதத்தில் தங்களுக்குச் சொல்லி இருக்கிறேன். அதன் மீது தீர்ப்பு அளிக்க வேண்டிய

மாண்புமிகு பேரவைத் தலைவர் : **என்ற தொடர் தேவை யில்லை. என்னுடைய விளக்கம் இது என்பதோடு அது நிற்கும். அதனால் தவறு ஒன்றுமில்லை.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே** என்பதைத் தங்களுக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். நானே இங்கே தீர்ப்பாக கொடுக்கவில்லை. இது நான் தங் களுக்கு எழுதிய கடிதம். கடிதத்தில் தங்களுடைய தகவலுக்காக நான் சொல்கிறேன். எப்படி அது தவறாக இருக்க முடியும்? எப்படி பாயிண்ட் ஆப் ஆர்டர் இங்கே வருகிறது? I want to know how a point of order arises.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, விதி எண். 113-ன் கீழ் தாங்கள் அனுமதித்ததற்குப் பின்னால் அதற்குப் பதில் அளிக்கிற நேரத்தில் உள்நோக்கம் கற்பிக்கலாமா? எனக்கும் முதலமைச்சருக்கும் முடிச்சுப்போட முயற்சிக்கிறார் என்று உள்நோக்கம் கற்பிப்பது முறைதானா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே. .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் உட்காரவேண்டும். (குறுக்கீடு) இது ஏற்கெனவே சொன்னதைப் பற்றிய விளக்கம். இதிலே வேறு விளக்கத்திற்கு இடமே கிடையாது. அடுத்து, பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஏற்கெனவே மாண்புமிகு **(குறுக்கீடுகள்) மன்னிக்கவேண்டும். இப்போது ** நீக்க முடியாது. **என்ற சொல்லை மட்டும் நீக்கிவிட்டு அறிவிப்பிற்கு வருகிறேன்.

7. அறிவிப்புகள்.

(அ) உறுப்பினர்களுக்கு பேரவை, மேலவை வளாகங்களில் செய்யப்பட்டுள்ள இடவசதி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள், அமைச்சர்களும் உறுப்பினர்களும் சந்திப்பதற்கான வாய்ப்பை பக்கத்தில் உள்ள வளாகங்களில் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று ஒரு நாள் ஒழுங்குப் பிரச்சினை மூலம் எழுப்பி இருந்தார். அது தொடர்பான ஓர் அறிவிப்பு.

சட்டமன்ற மேலவை இயங்கி வந்த இடமும், அதற்கு இருபுறமும் உள்ள வளாகங்களும் (Lobbies) மாண்புமிகு பேரவை உறுப்பினர்களும் மற்றும் மாண்புமிகு அமைச்சர்களும் பேரவை நடைபெறும் காலங்களில் அவர்களுடைய பயன்பாட்டிற்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன. இந்த இடங்களை அமைச்சர்கள் மற்றும் பேரவை உறுப்பினர்கள் மட்டுமே பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று வேண்டுகிறேன், தொடர்ந்து மற்றோர் அறிவிப்பையும் செய்ய வேண்டியுள்ளது.

(ஆ) அவைக்குள்ளே அமைச்சர்களிடம் உறுப்பினர்கள் மனுக்கள், கடிதங்கள் அளிப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மற்றோர் அறிவிப்பு.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பிற அமைச்சர்களும் இங்கே இருக்கிற அலுவல்களில் முழுமையாக கவனம் செலுத்தவும், பேரவையில் உறுப்பினர்கள் பேசுகிற

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, விதி எண். 113-ன் கீழ் தாங்கள் அனுமதித்ததற்குப் பின்னால் அதற்குப் பதில் அளிக்கிற நேரத்தில் உள்நோக்கம் கற்பிக்கலாமா? எனக்கும் முதலமைச்சருக்கும் முடிச்சுப்போட முயற்சிக்கிறார் என்று உள்நோக்கம் கற்பிப்பது முறைதானா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே. .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் உட்காரவேண்டும். (குறுக்கீடு) இது ஏற்கெனவே சொன்னதைப் பற்றிய விளக்கம். இதிலே வேறு விளக்கத்திற்கு இடமே கிடையாது. அடுத்து, பேரவைக்கு ஓர் அறிவிப்பு. ஏற்கெனவே மாண்புமிகு **(குறுக்கீடுகள்) மன்னிக்கவேண்டும். இப்போது ** நீக்க முடியாது. **என்ற சொல்லை மட்டும் நீக்கிவிட்டு அறிவிப்பிற்கு வருகிறேன்.

7. அறிவிப்புகள்.

(அ) உறுப்பினர்களுக்கு பேரவை, மேலவை வளாகங்களில் செய்யப்பட்டுள்ள இடவசதி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்துல் லத்தீப் அவர்கள், அமைச்சர்களும் உறுப்பினர்களும் சந்திப்பதற்கான வாய்ப்பை பக்கத்தில் உள்ள வளாகங்களில் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று ஒரு நாள் ஒழுங்குப் பிரச்சினை மூலம் எழுப்பி இருந்தார். அது தொடர்பான ஓர் அறிவிப்பு.

சட்டமன்ற மேலவை இயங்கி வந்த இடமும், அதற்கு இருபுறமும் உள்ள வளாகங்களும் (Lobbies) மாண்புமிகு பேரவை உறுப்பினர்களும் மற்றும் மாண்புமிகு அமைச்சர்களும் பேரவை நடைபெறும் காலங்களில் அவர்களுடைய பயன்பாட்டிற்காக ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளன. இந்த இடங்களை அமைச்சர்கள் மற்றும் பேரவை உறுப்பினர்கள் மட்டுமே பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று வேண்டுகிறேன், தொடர்ந்து மற்றோர் அறிவிப்பையும் செய்ய வேண்டியுள்ளது.

(ஆ) அவைக்குள்ளே அமைச்சர்களிடம் உறுப்பினர்கள் மனுக்கள், கடிதங்கள் அளிப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மற்றோர் அறிவிப்பு.

நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் பிற அமைச்சர்களும் இங்கே இருக்கிற அலுவல்களில் முழுமையாக கவனம் செலுத்தவும், பேரவையில் உறுப்பினர்கள் பேசுகிற

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

செய்திகளை முழுமையாகக் கேட்டு அவற்றில் கவனம் செலுத்தி அவ்வப்போது தேவைப்படுகிற விளக்கங்களைக் கொடுக்கவும் முழுக்க ஆழ்ந்து கவனம் செலுத்த வேண்டியிருப்பதால், அவர்களுடைய கவனத்தைத் திசை திருப்புகிற முறையில் தாங்கள் அளிக்கிற விண்ணப்பங்கள், மனுக்கள் ஆகியவற்றை இனிமேல் இந்த அவையில் அளிக்கக்கூடாது என்றும், அவரவர்கள் அறையிலோ, பக்கத்தில் இருக்கிற அறைகளிலோ சந்தித்துத் தான் வழங்கவேண்டுமென்றும் அறிவிக்கப்படுகிறது.

அடுத்ததாக..(குறுக்கீடுகள்) இப்படி 4, 5 பேர்கள் நிற்கிறீர்களே, வரிசையாக ஒவ்வொருவராகச் சொல்லுங்கள், திரு. குமரி அனந்தன் அவர்கள்.

திரு. குமரி அனந்தன் : தலைவர் அவர்களே, நீங்கள் சொன்னது மிக நல்ல கருத்து. ஏனென்றால், நாங்கள் சிரமப்பட்டு, சிந்தித்துச் சொல்வதை அவர்கள் கேட்டு, எங்களுக்குச் செயல்பட்டால் தான் எங்களுடைய சிந்தனைக்குக் கூட மரியாதை இருக்கும் அதை நீங்கள் காப்பாற்றித் தந்திருக்கிறீர்கள், மகிழ்ச்சி. அதைப்போல இங்கே அவர்களை சந்திப்பதைப் போல நாங்கள் எங்கும் அவ்வளவு எளிதாக சந்திக்க முடியாது. அதனால் மிக அவசரமான காரியங்கள் என்ற அளவிலே சிலவற்றை ஒருவருக்கொருவர் அப்படிக் கொஞ்சம் பரிமாறிக் கொள்வதற்காக கொஞ்சம் நீங்கள் சலுகையோடு இதனைப் பார்க்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

10-55 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விதிவிலக்குகள் சில நேரங்களில் மிகவும் விலகிப் போவதைக் கவனத்தில் வைத்துக் கொண்டுதான் இது அறிவிக்கப்படுகிறது. நம்முடைய முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களுடைய நிலையைக் கவனத்தில், கருத்தில் வைத்துக்கொண்டுதான் நான் இப்போது அறிவித்து இருக்கிறேன். விதிவிலக்கு வருகிறபோது நான் அப்போது அதைப் பற்றிக் கவனிக்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : இருந்தாலும் என்னுடைய வேண்டுகோளை நீங்கள் உங்களுடைய பரிசீலனையில் வைக்கவேண்டும் என்று எல்லோர் சார்பிலும் நான் சொல்கிறேன் (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது எல்லோருக்கும்தான். இந்த அறிவிப்பு ஆளும் கட்சிக்கு மட்டுமல்ல, இங்கேயிருக்கிற 234 பேர்களுக்கும் பொருந்தும், பேரவைத் தலைவர் உட்பட (குறுக்கீடுகள்).

திரு. ஒய். வேங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இந்தக் கட்டுப்பாடு ஒன்றுதான் பாக்கி இருந்தது. இப்போது அதையும் கட்டுப்படுத்தி விட்டீர்கள். இருந்தாலும் இந்தச் சபைக்குக் குந்தகம் இல்லாமல் ஒரு மனுக் கொடுப்பதிலே ஆட்சேபனை இல்லை. இதுவரைக்கும் இந்த மனுக்கொடுப்பதாலே அமைச்சர் அவர்களுக்கோ அவை நடைமுறைக்கோ எந்த குந்தகமும் ஏற்படவில்லை, இந்த 1990 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 21 ஆம் தேதி வரைக்கும் குந்தகம் ஏற்படவில்லை. இனிமேல் ஏற்படவும் ஏற்படாது. ஆகவே, பேரவைத்தலைவர் அவர்களே, மனமுவந்து இந்த ஒரு கட்டுப்பாட்டை நீக்கும்படியாக கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொல்லிவிடுகிறேன் குந்தகம் விளைகிறது என்ற பொருளில் இதை நான் சொல்லவில்லை. பொதுவாகவே ஓர் உறுப்பினர் அவையிலே பேசுகிற போது, மற்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும் ஆர அமர்ந்து அந்தப் பேச்சைக் கேட்பதன் மூலமாகப் பேசுகிறவர்க்கும் மரியாதை, மற்றவர்களும் ஆழ்ந்து அந்தச் செய்திகளைக் கேட்பதற்கு வாய்ப்பு இருக்கும். தேவைப்படுகிறபோது, தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்கவோ, ஒழுங்குப் பிரச்சினை எழுப்பவோ அவர்களுக்குக் கூட இது மரியாதை என்ற அடிப்படையில் தான் தரப்படுகிறது. மற்றபடி குந்தகம் விளைகிறது, இதனால் பெரிய பாதகம் விளைகிறது என்ற அந்தப் பொருளில் இதை நான் சொல்லவில்லை. கண்டிப்பாக திரு. தீட்சிதர் அவர்களுக்கு எந்த இடத்தில் அவர் எப்போது எழுந்தாலும் எந்தக் குந்தகமும் ஏற்படுவது கிடையாது. இது எனக்குத் தெரிந்த ஒன்றுதான். (குறுக்கீடு.)

திரு. சா. பிட்டர் ஆல்போன்ஸ் : தலைவர் அவர்களே......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் இதிலே பேசவேண்டாம். உட்காருங்கள். உங்கள் சார்பில் திரு. குமரி அனந்தன் அவர்கள் சொல்லிவிட்டார்கள்.

திரு. என். கணபதி : பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் ஏற்படுத்தி இருக்கின்ற இந்தப் புதிய ஏற்பாட்டுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் அமைச்சர்களை ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்கள் சந்திப்பதற்கும் ஒரு தனியாக நேரத்தை ஒதுக்கித்தந்தால் மிகவும் நலமாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர்களைச் சந்திப்பதற்கு நீங்களே நேரத்தை வரையறுத்துக் கொள்ளலாம்.

1990 ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, அமைச்சர்களிடத்திலே நேரம் ஒதுக்கிக் கொண்டு உறுப்பினர்கள் அந்த நேரத்திலே பார்க்கத் தயாராக இருந்தால் அமைச்சர்கள் தயாராக இருப்பார்கள்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர்களைச் சந்தித்து உறுப்பினர் தங்களுடைய குறைகளை, மனுக்களைக் கொடுப்பதற்கான இட வசதிகள் எல்லாம் ஏற்பாடு செய்து அதைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். ரொம்ப மகிழ்ச்சி, அதேநேரத்தில், வேறு சில முறைகளில் தவிர்க்கப்பட முடியாமல் அதாவது அமைச்சர்கள் கவனிக்கவேண்டும், உறுப்பினர்கள் கவனிக்கவேண்டும் என்ற ஒரு நல்ல எண்ணத்தோடு நீங்கள் அறிவிப்பை வெளியிட்டு இருந்தாலும், ரோஜாவிலே முள் இருப்பதைப் போல, உங்கள் அறிவிப்பிலும் அந்த முள் இருக்கிறது. அதை அகற்றித்தரவேண்டும் என்று நாங்கள் கேட்காமல் இருக்க முடியாது. ஏன் என்றால் கேள்வி நேரங்களில், ஜீரோ ஹவரில் அப்படி இடையிலே குறுக்கிட்டுப் பேசுவது சிரமம், அமைச்சர் அவர்களும் கவனிக்க முடியாது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாமல், மானியக் கோரிக்கைகள் வரும்போது அந்தக் குறிப்பிட்ட மானியத்தோடு சம்பந்தப்பட்ட அமைச்சர்களோடு பேசுவது என்பது விவாதத்தைக் கவனிக்க முடியாமல் போய்விடுகிறது என்பதை ஒத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொல்வது, அமைச்சர்களோடு பேசுவதை அல்ல. அது தொடர்பானது அல்ல. முழுமையாக விண்ணப்பங்கள் வேறு சில தொகுதித் தொடர்பான பிரச்சினைகள் வரும்போது, அவற்றை அறையிலோ, அல்லது அவர்களுடைய துறையிலோ கொடுக்கலாம் என்பதுதான். நேரடியாகப் பேசக்கூடாது என்று நான் சொல்லவில்லை.

திரு. கோ. வீரையன் : அதாவது கேள்வி நேரங்களில் ஜீரோ ஹவரில் மனுக்கள் அளிக்கக்கூடாது என்பதும், அதேநேரத்தில் மானியக் கோரிக்கையில் அமைச்சர்கள் கவனம் செலுத்துவதற்கு இடையூறாக இருக்கக்கூடாது என்றும், மற்ற அமைச்சர்களிடம் கடிதம் கொடுப்பது என்பது கூட ஒன்றுமில்லை, இந்தக் கடிதத்தை கொடுத்துவிட்டு போவதில் கூட தடை விதிப்பது என்பது, இந்த அவைக்குள்ளே செய்யக்கூடாது என்பது அந்தக் தொகுதியினுடைய பணிகளைச் செய்வதற்கு பாதிக்கும் என்பதை நீங்கள் கவனத்தில் எடுத்துக் கொண்டு....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதிலே ஒன்றும் பாதிக்காது அமைச்சர்களைச் சந்திப்பதற்கு நேரத்தை ஒதுக்கிக் கொடுக்கிறோம்........

திரு. எம். அப்துல் லத்திப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர்களைச் சந்திப்பதைப் பொறுத்து, ஒரு புதிய விதியை.... (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு கட்சிக்கு ஒருவர் தான் பேசவேண்டும். இதில் எல்லோரும் பேசுவதற்கு என்ன இருக்கிறது? உங்கள் கட்சி சார்பிலே பேசிவிட்டார்களே. (குறுக்கீடு).

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : தலைவர் அவர்களே, அமைச்சர் அறைகளுக்குப் போனால், அங்கே நிற்பதற்குக் கூட இடம் கிடையாது. அமைச்சர்கள் அறைக்கு வெளியே முக்கால் மணி நேரத்திற்கு மேல் நிற்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஓர் அமைச்சரை தேடிப் போகிறபோது 234 பேர்களும் ஒரே நேரத்தில் போகக் கூடாது என்று ஏதாவது விதி இருக்கிறதா ? எல்லா அமைச்சர் களையும் எல்லோரும் பார்க்கவேண்டும் என்பதற்காகத்தான் போவோம் இது எப்படித் தவறாகும்? (குறுக்கீடு) அமைச்சர்கள் அறை என்றால் கூட்டம் இருக்கத்தான் இருக்கும். கூட்டம் இல்லாமல் அறை காற்றாடிக்கொண்டா இருக்கும்? (குறுக்கீடு).

11-00 மணி

திரு. எம். அப்துல் லத்திப் : தலைவர் அவர்களே, அமைச்சர்களை அவையில் சந்திக்கின்ற வாய்ப்பு உறுப்பினர் களுக்கு மட்டும் இருக்கக் கூடிய ஒரு தனி பிரிவிலெஜ். ஆதலால் அந்த தனி பிரிவிலெஜை, புதிய விதி ஏற்படுத்துவதன் வாயிலாக தடுப்பது, அவ்வளவு ஏற்புடையதல்ல. அவருடைய உத்தரவுக்கு கட்டுப்படத் தயாராக இருக்கிறோம். ஆனால் இது எங்களுடைய 'எக்ஸ்குலுசிவ் பிரிவிலெஜ்', மற்றவர்கள் யாரும் வந்து அமைச்சர்களை அவை உள்ளே சந்திக்க முடியாது. அது எங்களால்தான் முடியும். எனவே அதைக் கூடாது என்று சொல்வது அவ்வளவு ஏற்புடைய கருத்தாக எங்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இரண்டாவது இப்படி ஒரு விதியை ஏற்படுத்துவதற்குக் காரணம் ஏதாவது அமைச்சர்கள் இப்படிப்பட்ட விருப்பத்தை தெரிவித்திருக் கிறார்களா, அமைச்சர்கள் ஏதாவது சொன்ன காரணத்தினால் தாங்கள் அந்த புதிய விதியை ஏற்படுத்தி இருக்கிறீர்களா என்பது கூட எங்களுக்குத் தெரியவில்லை. எனவே தயவு செய்து இதை தளர்த்த வேண்டுமென்று நாங்கள் மிகவும் மன்றாடி கேட்டுக்கொள்கிறோம். அந்த விதியை மட்டும். மூன்றா வது நாங்கள் உட்காருவதற்கு அமைச்சர்களைச் சந்திப்பதற்கு மேலவை வளாகத்தை தாங்கள் ஒதுக்கித் தந்தமைக்கு நாங்கள் எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றியை காணிக்கை

1990 ஏப்ரல் 21] [திரு. எம். அப்துல் லத்தீப்]

யாக்கிக் கொள்கின்ற அதே நேரத்தில் எங்களுடைய பிரிவிலெஜைத் தாங்கள் எடுத்துவிடக் கூடாது என்பதை இந்த மன்றத்தின் சார்பாக உங்களிடத்தில் மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நடைபெற்ற உரையாடல்களையும், கருத்துக்களையும் நான் வேறு இடத்திலிருந்து கேட்டுக்கொண்டு இருந்தேன். இருந்தாலும் நான் இதிலே தலையிட வேண்டுமென்ற கடமை உணர்வின் காரணமாக என்னுடைய பணியை ஒதுக்கி வைத்துவிட்டு இங்கே ஓடி வந்திருக்கிறேன்.

அவைக்குள்ளே எதிர்க்கட்சி உறுப்பினர்களோ, அல்லது ஆளும் கட்சி உறுப்பினர்களோ அமைச்சர்களுக்கு முறையீடுகளைத் தருவது, தொகுதி பிரச்சினை அல்லது தனிப்பட்ட பிரச்சினை, இவைகளைப் பற்றி அவர்களிடத்திலே விவாதிப்பது என்பது மரபாக இருந்து வருகிற ஒன்று என்றாலும்கூட, சில நேரங்களில் அமைச்சர்கள் கிராக்கியாக இருந்தால், அந்த மரபு செம்மையாக, அதுவும் கிராக்கியாகக் கடைப்பிடிக்கப்படும். ஆனால் அது ரொம்ப மலிவாகப் போய் விடுகின்ற நேரத்தில் ஒவ்வொரு அமைச்சரும் மிகுந்த சிரமத்திற்கு இந்த அவையிலே ஆளாக வேண்டியிருக்கிறது.

உதாரணமாக நேற்று, மாண்புமிகு அமைச்சர் திரு. கண்ணப்பன் அவர்கள் தன்னுடைய மானியக் கோரிக்கையை இங்கே படிக்க எழுகின்ற நேரத்தில், பின்னால் இரண்டு பேர், இரண்டு மனுக்களை வைத்துக்கொண்டு, அவர் முதுகில் தட்டி வாங்கிக் கொள் என்றார்கள். அவர் வாங்குவதா, அல்லது இங்கே மானியக் கோரிக்கையை அவையின் முன் வைப்பதா என்று தெரியாமல் திகைத்த பிறகு அவர் ஒருவாறு சமாளித்துக் கொண்டு மானியக் கோரிக்கையை முன்வைத்தார். இங்கேயிருந்து என்னைப் பார்க்க வருகிறவர்கள் பல பேர்கள்— இங்கே காலையில் வந்தால் 1-1/2 மணி வரையில், அவை முடிகிற வரையில் இருக்கிறேன். சில நேரங்களில் தங்களிடத்திலே அனுமதி பெற்றுச் சென்று வருகிறேன் என்று எதிர்க் கட்சி இடத்தில்கூட நான் சொல்லிவிட்டு, சில நேரத்தில் செல்கிறேன். இங்கு தொடர்ந்து இருக்கிறேன். என்னுடைய கை வலி காணுகின்ற அளவிற்கு என் பின்னால் நூற்றுக் கணக்கான மனுக்கள் ஒன்றன் பின் ஒன்றாக வருவதையும் தாங்கள் கண்டிருக்கிறீர்கள். மனுக்களைத் தரக் கூடாது என்பது அல்ல. அதற்கு ஒரு ஒழுங்கு முறை, கட்டுப்பாடு என்கின்ற அளவிலே அதைக் கொஞ்சம் குறைத்துக்கொள்வது நல்லது. இருந்தபோதிலும் தாங்கள் இங்கே முதலில் அறிவித்திருப்பதைப்போல் இந்த அவைக்கு வெளியிலே அமைச்சர்கள்

உறுப்பினர்களை சந்திருக்கிறார்கள். டில்லியில் சென்ட்ரல் ஹால் இருக்கிறது. அங்கே அமைச்சர்களும் உறுப்பினர் களும் சந்திக்கக்கூடிய அந்த வாய்ப்பு எல்லாம் இருக்கிறது. ஆனால் நமக்கு அப்படிப் போதுமான வாய்ப்பு வசதிகள் உள்ள இடமாக நாம் கூடுகின்ற இந்த இடம் அமையவில்லை. இருந்தபோதிலும் வெளியிலே அமைச்சர்கள் வருவதும், உறுப்பினர்களோடு சகஜமாகப் பழகுவதும் இருக்க வேண்டிய ஒன்றாகும். அப்படி சந்திக்கின்ற இடத்தில் அவர்களிடத்தில் தருகிறோம். என்னைப் பொறுத்தவரையில், நான் இங்கு இருப்பேன். இல்லாவிட்டால் அங்கிருக்கின்ற மண்டபத்தில் இருப்பேன். அங்கே என்னிடத்தில் கொண்டு வந்து தரலாம். இங்கே தரும்போது கூட கொடுத்துவிட்டுப் போய்விட வேண்டும். அங்கே வந்தால் இரண்டு நிமிடங்கள் பேசிவிட்டுக் கூடச் செல்லலாம். எனவே அறவே கொடுக்கக் கூடாது என்று இல்லாமல் தாங்கள் இன்று எடுத்த முடிவின் காரணமாக ஓரளவு இதிலே ஒரு கட்டுப்பாடு ஏற்படும் என்று நான் நம்புகிறேன்.

8. கவன ஈர்ப்பு

(அ) மாதவரத்தில் சில பகுதிகளை வீட்டுவசதி வாரியம் கையகப்படுத்துவதால் அப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதிப்பு.

திரு. டி. கே. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சென்னை மாதவரத்தில் சில பகுதி களைத் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் கையகப்படுத்தும் திட்டத்தினால், அப்பகுதிகளில் வீடுகட்டி நீண்டகாலம் வாழ்ந்துவரும் மக்களின் நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

மாதவரம் கிராமத்தில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்ட நிலப்பகுதி தொழிற் பேட்டையை ஒட்டியிருப்பதுடன் நெல்லூர் நெடுஞ்சாலை மற்றும் உள்வட்டச்சாலை (Inner Ring Road) ஆகியவற்றுடன் இணைக்கப்பெற்றுள்ளதாலும், உலக வங்கிக் குழு சென்னையில் உள்வட்டச் சாலையினை ஒட்டியுள்ள நிலப்பகுதியினை கையகப் படுத்துவதற்காக சாத்தியக் கூறுகளை ஆராயுமாறு பரிந்துரை செய்ததின் பேரிலும், இப்பகுதியில் உள்ள நிலங்களை கையகப் படுத்த உத்தேசிக்கப்பட்டது.

உறுப்பினர்களை சந்திருக்கிறார்கள். டில்லியில் சென்ட்ரல் ஹால் இருக்கிறது. அங்கே அமைச்சர்களும் உறுப்பினர்களும் சந்திக்கக்கூடிய அந்த வாய்ப்பு எல்லாம் இருக்கிறது. ஆனால் நமக்கு அப்படிப் போதுமான வாய்ப்பு வசதிகள் உள்ள இடமாக நாம் கூடுகின்ற இந்த இடம் அமையவில்லை. இருந்தபோதிலும் வெளியிலே அமைச்சர்கள் வருவதும், உறுப்பினர்களோடு சகஜமாகப் பழகுவதும் இருக்க வேண்டிய ஒன்றாகும். அப்படி சந்திக்கின்ற இடத்தில் அவர்களிடத்தில் தருகிறோம். என்னைப் பொறுத்தவரையில், நான் இங்கு இருப்பேன். இல்லாவிட்டால் அங்கிருக்கின்ற மண்டபத்தில் இருப்பேன். அங்கே என்னிடத்தில் கொண்டு வந்து தரலாம். இங்கே தரும்போது கூட கொடுத்துவிட்டுப் போய்விட வேண்டும். அங்கே வந்தால் இரண்டு நிமிடங்கள் பேசிவிட்டுக் கூடச் செல்லலாம். எனவே அறவே கொடுக்கக் கூடாது என்று இல்லாமல் தாங்கள் இன்று எடுத்த முடிவின் காரணமாக ஓரளவு இதிலே ஒரு கட்டுப்பாடு ஏற்படும் என்று நான் நம்புகிறேன்.

8. கவன ஈர்ப்பு

(அ) மாதவரத்தில் சில பகுதிகளை வீட்டுவசதி வாரியம் கையகப்படுத்துவதால் அப்பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதிப்பு.

திரு. டி. கே. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''சென்னை மாதவரத்தில் சில பகுதிகளைத் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் கையகப்படுத்தும் திட்டத்தினால், அப்பகுதிகளில் வீடுகட்டி நீண்டகாலம் வாழ்ந்துவரும் மக்களின் நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை

மாதவரம் கிராமத்தில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்ட நிலப்பகுதி தொழிற்பேட்டையை ஒட்டியிருப்பதுடன் நெல்லூர் நெடுஞ்சாலை மற்றும் உள்வட்டச்சாலை (Inner Ring Road) ஆகியவற்றுடன் இணைக்கப்பெற்றுள்ளதாலும், உலக வங்கிக் குழு சென்னையில் உள்வட்டச் சாலையினை ஒட்டியுள்ள நிலப்பகுதியினை கையகப்படுத்துவதற்காக சாத்தியக் கூறுகளை ஆராயுமாறு பரிந்துரை செய்ததின் பேரிலும், இப்பகுதியில் உள்ள நிலங்களை கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்டது.

இப்பகுதியினை சமீப காலத்தில் பார்வையிட்டபோது, நகரத் திட்ட அமைப்புத் துறையின் ஒப்புதல் பெற்ற அல்லது பெறாத குடியிருப்புப் பகுதிகள் (லே-அவுட்ஸ்) ஆங்காங்கே உருவாகியுள்ளதையும், மேலும் ஒரு குறிப்பிட்ட நிலப்பகுதி விவசாயத்திற்கு பயன்படுத்தப்பட்டு வருவதையும், கண்ணுற்றதால் திருத்தியமைக்கப்பட்ட செயற்குறிப்பு ஒன்றினைத் தயார் செய்யும் பொருட்டு, இப்பகுதியிலுள்ள நிலங்களின் தற்போதைய நிலையினை அறிந்து அறிக்கை ஒன்றினை அனுப்புமாறு இப்பகுதிக்கான நில எடுப்பு அலுவலர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். அவருடைய அறிக்கைக்கு பின் திருத்தியமைக்கப்பட்ட நில எடுப்பு செயற்குறிப்பின் மீது தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் முடிவு செய்யவுள்ளது.

11-05 மணி

திரு. டி. கே. பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவொற்றியூர் தொகுதியில் அடங்கியுள்ள மாதவரத்தில் நில சர்வே எண்கள் 1227/2ஏ, 1227/2பி மற்றும் 1222, 1223, 1224, 1225 ஆகியவற்றிலுள்ள பிரகாஷ் நகர், தணிகாசலம் நகர், லட்சுமி நகர், சஞ்சய் நகர், அய்யப்பன் நகர், வி. பி. சி நகர் ராமச்சந்திர நகர், அன்னை சத்தியா நகர் போன்ற பகுதிகளில் ஏழை எளிய தொழிலாளர்கள் குறிப்பாக இரயில்வேத் தொழிலாளர்கள், பின்னி தொழிற்சாலை தொழிலாளர்கள், தமிழக அரசு தொழிலாளர்கள், சிம்சன் தொழிலாளர்கள் போன்றவர்கள் எல்லாம் நீண்ட காலமாக வீடு கட்டி வாழ்ந்து வருகிறார்கள். அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல லே—அவுட் அப்ரூவ் ஆன இடம் அப்ரூவ் அல்லாத இடங்களில் எல்லாம் வீடு கட்டி நீண்டகாலமாக வாழ்ந்து வருவதை அனைவரும் அறிவர். அந்த இடத்திலே இந்த ஆக்கிரமிப்பு செய்யப்படுமானால் அந்த ஏழை மக்கள் மிகவும் பாதிக்கப்படுவார்கள். அந்த நிலைமையை அரசு ஆராய்ந்து ரத்து செய்து அவர்களுக்கே அந்த நிலத்தை, அவர்கள் கட்டியுள்ள வீடுகளில் வாழ்ந்து வருவதற்கான வசதிகளை அமைச்சர் அவர்கள் செய்துகொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போதைய சூழ்நிலையை இங்கே தெரிவித்திருக்கிறார்கள். அந்தச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு வீட்டுவசதித் துறை அதிகாரிகளும், வருவாய்த் துறை அதிகாரிகளும் மீண்டும் ஒரு தடவை அந்த இடங்களையெல்லாம் பார்வையிட்டு அரசுக்கு அறிக்கை அளித்ததற்குப் பிறகு இது பற்றி இறுதி முடிவு எடுக்கலாம்,

[1990 ஏப்ரல் 21

திரு. டி. கே. பழனிச்சாமி : அமைச்சர் அவர்களுக்கு நன்றி. மேலும் ஏழை எளிய பாட்டாளி மக்கள் கலைஞர் அரசால் காப்பாற்றப்படவேண்டும் என்ற நல்ல எண்ணத்தைக் கொண்ட உழைக்கின்ற வர்க்கத்தைச் சேர்ந்த அமைச்சர் அவர்கள் உன்னிப்பாக கவனித்து ஆவன செய்ய வேண்டு மென்று அன்போடு கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

(ஆ) ஆதி திராவிடர் நலத்துறைப் பள்ளிகள்ல் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளது குறித்து.

திரு. உ. ரா. வரதராாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வரும் ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்பட மாட்டார்கள் என்ற உறுதிமொழியை மீறி, ஆதிதிராவிடர் நலத்துறைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப் பட்டுள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

ஒப்பந்த அடிப்படையில் பட்டதாரி ஆசிரியர்களை நியமனம் செய்யும் முறை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையில் நடைமுறையில் இருந்து வருகிறது. இவ்வாறு ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் 1986 முதல், கல்வியாண்டில் கடைசி தேதியில் பணி நீக்கம் செய்யப்பட்டு, விடுமுறை காலத்திற்குப் பின் மீண்டும் பணியி லமர்த்தப்படுகின்றனர். 181 பட்டதாரி ஆசிரியர்கள் இத்துறை யில் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேற்படி ஆசிரியர்கள் கல்வித்துறையில் அரசு '' ஆசிரியர் நிய மனக்குழு '' அமைத்துள்ளது என்றும், கல்வித்துறையில் உள்ள இவர்களைப் போன்ற ஆசிரியர்களின் பணி, வரன்முறைப்படுத் தப்படுகிறது என்றும், எனவே, தங்கள் பணியும் பணியிலமர்த் தப்பட்ட முதல் தேதியிலிருந்து வரன்முறைப்படுத்தப்பட வேண் டும் என்றும் கோரி வருகின்றனர். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் உள்ள பட்டதாரி ஆசிரியர்களின் பணியிடம் தேர்வாணையத்தின் ஆளுகையிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படவில்லை. எனவே, தேர்வாணையம் தேவையான பணியாளர்களைத் தெரிவு செய்து இத்துறைக்கு அனுப்ப வேண் டும். தற்போது 1989-90 கல்வியாண்டு முடிவடையும் தருவா யில் உள்ளதால், இத்துறையில் ஒப்பந்த அடிப்படையில் பணியி

[1990 ஏப்ரல் 21

திரு. டி. கே. பழனிச்சாமி: அமைச்சர் அவர்களுக்கு நன்றி. மேலும் ஏழை எளிய பாட்டாளி மக்கள் கலைஞர் அரசால் காப்பாற்றப்படவேண்டும் என்ற நல்ல எண்ணத்தைக் கொண்ட உழைக்கின்ற வர்க்கத்தைச் சேர்ந்த அமைச்சர் அவர்கள் உன்னிப்பாக கவனித்து ஆவன செய்ய வேண்டு மென்று அன்போடு கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

(ஆ) ஆதி திராவிடர் நலத்துறைப் பள்ளிகளில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளது குறித்து.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வரும் ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப்பட மாட்டார்கள் என்ற உறுதிமொழியை மீறி, ஆதிதிராவிடர் நலத்துறைப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் பணி நீக்கம் செய்யப் பட்டுள்ளது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

ஒப்பந்த அடிப்படையில் பட்டதாரி ஆசிரியர்களை நியமனம் செய்யும் முறை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையில் நடைமுறையில் இருந்து வருகிறது. இவ்வாறு ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் 1986 முதல், கல்வியாண்டில் கடைசி தேதியில் பணி நீக்கம் செய்யப்பட்டு, விடுமுறை காலத்திற்குப் பின் மீண்டும் பணியி லமர்த்தப்படுகின்றனர். 181 பட்டதாரி ஆசிரியர்கள் இத்துறை யில் ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேற்படி ஆசிரியர்கள் கல்வித்துறையில் அரசு '' ஆசிரியர் நிய மனக்குழு '' அமைத்துள்ளது என்றும், கல்வித்துறையில் உள்ள இவர்களைப் போன்ற ஆசிரியர்களின் பணி, வரன்முறைப்படுத் தப்படுகிறது என்றும், எனவே, தங்கள் பணியும் பணியிலமர்த் தப்பட்ட முதல் தேதியிலிருந்து வரன்முறைப்படுத்தப்பட வேண் டும் என்றும் கோரி வருகின்றனர். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையில் உள்ள பட்டதாரி ஆசிரியர்களின் பணியிடம் தேர்வாணையத்தின் ஆளுகையிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படவில்லை. எனவே, தேர்வாணையம் தேவையான பணியாளர்களைத் தெரிவு செய்து இத்துறைக்கு அனுப்ப வேண் டும். தற்போது 1989-90 கல்வியாண்டு முடிவடையும் தருவா யில் உள்ளதால், இத்துறையில் ஒப்பந்த அடிப்படையில் பணியி

லமர்த்தப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் தங்களது பணி வரன் முறைப்படுத்தப்பட வேண்டும் என்று கோரி வருவதால், ஒன்று இவர்களது பணியினை வரன்முறைப்படுத்த வேண்டும் அல்லது இவர்களை கல்வியாண்டின் கடைசி தேதியில் பணி நீக்கம் செய்ய வேண்டும். எனினும், 28—7—1987 நாளிட்ட அரசு சமூக நலத் துறையின் கடித எண். 95815/ஆதிந/7/87 இல் வெளியிடப்பட்ட ஆணையின்படி, ஒப்பந்த அடிப்படையில் பணியிலமர்த்தப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களின் நியமனம் தற்காலிக அடிப்படையி லானது. எனவே, அவர்கள் கல்வியாண்டின் கடைசி தேதியில் பணி நீக்கம் செய்யப்பட வேண்டியுள்ளது. ஒப்பந்த அடிப்படை யில் பணியிலமர்த்தப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களின் பணி வரன் முறைப்படுத்துவது குறித்து இறுதி முடிவு எடுக்கப்படவில்லை யாதலால் அவர்கள் பணி நீக்கம் செய்யப்பட வேண்டியுள்ளது. ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் சட்டமன்றப் பேரவையில் அறிவித்துள்ள குறிப்பின் அடிப்படையில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இயக்குநர் ஒப்பந்த அடிப்படையில் பணியிலமர்த்தப்பட்ட 181 பட்டதாரி ஆசிரியர்களை பணி நீக்கம் செய்யாமல் அப்படியே வைத்துக்கொள்ள பரிந்துரை செய் துள்ளார். இப்பொருள் குறித்த செயற் குறிப்பு தனியே அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் ஆதி திரா விடர் மற்றும் பழங்குடியினர் அல்லாத ஆசிரியர்கள் மாண்புமிகு கல்வி அமைச்சரின் அறிவிப்புப்படி இந்த ஆண்டு பணி நீக்கம் செய்யப்படவில்லை. ஆனால், ஆதி திராவிடர் நலத்துறை பள்ளி களில் பணிபுரியும் இத்தகைய ஆசிரியர்களை மட்டும் பணி நீக்கம் செய்யப்பட வேண்டியுள்ளது என்ற குறிப்பு தரப்பட்டுள்ளது. இந்த பாரபட்சமான நடைமுறை மாற்றப்பட்டு அந்த ஆசிரியர் கள் பணி நீக்கம் செய்யப்படாமல் பணியில் நீடித்து வைக்கப் படுவார்களா? இந்த ஆண்டு பணி நீக்கம் செய்யப்பட்டிருந்தால் பணி தொடர்ச்சியோடு அவர்களுக்குப் பணி நீட்டிப்பு தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்; தலைவர் அவர் களே, இதுபற்றி அரசு தக்க நடவடிக்கை எடுத்து ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. உ. ரா. வரதராசன்: தலைவர் அவர்களே, கல்வித் துறையிலே இது போன்ற ஒப்பந்த அடிப்படையிலான ஆசிரியர் கள் பணி வரன்முறைப்படுத்தப்படுகிறார்கள். இதற்கென ஒரு குழு அமைக்கப்பட்டு அந்தப் பணி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. தேர்வாணைக் குழு மூலம் தேர்வு செய்யப்பட்டு அனுப்பப்பட வேண்டும் என்று அவர்கள் விஷயத்திலே வலியுறுத்தப்படவில்லை என அறிகிறேன். எனவே, அதே போல ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்

[திரு. உ. ரா. வரதராசன்] [1990 ஏப்ரல் 21

களுக்கும் பாரபட்சம் இல்லாமல் பணி வரன்முறைப்படுத்தப்படும் என்று அமைச்சர் அவர்கள் உத்திரவாதம் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை ஏற்று கல்வித்துறை அமைச்சருடைய கவனத்திற்கு அது கொண்டு வரப்பட்டு தகுந்த நடவடிக்கை எடுத்து ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

9. சட்ட முன்வடிவு—(அறிமுகம் செய்தல்)

மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு 1990.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1990ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

திரு. எஸ். ஆர். இராதா: தலைவர் அவர்களே, அறிமுக நிலையில் இந்தச் சட்டத் திருத்தத்தை எதிர்க்கிறோம்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிக்க சபாநாயகர் அவர்களே, அறிமுக நிலையிலேயே இந்தச் சட்டத்தை மிக அழுத்தமாகவே எதிர்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"1990ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

[திரு. உ. ரா. வரதராசன்] [1990 ஏப்ரல் 21

களுக்கும் பாரபட்சம் இல்லாமல் பணி வரன்முறைப்படுத்தப்படும் என்று அமைச்சர் அவர்கள் உத்திரவாதம் செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை ஏற்று கல்வித்துறை அமைச்சருடைய கவனத்திற்கு அது கொண்டு வரப்பட்டு தகுந்த நடவடிக்கை எடுத்து ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

9. சட்ட முன்வடிவு—(அறிமுகம் செய்தல்)

மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவு 1990.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1990ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

திரு. எஸ். ஆர். இராதா: தலைவர் அவர்களே, அறிமுக நிலையில் இந்தச் சட்டத் திருத்தத்தை எதிர்க்கிறோம்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிக்க சபாநாயகர் அவர்களே, அறிமுக நிலையிலேயே இந்தச் சட்டத்தை மிக அழுத்தமாகவே எதிர்க்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' 1990ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

11-10 மணி

10. மானியக் கோரிக்கைகள், 1990-91, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண். 20—வேளாண்மை

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 20 வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,35,47,14,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் இடுபொருள்கள் விநியோகத்தில் வழங்குதலில் இருக்கும் தொய்வு நிலையினைப் போக்குவது என்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண் 20 வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,35,47,14,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம், முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றிய வேளாண்மைக் கிடங்கு புதிய கட்டிடம் கட்டுவது என்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண் 20 வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,35,47,14,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப் புறங்களில் விதைப் பண்ணைகள் அமைப்பதை விரிவுபடுத்திட வேண்டிய அவசியம் என்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண். 20 வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,35,47,14,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு விவசாயி

களுக்கு ஊக்கமளிக்க விவசாய விளைபொருளுக்கு கட்டுபடியாகக் கூடிய விலை அளிப்பது சம்பந்தமாக விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண். 20 வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 4,35,47,14,000 இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

(ஆ) கோரிக்கை எண். 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண். 50 வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,95,61,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.''

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண். 50 வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 2,95,61,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம், வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம் '' என்ற பாரதியார் அவர்களுடைய பாட்லுக்கு ஏற்ப மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் அனைவருக்கும் 1990-91 ஆம் ஆண்டுக்கான வேளாண்மை கொள்கை விளக்கம் குறித்த விவரங்கள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அவையின் முன் வைக்கப்பெற்றுள்ள கொள்கை விளக்கக் குறிப்புக்களை* நான் படித்ததாகக் குறிப்பேட்டில் ஏற்றுக்கொள்ள வேண்டும். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை அறிந்து இறுதியில் எனது பதில் உரையை வழங்குகிறேன் என்பதை எடுத்துச் சொல்லி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஓர் அறிவிப்பு.

நேற்றே அவையினுடைய அலுவல் நேரம் நீட்டித்துப்போய் நீர்இழிவு நோய்க்காரர்கள் எல்லாம் வேர்த்து விறுவிறுத்துப் போய் (சிரிப்பு) நிறையக் கோரிக்கைகளை வைத்து இருக்கிறார்கள்.

*209—254-ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

1990 ஏப்ரல் 21] [பேரவைத் தலைவர்]

அவற்றை எல்லாம் மனதில் கொண்டும் அனைத்துக் கட்சித் தலைவர்கள் வேண்டுகோளை ஏற்றும் நேரம் வரையறை செய்யப்பட்டுள்ளது. சில கட்சிகளில் 2 பேர் பங்கிட்டுக் கொண்டும் கூட அந்த நேரத்தை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்கான அனுமதியும் வழங்கப்பட்டிருக்கிறது. எனினும், கண்டிப்பாக நேரத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். உரிய நேரத்தில் மணி அடித்த உடன் அடுத்தவர் பெயர் அழைக்கப்பெறும். இதில் யாரும் எந்தவகையான சிறிது வருத்தமும் அடையக்கூடாது என்பதை அன்புடன் தெரிவித்துக்கொண்டு திரு. க. பழனிசுவாமி அவர்கள் 5 மணித்துளிகள்.

திரு. க. பழனிசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை மானியக் கோரிக்கை மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தில் வேளாண்மை முதன்மை வகிக்கிறது. தமிழகத்தில் வாழ்கின்ற மக்களில் 70 சதவீதம் பேர் அதாவது $3\frac{1}{3}$ கோடி மக்கள் விவசாயத்தை நம்பித்தான் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். இந்த விவசாயத்தின் மூலமாகத்தான் அதிகமான மக்களுக்கு 2 கோடி மக்களுக்கு வேலைவாய்ப்பு தருவது இந்த விவசாயத்துறைதான். கிராமப்புற மக்களின் பொருளாதார வளர்ச்சி விவசாயத்தை நம்பித்தான் இருக்கிறது, விவசாய மக்களுடைய பொருளாதாரம் உயர வேண்டுமானால் பயிர் உற்பத்தி நன்கு இருந்தால்தான் அவர்களுடைய பொருளாதார வளர்ச்சியை ஓரளவு பெருக்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது விவசாயிகளுடைய நிலைமை பயிர் செய்கின்றபோது ஒரு விலையும், பயிர் அறுவடை செய்கின்றபோது ஒரு விலையும் இருக்கிறது. இதற்கு இடைப்பட்டக் காலத்தில் விலை ஏற்றத் தாழ்வு இருப்பதால் விவசாயிகள் பெரிதும் நட்டத்திற்கும் பாதிப்புக்கும் உள்ளாகி இருக்கிறார்கள். ஆகவே, விவசாயிகள் உற்பத்திச் செய்கின்ற விவசாய விளைப்பொருட்களுக்கு அடிப்படை விலையை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்போதுதான் விவசாயிகள் ஓரளவு நன்மை பெற முடியும். மத்திய அரசு விளைப் பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்கின்ற அதிகாரம் இருந்தால் கூட தற்போது திராவிட முன்னேற்றக் கழக அரசு மத்தியில் இருக்கின்ற தேசிய முன்னணி அரசுடன் அங்கம் வகித்து அதில் ஒருவரை அமைச்சராக ஆக்கியிருக்கிறது. இந்த இந்திய நாட்டின் துணைப் பிரதமர் திரு. தேவிலால் அவர்கள் மத்திய வேளாண்மைத் துறை அமைச்சராக இருக்கிறார்.

11-15 மணி

விவசாயிகளுடைய பிரச்சினைகளைப் போக்கக்கூடியவர்களாக இருப்பதால் மாண்புமிகு முதல்வர் அவர்களும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களும் மாநிலத்தில் விளை

யும் விவசாயப் பொருள்களுக்கு அந்தந்த மாநிலமே விலை நிர்ணயம் செய்யும் அதிகாரத்தை மாநில அரசுக்கு வழங்கவேண்டுமென்று வற்புறுத்தி பெற்று தமிழகத்திலேயுள்ள விவசாய மக்களுக்கு நல்ல விலை கிடைக்கின்ற வகையிலே விலையை உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள் விரும்புகிறேன். 8.5 சதவீத சர்க்கரை சத்துள்ள கரும்புக்குத் தமிழக அரசு டன் ஒன்றுக்கு 250 ரூபாய் கொடுப்பதாக அறிவித்து இருக்கிறது. ஆனால், வட மாநிலங்களில் டன் ஒன்றுக்கு 400 ரூபாய் கொடுக்கிறார்கள். தற்போது கரும்பின் உற்பத்திச் செலவும், இடுபொருள் செலவும் அதிகரித்து விட்டதால், ஓராண்டுக்கால பயிராக இருப்பதாலும் மற்ற வட மாநிலங்களில் கொடுக்கின்ற விலையைப்போல கரும்பின் விலையை உயர்த்தி 8.5 சதவீத சர்க்கரை சத்துள்ள கரும்புக்கு டன் ஒன்றுக்கு 400 ரூபாய் வழங்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல் கரும்பைப் பயிரிடுகின்ற விவசாயிகளெல்லாம் கரும்பை வெட்டிய இரண்டு நாட்களுக்குப் பிறகு தான் ஆலையதிபர்கள் அந்தக் கரும்பை ஆலைகளுக்கு எடுத்துச் செல்கிறார்கள். இதனால் கரும்பு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். இந்த நிலையை மாற்றி, கரும்பை வெட்டிய அன்று மாலையிலேயே அவைகளை ஆலைகளுக்கு எடுத்துச் செல்கின்ற வசதியை செய்து கொடுக்க அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெல்லுக்கு, அரசு ரூபாய் 180-லிருந்து 205 ஆக உயர்த்தியுள்ளது. குவிண்டாலுக்கு 35 ரூபாய் ஊக்கத் தொகையாக கொடுப்பதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இது போதாது. ஏனென்றால், அணைகளில் நீர்மட்டம் குறைவாக இருந்து பாசனத்திற்கு உரிய காலத்தில் தண்ணீர் விட முடியாத நிலை ஏற்படுகின்றது.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இதனால் உரிய பட்டத்தில் நெல் பயிரை நடவு செய்ய முடியாமல் பட்டம் தவறி நடவு செய்வதால் பயிர்கள் நோய்களால் தாக்கப்பட்டு குறைந்த விளைச்சலே கிடைக்கின்றது. இதனால் விவசாயிகள் நஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள். ஆகவே, நெல்லினுடைய விலையை குவிண்டாலுக்கு 300 ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இயற்கைச் சீற்றத்தால் பயிர்கள், மழை அதிகம் பெய்து, வெள்ளத்தால் பாதிக்கப்படுகிறது. அல்லது வறட்சியால் காய்ந்து விடுகிறது. இதற்கு பயிர் காப்பீட்டு திட்டத்தின் மூலமாக நஷ்ட ஈடு வழங்க வேண்டும். அதற்கு தற்போது பயிர் காப்பீட்டு திட்டத்தின்கீழ் ஒரு குறிப்பிட்ட விவசாயிக்கு இழப்பு ஏற்பட்டால் அவர் தனிப்பட்ட முறையில் நஷ்ட ஈடு கோர முடியாது. தற்போது ஒரு கிராமத்தில் ஒட்டு மொத்த

மாக மகசூல் குறைவு ஏற்பட்டால் நன்கு மகசூல் எடுத்த விவசாயிக்கும் குறைவாக மகசூல் எடுத்த விவசாயிக்கும், அனைவருக்கும் வழங்கப்படுகிறது. எனவே, கால்நடைக்கு, தற்போது தனிப்பட்ட விவசாயி காப்பீடு செய்து தனிப்பட்ட முறையில் நஷ்டஈடு கோருவது போல இந்த பயிர் காப்பீட்டு திட்டத்திற்கும் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது நாள் வரையில் தமிழ்நாட்டில் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பெற்ற பிரிமியத் தொகை எவ்வளவு என்றும் வழங்கப்பட்ட நஷ்டஈடு எவ்வளவு என்றும், மற்றும் இத்திட்டத்தின் மூலமாக பயன் பெற்ற விவசாயிகள் எத்தனை பேர் என்றும் அமைச்சர் அவர்கள் விளக்குகின்ற போது அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். மானிய விலையில் விதை, உரம் போன்றவைகள் பருவம் ஆரம்பிப்பதற்கு முன் வழங்கப்பட வேண்டும். அவை தரமான விதைகளாக இருக்கவேண்டும். அப்போது தான் அதிக நெல் விளைச்சலைப் பெற முடியும். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஓர் ஊராட்சிக்குத் தான் மானியத்தில் எண்ணெய் வித்துத் துறையில் இருந்து, விதை, உரம் வழங்கப்படுகிறது. இதை மாற்றி, அனைத்து ஊராட்சி மன்றங்களில் உள்ள விவசாய பெருமக்கள் அனைவருக்கும் மானியத்திலே உரம், விதை கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பருத்தி சாகுபடி செய்கின்ற விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையில் மருந்து, உரம் போன்றவற்றை உரிய காலத்தில் வழங்க வேண்டும். உரிய காலத்தில் உரம் மற்றும் மருந்துகள் வழங்காததால் தற்போது பல மாவட்டங்களில் பருத்தி சாகுபடி செய்கின்ற விவசாயிகள், காய்ப் புழுக்களால் பருத்தி பாதிக்கப்பட்டு, நஷ்டத்திற்கு உள்ளாகி இருக்கிறார்கள். ஆகவே, இதையெல்லாம் கருத்தில் கொண்டு நடப்பு ஆண்டிலாவது உரிய காலத்தில் மருந்துகளை வழங்கி, பூச்சிகள் தாக்குகின்ற பயிர்களையெல்லாம் காத்து விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படாமல் அரசு காக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பருத்தியை அரசே கொள்முதல் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். 1–4–1990 முதல் வேளாண்மைக் கிடங்குகளில் விவசாயிகள் விதைகள் வாங்கும் போது, அந்த விதைப்பைகளுக்கு பணம் வாங்கப்படுகிறது. அதனுடைய கிரையம் விதையின் விலையில் பாதி அளவு ஆகிறது. எனவே விதைப் பையினுடைய விலையை அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும்.

விவசாயிகளுக்கு தார்பாய் 50 சதவீத மானியத்தில் வழங்கப்பட வேண்டும். விவசாயக் கருவிகள் வழங்குகின்றபோது பயிர் பாதுகாப்புக் கருவிகள் வழங்குகின்ற போது, 50 சதவீதம்

என்று இந்த அரசு ஆணையிட்டு 300 ரூபாய்க்கு மேல் இருக்கக் கூடாது என்று உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. இதை மாற்றி, நெற் கதிரடிக்கும் இயந்திரங்களையும் மருந்து அடிக்கும் பவர் ஸ்பிரேயர்களையும் 50 சதவீத மானியத்தில் வழங்க அரசு முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். தற்போது 174 டிராக்டர்கள், உழுவதற்கு, வாடகைக்கு, விவசாயிகளுக்கு விடுவதாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இது போதாது. அதிக டிராக்டர்களை ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் வழங்கி குறைந்த பட்சம் 2 டிராக்டர்களை யாவது உழுவதற்கு வாடகைக்கு கொடுப்பதற்கு, விவசாயிகளுக்கு கிடைக்கின்ற வகையிலே அரசு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பெரும்பாலான விவசாயிகள் சொந்தமாகவே கரும்பு சாகுபடி செய்து அவர்களே கரும்பு கிரஷ்ஷர்கள் மூலமாக பிழிந்து வெல்லம், மற்றும் சர்க்கரை உற்பத்தி செய்கின்றார்கள். இவர்கள் கிரஷ்ஷர்கள் மூலமாக பிழிகின்ற கரும்பில் 55 சதவீத சாறுதான் பிழியப் படுகிறது. இவர்களுக்கு உதவுகின்ற வகையில் அரசு கரும்பிலிருந்து 80 சதவீத சாறு பிழியக் கூடிய புதிய கிரஷ்ஷர்களை கண்டுபிடித்து அவர்களுக்கு வழங்க வேண்டும். அதனால் விவசாயிகள் லாபம் பெறுகிறார்கள். அதிகமான உற்பத்தியை அரசுக்குத் தருவார்கள். சேலம் மாவட்டத்தில் விவசாயிகளுடைய கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் பல கிணறுகள் வறண்டு போய் இருக்கின்றன. இவர்கள் பக்கத்தில் ஆழ் குழாய்க்கிணறுகள் அமைத்து அதிலிருந்து தண்ணீர் எடுத்து கிணற்றில் சேமித்து அதன் பிறகு தான் பாசனத்திற்குப் பயன் படுத்துகிறார்கள். அவர்களுக்கு கிணற்றில் பயன் படுத்தும் மோட்டார்களுக்கும் மின்சாரக் கட்டணம் வசூல் செய்யப் படுகிறது. மற்ற கம்ப்ரெஸ்ஸர் மோட்டாருக்கும் மின் கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. ஆனால் ஒரு மோட்டார் ஓடும் போது, மற்றொரு மோட்டார் ஓடக் கூடாது என்று சேஞ்ச் ஓவர் ஸ்விட்ச் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இரண்டு மோட்டார்களுக்கும் பணம் வசூல் செய்து கொண்டு ஒன்று ஓடும்போது மற்றொன்று ஓடக் கூடாது என்று சொல்வது சரியல்ல. (மணியடிக்கப்பெற்றது) ஆகவே இரண்டு மோட்டார்களும் ஒரே சமயத்தில் ஓட்டிக் கொள்ள அரசு அனுமதி. வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

11-20 மணி

போன வருஷம் 40 ஆயிரம் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த ஆண்டும் 40 ஆயிரம் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்கப்படுவதாக சொல்லப்பட்டிருக்கிறது. கடந்த ஆண்டு எவ்வளவு பம்ப் செட்டுகளுக்கு மின்சார இணைப்பு கொடுக்கப்பட்டது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க

வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு (மணியடிக்கப்பெற்றது) 5 இலட்சம் பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு வேண்டுமென்று கேட்டு பதிவு செய்திருக்கிறார்கள். அப்படி இருக்கிறபோது ஒவ்வொரு ஆண்டு 40 ஆயிரம் தான் என்றால் 1989–90ல் பதிவு செய்தவர்கள் எல்லாம் 10 ஆண்டுகளுக்குப் பிறகு 2000 ஆண்டில் தான்..... (மணியடிக்கப்பெற்றது) கிடைக்கும், அதை அதிகப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.

*திரு. அன்பில் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையின் அமைச்சர் அவர்கள் அளித்திருக்கிற வேளாண்மை மானியக் கோரிக்கையில் ஆளும் கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நாம் இந்த சபையை ஆரம்பிக்கும் போது தினந்தோறும் ஒரு குறளை சொல்லித்தான் இந்த மன்றத்தை ஆரம்பிக்கிறோம். வள்ளுவர் கூட எந்த ஒரு தொழிலைப் பற்றியும் தனியாக ஒரு அதிகாரத்தைக் கொடுக்காமல், 'உழவு' என்பதற்கு மட்டும் தனி அதிகாரத்தை ஒதுக்கியிருப்பதைத் தெரிந்து கொள்ளலாம். இன்றைக்குக் கூட நமது பேரவைத் தலைவர் அவர்கள் சபையை ஆரம்பிக்கும்போது,

''சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழன்றும் உழவே தலை''

என்று துவக்கினார்கள். அதை விட வள்ளுவர் அவர்கள்,

''உழவினார் கைமடங்கின் இல்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கும் நிலை''

என்று சொல்லியிருக்கிறார்கள். துறவியாக இருப்பவர் கூட, பொன்னாசை, மண்ணாசை, பெண்ணாசை போன்றவைகளைத் துறந்தாலும் கூட, அந்த மனிதனால் சோற்று ஆசையை மட்டும் விட முடியாது என்று வள்ளுவர் மிகத் தெளிவாக விளக்கியிருக்கிறார். அது மட்டுமல்ல, ரஷ்ய நாட்டின் புரட்சி வீரன் மாவீரன் லெனின் கிரெம்ளின் நகர மாளிகையின் உப்பரிகையில் உலவிக்கொண்டு இருந்தாலும், எண்ண ஓட்டங்கள் எல்லாம் சைபீரியா நாட்டு சதுப்பு நிலக் காடுகளில் உழன்று கொண்டிருப்பவனைப் பற்றித்தான் சிந்தித்துக் கொண்டு இருந்தான் என்று சொல்வார்கள். அது மட்டும் அல்ல, இன்றைய தினம் விஞ்ஞானிகளில் தலை சிறந்த விஞ்ஞானியாக இருக்கிற டாக்டர் சுவாமிநாதன் அவர்கள் குறிப்பிடுகிற போது, '' If Agriculture goes wrong nothing, will go right '' என்று சொல்லியிருக்கிறார்கள். அதனால்தான் கலைஞர் அவர்கள் கூட கோட்டையிலே கோலோச்சினாலும், கோபாலபுரத்திலே குடியிருந்தாலும் அவர்களுடைய எண்ண ஓட்டங்கள் எல்லாம்

1990 ஏப்ரல் 21] [திரு. அன்பில் பொய்யாமொழி]

சோழ நாட்டில் உழன்று கொண்டிருக்கிற உழவர்களைப் பற்றித் தான் சிந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள். ஏனென்றால் சோழ நாட்டில் இருக்கிற உழவர்கள் கால்கள் சேற்றோடு சேர்ந்தால் தான் நம்முடைய வயிற்றுக்கு சோறு கிடைக்கும் என்ற காரணத்தால் இன்றைக்கு விவசாயத்திற்காக ஏறத்தாழ 120 கோடி ரூபாயை அதிகமாக இந்த ஆண்டு ஒதுக்கியிருக்கிறார்கள். அது மட்டுமல்ல, இன்றைய தினம் நம்முடைய கழக அரசு தீட்டியிருக்கிற திட்டங்களோடு ஒரு சில கருத்துக்களையும் நான் அரசுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்றைக்கு தமிழகத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ 12 இலட்சம் டன் நெல்லை விவசாயிகளிடமிருந்து நாம் கொள்முதல் செய்கிறோம். ஆனால் அப்படிக் கொள்முதல் செய்யப்படுகிறபோது அவர்களுக்கு குறைந்த விலைதான் தரப்படுகிறது. தமிழக அரசு இன்றைக்கு சிறந்த கலைஞர்களுக்கு பரிசுகள் வழங்குகிறது, சிறந்த திரைப்படங்களுக்கு பரிசுகள் வழங்குகிறது. சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு ஊக்கம் அளிப்பதற்காக பரிசுகள் வழங்கப்படுகின்றன. ஆனால் நமக்காக உழைத்துக் கொண்டிருக்கிற விவசாயிகளுக்கு இதுவரை எந்த விதப் பரிசுத் திட்டத்தையும் நாம் அறிவிக்காதது உண்மையிலேயே வேதனை தரக் கூடிய ஒன்று. அதற்காக நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்ள விரும்புவது, இப்படி ஆண்டு தோறும் 12 இலட்சம் டன் நெல் கொள்முதல் செய்கிற நாம், அந்த நெல்லைக் கொள்முதல் செய்கிற போது விவசாயிகளுக்கு 1 கிலோவுக்கு 1 பைசா வீதம் கொடுத்தால் அதனால் அரசுக்கு 1.2 கோடி ரூபாய் அதிகச் செலவு ஆகிறது. அரசுக்கு 1.20 கோடி ரூபாய் வருமானம் குறைவாக இருந்தாலும் கூட அதை நியாய விலைக் கடைகளில் மக்களுக்கு வழங்குகிற நேரத்தில் 1 கிலோவுக்கு 1 பைசா என்று சொன்னாலும் கூட ஒரு மாதத்திற்கு 12 பைசாதான் வருகிறது. இதனால் ஒன்றும் இந்த நாட்டிலே ஒரு பெரிய பண வீக்கம் ஏற்பட்டு விடாது. ஆகவே, இதிலே இருந்து வருகிற ஒரு கோடியே இருபது இலட்சம் ரூபாயை விவசாயிகளுக்குப் பரிசாக வழங்கினால் இன்னும் விவசாயத் துறையில் நாம் முன்னேற முடியும் என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

11-25 மணி

அதை அறிவிக்கிற நேரத்தில் மாநில அளவில் ஏறத்தாழ ஹெக்டேருக்கு 15 டன்களுக்கு மேலே நெல் விளைவிக்கும் விவசாயிக்கு முதல் பரிசாக 5 இலட்சம் ரூபாயும், 2-ஆம் பரிசாக 3 இலட்சம் ரூபாயும், மூன்றாம் பரிசாக 2 இலட்சம் ரூபாயும் வழங்க வேண்டும். அதே போல் மாவட்ட அளவில் ஹெக்டேருக்கு 12.5 டன்களுக்கு மேலே விவசாயம் செய்கிற விவசாயிக்கு முதல் பரிசாக 50 ஆயிரம் ரூபாயும், இரண்டாம் பரிசாக 25 ஆயிரம் ரூபாயும், மூன்றாம் பரிசாக 15 ஆயிரம் ரூபாயும் வழங்கிட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இதை எல்லாம் விட 15 டன்களுக்கு மேலே விளைவிப்பவர்களுக்கு பரிசுப் பொருள் கிடைக்கவில்லை என்றாலும் கூட ஏறத்தாழ 25,000 ரூபாய் என்று 100 பேர்களுக்கு வழங்கினால் 25 இலட்சம் ரூபாய்தான் வரும். அதே போல் 10 டன்களுக்கு மேலே விளைவிப்பவர்களுக்கு 5,000 ரூபாய் வீதம் சுமார் ஆயிரம் பேர்களுக்கு வழங்கினால் 50 இலட்சம் ரூபாய் வரும். ஆக இவற்றை எல்லாம் மனதில் கொண்டு நாம் அந்த ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாயைச் செலவழித்தாலும் கூட மீதம் வருகிற தொகை ஏறத்தாழ 7 இலட்சம் ரூபாயாகும். இதை பல்வேறு விவசாயத் திட்டங்களுக்கு நாம் பயன்படுத்த முடியும்.

இன்றைக்கு என்னுடைய திருச்சி மாவட்டம் நெல் விளைச்சலிலே முதலிடம் பெற்று இருக்கிறது. அதேபோல் இந்த ஆண்டும் தமிழகத்திலேயே திருச்சிதான் முதலிடத்தினைப் பெற்று இருக்கிறது. எங்களுடைய திருச்சி மாவட்டத்தில் சாதாரண்மாக குறுவையில் 25,000 ஹெக்டேர் சாகுபடி செய்யப்படும். காவிரியில் தஞ்சைக்குத் தண்ணீர் திறக்கப்படும்போது தான் தண்ணீர் விடுவதால் கடந்த ஆண்டு வெறும் 4,000 ஹெக்டேரில் மட்டுமே குறுவை சாகுபடி செய்யப்பட்டது. அதனால் ஜூன் மாதத்தில் முதல் வாரத்தில் வழக்கமாக விடும் 1,500 கன அடி தண்ணீரை அதிகப்படுத்தி 3,000 கன அடியாக விட்டால் திருச்சி மாவட்டத்தில் சுமார் 30,000 ஹெக்டேர் நிலத்தில் குறுவை சாகுபடி செய்து சுமார் ஒரு இலட்சம் டன் அரிசி அதிகமாக உற்பத்தி செய்யமுடியும். இதனால் தஞ்சை மாவட்டம் எந்த விதத்திலும் பாதிக்கப்படாது. இரண்டு மாதங்கள் அதிகமாக விடப்படும் இந்த நீர் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் 6 நாட்களுக்குத் தேவையானதேயாகும். ஆகவே அதை மனதில் கொண்டு நம்முடைய அமைச்சர் அவர்கள் திருச்சி மாவட்டத்தில் அதிகமான உணவு உற்பத்தி ஆகின்ற காரணத்தால் ஜூன் முதல் வாரத்தில் காவிரியில் 3,000 கன அடி தண்ணீர் விட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த ஆண்டு நமது அரசு 20 சதவீதம் சாகுபடி செய்வதற்கான விதை வினியோகம் செய்ய ஏற்பாடு செய்திருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். ஓராண்டுக்கு முன்பாகவே விதை உற்பத்தி செய்து இருப்பு வைக்கப்படுகிறது. எவ்வளவு பரப்பு சாகுபடி செய்யப்படும் என்ற உத்தேச மதிப்பீட்டின் பேரிலேயே அது கணக்கிடப்படுகிறது. கால நிலை கோளாறினால் சாகுபடி பரப்பு குறைந்தால் இந்த ஆண்டின் இருப்பை வைத்து விதை வினியோகிக்க முடியாமல் போக வாய்ப்புண்டு. அந்த மாதிரி சமயங்களில் விதை வினியோகம் ஆகாமல் இருப்பதற்கு அலுவலர்களைப் பொறுப்பு ஆக்காமல் உபரி விதையை உணவு கார்ப்பரேஷனுக்குக் கொடுத்துவிடவேண்டும். அப்படிச் செய்தால் அலுவலர்கள் ஊக்குவிக்கப்படுவதோடு வேண்டிய விதைகளை உற்பத்தி செய்து அவர்கள் இருப்பில் வைப்பார்கள்.

தற்போது பெருமளவு விதை தனியார் பண்ணையில் உற்பத்தி செய்யப்படுகிறது. அப்படி விதை உற்பத்தி செய்பவர்களை ஊக்குவிக்க ஒரு கிலோ விதைக்கு ஒரு ரூபாய் வீதம் இன்றைய தினம் ப்ரிமியம் கொடுக்கப்படுகிறது. ஆனால் உற்பத்தியாளர்கள் தாங்கள் உற்பத்தி செய்த விதைகளை தங்களுடைய சொந்தச் செலவிலேயே விதை பதனிடு நிலையத்திற்குக் கொண்டு செல்லும் சூழ்நிலை உள்ளது. இதனால் ஆர்வம் இருந்தாலும் சிறு விவசாயிகள் விதை உற்பத்திக்கு முன்வருவதில்லை. உற்பத்தி செய்த விதையை அருகிலே உள்ள வேளாண் விரிவாக்க மையத்திற்குக் கொடுத்தால் போதும் என்றும் அங்கே இருந்து அரசு செலவில் அதனைப் பதனிடு நிலையத்திற்கு எடுத்துச் செல்லலாம் என்றும் இருந்தால் நன்றாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். வயல் மட்ட அளவில் விதைச் சான்று துறையினால் ஒப்புதல் அளிக்கப்பட்டாலும் பதனிடு நிலையத்தில் பதனிடப்பட்டபின் அதில் ஏதாவது முனைப்பு குறைந்தாலும், வேறு விதைக் கலப்பு இருந்தாலும் அந்த விதை உற்பத்தி செய்த விவசாயிகளுக்கே திருப்பிக் கொடுக்கப்படுகிறது. பதனிடு கூலியாக கிலோ ஒன்றுக்கு 3 பைசா வசூலிக்கப்படுகிறது. பதனிடு நிலையத்திற்கு மீண்டும் எடுத்துச் செல்லும் செலவையும் அவர்களே ஏற்க வேண்டி உள்ளது. அதனால் விவசாயிகளுக்கு ஏகப்பட்ட தொந்தரவு வருகிறது. ஏதோ எதிர்பாராத காரணத்தால் அல்லது தவிர்க்க முடியாத காரணத்தால் தரம் இழந்து விட்ட விதைக்கு உற்பத்தியாளரைத் தண்டிப்பது சரியல்ல. அவர்களுடைய நெல்லை அவர்களுக்கு வேளாண் வளர்ச்சி மையத்திலே திருப்பிக் கொடுத்துவிடவேண்டும். அவர்களிடத்திலே சுத்திகரிப்பு கூலி வசூலிக்கக் கூடாது என்று நான் நம்முடைய அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன். விதைகள் குறிப்பிட்ட அளவுக்கு பைகளில் மட்டுமே விற்பனை செய்யப்படும் என்பது நல்ல திட்டம் தான். ஆனால் அதற்காக பையின் விலையை விவசாயிகளிடம் வசூலித்தால் குறைந்த அளவு வாங்கும் விவசாயிகள் அதிக அளவில் விலை கொடுக்க வேண்டி இருக்கிறது.

11–30 மணி

ஆகவே பை விலையை அரசே ஏற்றுக்கொண்டு, விதைகளை மட்டும் விவசாயிகளிடம் வசூலிக்கவேண்டும். மிக அதிக விளைச்சல் பெற, குப்பை, தழை, எரு ஆகியவை மிகவும் அவசியம் என்பது ஆராய்ச்சிகளின்முடிவு. ஆனால், பசுந்தாள் உர விதைகள் விநியோகிக்கப்படுவதில்லை. அதற்காக, அந்த விதைகளை சலுகை விலையில் விநியோகிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஏனென்றால், வள்ளுவர் கூட,

''ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு'' என்றார்.

எரு விடுதலில் கூட, 2 ஆண்டுகளாக முன் ஊட்டச்சத்து உரங்கள் மானியத்தில் வழங்கப்பட்டு வருகிறது. அதைத் தொடர்ந்து

வழங்கவேண்டும். எருவிற்குப் பின், கட்டல்—அதாவது. களையெடுத்தல். கடந்த 2 ஆண்டுகளாக களைக்கொல்லிகள் பாதி விலையில் கொடுக்கப்பட்டு வருகிறது. தற்போது, அதிகரித்து வரும் விளைச்சலுக்கு, களைக் கொல்லிகள் பயன் படுத்துவது முக்கியமான காரணமாகும். அதைத் தொடர்ந்து பாதி விலையிலேயே நம்முடைய அரசு கொடுக்கவேண்டு மென்று நான் கேட்டுக் கொள்கிறேன். இந்த ஆண்டு ஒதுக்கி இருக்கிற தொகையைக்கூட, இன்னும் சற்று அதிகம் ஒதுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல், விவசாயிகளுக்கு பூச்சி மருந்துகள் கொடுக் கின்ற நேரத்தில், அந்த பூச்சி மருந்துகளினுடைய தரத்தைப் பார்த்து, நம்முடைய தமிழ் நாட்டிலே உற்பத்தி செய்கின்ற நம்முடைய மாநிலத்தைச் சேர்ந்த சிறு தொழில் வியாபாரி களுக்கு முன்னுரிமை கொடுத்து, அவர்களிடமிருந்து பூச்சி மருந்துகளை வாங்கி நம்முடைய விவசாயிகளுக்கு வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதனால். விவசாயியும் பயனடையலாம். அதேபோல், தமிழகத்திலே இருக் கின்ற சிறு தொழிலும் இன்றைக்கு விரிவாக்கப்படும் என்ற நோக்கத்தில் தான், இதை நான் சொல்லிக்கொள்கிறேன்.

தற்போது, விவசாயிகளுக்கு பூச்சி மருந்துகள் தேவையில் சுமார் 20 சதவிகிதம் மட்டுமே அரசால் விநியோகிக்கப்படுகிறது. மற்ற 80 சதவிகிதம் வெளி வியாபாரிகளால் விற்பனை செய்யப் படுகிறது. அப்படி விற்பனை செய்யப்படும் மருந்துகளில் விலை பற்றி கட்டுப்பாடு இல்லாததால், விவசாயிகள் ஏமாற்றப்படு கிறார்கள். ஆகவே, அரசு 40 சதவிகித அளவுக்கு விநியோகிக் கும்படி நான் கேட்டுக் கொள்கிறேன்.

100 விளக்க மையங்கள் ஏற்படுத்தப் போவதாக நிதி நிலை அறிக்கையிலே கூறப்பட்டது. (மணியடிக்கப்பெற்றது.) ஆகவே, விநியோகத்தை 40 சதவிகிதத்திற்கு அதிகரிப்பதால், சிரமம் ஏதும் இருக்க முடியாது. பூச்சி நோய் மருந்துகள் தொடர்ந்து பாதி விலையிலே விவசாயிகளுக்கு கொடுக்கவேண்டும். அதே போல், தற்போது வட்டார மையங்களிலே உள்ள விளக்க மையத்தில், மட்டுமே ஒரு வேளாண்மை அலுவலர் உள்ளார். மற்ற துணை நிலையங்களில் இல்லை. அத் துணை நிலை யங்களுக்கு வரும் விவசாயிகளுக்கு தொழில் நுட்பம் சொல்லிக் கொடுக்க யாரும் இல்லை. தொழில் நுட்பம் தெரியாத விற் பனை எழுத்தர் மட்டுமே உள்ளார். ஆகையால், உடனடியாக இல்லாவிட்டாலும், அடுத்து 2 ஆண்டுகளிலாவது அனைத்து விளக்க மையங்களிலும் ஒரு வேளாண்மை அலுவலரை நியமிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். வேளாண்மை விளக்க மையங்களில் தொழில் பயிற்சியே இல்லாத எழுத்தர்,

விற்பனையாளராக நியமிக்கப்படுவதற்கு பதிலாக உதவி வேளாண்மை அலுவலரை நியமிக்கலாம். அதே போல், பணப் பயிராக இருக்கின்ற கரும்பு வளர்ச்சிக்கு தனிப் பிரிவு 1981 வரை இருந்தது. அதில், வேளாண்துறை அலுவலர்கள், புதிய ரகங்களை யும், முறைகளையும் சோதித்துப் பார்த்து, விவசாயிகளுக்கு விளக்கி வந்தனர்; சர்க்கரை ஆலைகளையும் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தனர். தற்போது தனிப் பிரிவு இல்லையாதலால், போதுமான கவனம் செலுத்தப்படுவதில்லை. சர்க்கரை ஆலை யினர் வைத்ததே சட்டம் என்ற நிலை உள்ளது. சர்க்கரை ஆலையினர் சர்க்கரை சத்து குறைந்த கரும்பை மட்டுமே, அது விலை குறைவாக இருந்தாலும் உற்சாகப் படுத்துகின்றனர். அத னால் நாடும் பாதிக்கிறது. உதாரணமாக ஒரு டன் கரும்பில் இருந்து எவ்வளவு சர்க்கரை எடுக்க முடியும் என்பதை விட, ஒரு ஏக்கரிலிருந்து எவ்வளவு சர்க்கரை எடுக்க முடியும் என்று பார்த்து, ஒரு ஏக்கருக்கு அதிக சர்க்கரை கிடைக்கும் ரகத்தை அரசு சாகுபடிக்கு சிபாரிசு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

உதாரணமாக, முதல் ரகம் ஏக்கருக்கு 40 டன் கொடுக்கிறது. அதில் சர்க்கரை ஈட்டுமானம் 10 சதவிகிதம் என்று கொண்டால், ஒரு ஏக்கரிலிருந்து 4 டன் சர்க்கரை கிடைக் கும். இரண்டாவது ரகம் ஏக்கருக்கு 50 டன் கொடுக்கிறது. சர்க்கரை ஈட்டுமானம் 8.5 சதவிகிதம் என்றால், ஓர் ஏக்கரில் 4.25 டன் சர்க்கரை கிடைக்கும். சர்க்கரை ஆலையினர் முதல் ரகத்தைத் தான் சாகுபடி செய்ய கட்டாயப்படுத்துகிறார்கள். விவசாயிகள் ஏக்கருக்கு 10 டன் விளைச்சலை இழப்பார்கள். நாடு ஏக்கருக்கு 250 கிலோ சர்க்கரை இழக்கும். இந்த நிலை யைத் திருத்திட தனியாக 1981-க்கு முன்பு இருந்ததைப் போல கரும்பு பிரிவு ஏற்படுத்திட வேண்டுமென்று நான் அரசைக் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

நான் ஏற்கெனவே அறிவித்ததைப் போல, நம்முடைய அமைச்சர் அவர்கள் மானியக் கோரிக்கையிலே பதில் அளிக்கின்ற போது, விவசாயிகளுக்கு அளிக்கின்ற அந்த பரிசு திட்டத்தை அறிவித்து, விவசாயம் உயர்ந்தால் தான்—மாண்புமிகு எதிர்க் கட்சி உறுப்பினர் திரு. சின்னசாமி அவர்கள் சொன்னதைப் போல, எனக்குக் கூட அந்தப் பழமொழி மறந்துபோய் விடுமோ என்று கூட எண்ணம் வந்து விட்டது—''உழுபவன் கணக்குப் பார்த்தால், உழக்குக் கூட மிஞ்சாது'' என்பது இன்றைக்கு கிராமத்தில் இருக்கின்ற பழமொழி என்றாலும் கூட, அதை நம்முடைய அமைச்சர் அவர்கள் மனதிலே கொண்டு எல்லா வற்றிற்கும் முதன்மையாக இருப்பது விவசாயம் என்பதை மன திலே கொண்டு, விவசாயிகள் மகிழத்தக்க வகையில் அந்தப் பரிசு அறிவிப்பினை அறிவிக்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

1990 ஏப்ரல் 21]

11-35 மணி

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, பரிசுத் திட்டம், பட்டம் அளிப்பது பற்றி எல்லாம் இங்கே மாண்புமிகு உறுப்பினர் சொன்னார். அவர் சார்பாக மாண்புமிகு முதல்வருக்கு நான் பரிந்துரை செய்ய விரும்புகிறேன். ''நெல் மாமணி'' என்ற பட்டத்தை வழங்கலாம்.

திரு. கே. ஆர். இராமசாமி: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, விவசாய மானியக் கோரிக்கை மீது பேசுவதற்கு அனுமதித்ததற்காக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். காவிரி நீர் பிரச்சினையிலே நமது தமிழக அரசும், கர்நாடக அரசும் பேச்சு வார்த்தை நடத்தி அது முடிந்துள்ளதாக அறிகிறேன். ஆனால் இதை நடுவர் தீர்ப்புக்கு விட வேண்டுமென்று நமது முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆனால் இரண்டு அரசுகளும், தமிழக அரசும், கர்நாடக அரசும் அதை ஏற்றுக் கொண்டால் தான் அவ்வாறு செய்யலாம் என்று கூறுகிறார்களே, அதனுடைய நிலையைப் பற்றியும் இங்கே அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, நான் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்தவன். அங்கே இருக்கின்ற தேவர் திருமகன் மாவட்டமும் இராமநாதபுரம் மாவட்டம் போல கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள மாவட்டமாகும். அதுவும், கடந்த 6, 7 ஆண்டுகளாக கடுமையான வறட்சி ஏற்பட்டு, முழுமையாக விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டு விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். தஞ்சையிலே மற்றும் இடங்களிலே எல்லாம் அணைகள் கட்டுவதாகவும், தண்ணீர் விடுவதாகவும் இங்கே பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் எங்களுடைய மாவட்டத்தில் உண்மையிலேயே மக்களுக்குக் குடிப்பதற்கு கூட தண்ணீர் இல்லை. எங்களை நீங்கள் இனிமேலும் துன்பப்பட விடக் கூடாது. எங்கள் குறைகளைப் போக்குகின்ற வகையில் தனியாக எங்கள் மாவட்டத்திற்கு என்று திட்டங்களைத் தீட்டி செயல்படுத்த வேண்டும்.

எங்கள் பகுதியில் நிலத்தடி நீர் அதிகமாக இருக்கிறது. அதை வேண்டிய அளவுக்கு வெளியேக் கொண்டு வந்து பாசனத்திற்கு பயன்படுத்தக் கூடிய முறையிலே விவசாயிகளுக்காக திட்டங்களை தீட்டினால் விவசாயிகள் சீரோடும் சிறப்போடும் அதை பயன்படுத்த வாய்ப்பாக இருக்கும். ஆனால் இந்த ஆண்டு சமுதாய ஆழ் குழாய் கிணறுகளை அமைக்கின்ற திட்டத்தை தற்போது நிறுத்தி வைத்திருப்பதாக நான் அறிகிறேன். நிச்சயமாக எங்கள் மாவட்டத்தில் ஒவ்வொரு கிணற்றிலிருந்தும் 40 ஆயிரம் லிட்டர் அளவுக்கு தண்ணீர் வெளியே எடுக்கும் அளவுக்கு தண்ணீர் இருக்கிறது. இந்தத் திட்டத்தை மத்திய அரசுக்கு

[திரு. கே. ஆர். இராமசாமி] [1990 ஏப்ரல் 21

எடுத்துக் கூறி, சிபாரிசு செய்து இன்னும் எங்கள் மாவட்டத்தில் பல ஆழ் குழாய் கிணறுகளை அமைக்க இந்த அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் பகுதி முழுமையாக வானத்தை நோக்கி இருக்கிற பகுதி. கிணறுகள், கண்மாய்கள் எல்லாம் வானத்தை நோக்கித்தான் இருக்கின்றன. எப்போதோ மழை பெய்கிறது. ஆகவே, எப்போதாவது பெய்கின்ற மழை மூலம் வருகின்ற தண்ணீரையாவது சேமித்து வைக்க, சேர்த்து வைக்க கண்மாய்களை ஆழப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அது போல வரத்துக் கால்வாய்களை நன்றாக சீரமைத்துத் தர வேண்டும்.

அடுத்து, மானிய விலையில் விவசாயிகளுக்கு பூச்சிக்கொல்லி மருந்து, உரம் எல்லாம் கொடுக்கிறார்கள். உரத்தை வினியோகிப்பதிலே பல தவறுகள் நடைபெறுவதாக நான் எண்ணுகிறேன். ஒரு குறிப்பிட்ட அளவு தான் மானியம் கொடுக்கிறார்கள். அதை மாற்றி உரம் பெறும் அத்தனை பேருக்குமே, அத்தனை மூட்டைகளுக்குமே மானிய விலையில் உரம் கொடுக்க வேண்டும். ஒரு மூட்டைக்கு 10 ரூபாய் என்று மானியம் கொடுப்பதிலே அவ்வளவு பலன் இல்லை. 50 பெர்சன்ட் கொடுக்கிறோம் என்று தப்பான வழியிலே அதைப் பயன்படுத்தும் இடைத் தரகர்களுக்கு எந்த வகையிலும் அதற்கு இடம் தர கூடாது என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, டி.பி.ஏ.பி. திட்டத்தின் கீழ் சென்ற ஆண்டு உழவு செய்து கொடுத்தீர்கள். இத் திட்டம் அப்பகுதி விவசாயிகளுக்கு மிக உதவிகரமாக இருந்தது. அந்தத் திட்டத்தை இன்னும் அதிகப்படுத்தி, அதிகப் பரப்பளவிலே விஸ்தரித்து நிலத்தை உழுது கொடுப்பதற்கு இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பயிர் இன்சுரன்ஸ் திட்டம் பற்றி பத்திரிகையில் படிக்கிறேன். ஆனால் நிச்சயமாக அது எங்கே செயல்படுகிறது என்று தெரியாத நிலையிலேயே நாங்கள் இருக்கிறோம். பயிர் இன்சூரன்ஸ் திட்டம் என்ற ஒன்று இருக்கிறதா இல்லையா? இருந்தால் அது எங்கே செயல்படுத்தப்படுகிறது அல்லது ஏன் அது செயல்படவில்லை என்பதைப் பற்றி இங்கே எனது கோரிக்கையாக இதை நான் வைப்பதால், எனது இந்த கோரிக்கையை ஏற்றுக் கொண்டு அனைத்துப் பகுதி விவசாயிகளுக்கும் இத் திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த இந்த அரசு முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, முதல் கட்டமாக விவசாயிகள் நாற்று விடுகிறார்கள், பிறகு அதை நடுகிறார்கள். பிறகு கதிர் அடிக்கிறார்கள். ஆனால் இடையிலே நடைபெறுகின்ற ஒரு குறையை இங்கே சொல்ல விரும்புகிறேன். இடையிலே பயிர்களை பூச்சிகள் அரித்துவிடுகின்ற மோசமான நிலை இருப்பதால் பயிர்களே

1990 ஏப்ரல் 21] [திரு. கே. ஆர். இராமசாமி]

காணாமல் போகின்ற சூழ்நிலை இருப்பதால் அவசியம் இந்த இன்சுரன்ஸ் திட்டத்தை செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, ஆக்ரோ சர்வீசஸ் முழுமையாக செயல்படுத்தப்படவில்லை. எங்களுடைய மாவட்டத்தில் ஆக்ரோ சர்வீசஸ் இருக்கிறதா? அதனால் விவசாயிகளுக்கு என்ன பலன் கிடைக்கிறது என்பது புரியாமல் இருக்கிறோம். மண் பரிசோதனை நிலையம் சிவகங்கையில் இல்லை. மண் பரிசோதனை நிலையம் ஒன்றை சிவகங்கையில் அவசியம் நிறுவ வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

11-40 மணி

நெல் அறுவடைக் காலங்களில் களங்களை அமைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். முன்பு இருந்த அரசு களங்களை அமைத்துத் தந்தது. இப்போது அது நிறுத்தப்பட்டிருப்பதாக அறிகிறேன். விதை சுத்திகரிப்பு நிலையம் எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், கண்ணங்குடியில் அமைத்துத் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். ஏழை விவசாயிகளிடமிருந்தும் வாங்கப்படும் விதை நெல்லுக்கு 1 ரூபாய் கூடுதலாகக் கொடுக்கிறார்கள். அது அந்தப் பகுதி ஏழை விவசாய மக்களுடைய சலவுக்குப் போதுமானதாக இல்லை. அதை இரண்டு ரூபாயாக உயர்த்திக் கொடுத்தால் இன்னும் சிறப்பாக இருக்கும். தேவர் திருமகனார் மாவட்டத்தில் உழவர் பயிற்சி நிலையம் இல்லை. அதை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். வேளாண்மைப் பள்ளியும் அங்கே இல்லை. நீங்கள் அறிக்கையிலே கூறியிருக்கிறீர்கள். அதை அவசியம் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்தில் தேவர் திருமகனார் மாவட்டத்தில் 6 ஒன்றியங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இன்னும் பாக்கி 5 ஒன்றியங்கள் வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டத்திலே சேர்க்கப்பட மத்திய அரசுக்கு நம்முடைய அரசு சிபாரிசு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேர்தல் நேரத்திலே, விவசாயிகளிடம் விவசாயக் கடன்களை ரத்து செய்வதாக நம்முடைய அரசினர் கூறினர். ஆனால் இது வரை அந்தக் கடன்களை எந்த வகையில் ரத்து செய்திருக்கிறார்கள், என்ன நடக்கிறது என்பது புரியாத புதிராக இருக்கிறது. மக்களைச் சந்திக்கும் போது கடன்களை ரத்து செய்வோமென்று கூறினார்கள். ஆனால் இது வரை செய்யவில்லை. இந்த நிலை விவசாயிகளுடைய நாணயத்தைக் கெடுப்பதாக இருக்கிறது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: பேரவை மாற்றுத் தலைவரவர்களே திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் அறிக்கையிலே தெரிவித்ததற்கு இணங்க, நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் $9\frac{1}{2}$ இலட்சம் சிறு விவசாயிகளுக்கு 39 கோடி ரூபாய் கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்தார்கள். அதைப் போல மின்சாரக் கட்டணம் கட்டாமல், நிலுவையில் வைத்திருந்தவர்களுக்கு அபராதம் என்ற பெயரிலே 3 கோடி ரூபாய் இருந்தது. அதையும் அரசு தள்ளுபடி செய்தது. இப்போது 5 ஹார்ஸ் பவரிலிருந்து 10 ஹார்ஸ் பவர் வரையுள்ள பம்புசெட்டுகளுக்கு ஒரு எச்.பி.-க்கு 75 ரூபாய் மின் கட்டணம் கட்ட வேண்டுமென்று இருந்ததை மாற்றி, 25 ரூபாயைக் குறைத்து, 50 ரூபாய் என்று ஆக்கியதால், 13 கோடி ரூபாய் அளவுக்கு இந்த அரசாங்கமும் மக்களுக்கு நன்மை செய்திருக்கிறது. ஆகவே இந்த அரசைப் பொறுத்த வரைக்கும் தேர்தல் நேரத்திலே சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் தீவிரமாக இருக்கிறது. அவர் கேட்பது, மத்திய அரசு, தேசிய முன்னணி அரசு அந்தக் கொள்கையை அறிவித்தார்கள், அதுவும் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. கே. ஆர். இராமசாமி: கூட்டுறவுக் கடன்களை அறவே ரத்து செய்வதாகத் தங்களது தேர்தல் அறிக்கையிலே கூறியதாக அறிகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: மாற்றுத் தலைவரவர்களே, அறவே ரத்து செய்கிறோமென்று எப்போதும் தேர்தல் அறிக்கையிலே தி. மு. க. சொல்லவில்லை.

திரு. கே. ஆர். இராமசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, தற்போது விவசாயிகள் கடனைக் கட்டுவதா, கட்டாமல் விடுவதா என்ற நிலையில் இருக்கிறார்கள். தமிழகத்தினுடைய விவசாயப் பெருங்குடி மக்கள் நாணயம் காக்கின்றவர்கள். அவர்களிடம் வங்கி அதிகாரிகள், கடனை வாங்கிக் கொண்டு, திருப்பிக் கட்டுவதில்லை என்று குற்றம் சாட்டக் கூடிய நிலை ஏற்படுவதற்குக் காரணம் அரசினுடைய கொள்கை தான். எனவே அவர்கள் தெளிவாக, எந்தெந்த வகையிலே எவ்வளவு ரூபாய் தள்ளுபடி செய்யப் போகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறார்கள். எனவே நீங்கள் எவ்வளத் தள்ளுகிறீர்கள், உங்களுடைய உடன்பாட்டுடன் இருக்கும் மத்திய அரசு அதில் எவ்வளவு பங்கு கொள்கிறது! என்பதை விரைவாகத் தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

11-45 மணி

அடுத்தபடியாக விவசாயத் துறை மானியத்தை ஒட்டினார் போல் மீனவர்களும் விவசாயத்தில் ஈடுபட்டவர்களாக இருக்கிறார்கள். ஆனால் இராமநாதபுரம் மாவட்டம் கடல் ஓரத்தில் இருக்கிற மீனவர்களின் நிலைமை மிக மிக மோசமான நிலைமையாக இருக்கிறது. மீனவக் கிராமங்கள் இன்றைக்கு ஆயுதக் கிடங்குகளாக மாறிக் கொண்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்து இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. கி. வேணு : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையில் எனக்குப் பேச வாய்ப்புக் கொடுத்தமைக்காக நன்றி. இன்றையத்தினம் நம்முடைய முதல்வர் அவர்கள் நிதிநிலை அறிக்கையிலே வேளாண்மைத் துறைக்கு கடந்த ஆண்டு இருந்ததைவிட 20 கோடி ரூபாய் இந்த ஆண்டு ஒதுக்கி இருப்பதற்காக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன். அரிசி உற்பத்தியில் தன்னிறைவு அடைய வேண்டும் என்பதற்காக 9 மாவட்டங்களை எடுத்து பல சிறப்புத் திட்டங்களைத் தீட்டுகின்ற இந்த அரசு செங்கை—அண்ணா மாவட்டத்தை எடுத்ததற்காக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கின்றேன். விவசாயிகளுக்குச் சிறந்த இடுபொருள்கள் எல்லாம் கிடைத்திட மேலும் நூறு விரிவாக்க நிலையங்களை ஏற்படுத்துகின்ற இந்த அரசுக்கும் அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, என்னுடைய தொகுதியிலே கவரப்பேட்டை, ஊத்துக்கோட்டை போன்ற இடங்களிலே அந்த விரிவாக்க நிலையங்கள் அமைக்கப்படவேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன். இப்போதே இந்த அரசாங்கம் விவசாயிகளுக்காக குரல் கொடுக்கக்கூடிய அரசாங்கம் என்பதை மனதிலே வைத்திருந்த முதலமைச்சர் அவர்கள் விவசாயிகளிடம் நெல் கொள்முதல் செய்கிறபோது குவிண்டாலுக்கு 180 ரூபாய் என்று இருந்ததை இன்றையதினம் 205 ரூபாயாகவும், உற்பத்தி ஊக்கத் தொகையாக குவிண்டாலுக்கு 35 ரூபாய் கொடுத்ததற்காகவும், கரும்பு விவசாயிகளுக்கு டன்னுக்கு ரூபாய் 30 கூடுதலாக அளித்து இருப்பதற்கும் நான் மனமாரப் பாராட்டி வரவேற்கின்றேன்.

கடனை எல்லாம் தீர்த்து விடுவோம், கடனை எல்லாம் ரத்து செய்வோம் என்று சொல்லியவர்கள் எல்லாம் அவர்கள் அறிவிப்புகள் அறிவிப்புகளாக இருந்ததேயொழிய, தி. மு. க. அரசு டாக்டர் கலைஞர் அவர்களுடைய தலைமையில் பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னாலே தான் அவர்கள் அறிவித்ததாக இருந்த சுமார் 67 கோடி ரூபாயையும் தி. மு. க. அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பின்னாலே சிறு விவசாயிகளின் கடன் 39 கோடி ரூபாயும் சேர்த்து ஆக 106 கோடி ரூபாய் நிவாரணமாக வழங்கி உள்ளதற்காக நான் நெஞ்சார வரவேற்கக் கடமைப் பட்டுள்ளேன்.

[திரு. கி. வேணு] [1990 ஏப்ரல் 21

அதுமட்டுமின்றி இன்றையதினம் 5 குதிரைத் திறன் உள்ள பம்புசெட்டுக்கு மின் கட்டணத்தை 75 ரூபாயிலிருந்து 50 ரூபாயகக் குறைத்ததிலே 10 ஆயிரம் கோடி அரசுக்கு இழப்பு ஏற்படாது என்றாலும் இன்றையதினம் 10 குதிரை திறன் கொண்ட பம்பு செட் ஓட்டுவதற்கு 50 ரூபாயாகக் குறைத்ததிலே 3 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டாலும்கூட விவசாயிகளுக்காக இப்படிச் சலுகைகளைச் செய்து இருக்கக்கூடிய இந்த அரசை நெஞ்சார உளமாரப் பாராட்டுகின்றேன்.

சிறப்பு உணவுத் திட்டத்தில் இடுபொருள்களை குறிப்பாக பூச்சிமருந்துகள் எல்லாத் தரப்பினருக்கும்—சிறு சிறு விவசாயிகள் என்ற பாரபட்சம் இல்லாத முறையில்—எலலாப் பருவத்துக்கும் தொடர்ந்து வருடம் முழுவதும் கிடைக்க இந்த அரசு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

இன்றையதினம் விவசாயத்தைப் பற்றிப் பேசுகின்ற நேரத்தில் பாசனம் இன்றியமையாததாக ஆக்கப்படுகிறது, அதே நேரத்தில் மின்சாரமும் தேவைப்படுகிறது. இன்றையதினம் தமிழ்நாட்டிலே ஏரிப் பகுதிகள் நிறைய இருக்கின்ற காரணத்தால் செங்கை மாவட்டத்திலே மழை நீரை நம்பியே சில ஏரிகள் இருக்கின்ற காரணத்தால் அப்படிப்பட்ட ஏரிகளுக்கு எல்லாம் தூர் வாருகின்ற பணிகளைச் செய்தால் விவசாயத்துக்கு அது ஏதுவாக இருக்கும். அதே நேரத்தில் அதை ஆக்கிரமித்து உள்ளவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

செங்கை—அண்ணா மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சர் அவர்களுக்கு மிக நன்றாகவே தெரியும். எங்கள் மாவட்டத்தில் உள்ள தண்ணீரை சென்னைக்கு குடிநீராகக் கொண்டு வருகிறார்கள். அதன் காரணமாக சென்னையை ஒட்டி உள்ள பகுதிகளில் நாளுக்கு நாள் நிலத்தடி நீர் குறைகின்ற காரணத்தால் நிறைய ஏக்கர் பரப்புகள் உப்பு நீராக ஆகி வருவதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள். அப்படிப்பட்ட பகுதிகளில்—அது கும்மிடிப்பூண்டிப் பகுதியாக இருந்தாலும், பொன்னேரி, மீஞ்சூர் பகுதிகளாக இருந்தாலும்—விவசாயத்துக்கு ஒரு விரிவான திட்டத்தை அளிக்க வேண்டுமென நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.

11-50 மணி

விவசாயிகளினுடைய கோரிக்கைகளையெல்லாம் ஏற்று, தமிழகத்தின் தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் இன்றையதினம் கும்மிடிப்பூண்டி வட்டத்திலே ஒரு சர்க்கரை ஆலை ஏற்படுத்துவதற்கு கருத்துருமைய அரசுக்குச் சென்று இருக்கிறது

என்று சொன்னார். அதற்காக என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தொகுதி மக்களின் சார்பாகத் தெரிவித்துக்கொண்டு, அதை நம்முடைய மாண்புமிகு விவசாயத் துறை அமைச்சரவர்களும், நம்முடைய முதலமைச்சரவர்களும் வெகு விரைவிலே மைய அரசோடு கலந்து பேசி, விரைவாகக் கும்மிடிப்பூண்டி வட்டத்திலே சர்க்கரை ஆலையைத் திறப்பதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பல்வேறு திட்டங்களை அறிவித்திருக்கின்றோம். ஆனால் இன்றையதினம் விவசாயிகள் நினைக்கின்றார்கள், கேட்கிறார்கள், நீங்கள் அறிவித்தீர்கள், பல நல்ல திட்டங்களையெல்லாம் அறிவித்து இருக்கிறீர்கள். ஆனாலும் எங்களுக்கு ஒரு குறைபாடு இருக்கிறது என்று சொல்கிறார்கள். அது என்னவென்று நான் அவர்களிடத்திலே கேட்கின்ற நேரத்திலே, முழுமையாக B.P.S.C. என்று வழங்கக்கூடிய அபராத வட்டியை ஏறக் குறைய தமிழ்நாடு முழுவதும் நாற்பது கோடி ரூபாய்தான் இருக்கும். எத்தனையோ கோடிக் கணக்கிலே உங்களுடைய முதலமைச்சரவர்கள் பல நல்ல திட்டங்களையெல்லாம், பல நல்வாழ்வுத் திட்டங்களையெல்லாம் தீட்டுகின்றார்களே, அந்த நாற்பது கோடி ரூபாயை ஏழை விவசாயிகளுக்காகத் தள்ளக் கூடாதா என்று கேட்கின்றார்கள். ஆகவே, அப்படிப்பட்ட ஏழை விவசாயிகளினுடைய பிரச்சினையை மனத்திலே தேக்கி, அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்ற B.P.S.C. சுமார் நாற்பது கோடி ரூபாயைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழகத்திலே சுமார் 1,500 விவசாயப் பட்டதாரிகள் படித்து வேலையில்லாமல் இருப்பதாக நம்முடைய மாண்புமிகு அமைச்சரவர்களே சொல்லுகின்ற நேரத்திலே சொல்லியிருக்கின்றார்கள். ஆனால், இன்றையதினம் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அன்பில் பொய்யாமொழி அவர்கள் குறிப்பிட்டதைப்போல, ஒவ்வொரு விரிவாக்க அலுவலர்தான் இருக்கின்றார்கள். ஆகவே, ஒவ்வொரு ஒன்றியத்துக்கும் ஐந்து விவசாய அதிகாரிகளை நியமிப்போமேயானால், அதே நேரத்திலே, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கி, அவர்களுக்கு நிசசயமாக வேலை வாய்ப்புகளை உருவாக்க முடியும் என்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

பட்டதாரி விவசாய அதிகாரிகள், பிற தொழில் நுட்பப் பட்டதாரிகள், அலுவலர்கள், உதவிப் பொறியாளர்கள், கால்நடை மருத்துவர்களைப் போல ஏற்கெனவே சம்பளம் சரியாகப் பெற்றுக் கொண்டிருந்தார்கள். ஆனால் இன்றையதினம் அது குறைக்கப்பட்டிருக்கின்றது. வருகின்ற காலங்களிலே அவர்களுக்குச் சரியான சம்பளத்தை, வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எங்களுடைய தொகுதியிலே, நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபொழுது அன்னப்ப நாயக்கன் குப்பம் என்கின்ற ஒரு அணைக்கட்டைத் திறந்து வைத்தார்கள். அதைத் திறந்து வைத்துப் பேசுகின்ற நேரத்திலே சொன்னார்கள், இது முடத்தேன் என்று சொன்னார்கள். என்னுடைய தொகுதியிலே கும்மிடிப்பூண்டி தொகுதியிலே கட்டப்பட்டாலும், அது பலன் அளிக்கக்கூடிய இடமெல்லாம் பொன்னேரி தொகுதியாக இருக்கிறது. ஆகவே, அதை முடத்தேன் என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட அணைக்கட்டுத் திட்டத்தினால், இன்றைய தினம் சுமார் 15,000 ஏக்கர் நிலம் இருபோக சாகுபடியாக ஆக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் எந்த ஊரிலே ஆரம்பிக்கப்படுகிறதோ, அந்த ஊருக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை. அதேபோன்று அந்த அணைக்கட்டைப் பயன்படுத்தி, மேல்முருகம்பேடாக இருந்தாலும், கும்மிடிப்பூண்டி போன்ற ஏரிகளுக்கு நிச்சயமாகத் தண்ணீர் விடுவதற்கு—அது பொதுப் பணித்துறையாக இருந்தாலும்,—விவசாயத்திற்குத் தேவைப்படுவது என்கின்ற காரணத்தினால் செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகம் குறித்த ஆய்வுரை ஒன்று வழங்கப்பட்டிருக்கிறது. இதைக் குறித்து ஒரு சில விவரங்களை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். விவசாயிகளுக்கு நியாயமான விலையில் உரங்கள், பூச்சி மருந்து, உதிரி பாகங்கள், டயர், டியூப்புகள் முதலியவற்றை வழங்கும் முகவராக இக்கழகம் செயல்படுகிறது. இது வரும் ஆண்டில் செயல்பட இருக்கின்ற திட்டங்களைக் குறித்து இங்கே கொள்கைக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. நான் அறிந்த வகையில் இந்தக் கழகம் 31—3—1985 வரை செயல்பட்ட விதத்தில் அடிப்படையைப் பார்த்தால் அது ஒட்டுமொத்தமாக இழப்பு 1.6 கோடி ஆகும். இந்தக் கழகம் மேலே சொன்ன பொருட்களை விற்பனை செய்யும் நிலையம் ஆகவும், உற்பத்தி செய்யும் நிலையமாகவும் செயல்பட்டு வந்திருப்பதாலும், விற்பனை மூலமாக அது ஈட்டிய பொருளையெல்லாம், உற்பத்திப் பிரிவின் மூலமாக இழந்திருப்பது தெரிகிறது. 1976 இலே துவங்கப்பட்டு, 1985 ஆம் ஆண்டு வரை நைலான் மீன் பிடி வலை தயாரிக்கும் தொழிற்சாலை சரியாகச் செயல்படவில்லை என்றும், அதற்குப் பின்னர் 1986-ல் தமிழ்நாடு மீன் வள மேம்பாட்டுக் கழகத்தின் சார்பில் தொடங்கப்பட்ட மற்றொரு மீன்பிடி வலை தொழிற்சாலை காரணமாக இதன் எதிர்காலமே மிகவும் இருண்டதாகத் தெரிகிறது என்றும் சொல்லப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு இந்தத் தொழிற்சாலையில் 45 மெட்ரிக் டன் மீன் பிடி வலைகளை உற்பத்தி செய்ய இருக்கிறது என்று மட்டுமே கொள்கைக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. நான் தெரிந்து கொள்ள விரும்புவதெல்லாம், 42 இலட்சம் ரூபாய் செலவிலே 1976 இல் தொடங்கப்பட்ட இந்தத் தொழிற்சாலை இதுவரை இலாபம் ஏதேனும் ஈட்டி இருக்கிறதா? எந்த ஆண்டிலாவது அது உண்மையான திறனை

1990 ஏப்ரல் 21] [திரு. கி. வேணு]

11-55 மணி.

அடைந்திருக்கிறதா ? (மணியடிக்கப்பெற்றது) ஒரே நிமிடத்தில் முடித்துவிடுகிறேன். ஏனென்றால் வாய்ப்பு கிடைப்பதே கொஞ்சம். இதுவரையில் அதிகபட்சம் எவ்வளவு டன் உற்பத்தி செய்திருக்கிறது? விற்பனை செய்திருக்கிறது ? 1986-ல் அரசு செயலாளர் மட்டத்தில் கூட்டப்பட்ட குழு மேலும் அரசு துறையில் அதாவது மீன்வள மேம்பாட்டுத் துறையில் மற்றுமொரு இத்தகைய தொழிற்சாலை துவங்குவது நல்லதல்ல என்று சொன்ன பரிந்துரை மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, இரண்டு தொழிற்சாலைகளும் ஒன்றாக இணைக்கப்பட்டு உள்ளனவா என்பதைப் போன்ற விவரங்கள் இங்கே குறிப்பில் சொல்லப் படவில்லை. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையில் நிச்சயமாக இதைத் தெரிவிப்பார்கள் என்று எண்ணுகிறேன்.

டிராக்டர், பவர் டில்லர் உற்பத்தியையும், விற்பனையையும் இந்தக் கழகம் மேற்கொண்டு உள்ளதாகச் சொல்லப்படுகிறது. இதிலே குறிப்பாக 130 டிராக்டர்கள், 280 பவர் டில்லர்கள், 375 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள உதிரி பாகங்கள் மற்றும் கருவிகளை விற்பனை செய்யவும் இந்த ஆண்டு திட்டமிடப்பட்டு இருப்பதாகச் சொல்கிறீர்கள். இதிலே வேடிக்கை என்னவென்றால், எச்.எம்.டி. குஜராத் டிராக்டர் கார்ப்பரேஷன், எஸ்கார்ட், போர்டு ஆகிய மிகப் பெரிய கம்பெனிகளின் இயந்திரங்களை வாங்கி விற்கும் தொழிலைதான் இந்த நிறுவனம் மேற்கொண்டது. அதாவது அவர்களுடைய ஏஜண்ட் போல செயல்பட்டது. இந்தப் பணியையே இந்த நிறுவனம் சரியாக நிறைவேற்றாத காரணத்தால், இதைப்பற்றி ஆய்வு செய்த பொது நிறுவனங்கள் குழு 1984-ஆம் ஆண்டு வாக்கில் ஒரு பரிந்துரையைச் செய்திருக்கிறது. அதாவது இனிவரும் ஆண்டுகளில் தேவைகளைக் கருத்திற்கொண்டு நவீன வேளாண்மை கருவிகளை தமிழ்நாடு வேளாண்மை துறை கழகத்தின் ஆலோசனை அடிப்படையில் தயாரிக்கவேண்டுமென்று சொல்லியும், இந்த நிறுவனம் 1987 ஆம் ஆண்டு வரையில் லாபம் ஈட்டவில்லை. 1987-ன் கணக்கு பிரகாரம் 34 இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள உதிரி பாகங்கள் விற்பனை செய்ய முடியாமல் இருந்தது என்றும், ஏறக்குறைய 11 இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட பாகங்கள் வாங்கி வைத்ததற்கு பிறகு 3 ஆண்டுகளுக்கு மேலும் விற்பனை செய்யாமல் இருந்ததன் காரணமாக ஆண்டுதோறும் லட்சக்கணக்கில் வட்டித் தொகை இழப்பு ஏற்பட்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. மேலும் உதிரி பாகங்கள் இறக்குமதி செய்யப்பட்ட டிராக்டர்கள், பவர் டில்லர்களுக்கு உரியன என்றும், இனி இறக்குமதிக்கு வாய்ப்பே இல்லையென்ற நிலைமையில் உதிரி பாகங்கள் விற்பனையாகாது என்றும் அஞ்சப்படுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பிரிவின் உண்மையான நிலைபற்றி அறிவிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

*திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் தொழில் இன்றைய தினம் தமிழக மக்களுடைய அடிப்படைத் தொழிலாக அமைந்து இருக்கின்றது. 70 சதவீத மக்கள் இத்தொழிலை நம்பி வாழ்கிறார்கள். அதல்லாமல், 50 சதவீத மக்களுடைய வேலை வாய்ப்பிற்கு உத்தரவாதம் அளிக்கின்ற வகையில் அது அமைந்து இருக்கிறது. அத்தகைய தொழில் இன்றைய தினம் மூலதனத் தொழிலாக மாறி, உற்பத்தி செய்கின்ற தொழிலாக இன்றையதினம் அமைந்து இருக்கிறது. இப்படிப்பட்டத் தொழிலுக்கு மற்ற தொழில்களுக்கு இருக்கின்ற பாதுகாப்பை போல எந்தவிதமான பாதுகாப்பும் கிடையாது. அதனால் ஒரு புறத்தில் வறட்சி, இன்னொரு புறத்தில் வெள்ளம் என்று மாறி மாறி தாக்கி கடுமையான பொருளாதார பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகிறது. அதுபோல் இந்த பூச்சி தாக்குதல் பயிர்களை மட்டுமல்லாமல் நீண்டகால மரங்களைக் கூட கடுமையாகத் தாக்குகிறது.

இன்றைய தினம் பூச்சிகள் கடுமையாகத் தாக்கி விவசாயத்தில் கடுமையான நெருக்கடியை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றன. இவ்வாண்டு நாம் பார்ப்போமானால், புளி, மா, தென்னை மரங்கள் கூட காய்க்காமல், பூக்காமல் நின்று கொண்டிருப்பதை நாம் அறிவோம். அதைப்போல படறு வகைகள் இந்த ஆண்டு கடுமையான பாதிப்பிற்குள்ளாகி தழையாக நின்று இருக்கின்றன. இதனால் விவசாயிகளுக்கு கடுமையான உற்பத்தி பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. பூச்சி பாதிப்பு என்பது வீடுகளில் பயன்படுத்தக்கூடிய காய்கனிகளை கூட விடவில்லை. பூச்சி மருந்து அடிக்காமல் காய்களை நாம் பறிக்க முடியாத நிலை இருக்கிறது என்பதை அறிவோம். இதற்கெல்லாம் என்ன காரணம்? இந்த நோய்கள் எந்த அளவிற்கு பரவுகிறது? எப்படி வருகிறது? உரத்தின் மூலம் வருகிறதா? அல்லது விதைகள் மூலம் பரவுகிறதா, அல்லது இது நுண்ணுயிர் மூலம் வருகிறதா என்பதை வேகமாகப் போர்க்கால அடிப்படையிலே இதை ஆய்வு செய்யவேண்டியதாக இருக்கிறது. அப்படி ஆய்வு செய்து, அதற்குத் தீர்வு காணவில்லை என்றால் கடுமையான உணவு நெருக்கடி என்பதும்—தொடர்ந்து பாதித்து வருகிறது—விவசாயிகளை மேலும் பாதிக்கக்கூடிய பல நெருக்கடிகள் அதிகமாக வளர்ந்துகொண்டிருக்கிறது. வேளாண்மைத் தொழிலை நம்பி வாழ்கின்ற மக்கள் இன்றைய தினம் வேளாண்மைத் தொழிலிலே ஒரு நம்பிக்கையை இழந்து நகரத்தை நோக்கி வந்துகொண்டிருக்கின்ற சூழ்நிலையை நாம் பார்க்கின்றோம். அதே நேரத்தில் நகரத்திலே மக்களுடைய நெருக்கடி நாளுக்குநாள் அதிகரித்து வருகிறது. வேளாண்மைத் தொழிலில் ஏற்பட்டு வரும் இந்த நெருக்கடி என்பது வெறும் உணவு நெருக்கடி மட்டுமல்ல. ஏற்றுமதி, இறக்குமதி நெருக்கடியைத் தோற்றுவிக்கிறது, ஆலையிலே ஆட்குறைப்பு, கதவடைப்பு என்று அதுவரையிலும் போய் நிற்கக் கூடிய அளவிற்கு வேளாண்மைத் தொழில் என்பது சென்றுகொண்டிருக்கிறது. இந்த

1990 ஏப்ரல் 21] [திரு. வி. தம்புசாமி]

நெருக்கடியைத் தவிர்க்கிற வகையில் வேளாண்மைத் துறையில் போர்க்கால அடிப்படையிலே தீட்டுகின்ற திட்டங்களை வேகமாகச் செயல்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன். இந்தப் பின்னணியிலே வேளாண்மைத் துறையினுடைய கொள்கை விளக்கக் குறிப்பை நாம் பார்க்கிற போது 13 தலைப்புகளிலே அவைகள் சொல்லப்பட்டு இருந்தாலும், உற்பத்தியிலும் தொடர்ந்து தேக்க நிலை ஏற்பட்டு வருகிறது. எப்படி ஆண்டுதோறும் உற்பத்தியிலே தேக்க நிலை ஏற்படுகிறது என்பதை கொள்கை அறிக்கையே சுட்டிக் காட்டுகிறது. இத்தகைய தேக்க நிலை ஏன் வருகிறது, எப்படி வருகிறது. வருவதற்கான அடிப்படைக் காரணம் என்ன என்ன என்பதை நீங்கள் வேகமாக ஆராய்ந்து தீர்வு காண வேண்டியதாக இருக்கிறது.

12–00 மணி

பருவ மழை அவ்வப்போது பெய்து, உத்தரவாதம் செய்யவில்லை என்றால், சாகுபடி உத்தரவாதமே இல்லாத நிலைமை என்பது ஏற்பட்டுவிடும். அதேபோல் சிறு தானிய உற்பத்தியும் மிக அளவிற்கு பின்தங்கியிருக்கிறது. இதெற்கெல்லாம் என்ன காரணம் என்பதை வேகமாக ஆய்வு செய்து, தேக்க நிலையை உடைப்பதற்கான சூழ்நிலையை உருவாக்கி அரசு வேகமாக கவனம் செலுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

உணவு அறிக்கையில் தஞ்சை மாவட்டத்தில் மட்டும் நிர்வாகத் திறமையினால், ஏறத்தாழ 8.49 இலட்சம் மெட்ரிக் டன் கொள்முதல் செய்யப்பட்டு இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இருந்தாலும் சென்ற ஆண்டு வேளாண்மைத் துறையும், பொதுப்பணித் துறையும் இணைந்து ஒன்றாகச் செயல்பட்டது என்பதை நாம் அறிவோம். இந்த இரண்டு துறைகளும் ஒன்றாகச் சேர்ந்து குடந்தையிலே விவசாயிகளைக் கூட்டி, அவர்களுடைய கருத்தை அறிந்து அந்தக் கருத்துக்கு ஏற்ப ஆறுகளில் உள்ள நெய்வேலிக் காட்டாமணியைப் போக்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. குடைமடைப் பகுதியிலேயிருந்து புல்டோசர் மூலம் வடிகாலைச் சீரமைத்தது. வாய்க்கால் தலைப்புகளைத் தூர் எடுத்தது. பாசனக் காலங்களில் பொதுப்பணித்துறை அதிகாரிகள் முழுமையாக, இரவு பகலாகச் செயல்பட்டு, நீர்ப் பாசனத் துறையை ஒழுங்குபடுத்தியது. வேளாண்மைத்துறை மூலம் தரமான தேவையான விதை வழங்கியது. 50 சதவீதம் மானியத்தில் பூச்சிக் கொல்லி மருந்து, பூஞ்சானக் கொல்லி மருந்து வழங்கியது. களைக் கொல்லி மருந்து வழங்கியது. சிறு விவசாயிகளுக்கு 80 ரூபாய்க்கு உரம் வழங்கியது. விவசாயிகளுக்கும் வேளாண் அதிகாரிகளுக்கும் ஒரு நெருக்கத்தை உருவாக்கி அவ்வப்போது தலையிட்டு விவசாயத்தில் ஏற்பட்டு இருக்கிற குறைகளைப் போக்குவதற்கு உதவி செய்தது. விவசாயிகளுக்கு சாகுபடித் தொழிலில் நுணுக்கங்களைச் சொல்லிக் கொடுத்தது. இவைகள் எல்லாம் சேர்ந்துதான் தஞ்சை

மாவட்டத்தில் 8.49 இலட்சம் மெட்ரிக் டன் கொள்முதல் செய்வதற்கு உதவி செய்தது என்று வேளாண்மைக் குறிப்பிலே குறிப்பிட்டு இருந்தால் நல்லது என்று கருதுகிறேன்.

அதேபோல் தற்போது தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில் தெளிப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கிறது. பாசன நீர் இல்லாது தெளிப்பு முறை இருக்கிற காரணத்தால், பாசன நீருக்கு உத்தரவாதம் செய்ய வேண்டும். போர்க்கால அடிப்படையிலே ஆழ்குழாய்க் கிணறுகளைத் தோண்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். நீர் இல்லாத கிணறுகளைப் பொய்த்துப் போன கிணறுகளை உடனடியாகச் சரி செய்து பாசனத்தை ஏற்படுத்துவதற்கு அரசு முன்னுக்கு வரவேண்டும்.

அதைப்போல வாய்க்கால் தலைப்புகளிலே சமுதாயக் கிணறுகளைத் தோண்ட வேண்டும். அதைச் சீரமைத்து நல்ல முறையில் நீர்ப் பாசனத்தைப் பயன்படுத்தி, விவசாயிகள் பயன் பெறுகிற வகையில் உதவி செய்ய வேண்டும்.

அதே மாதிரி, நீர் கண்டுபிடிக்கிற அந்தத் துறையை வேகமாகச் செயல்பட வைத்து, அனைத்துக் கிராமங்களிலும் நீர் கண்டு பிடிப்பதற்கான உதவிகளைச் செய்ய வேண்டும். அதே போல் தேவைக்கு ஏற்ப ஆழ்குழாய் கிணறுகளைத் தோண்டுகிற கருவிகள் இன்று வேளாண்மைப் பொறியியல் துறையில் இருக்கிற அளவு என்பது போதாது. விவசாயிகளுக்கு சிரமமாக இருக்கிறது. இதற்கு ஆர்டர் கொடுத்தால் 6 மாதம் கழித்துத்தான் கிடைக்கிறது. இந்த நிலைமையை மாற்றி அதிகமாக கருவிகளை வரவழைத்து அவர்கள் ஆழ் குழாய்க் கிணறுகளைத் தோண்டுவதற்கு உதவி செய்யவேண்டும்.

அதேபோல் திருவாரூரில் வேளாண்மைப் பொறியியல் துறையில் உள்ள பணிமனையில் சென்ற ஆண்டு 14 டிராக்டர்கள் வாங்கப்பட்டு அது சிறப்பாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு விவசாயிகள் அதைப் பயன்படுத்தி, அதிகமான அளவிற்கு உழவு செய்தார்கள். ஆனால், இந்த ஆண்டு, அந்த டிராக்டர்கள் முழுமையும் வெளி ஜில்லாவிற்குச் சென்றிருக்கிற காரணத்தால், இந்த ஆண்டு அந்தப் பணிமனையிலே உழுவதற்கு டிராக்டர்கள் கிடையாது. இருக்கின்ற டிராக்டர்களும் தரமாக உழுவதற்கு தகுதியற்ற நிலைமையில் இருக்கின்றன.

அதேபோல், தரமான விதை 20 சதவீதம் வழங்கப்படுவது என்பது போதாது. அதை 50 சதவீதமாக வழங்குவதற்கு துறையில் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதேபோல் இன்றையதினம் பல்வேறு சூழ்நிலைகளும் கடுமையான வறட்சியும் தாக்கிக் கொண்டு இருப்பதால், வறட்சியைத் தாங்கக்கூடிய விதைகளை கண்டுபிடிப்பதற்கு அரசு முன்னுக்கு வரவேண்டும். விதைப் பண்ணைகளை அதிகரிப்பதற்கு அரசு முன்னுக்கு வரவேண்டும்.

1990 ஏப்ரல் 21] [திரு. வி. தம்புசாமி]

அதேபோல் விதை மையங்களை ஒவ்வொரு பஞ்சாயத்துக்கு 5 விதை உற்பத்தி செய்யக்கூடிய தளங்களை அமைத்து வேகமாக விதைகளை உற்பத்தி செய்யவேண்டும். தரமான விதைகளை சென்ற ஆண்டைப் போல இந்த ஆண்டும் குறைந்த விலையில் வழங்குவதற்கு முன்னுக்கு வரவேண்டும். அதே மாதிரி இப்போது தெளிப்பு முறை சாகுபடி உள்ளதால் உரங்களை இன்றைய தினம் பிரித்து வழங்கவேண்டியதாக இருக்கிறது. முதலிலே சூப்பர் பாஸ்பேட் அதிகமாகத்தேவைப்படுகிறது. அதற்கு அடுத்தாற்போல பொட்டாஷ் தேவைப்படுகிறது. அதற்கு அடுத்தாற்போல யூரியா தேவைப்படுகிறது. ஆகவே, இந்த ஆண்டு தனித் தனியாக உரங்களை அதிகமாக வரவழைத்து, விவசாயிகளுக்கு வழங்குவதற்கு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

12-05 மணி

கூட்டுறவுச் சங்கங்களிலே விநியோகிக்கக்கூடிய உரத்தினுடைய விலை அதிகமாக இருக்கிறது. ஆனால் தனியார் கடைகளில் விற்கக் கூடிய உரத்தினுடைய விலை குறைவாக இருக்கிறது. இந்த வித்தியாசம் ஏன் என்று புரியவில்லை. ஆகவே, கூட்டுறவு விவசாய சங்கங்களுக்கு இதில் ஓரளவிற்கு நஷ்டம் ஏற்பட்டால் கூட, தனியார் கடைகளில் விற்கின்ற அளவிற்கு உரங்களை வழங்க அரசு முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தரமான பூச்சி மருந்துகள், தரமான பூஞ்சாணக் கொல்லி மருந்துகள் இவை முழுமையாக ஆய்வு செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு பூச்சிகளை கட்டுப்படுத்துகின்ற வகையில் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மருந்து அடிக்கின்ற கருவிகள் விவசாயிகளுக்கு மானிய விலையில் அதிகமாக விநியோகிக்க வேண்டும். இன்றைய தினம் ஒவ்வொரு நாளும் பூச்சிகளைக் கட்டுப்படுத்த வேண்டிய ஒரு அவலநிலையில் இருக்கின்ற காரணத்தால் இதைச் செய்தாக வேண்டும். மருந்து அடிக்கின்ற கருவிகள் இப்போது வேளாண்மைப் பொருட்கள் விற்கின்ற நிலையங்களில் கிடையாது. இப்பொழுதாவது அந்த வேளாண்மைக் கிடங்கின் கருவிகளை வாடகைக்கு வழங்கக் கூடிய வகையில் அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கழிவுநீர்க் குட்டை திட்டம் என்ற ஒன்று உருவாக்கப்பட்டாலும், இன்னும் அது முழுமையாக செயல்படவில்லை. கழிவுநீர் குட்டைகள் மேன்மேலும் கிராமங்களில் செயல்படுவதற்கு துரித நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேபோன்று பயிர் இன்சூரன்ஸ் திட்டம் தொடங்கப்பட்டு இருந்தாலும் அது அனைத்து கிராமங்களுக்கும் விரிவுபடுத்தப்படுவது கிடையாது.

எனவே அனைத்து கிராமங்களுக்கும் அதை விரிவுபடுத்தி, இன் சூரன்ஸ் திட்டத்தை வேகமாக செயல்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இயற்கை பாதிப்புகள் தொடர்ந்து ஏற்படுவதால் விவசாயம் பாதிக்கப்பட்டு அந்தத் தொழிலில் இருக்கின்ற விவசாயிகள் பெரு மளவில் நஷ்டத்திற்கு ஆளாகின்றார்கள். இதை ஓரளவிற்கு ஈடு செய்கின்ற வகையில் பாதிக்கப்பட்டிருக்கின்ற விவசாயத் திற்கு, அரசு நஷ்ட ஈடு வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

நெல்லிற்கு குவிண்டாலுக்கு ரூ. 250 விலை கொடுத்து வாங்கி விவசாயிகளுக்கு ஊக்கத்தை அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதன்மூலம் குறைந்தபட்ச நஷ்டம் ஏற்பட் டாலும் நாம் வெளி மாநிலங்களில் வாங்குகின்ற அரிசியைக் குறைத்து ஈடுசெய்கின்ற வகையில் அதிக விலை கொடுத்து வாங்கக் கூடிய அதை நாம் ஈடு செய்யக் கூடிய அளவிற்கு நம்மால் முடியும். அதைப் போன்று கரும்பிற்கு மத்திய அரசு ரூ. 200-ம், மாநில அரசு ரூ. 50-ம் சேர்த்து வழங்கப்பட்டிருந்தாலும், தற் போது மத்திய அரசு அறிவித்திருக்கின்ற ரூ. 20-ம் சேர்த்து வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று பருத்தியைப் பொறுத்தவரையில் நாம் எந்த அளவிற்கு சிறப்பாக சாகுபடி செய்தாலும், உயர் ரகப் பருத்திக்கு நியாயமான விலைகள் கிடைப்பதில்லை. உயர் ரகப் பருத்தியினுடைய விலை ரூ. 200, ரூ. 250 என்று வீழ்ச்சி யடைந்து விட்டது.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, மத்திய அரசு கரும்பிற்கு ரூ. 200 ஒரு டன்னிற்கு விலை என்று நிர்ணயித்திருந்தாலும், நம்முடைய மாநில அரசு ரூ. 50 ஒரு டன்னிற்கு அதிகமாக வைத்து, ரூ. 250 என்று நாம் நிர்ணயித்திருக்கிறோம். அதற்குப் பின்னாலேதான் மத்திய சர்க்கார் ரூ. 20 கூடுதலாக ஒரு டன்னிற்குக் கூட்டித் தந்திருக் கிறார்கள். இப்போதும் நாம் ஒரு டன்னிற்கு ரூ. 30-ஐ அதிக மாகத்தான் தந்து கொண்டிருக்கிறோம்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். மத்திய அரசு ரூ. 200 என்ற விலையை தீர்மானித்திருந்தபோதும்கூட, நம்முடைய மாநில அரசு அதற்கு ரூ. 50-ஐ கூடுதலாக சேர்த்து நிர்ணயித்திருக் கிறோம் என்று குறிப்பிட்டார்கள். மாநில அரசால் ரூ. 250 என்று தீர்மானிக்கப்பட்ட பிறகு, மத்திய அரசு ரூ. 20-ஐ அதிகரித்து கொடுத்திருக்கிறார்கள். அந்த ரூ. 20-ஐச் சேர்த்து

1990 ஏப்ரல் 21] [திரு. கோ. வீரையன்]

கொடுக்கக் கூடிய முறையில் ரூ. 270-ஆக அந்த வித்தியாசம் ரூ. 50 என்று இருக்கக்கூடிய அளவிலே கொடுக்க வேண்டும். ரூ. 200 இருக்கும்பொழுது ரூ. 250, ரூ. 220 என்று வந்த பிறகு, ரூ. 270 என்ற வகையில், ரூ. 50 வித்தியாசம் இருக்கக் கூடிய முறையில் அதை மாற்றிக் கொடுக்கவேண்டுமென்பதுதான் எங்களுடைய வேண்டுகோள் என்பதை உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம்: பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் கோரிக்கை வைப்பதில் ஒன்றும் தவறல்ல. ஆனால் ஒவ்வொரு ஆண்டுமே மத்திய சர்க்கார் நிர்ணயிக்கின்ற ஒரு டன்னிற்கு நிர்ணயிக்கின்ற அந்த விலையை விட நம்முடைய மாநில சர்க்கார் ரூ. 30-ஐ கூடுதலாகவே கொடுத்துக்கொண்டிருக்கிறோம். அதைத்தான் நாம் நிர்ணயித் திருக்கிறோம்.

12-10 மணி

திரு. வி. தம்புசாமி: தலைவர் அவர்களே, பருத்தியை கட்டுப்படியான விலையில் வழங்க வேண்டும். சென்ற ஆண்டு பருத்தியில் ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்வதற்காக 56 இலட்சம் சலுகை அறிவிக்கப்பட்டது. அந்தச் சலுகை ஆணை யாக பிறப்பிக்கப்படவில்லை என்று நான் அறிகிறேன். அதை உடனடியாக ஆணையாக பிறப்பித்து அத்தகைய விவசாயி களுக்கு இப்பொழுதே டோக்கன்கள் வழங்கி அதை உத்திர வாதப்படுத்த வேண்டும். அதைப்போல் வாழை ஆராய்ச்சிப் பண்ணைகள் இருக்கின்றன. அந்த ஆராய்ச்சிப் பண்ணைகள், விவசாயிகளுக்கு உதவி செய்யும் வகையிலே செயல்படுவதற்கு முன்வர வேண்டும். தென்னை ஆராய்ச்சி நிலையங்கள் பல இடங்களிலே துவங்கப்பட்டு இருப்பது வரவேற்கத்தக்கது. அத்தகைய தென்னை ஆராய்ச்சி நிலையங்களை அரசு அங்கீ கரித்து அதற்கான சலுகைகள் முழுவதையும் வழங்க வேண்டும். அதே போல விவசாயக் கருவிகள் நாம் வழங்கியிருந்தாலும் அதைப் பழுதுபார்ப்பதற்கு நகரங்களுக்குச் செல்ல வேண்டி யிருக்கிறது. எனவே ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஒரு பழுது பார்ப்பு நிலையம் ஏற்படுத்துவதற்கு அரசு முன்வர வேண்டும்.

அதுபோல வேளாண்மைத் துறையிலே பணிபுரிகின்ற பட்ட தாரிகள், இப்பொழுது நேரடியாக வருகிறார்கள். முன்னாலே 25 வருடங்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குச் சம்பளம் ஒரே அளவாக இருந்தாலும் அதை அரசு பரிசீலித்து அந்த சர்வீஸ் அடிப்படையிலே சம்பளம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். விதை தயாரிக்கின்ற களப் பணியாளர்களுடைய சம்பளம் மிகவும் குறைவாக

இருக்கிறது. அதை அவர்களுக்கு உத்தரவாதம் செய்கின்ற அடிப்படையில் அவர்களுடைய கோரிக்கைகளைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கரும்பு, நெல் இவைகளுக்கு கிடைக்கின்ற மானியத் தொகையைப் பயன்படுத்தி—கிராமங்களிலே இன்றையதினம் ரோடு வசதி இல்லாத நிலை இருக்கிறது. அதனால் உற்பத்திப் பொருள்களை எடுத்து வருவதிலே நிறைய சங்கடங்கள் இருக்கின்றன. அதையெல்லாம் போக்குகின்ற வகையில் இந்த மானியங்களைப் பயன்படுத்தி — கிராமப்புறங்களில் ரோடு வசதியை விரைவாக ஏற்படுத்த வேண்டும். அதேபோல நெல் அறுவடைக் காலங்களில் கள வசதி இல்லாத காரணத்தால் தார் ரோடுகளிலே களம் வைத்து அடிக்கின்ற காட்சிகளை நாம் பார்க்கின்றோம். இதனால் பல்வேறு சிரமங்கள் ஏற்படுகின்றன. அனைத்து கிராமங்களிலும் விவசாயிகளுக்கு களம் கட்டிக் கொடுத்து நெல் சேதத்தைத் தடுப்பதற்கு அரசு முன்வர வேண்டும். விவசாயிகள் நெல் அடிப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய தார்ப் பாய்களை மானிய விலையிலே அதிகமாக வழங்கி நெல் சேதத்தைத் தடுப்பதற்கு முன்வர வேண்டும்.

எனது தொகுதியைப் பொருத்தவரையில், மையமாக இருக்கக்கூடியது திருவா நகரம் ஆகும். அந்த நகரத்திலே ஒரு விதை ஆராய்ச்சி நிலையத்தை ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மண் பரிசோதனை நிலையம் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருக்கிறது. இந்த மண் பரிசோதனைக்கு ஆடுதுறைக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. அந்த நிலைமையை மாற்றுவதற்கு திருவாரூரை மையமாகக் கொண்ட ஒரு மண் பரிசோதனை நிலையம் ஏற்படுத்துவதோடு கிராமங்களுக்கு நடமாடுகின்ற மண் பரிசோதனை நிலையங்கள் எல்லா இடங்களுக்கும் சென்றுவரக்கூடிய அளவிற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியில் நில வாயு கிடைக்கிறது. அந்த நில வாயுவைப் பயனபடுத்தி தொழிற்சாலைகள் அமைப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அந்தப் பகுதிகள் முழுவதும் வைக்கோல் கிடைக்கிறது. வைக்கோலைப பயன்படுத்தி அட்டை தொழிற்சாலை துவக்கலாம். கரும்புச் சக்கைகளைப் பயன்படுத்தி தொழிற்சாலைகளைத் துவக்கலாம். அலுமினியம் தொழிற்சாலைகள் துவக்கலாம். உரத் தொழிற்சாலைகளை அந்தப் பகுதியில் துவக்குவதற்கு அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பகுதியிலே நீண்ட காலமாக மக்களுடைய கோரிக்கைகளாக இருக்கக்கூடிய பழையவளம் பள்ளிவாராமங்கலம் சாலை பாலம் என்பது மிகவும் மிகப்பெரிய கோரிக்கை. அந்தப் பாலத்தை கட்டிக் கொடுப்பதற்கு அரசு முழு முயற்சி எடுக்க வேண்டும். அதே போல வல்லவிநாயகம்

1990 ஏப்ரல் 21] [திரு. வி. தம்புசாமி]

கோட்டகத்தையும் திருக்குவளையையும் இணைக்கின்ற ஒரு பாலம் வெள்ளை ஆற்றிலே கட்டவேண்டியிருக்கிறது. சாதாரணமாக இரண்டு கிலோ மீட்டர் வருவதற்கு 10 கிலோ மீட்டர் சுற்றி வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதைப் போக்குவதற்கு அரசு பாலம் கட்ட முயற்சி எடுக்க வேண்டும். அதைப் போல கொரடாச்சேரி ஒன்றியத்தில் அகஸ்தீஸ்வரத்தில் இருக்கக் கூடிய மக்கள் 10 கிலோ மீட்டர் சுற்றி கொரடாச்சேரி வர வேண்டியிருக்கிறது. அவர்கள் 2 கிலோ மீட்டர் தூரத்தில் கொரடாச்சேரியை அடைவதற்கு அந்த வெட்டாற்றிலே பாலம் கட்டுவதற்கு அரசு முயற்சி எடுக்க வேண்டும். பின்தங்கிய பகுதியாக இருக்கின்ற எனது தொகுதிக்கு அதிகமான பணம் ஒதுக்கீடு செய்து ரோடு வசதிகளையும், குடிநீர் வசதியையும் ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு பேசுவதற்கு அனுமதி அளித்த தலைவருக்கு நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

12-15 மணி

திரு. ஏ. எம். இரமாசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, 1990-91ஆம் ஆண்டுக்கான விவசாய மானியக் கோரிக்கை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்ற வாய்ப்பு அளித்த உங்களுக்கும், தமிழகத் தலைவர் முதல்வர் கலைஞர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனது தொகுதியில் உள்ளடங்கிய ஆத்தூர் வட்டத்தில் விவசாயத் தொழிலை நம்பி வாழும் பகுதி, தண்ணீர் பற்றாக்குறை காரணமாக அதிக அளவில் பருத்தி சாகுபடி செய்யப்படுகிறது. எனவே அரசு ஆத்தூர் வட்டத்தில் ஒரு கூட்டுறவு நூற்பாலையை நிறுவினால் அதன் மூலம் விவசாயிகளுக்கு நல்ல வருவாயையும் வேலைவாய்ப்பையும் பெற்றுத்தர முடியும். அதை மனதில்வைத்து ஒரு நூற்பாலை ஆத்தூர் பகுதிக்குக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கடுமையான வறட்சியைச் சமாளிக்கும் துணிவுடன் விவசாயப் பெருமக்கள் 500 முதல் 750 அடி வரை ஆழ்துளைக் கிணறுகள் அமைத்து தண்ணீரை வெளியே எடுக்கும், ஏர் கம்பிரஸர்களையும், மோட்டாரையும் ஒரே இடத்தில் வைத்திருந்தால், இரண்டிற்கும் தண்ணீர் இறைப்பதற்குக் கட்டணம் வசூலிக்கும் நிலைமை உள்ளது. அதனால் வறட்சியைச் சமாளிக்க முயலும் விவசாயிகள் மனம் சோர்வடைந்து வருகிறார்கள். எனவே, இதைக் கருத்திலே கொண்டு மேற்படி இரண்டு மோட்டார்களுக்கும் கட்டணம் வாங்குவதை முறையாகத் தவிர்க்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால், விவசாய மின் கட்டணத்தை முழுமையாக நீக்கி, விவசாயிகளின் நீண்ட காலக் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மேலும் விவசாயிகள் புதிய மின் கனெக்ஷன் பெறுவதற்கு அவர்கள் மின்சார வாரியத்தில் பதிவு செய்து விட்டு நீண்ட நாட்களாகியும் அவர்களுக்கு மின் இணைப்புக் கிடைப்பதில்லை. அதனால் விவசாயிகள் சிரமத்திற்கு ஆளாகிறார்கள். எனவே, அரசு விவசாயிகளுக்கு புதிய இணைப்புக்களை காலம் தாழ்த்தாமல் உடனடியாக கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்தில் கூட்டுறவு கடன்கள் தள்ளுபடி, விவசாயத்தில் சிறு விவசாயி, பெரு விவசாயி என்ற நிலையில் உள்ளது. விவசாயிகள் தகுதிக்கேற்றபடிதான் உற்பத்தியைச் செய்ய இயலும். எனவே அனைத்து விவசாயிகளுக்கும் பயன் படத்தக்க வகையில் அனைத்து விவசாயிகளுக்கும் ஒரே மாதிரியான சலுகைகளை வழங்கி ஆவன செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், கூட்டுறவு வேளாண்மை மையங்களில் மற்றும் ஊராட்சி ஒன்றிய வேளாண்மைக் கிடங்குகளின் மூலம் விவசாயிகளுக்கு கொடுக்கப்படும் பூச்சிமருந்துகள், விதைகள், உரம் முதலியவை உரிய பருவ காலத்தில் கிடைப்பதில்லை என்று நீண்ட நாட்களாகக் குறைபாடு உள்ளதாகத் தெரிகிறது. எனவே, விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் கிடைக்க வேண்டும். கிடைக்க ஆவன செய்யவேண்டும் என்று உங்களையெல்லாம் கேட்டுக்கொள்கிறேன். மேலும் வேளாண்மை விரிவாக்க மையங்கள் விவசாயிகளுக்கு வழங்கும் பூச்சி மற்றும் பூஞ்சாணிக் கொல்லி மருந்துகள் தரம் குறைந்ததாக உள்ளன என்று விவசாயிகள் குறைபட்டுக் கொள்கிறார்கள். இதனால் இதைத் தக்க சமயத்தில் வெளியிடங்களில், தனியார் கடைகளில் வாங்கும் பூச்சிமருந்துகள் தரம் உள்ளதாக இருப்பதாகக் கூறுகிறார்கள்—எனவே, அரசு விரிவாக்க மையங்களில் வழங்கும் மருந்துகளின் தரத்தை உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், விவசாயிகளுக்கு அளிக்கப்படும் மானிய விலையில் பொருட்கள், சிறு விவசாயிகள், பெரு விவசாயிகள் என்ற பாகுபாடு இல்லாமல் அனைத்து விவசாயிகளுக்கும் பரவலாகக் கிடைக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு சர்க்கரை ஆலையிலும் கரும்பு உற்பத்தியாளர்கள், சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஒதுக்கப்படும் நிதி சரியான முறையில் பயன்படுத்துவது இல்லை என்று பரவலாகக் குறை சொல்கிறார்கள். எனவே, தாங்கள் ஒரு குழுவை அமைத்து, அனைத்து சர்க்கரை ஆலைகளுக்கும் நிதி நிலையைப் பயன்படுத்திட கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

213595
சென்னை-600 009

1990 ஏப்ரல் 21] [திரு. ஏ. எம். இராமசாமி]

நாட்டில் பெய்யும் மழையின் அளவு ஆண்டொன்றிற்குக் குறைந்து கொண்டே வருகிறது. இதனால் வறட்சி அதிகரித்துக் கொண்டே போகிறது. எனவே, ஆங்காங்கு வாய்ப்புள்ள இடங்களில் கசிவு நீர்க் குட்டைகளை ஏற்படுத்தி, நவீன முறையில், வெளியே வீணாகச் செல்லும் தண்ணீரை, கசிவு நீர்க் குட்டைகள் மூலம் தேக்கி நிறுத்தினால் வறட்சியை ஓரளவு சமாளிக்க முடியும். எனவே, என்னுடைய தொகுதியில் ஆத்தூர் ஒன்றியத்தில், கல்லாநத்தம் கிராமம், காமராஜர் நகர், ஊராண்டிவலசு, தாண்டவராயபுரம், கருத்தராஜா பாளையம் போன்ற இடங்களில் கசிவு நீர்க் குட்டைகளை விரைவாக அமைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல், ஆத்தூர் தொகுதியில் உள்ள பைத்தூர் அணைக்கட்டுத் திட்டம் சுமார் 20 ஆண்டுக் காலமாகவே மக்கள் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிற ஒரு திட்டம். அத்திட்டம் சுமார் 566 ஏக்கர் பரப்பில் திட்டமிடப்பட்டு, அரசின் ஆய்வில் மேற்கொள்ளப்பட்டது. நடைமுறைப்படுத்தி, இது வரை எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. மேற்படி அணைக்கட்டுத் திட்டத்தால் சுமார் 5 ஆயிரம் ஏக்கர் முதல் நிலங்கள் பாசன வசதி பெற வாய்ப்பு உள்ளது. எனவே மேற்படி பைசூர் அணைக்கட்டுத் திட்டத்தை நடப்பு நிதி ஆண்டிலேயே சேர்த்து ஆத்தூர் வட்ட மக்கள் வாழ்வில் விளக்கு ஏற்றி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

12-20 மணி.

அதேபோல் கல்லார் ராமநாயக்கன்பாளையம் நீர்த் தேக்கத் திட்டம் கடந்த ஆண்டு கழக ஆட்சியில் திட்டமிட்டு இடையிலே வேண்டும் என்றே நிறுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுவதுடன் ஆத்தூர் நகர மக்கள் குடிநீர் பிரச்சினை தீர்க்கவும் வாய்ப்பு ஏற்படும். எனவே இந்தத் திட்டத்தை நடைமுறை செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்ட விவசாயிகளுக்கு ஜீவ நதியைப் போல் விளங்கி வருகின்ற வைஷ்ணவ நதி குறுக்கே கல்வராயன்மலையில் நீர்த்தேக்கத் திட்டம் அமைந்து வருகிறது. ஏற்கனவே அந்த நதியின் பாசன உரிமைக்காரர்கள் பெற்று வந்த ஆயக்கட்டுக்காரர்களின் நலனுக்கு குந்தகம் விளையாமல்

அவர்களுக்கு பாசன வசதிக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையில் வைஷ்ணவ நதி நீரை நம்பியுள்ள பனை ஏரி போன்ற ஏரி களுக்கு முன்னுரிமை தண்ணீர் விடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியில் கல்வராயன்மலைப் பகுதியில் வாழும் மலைவாழ் விவசாயிகள் அதிகப்படியான மலைப்பயிர்களை சாகுபடி செய்கிறார்கள். அவர்கள் உற்பத்திச் செய்யும் பழங்களுக்கு சரியான சாலை வசதி இல்லாததால் அவர்கள் கீழே கொண்டு வருவதற்கு சிரமப்படுகிறார்கள். இதனால் அவர்களுக்கு பேருந்து வசதி இல்லாததால் இடைத்தரகர்கள் தனி வணிகர்கள் விவசாயிகளிடமிருந்து குறைந்த விலைக்கு கொள்முதல் செய்யும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. அவர் களுக்கு சாலை வசதிகளை செய்து கொடுத்து அவர்களுடைய மேம்பாட்டுத் திட்டத்தை முன்னுக்குக் கொண்டு வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனவே, இதனை கருத்தில் கொண்டு எனது தொகுதியில் கல்வராயன் மலைப் பகுதியில் ஒரு பழரச தொழிற்சாலையை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தவிரவும் மேற்படி விவ சாய மக்களுக்கு மலைவாழ் மக்கள் மேம்பாடுத் திட்டத்தில் சாலை வசதிகளையும் மின்சார வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நீண்ட நாட்களாக சாலை வசதி இல்லாமல், மின்சார வசதி இல்லாமல், குடிப்பதற்கு தண்ணீர் வசதி இல்லாமல் அவர்கள் தேங்கிக் கிடக்கும் தண்ணீரை குடித்துக் கொண்டு வாழ்கிறார்கள்.

அதேபோல் ஆத்தூர் வட்டத்தில் உள்ள கல்வராயன்மலை யில் மிகப் பெரிய அளவில் ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் பழப் பண்ணை ஒன்று இருக்கிறது. தோட்டக் கலை வளர்ச்சியில் மிகவும் அக்கறைக் கொண்ட நமது அரசு அங்கே அமைந்துள்ள ரம்மியமான சூழ்நிலை, தட்ப வெட்ப நிலை, மிகப்பெரிய நிலப்பரப்பு ஆகியவற்றை கருத்தில் கொண்டு வேளாண்மை பட்டப் படிப்பு அல்லது பட்டயப் படிப்பு ஆகிய அடங்கிய கல்வி நிலையங்களை அமைக்க ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அளவுக்கு எனக்கு வாய்ப்பு அளித்த மாண்புமிகு தலைவருக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் நன்றியைச் சொல்லி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1990 ஏப்ரல் 21]

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களால் இங்கே சமர்ப்பிக்கப்பட்டு இருக்கிற இந்த மானியக் கோரிக்கை மீது சில கருத்துக்களை எங்கள் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் சொல்ல முன்வருகிறேன். வேளாண்மைத் துறை என்பது ஏற்கெனவே நம்முடைய பேரவைத் தலைவர் அவர்கள் முதலில் சொன்னதுபோல

''சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை''

தலையாய தொழில் என்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இன்றைக்கு அது தலையாய தொழில் என்பது காலான தொழில் ஆக மாறிவிட்டதோ என்று எல்லோரும் நினைக்கிறார்கள். விவசாயிகள் மட்டும் அல்ல. இந்த அவையில் கூட மற்ற துறைகளைப் பற்றி விவாதிக்கும்போது இருக்கிற ஒரு அக்கறையும் இருக்கிற ஒரு ஆர்வமும் இதிலே குறைந்து இருப்பதாகத் தான் நான் பார்க்கிறேன். ஏன் என்றால் இன்றைக்கு விவசாயத் தொழில் முக்கியமாக இருந்தாலும் கூட அந்தத் துறையிலே ஈடுபட்டு இருக்கக்கூடிய சாதாரண விவசாயிகள் திறமையாக சகல ஆட்களையும் அணுகி தங்களுடைய காரியத்தைச் சாதிக்கக்கூடிய வலுவான ஆட்களாக இல்லாததன் காரணமாக இன்றைக்கு அது நலிந்த ஒரு துறையாகவே இருக்கிறது. இன்றைக்கு நம்முடைய இந்த மானியக் கோரிக்கையில் 435 கோடி ரூபாய் ஒதுக்கி இருப்பதைப் பார்த்து என்னென்ன வகையில் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று இரவு எல்லாம் படித்துப் பார்த்தேன். அதிலே பயிர் வளர்ச்சிக்கு 364 கோடி ரூபாய் என்று இருக்கிறது. மொத்தமாக 364 கோடி ரூபாய் எதற்கு ஒதுக்கி இருக்கிறார்கள் என்று வரிசையாகப் பார்த்தால் 225 கோடி ரூபாய் மின்சார இலாகாவுக்கு கொடுப்பதற்கு என்று போட்டிருக்கிறது. என்னடா வம்பாகப் போய்விட்டது. 364 கோடியிலே 225 கோடி ரூபாய் மின்சார இலாக்காவிற்குக் கொடுக்கிறார்கள். மின்சார இலாக்காவிற்குக் கொடுப்பதை இப்போதுதான் இந்தக் கணக்கிலே சேர்த்து இருக்கிறார்கள். இதற்கு முன்னாலே சேர்க்கவில்லை. வரிசையாகப் பார்த்தால் இரண்டு ஆண்டுகளாக இப்படி ஒரு கணக்கைப்போட்டு 400 கோடி ரூபாயிலே 225 .கோடி ரூபாயை மின்சார இலாக்காவுக்குக் கொடுப்பதைப்பற்றி போட்டு 400 கோடி ரூபாய் இதற்கு ஒதுக்குவதாகச் சொல்லி இருக்கிறது. நான் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைந்தேன், நம்முடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே வேளாண்மையிலே கொஞ்சம் அக்கறை உள்ளவர்கள்; விவசாயத்தைப் பற்றி

12–25 மணி

நன்றாகத் தெரிந்தவர்கள் என்பதாலே நிறையப் பணத்தை வாங்கி இருப்பார்கள் என்று நான் மகிழ்ச்சி அடைந்து எல்லோரிடமும் சொல்லிக்கொண்டு இருந்தேன். வேளாண்மைத் துறைக்கு அதிகமான பணத்தை ஒதுக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டே இருக்கிறோம். ஆனால் ஒதுக்குவது கிடையாது. நான் தொழில் துறை மானியத்திலே பேசும் போதுகூட சொன்னேன். 25 கோடி ரூபாய் மூலதனம் உள்ள ஒரு பெரிய முதலாளிக்கு 25 இலட்சம் ரூபாயை மானியமாகக் கொடுக்கிறீர்கள். அதேமாதிரி ஆயில் என்ஜின் வாங்குவதற்கு மானியமாக தொழில் முதலாளிகளுக்கு 5 இலட்சம் ரூபாய் கொடுக்கிறோம். கொடுக்கலாம், நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை: ஆனால் இந்தத் துறையே விவசாயத்தை ஒரு தொழிலாகக் கருதவில்லை. இப்போது மத்தியிலே உதவிப் பிரதமராக இருக்கிற திரு. தேவிலால் அவர்கள் இதை ஒரு தொழிலாகக் கருதவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். என்ன வருகிறது என்று பிறகு பார்ப்போம். ஏனென்றால் இது ஒரு தொழில். எல்லாத் தொழில்களுக்கும் மூலப்பொருள்களை உற்பத்தி செய்து கொடுக்கக்கூடிய அடிப்படையான தொழிலாகும்.

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட ஒன்றைச் சொன்னார்கள். என்ன சொன்னார்கள் என்று சொன்னால், '' உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் ; வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம் '' என்றார். நான் வந்தனை செய்யச் சொல்லவில்லை. நிந்தனை செய்யாமல் அவர்களுக்கு உண்டான உதவியைச் செய்தால் போதும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதேமாதிரி,

'' உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து ''

என்று திருவள்ளுவர் சொல்லியிருக்கிறார். இன்றைக்கு இந்தத் துறை எப்படி இருக்கிறது என்பதைப்பற்றி சுருக்கமாகச் சொல்லவேண்டுமென்று சொன்னால் ஒட்டுமொத்தமாக இன்றைக்கு விவசாய உற்பத்தி பெருகி இருக்கிறது. நல்ல நிபுணர்கள், சரியான விதைகளுக்கான ஆலோசனைகளெல்லாம் சொன்னதன் மூலமாக விவசாய உற்பத்தியைப் பெருக்குவதற்கு வேண்டிய சகல விதமான ஏற்பாடுகளும் இருக்கின்றன. ஆனால் விவசாயத்தினுடைய, வேளாண்மையினுடைய விஸ்தீரணம், நிலத்தினுடைய விஸ்தீரணம் குறைந்து கொண்டே வருகிறது. போன வருடம் நெல் போட்டவன், இந்த வருடம் சவுக்கு மரத்தைப் போடுகிறான். எங்கள் பகுதியில் அழகாக பருத்தி விளைவித்துக் கொண்டிருந்தவர்கள் இன்றைக்கு பருத்திச் செடியை விளைவித்தால் விலை கிடைப்பதில்லை, நஷ்டம் ஏற்படுகிறது என்பதற்காக உபிட மரத்தைப் போடுகிறார்கள். நானேகூட 2 ஏக்கர் தோட்டத்திலே கரு

[திரு. சோ. அழகர்சாமி] [1990 ஏப்ரல் 21

வேல மரத்தைப் போட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால் கட்டுப்படியாகவில்லை. இன்றைக்கு, விவசாயம் கட்டுப் படியாகாத ஒரு தொழிலாக மாறிக்கொண்டு வருகிறது. கரும்பு போடுகிறோம் என்று சொன்னால் ஓரளவிற்கு கட்டுப் படி ஆகிறது. அதுவும் முழுமையாக கட்டுப்படியாகவில்லை. மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம் இதைப்பற்றிச் சொன்னார் கள். மற்ற மாநிலங்களிலே கரும்புக்கு 400 ரூபாய் விலை கிடைக்கிறது. இங்கே சராசரியாக 311 ரூபாய்தான் கிடைக்கிறது. அந்த 400 ரூபாய் இங்கே கிடைக்கவில்லை. ஆனால் சர்க்கரை இந்தியா பூராவும் ஒரே விலையில்தான் விற் கிறது.

பருத்தி சம்பந்தப்பட்ட வரையில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களுடைய ஊரிலேயே பருத்தியை எரிக்கப்போகிறோம் என்று சொல்லி நோட்டீஸெல்லாம் வந்திருக் கிறது. ஏன் பருத்தியை எரிக்கப் போகிறீர்கள் என்று கேட்டால், வாங்க நாதியில்லை என்கிறார்கள். ஸ்வின் பருத்தி என்பது கூடுதலான நீண்ட இழைப் பருத்தி; அந்த இழைப் பருததியை வாங்க ஆட்கள் கிடையாது. போன வருடம் 2 ஆயிரத்து சொச்சம் ரூபாய் விலை போனது. இந்த வருடம் ஆயிரம் ரூபாய் கொடுக்கிறார்கள் குவிண்டாலுக்கு. நூல் விலை கூடியிருக்கிறது. ஜவுளி விலை கூடியிருக்கிறது. எல்லா விலை யும உயர்ந்து இருக்கிறது. உர விலை உயர்ந்திருக்கிறது. பூச்சி மருந்து விலை உயர்ந்து இருக்கிறது. ஆனால் பருத்தி விலை மட்டும் 50 சதவீதம் குறைந்து இருக்கிறது. அதை வாங்க ஆட்கள் கிடையாது. எல்லோரும் சேர்ந்து அங்கேயுள்ள மார்க் கெட்டிங் சொசைட்டி முன்னாலே போய் பெரிய கலாட்டா செய்திருக்கிறார்கள். பருத்தியை வாங்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஏற்பாடு செய்கிறேன் என்று சொல்லியிருக்கிறார்கள், ஆனால் ஏற்பாடு செய்யவில்லை. எப்படி ஏற்பாடு செய்ய முடியும்? பருத்தியை ஈடாக வைத்துக்கொண்டு பணம் கொடுங்கள் என்று சொன்னால் பணம் இல்லை என்று சொல்கிறார்கள். மார்க்கெட்டிங் சொசைட்டியிலே பருத்தியை வைத்துக்கொண்டு பணத்தைக் கொடுங்கள்; திரும்ப நாங்கள் ஏதாவது விவசாயம் செய் கிறோம் அப்புறம் விலை வந்ததற்குப் பிறகு விற்றுக்கொள் கிறோம், என்று சொன்னால், பணம் இல்லை, மார்க்கெட்டிங் சொசைட்டியிலே வாங்குவதற்குப் பணம் இல்லை என்று சொல்கிறார்கள். ஒட்டுமொத்தமாக வேளாண்மையிலே உற்பத்தி கொஞ்சம் கூடியிருந்தாலும் கூட நாம் எதிர்பார்த்த அளவிற்கு கூடவில்லை அதற் கெல்லாம் காரணம் சம்பந்தப்பட்ட தொழில் நுட்ப அதிகாரி கள்தான். நல்ல நெல் விதைகளையெல்லாம் அவர்கள் கண்டு பிடித்து. இருக்கிறார்கள். புதுப்புது கண்டுபிடிப்புகள் விதை, மற்ற கண்டுபிடிப்புகள் மூலமாக கூடியிருந்தாலும்

கூட, விவசாயிகளுக்கு உற்சாகம் இல்லை. அவர்கள் வாங்கிய கடனைக் கட்ட முடியாத நிலையிலே இன்றைக்கு இருந்து கொண்டிருப்பதற்கு என்ன காரணம்? தொடர்ந்து உற்பத்தி செய்யப்பட்ட விவசாயப் பொருள்களுக்கு விலை இல்லாத காரணத்தினாலும், இயற்கை பாதிப்பின் காரணத்தினாலும், கட்டுப்படியான விலை இல்லாத காரணத்தினாலும் தான் இந்தக் கடன்கள் எல்லாம் பாக்கி இருக்கின்றன. அதனால் தான் மத்திய சர்க்காரிலே 10 ஆயிரம் ரூபாய் வரையிலுள்ள விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்யவேண்டுமென்ற நிலைக்கு வந்திருக்கிறார்கள்.

இந்த மாநிலத்தைப் பொறுத்தமட்டில் நானும் பல இடங்களில் விசாரித்துப் பார்த்தேன். எந்தக் கூட்டுறவுச் சங்கத்திலும் கடந்த ஆண்டு விவசாயிகளால் கடன் பெற முடியவில்லை. காரணம், கடன் வேண்டாம் என்பது இல்லை. கடன் கேட்கப் போனால், பழைய பாக்கி இருக்கிறது, உங்களுக்கு கடன் இல்லை என்று சொல்லி விடுகிறார்கள். சிறு சிறு விவசாயிகளுக்கு, ஐ.ஆர்.டி.பி. கடன் மாடு வாங்க, ஆடு வாங்க மட்டும் மானியக் கடன் கொடுத்து இருக்கிறார்கள். காரணம், வாங்கிய கடனைக் கட்ட முடியாத ஒரு இக்கட்டான சூழ்நிலையிலே இன்றைக்கு விவசாயிகள் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதைப் போக்குவதற்கு என்ன செய்ய வேண்டுமென்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆலோசிக்க வேண்டும். அதற்கு வேண்டிய திட்டமிடவேண்டும். அவர்களுக்கு வேண்டிய சரியான உதவிகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சில நேரங்களிலே இயற்கை பாதிப்பும் ஏற்பட்டு விடுகின்றது. இதனால் பெரிய இழப்புகள் ஏற்படுகின்றன. இதுபற்றி திட்டக் கமிஷனிலேகூட சொல்லியிருக்கிறார்கள். இந்தமாதிரி இழப்புகள், வெள்ளம், புயல் போன்றவற்றால் ஏற்படுகின்றன. தஞ்சாவூரிலே ஒரு வருடம் பெரிய வெள்ளம் வந்து, நெல் பயிரையெல்லாம் அடித்துக்கொண்டு போய்விட்டது. அப்படிப்பட்ட காலங்களிலே உதவி செய்வதற்காக, தனியாக நிதி ஒதுக்க வேண்டும். இந்த மாதிரி இழப்புகள் ஏற்படக்கூடிய காலத்தில், அதை ஈடுசெய்வதற்கு ஒரு நிதியை வருடாவருடம் பட்ஜெட்டிலே ஒதுக்குவதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

12—30 மணி

அடுத்து, இன்றைக்கு விதை மையங்கள், டி. மற்றும் வி. எல்லாம் ஒரே மாதிரியாக, ஒரு யூனியனுக்கு, தாலுக்காவுக்கு ஒரு உதவி இயக்குநர் என்று போட்டு நிர்வாகத்தில் சீர்திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. அது நல்ல ஏற்பாடு. வரவேற்கிறேன். ஏனென்றால் இது ஒரு நல்ல சீர்திருத்தம். அதேமாதிரி, வேளாண்மை சம்பந்தப்பட்ட துறைகளை எல்லாம் ஒன்றாக இணைக்க வேண்டும். இன்றைக்கு தோட்டக்கலை தனியாக

இருக்கிறது, எண்ணெய்வித்துத் துறை தனியாக இருக்கிறது, வேளாண்மை விற்பனைத் துறை தனியாக இருக்கிறது. இவைகளையெல்லாம் ஒரே துறையாகக் கொண்டு வர வேண்டும். அப்போதுதான் சரியாக இருக்கும். அதேபோல விதை வாங்க ஒரு இடம், பழச்செடி வாங்க ஒரு இடம், பூச்சி மருந்து வாங்க ஒரு இடம் என்று விவசாயிகள் அலைகிறார்கள். அவனுக்கு அலைவதற்கு நேரம் இல்லை. எப்படி அலைய முடியும்? அதனால் ஒரே இடத்தில் இவைகள் எல்லாம் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டும். அது மட்டுமல்லாமல் இவைகள் கிடைப்பதற்கு ஒரு யூனியனில் 2, 3 இடங்களில், நடந்தோ, சைக்கிளிலோ போகிற தூரத்தில் இப்படிப்பட்ட விற்பனை மையங்கள் அமையும்படி நடவடிக்கை எடுக்கவேண்டும். அதே மாதிரி இன்றைக்கு இடுபொருள் பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். காலம் கடந்த நிலையில் இடுபொருட்கள் டிப்போவுக்கு வருகின்றன.

உதாரணமாக போன வருஷத்தில் பழச் செடிகள் எப்போது வரவேண்டும்? ஜூலையில் வரவேண்டும். நவம்பரில் வந்தது. அது மட்டுமல்ல, தனியார் நர்சரியில் வாங்கியிருக்கிறார்கள். அங்கே அது 7 ரூபாய். நாம் வாங்குவது 11 ரூபாய்க்கு. 50 சதவீத மானியம் கொடுத்தால், மூன்று ரூபாய், மூன்றரை ரூபாய்க்கு கிடைக்கிறது. அப்படிக் கிடைக்கிற பூச்செடி, பழச்செடி எல்லாம் காலத்தில் வாங்காமல், காலம் தாழ்ந்து வாங்கி, 7 ரூபாய்க்கு வாங்க வேண்டியவைகளை, 11 ரூபாய் கொடுத்து வாங்குவதால், அரசாங்கத்தின் மானியம் வீணாகிறது, விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. நவம்பரில் எப்படி செடி நட முடியும்? மழையில்லாத காலத்தில் எப்படி நட முடியும்? ஆகவே காலா காலத்தில் டிப்போவுக்கு வர நடவடிக்கை எடுக்கவேண்டும். அதேபோல பூச்சி மருந்து போன வருஷம் லேட்டாக வந்தது. பல பேர் அதை வாங்க முடியவில்லை. மானிய விலையில் கொடுப்பதெல்லாம் கடைக்குப் போய் விடுகிறது. ஆகவே அதிகாரிகள் காலா காலத்தில் அதை வாங்கி ஸ்டாக் பண்ணவேண்டும். டிப்போவுக்கு வந்தாலே, அது வரவில்லை என்று சொல்கிறார்கள். இன்றைக்கு 2, 3 மாதம் கழித்து, வெள்ளாமை வைத்ததற்குப் பிறகு மானிய விலையில் வந்து இருக்கிறது, வாங்கிக்கொண்டு போங்கள் என்று சொல்கிறார்கள். இதை வாங்கி வெளியில் விற்று விடுகிறார்கள். ஆகவே அதைச் சரி பண்ணவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மானியத் திட்டத்தில் போன வருஷம் பி.எச்.சி. 10 பர்சென்ட் டிசம்பர் மாதத்தில் வந்தது. எல்லாம் முடிந்ததற்குப் பிறகு வந்தது. ஆகவே அது சரியில்லை. அதேமாதிரி, திருத்துறைப் பூண்டியில் போலி மருந்துகள் விற்கப்படுகின்றன என்று எம்.எல்.ஏ. சொல்கிறார். ஏற்கெனவே அதில் நடவடிக்கை எடுக்கவில்லை என்று விவசாயிகள் சொல்கிறார்கள். அப்படி

1990 ஏப்ரல் 21] **[திரு. சோ. அழகர்சாமி]**

போலித்தனமான மருந்துகளை அவர்களே தயார் செய்து விற்கிறார்கள். இப்படிப்பட்ட போலி மருந்துகளை வாங்கி ஏமாந்து போவதோடு, ஒட்டுமொத்த நஷ்டமும் ஏற்படுகிறது. மகசூல் நஷ்டம் ஏற்படுகிறது. அதை சரியானபடி கண்காணித்து சரியான நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : அப்படி தரம் இல்லாத மருந்து விற்றவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதுவும் இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்டவுடன் ஏற்கெனவே விவசாய டிப்போக்களில் வாங்கி வைத்திருந்த பூச்சி மருந்துகளை மீண்டும் பரிசோதித்துப் பார்த்து தரம் இல்லை என்று தெரிய வந்தால் அந்த மருந்துகளையே விவசாயிகளுக்குக் கொடுக்கக் கூடாது என்றும் உத்தரவிடப்பட்டிருக்கிறது. இப்போது புதிதாக 'தாய்' நிறுவனத்தின் மூலம் பூச்சி மருந்து வாங்கினாலும் சரி, தனியாரிடத்தில் அங்கீகரிக்கப்பட்ட கம்பெனியிடம் மருந்து வாங்கினாலும், டிப்போவுக்கு வந்தவுடன் உடனடியாக பரிசோதனை செய்து தரமுள்ளதா என்று தெரிந்த பிறகுதான் விவசாயிகளுக்கு வழங்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேமாதிரி, எங்கு தவறான மருந்துகள் விற்கப்படுகிறதோ, எக்ஸ்பயரியான மருந்துகள் விற்கப்படுகிறதோ அதைத் தடுக்க வேண்டும். காலம் கடந்த மருந்துகள் விற்பனைக்கு வருகிற காரணத்தால் அதை விவசாயிகள் வாங்கி விடுகிறார்கள். மானியம் கிடைக்கிறது என்று விவசாயிகள் வாங்கி ஏமாந்து விடுகிறார்கள். இதைச் சரி செய்ய வேண்டும்.

12–35 மணி

அடுத்ததாக வேளாண்மைப் பொறியியல் பணி கூட்டுறவு இணையம் என்று இருக்கிறது. ஒவ்வொரு வட்டாரத்திலும் வைத்திருக்கிறோம். இதில் என்ன சொல்கிறார்கள் என்றால், 220 வட்டாரங்களில் 12 மாவட்ட அளவிலான கூட்டுறவு பொறியியல் பணி மையங்கள் இருக்கின்றன. அதில் நஷ்டத்தில் இயங்கக் கூடிய 65 வட்டார அளவிலான வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களை கலைத்து ஆகிவிட்டது என்று சொல்லியிருக்கிறார்கள். அதை முழுமையாகக் கலைத்து விட்டு, பொறியியல் துறையுடன் இணைத்து விடுங்கள். இது தனியாக இருக்கவேண்டிய அவசியம் இல்லை. அங்கே அதிகாரிகள் இருக்கிறார்கள். அதிலே மெஷினரிகள் இருக்கின்றன. வாடகைக்கு விடுகிறார்கள். எல்லாம் பண்ணுகிறார்கள்.

இங்கே பூச்சிமருந்துகள் விற்பதற்கு என்று டெப்போ இருக்கிறது. அவர்களும் ஒரு டெப்போ வைத்திருக்கிறார்கள். இரண்டு டெப்போக்கள் தேவையில்லாதது. பல பேர் அங்கே மெம்பர்களாக இருந்தாலும்கூட, அங்கே வேலை செய்ய ஆட்கள் கிடையாது. இதுவரையில்

1990 ஏப்ரல் 21] [திரு. சோ. அழகர்சாமி]

அதற்கென்று யாரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை. ஆகவே, அதை பூராவும் நிறுத்திவிட்டு பொறியியல் துறையோடு அதை இணைத்துவிட வேண்டும் அப்படி இணைத்துவிட்டு ஒவ்வொரு வட்டாரத்திலும் குறைந்தபட்சம் ஒரு ஊராட்சி ஒன்றியத்தில் இந்தப் பொறியியல் துறையின் மூலமாக ஆங்காங்கு ஒரு கிளைகள் மாதிரி வைத்து ஒரு டிராக்டர் அல்லது இரண்டு டிராக்டர்கள் என்றும் அங்கே எது கேட்டாலும் வாடகைக்கு கிடைப்பது மாதிரி இருக்கவேண்டும். இப்போது பல இடங்களிலே கிடைப்பதில்லை. நஷ்டத்திலே இயங்குவது மாதிரி இருக்கிறது என்று சொன்னால், இவர்கள் சில சேவைகளைச் செய்யப் போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். விவசாயிகள் எல்.டி. பேங்கிலே ஏதாவது லோன் வாங்கி ஒரு ஆயில் என்ஜின் வாங்க வேண்டுமென்று சொன்னால், அங்கேபோய்தான் வாங்க வேண்டும். அவர்கள் எங்கே வாங்குகிறார்கள் என்று சொன்னால் நாம் எந்தக் கடையிலே கேட்டிருக்கிறோமோ அந்தக் கடையிலே யிருந்து வாங்கி 25 சதவீதம் லாபம் சேர்த்து அவர்களுக்கு விற்கிறார்கள். எதற்கு இந்த வம்பு. நான் நேராகச் சென்று வாங்கினால் 5 ஆயிரம் ரூபாய்க்கு வாங்கி விடுவேன், உங்களிடம் வாங்கும்போது 5,500 ரூபாய் வருகிறது என்று கேட்டால், எங்களிடம்தான் வாங்க வேண்டுமென்று அரசாங்கத்தினுடைய சட்டம் இருக்கிறது என்று சொல்கிறார்கள். இந்தச் சட்டத் திற்காக நான் 500 ரூபாய் இழக்க வேண்டுமா என்று கேட்டால், பதிலில்லை. ஆகவே, அது நியாயம் இல்லை. அது தேவையும் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன். சில சொசைட்டிகள் இன்றைய தினம் நஷ்டத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள்.

இன்னொன்று என்ன சொல்கிறார்கள் என்றால், அதிலே வேலை செய்பவர்களுக்கு மாதாமாதம் ஊதியம் பெற முடிய வில்லையாம். அவர்களையே விற்கச் சொல்கிறீர்கள். அவர் களையே லாபம் சம்பாதிக்க வேண்டுமென்று சொல்கிறீர்கள் ; அவர்களையே சம்பளத்தை எடுத்துக்கொள்ளச் சொல்கிறீர்கள். பல்வேறு சேவை கூட்டுறவு மையங்களில் அதிலே வேலை செய்பவர்களுக்கு வருமானம் இல்லாததால் மாதா மாதம் ஊதியம் பெற முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, இந்த டிபார்ட்மெண்டோடு, வேளாண்மைத் துறையோடு இணைத்து அவர்களையும் அரசாங்க ஊழியர்களாக ஆக்கி அவர்களுக்கு ஊதியம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, சேலத்திலே, பருத்தி பூராவும் விற்க முடியாமல் போயிருக்கிறது. எங்கள் பகுதியிலேகூட இந்த நிலைமை இருக் கிறது. இதற்கு என்ன காரணம் என்று கேட்டால், ஸ்லின் பருத்தி என்பது நல்ல தரமுள்ள பருத்தியாகும். வியாபாரிகள் எல்லாம் கூடிச் சேர்ந்து அதை வாங்க மாட்டேன் என்கிறார்கள்

மார்க்கெட்டிங் சொசைட்டிக்கு வங்கிகளிலேயிருந்து கடனைக் கொடுக்கச் சொல்லி ஈட்டுக்கு கொடுக்க வேண்டுமென்று சொல்லுங்கள். முதலிலே அந்தப் பருத்தியை வாங்கிக் கொண்டு அதற்கு ஈடாக கொஞ்சம் பணத்தை கொடுக்கச் சொல்லுங்கள். எல்லா மார்க்கெட்டிங் சொசைட்டியிலும் கொடுக்கச் சொல்லி நல்ல விலை வரும்போது அதை விற்றுக் கொடுங்கள். இப்போது விற்பனை இணையங்கள் இருக்கின்றன. மார்க்கெட்டிங் சொசைட்டிகள் இருக்கின்றன. மார்க்கெட்டிங் கமிட்டி இருக்கிறது. இந்த மார்க்கெட்டிங் கமிட்டி இருக்கிறதே, இது பூராவும் வியாபாரிகளுக்கு உதவி செய்யத்தான் இருக்கிறதே தவிர மார்க்கெட்டிங் கமிட்டி மூலமாக என்ன லாபம் இருக்கிறது என்று சொல்லுங்கள். மார்க்கெட்டிங் கமிட்டி எந்தவொரு விவசாயியிடமிருந்தும் பொருள்களை வாங்குவது கிடையாது. வியாபாரிகள் வாங்குவதற்கு இவர்கள் தரகர்களாகத்தான் இருக்கிறார்கள். அதனாலே மார்க்கெட்டிங் கமிட்டி என்பது அவ்வளவு சரியாகச் செயல்படுவதாகத் தெரியவில்லை எங்கெங்கு யார் விற்றாலும் அவர்களுக்கு கமிஷன் போய்ச் சேர்ந்து விடுகிறது. இதையெல்லாம் மார்க்கெட்டிங் சொசைட்டிக்கு மாற்றி, இந்த மார்க்கெட்டிங் சொசைட்டியின் மூலமாக விவசாயிகளுக்குச் செய்ய வேண்டிய சேவைகளையும், ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அமைப்பையும் கொண்டு வந்தால் கொஞ்சம் பிரயோசனமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக ஊதியம் சம்பந்தமாகச் சொல்ல விரும்புகிறேன். வேளாண்மைத் துறையிலே வேலை செய்யும் டிப்ளமா படித்தவர்களுக்கு, பார்மசிஸ்ட்கள் மற்ற மருத்துவத் துறையிலே இருக்கின்ற மருத்துவ உதவியாளர்கள் இருக்கிற அதே கேட்டகிரியிலே சம்பளம் முன்னாலே நான்காவது ஊதியக் கமிஷனிலே இருந்ததாம். இப்போது அவர்களைக் குறைத்து விட்டார்கள். அதே மாதிரி அக்ரிகல்சர். பி.எஸ்ஸி. (அக்ரி) படித்த பட்டதாரிகள் இருக்கிறார்கள். வெட்ரினரி டாக்டர்கள், தாசில்தார்கள், சர்க்கிள் இன்ஸ்பெக்டர்கள் அதேமாதிரி அந்தத் துறையிலே இருந்த வெட்ரினரி டாக்டர்களுக்கும், என்ஜினியர்களுக்கும் இருக்கிற ஊதியத்திலே இருந்து இப்போது குறைத்து விட்டார்கள். விவசாயத்தை எப்படி நாட்டிலே கவனிக்காமல் இருக்கிறார்களோ அந்த மாதிரி விவசாயத் துறையிலே பணியாற்றக்கூடியவர்களுக்கும் இப்படி ஒரு பாரபட்சமான ஒரு இறக்கம், ஒரு தாழ்வு ஏற்படுத்த வேண்டிய அவசியம் என்ன ? ஆகவே, எல்லோருக்கும் உண்டான ஏற்கெனவே முன்னாலே இருந்த அதே லெவலிலே அதே கேட்டகிரியிலே அவர்களை வைத்து, இழப்பு ஏற்பட்ட ஊதியத்தை அவர்களுக்கும் வழங்குவதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்யவேண்டும். இந்த மாதிரி செய்வதன் மூலமாக நாட்டிலே விவசாய உற்பத்தி பெருகும். விவசாய

1990 ஏப்ரல் 21] [திரு. சோ. அழகர்சாமி]

உற்பத்தி என்பது நாட்டிலே மிக மிக அவசியமான தேவை. ஆந்திராவிலேயிருந்து அரிசியை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். நமக்கு 55 லட்சம் டன்தான் விளைகிறது. 70 இலட்சம் டன் விளைய வைக்கலாம்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வேளாண்மை நிபுணர்கள், பட்டதாரிகள், வேளாண்மை உற்பத்தியிலே எப்படி அக்கறை எடுத்துக் கொண்டு இருக்கிறார்களோ அதேபோல அவர்களுடைய கோரிக்கையைப் பரப்புவதிலேயும் உறுப்பினர்கள் மூலம் ரொம்ப சிரமம் எடுத்து இருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது. (குறுக்கீடு) வேளாண்மை பட்டதாரிகள் வேளாண்மை உற்பத்தியில் எப்படி அக்கறை எடுத்துக் கொண்ட காரணத்தினால் உணவு உற்பத்தி அதிகமாக ஆகி இருக்கிறதோ அதைப்போல அவர்களுடைய கோரிக்கையை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் மூலம் பரப்புவதற்கு பெரு முயற்சி எடுத்து இருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுவதிலேயிருந்து தெரிய வருகிறது என்று சொன்னேன்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவர் அவர்களே, அதிகாரிகளைப் பொறுத்தமட்டில் நல்ல யோசனைகளைச் சொல்கிறார்கள். ஒரு ஏக்கரிலே ஒரு மூட்டைக்குப் பதிலாக 10 மூட்டைகள் விளைகின்றன. ஒரு பொதி விளைய வைத்த இடத்திலே என்னால் 10 பொதி விளைய வைக்க முடிகிறது. எங்கள் பகுதியிலே பார்த்தால் நெட்டச் சோளம் முன்னாலே ஒரு ஏக்கருக்கு ஒரு மூட்டை தான் வரும். இப்போது ஒரு ஏக்கரில் 10 மூட்டை வருகிறது. 10 மூட்டை வந்தாலும் சரி நாங்கள் அதைக் குறைந்த விலைக்கு கொடுக்க வேண்டியிருக்கிறது. அதனாலே அதற்குரிய விலை இல்லை. அவர்கள் மேலே குற்றம் இல்லை. வேளாண்மை அதிகாரிகள் அவர்களுடைய வேலையைச் செய்கிறார்கள். அரசாங்கத்தினுடைய பாலிசி மாற வேண்டும். ஆகவே, அதை ஒரு கொள்கையாக ஏற்றுக் கொண்டு, விவசாயிகளுடைய பணியை ஒரு தொழிலாக ஏற்றுக் கொண்டு வேண்டிய உதவிகளை, வேறு தொழில்களுக்குச் செய்கிற மாதிரி செய்ய வேண்டும்.

12-40 மணி.

அதேமாதிரியாக கடன் சம்பந்தப்பட்ட வரையில், மத்திய சர்க்கார் சொன்னதைப் போல, சரியான நிவாரணத்திற்குண்டான ஏற்பாடுகளைச் செய்வதும், நியாயமான விலை அவர்களுக்குக் கிடைப்பதற்கு—பெற்றுத் தருவதற்கு, வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், வேளாண்மைத் துறையிலே ஈடுபடுகிற விவசாயிகளுக்காக முயற்சி செய்து வாங்கித் தர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன். நன்றி.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவர் அண்ணன் திரு. அழகர்சாமி அவர்கள், இந்த விலையைப் பற்றி சொன்ன காரணத்தினால், அவர்களுக்கு, பின்னாலே பதில் சொல்ல முடியாமல் போய் விடுமோ என்ற காரணத்தினால், ஒரு கருத்தை இங்கே சொல்கிறேன். சென்ற ஆண்டு நல்ல விலை இருந்தது உண்மை தான். இந்த ஆண்டு உற்பத்தி அளவை நாம் பார்த்தால், சென்ற ஆண்டை விட பல மடங்கு உயர்ந்துதான் இருக்கிறது. இன்னொரு காரணம், இப்படி பருத்தி மார்க்கெட்டின் விற்பனைக் கமிட்டியிலே நான் கொண்டு வந்து நல்ல விலை கிடைக்க ஏற்பாடு செய்கிறபோது, வியாபாரிகள் ஒரு கூட்டுறவு முயற்சியில் அவர்கள் சேர்ந்து கொண்டு, விலையைக் குறைத்து வாங்க முயற்சி செய்து வருகிறார்கள். அப்படிப் பட்ட நிலை ஏற்படுகிறபோது, நாம் இப்போது செய்ய என்ன வழி வகை இருக்கிறது என்று சொன்னால், ''பருத்திக் கழகம், பம்பாய்'' (காட்டன் கார்ப்பரேஷன், பம்பாய்) அவர்களிடமும், அதேபோல், 'சிமா'—கோவையிலே, தென்னிந்திய மில் அதிபர்கள் சங்கம் இருக்கிறது ; அவர் களோடும் நாம் தொடர்புகொண்டு, அவர்களை அழைத்து, நம்முடைய விற்பனை நிலையத்திலே அவர்களை ஈடுபடச் செய்கிறோம். அதன் மூலம், ஓரளவுக்கு விவசாயிகளுக்கு உற்பத்தி செய்த பருத்திக்கு நியாயமான விலை கொடுக்கவும் ஏற்பாடு செய்கிறோம். அதுவும் போதுமான அளவுக்கு இல்லை என்பதும் அரசுக்குத் தெரியும்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பருத்தி சம்பந்தப்பட்ட வரையில் அதிகமாக விளைந்ததாகச் சொன்னார்கள். அவர் சொன்ன கணக்கிலே நமக்குத் தேவையானது 12 லட்சம் பேல். ஆனால் விளைவது 5 லட்சம் பேலுக்கும் குறைவாகத்தான். அதோடு மட்டு மல்லாமல், கடைசியாக ஒன்று, இந்த வேளாண்மை மண்வளப் பாதுகாப்புத் துறையிலே 5, 6 அல்லது 10 வருடங் கள் பணியாற்றிய பின், 'ஸ்கீம்' முடிந்து விட்டது என்று வீட்டுக்கு அனுப்புகிறார்கள். நம்முடைய துறைக்கு வந்தவர் களை வீட்டுக்கு அனுப்பக் கூடாது. ஏதாவது ஒரு வேலை கொடுத்து பணியில் அமர்த்துவதோடு, அதிகமான ஆட்களை இந்தத் துறையில் வேலைக்குச் சேர்க்கக் கூடிய முறையிலே நம்முடைய டணி அமைய வேண்டுமென்று வற்புறுத்தி அமைகிறேன். வணக்கம்.

* திரு. ஆர். பஞ்சாட்சரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் வேளாண்மைக் துறை அமைச்சர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட மானியக் கோரிக்கையை வரவேற்று, இந்த விவாதத்தில் என்னுடைய கருத் துக்கள் சிலவற்றைத் தெரிவிப் பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

1990 ஏப்ரல் 21] [திரு. ஆர். பஞ்சாட்சரம்]

உழவர்களின் உடன் பிறப்பாக விளங்கும், வரலாறு படைத்த நாயகர், வாடிய மக்களின் வாட்டத்தைப் போக்கிட வந்துதித்த உதயசூரியன், வேளாண்மை சிறந்திட, உழவர் மகிழ்ந்திட, இல்லாதவர் ஏற்றம் கண்டிட உழைத்திடும், ஈடிணையில்லாத் தலைவர், தமிழினத்தின் விடிவெள்ளி, மாண்புமிகு தமிழக முதல்வர், தமிழினத் தலைவர், டாக்டர் கலைஞர் அவர்கள், இந்த ஓராண்டு காலத்தில், கொண்டு வந்துள்ள பல்வேறு நல்ல திட்டங்களை மனதிலே கொண்டு, உழவர்களின் சார்பாக நான் என்னுடைய நன்றியை இங்கே தெரிவித்து, என்னுடைய பாராட்டுதலையும் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

வேளாண்மைக்கும், அதனைச் சார்ந்த திட்டப் பணிகளுக்காகவும், நடப்பு ஆண்டில், ரூபாய் 145.58 கோடி ஒதுக்கப்பட்ட தொகை, வரும் ஆண்டிற்கு ரூபாய் 160.29 கோடியாக ஒதுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டு, நிதிநிலை அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அரிசி உற்பத்தியில், தன்னிறைவு பெற்ற தமிழகமாக விளங்க வேண்டும் என்பதற்காகவும், தமிழகம் மறுமலர்ச்சி பெற்ற தமிழகமாக விளங்கவேண்டும் என்பதற்காகவும் அயராது பாடுபட்டு வரும் தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொண்டு, தமிழகம் விவசாயத்தை நம்பி இருக்கும் நாடு; தமிழக அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு, தரமான இடுபொருட்கள் வினியோகம் மூலம் உயர் உற்பத்தியை அடைய பல வழி வகைகளை மேற்கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தின் மொத்த பயிரிடப்படும் பரப்பில், 52 சதவிகிதமான மானாவாரி நிலங்களின் சாகுபடி தரத்தை மேலும் உயர்த்த, சீரிய முயற்சிகளை இந்த அரசு எடுத்துள்ளது. காலா காலத்தில் மழை பொழியாவிட்டாலும், இயல்பாகப் பொழிய வேண்டிய மழை பொய்த்து விட்டாலும், 1988-89—ஆம் ஆண்டை விட, 1989-90—ஆம் ஆண்டு உற்பத்தி கொஞ்சம் கூடுதலாக உள்ளது மிகவும் மகிழ்ச்சிக்குரிய ஒன்றாகும். சான்று அளிக்கப்பட்ட விதைகள், அரசு விதைப் பண்ணைகள் மூலம், தொழில் நுட்பம் கண்காணிப்புப் பெருக்கம் செய்யப்பட்ட வேளாண்மை விரிவாக்க மையம் மூலம் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதை முறையாக வினியோகம் செய்யப்படுகிறதா என கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகளின் நலன் கருதி நெல் கொள்முதல் விலை குவிண்டாலுக்கு ரூபாய் 180 என்று இருந்ததை

[திரு. ஆர். பஞ்சாட்சரம்] [1990 ஏப்ரல் 21

தற்போது ஒரு குவிண்டாலுக்கு கூடுதலாக 25 ரூபாய் உயர்த்தி 205 ரூபாயாக வழங்கப்படுகிறது. மேலும் உற்பத்தி ஊக்கத் தொகையாக குவிண்டாலுக்கு ரூபாய் 35 சேர்த்து அளிக்கப் படுகிறது.

12-45 மணி

மேலும் கரும்புக்கு டன் ஒன்றுக்குக் கூடுதலாக ரூபாய் 30 அளிக்கின்ற இந்த அரசைப் பாராட்டாமல் இருக்க முடியாது. விவசாயிகளுக்கு இது போதுமானதாக இல்லை. கரும்புக்கு ஹரியானா மாநிலத்திற்குச் சமமாக உயர்த்தித் தர வேண்டு கிறேன்.

விவசாயிகள் பயன்படுத்தும் 3 எச். பி., 5 எச். பி. இயந்திரங்களுக்கு விற்பனை வரி விலக்கு அளிக்கப்பட்டு இருக் கிறது. மேலும் விவசாய பம்ப் செட்டுகளுக்கு மின்சாரக்கட்டணம் ஒரு எச்.பிக்கு ரூபாய் 75 ஆக இருந்ததை ரூபாய் 50 ஆகக் குறைத்துள்ளதை நான் பாராட்டுகிறேன். இருப்பினும் நம் அனைவருக்கும் உணவு அளிக்கும் விவசாயிகளுக்கு மின்சாரத்தை இனாமாக அளிக்க வேண்டும். மத்திய அரசு கொடுத்துள்ள ரூபாய் 10 ஆயிரம் கடன் தள்ளுபடியை விவசாயப் பெரு மக்கள் வரவேற்கிறார்கள். அதுபோல தமிழக அரசும் சிறு விவசாயி, பெரிய விவசாயி என்று பார்க்காமல் கூட்டுறவுக் கடனில் பெரிய விவசாயிகளுக்கு வட்டியையும், சிறிய விவசாயிகளுக்கு அசலையும் தள்ளுபடி செய்து ஏழை விவசாயிகளின் வயிற்றில் பால் வார்க்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அரிசி விலையேற்றம் காரணமாக 180 கோடி ரூபா யும், அரசு ஊழியர்களுக்கு அளித்த சம்பள உயர்வு காரண மாக 445 கோடி ரூபாயும், சத்துணவில் 100 கோடி ரூபா யும், இலவச அரிசி வழங்குவதில் 36 கோடி ரூபாயும் என்று இப்படி ஏராளமான நஷ்டங்களை ஏற்றுக்கொண்டுள்ள இந்த அரசு விவசாய பம்ப் செட்களுக்கு இலவசமாக மின்சாரத்தை அளிக்க வேண்டும். இதனால் அரசுக்கு ஏற்படுகிற நஷ்டம் 26 கோடி ரூபாய்தான். விவசாயக் கூலிகள் இறந்தால், விவசாயிகள் இறந்தால், தொழிலாளர்கள் இறந்தால் ரூபாய் 10000 அளிக்கின்ற வகையில் இந்த அரசு தொழிலாளர்கள் மீதும், விவசாயிகள் மீதும் கொண்டிருக்கின்ற அக்கறையை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

விவசாயிகளுக்கு சரியான விலை கொடுக்க வேண்டும் என்ற அக்கறையில் அமைக்கப்பட்ட ஒழுங்கு முறை விற் பனைக் கூடங்கள் விவசாயிகள் விற்கும் விளைபொருட்களுக்கு அன்றாடம் பணம் பட்டுவாடா செய்வதில்லை. இதனால் பெரிதும் பாதிப்பு ஏற்படுகிறது. மேலும் பட்டுவாடா செய்கிற நேரத்தைப் பொறுத்த வரையில் ஒருசில நாட்களில் இரவு 10 மணி அளவில் கூட பட்டுவாடா செய்வதால் விவசாயிகளின் பணம் வழியில் கொள்ளை அடிக்கப்படுகிற நிலைமை ஏற்படுகிறது இதைப்

1990 ஏப்ரல் 21] [திரு. ஆர். பஞ்சாட்சரம்]

போக்கும் வகையில் வியாபாரிகளை தலா ரூபாய் 5 இலட்சம் வரை வங்கியில் டெப்பாசிட் கட்டச் சொல்லி சலானை அரசுக்கோ அல்லது கமிட்டி சூப்பிரண்டுக்கோ கொடுத்து வியாபாரி பிட் போட அனுமதி அளிக்கவேண்டும். இப்படிச் செய்வதில் சற்று சிரமம் இருக்கும் என்பதை நான் உணர்வேன். இதற்கு வியாபாரிகள் யாரும் முன்வரமாட்டார்கள் என்பதும் எனக்கு நன்றாகத் தெரியும். எனவே, மார்க்கெட் கமிட்டிக்குச் சொந்தமான பல கோடி ரூபாய் வங்கியில் டெப்பாசிட் செய்யப்பட்டுள்ளது. அந்தப் பணத்தை அன்றாடம் விளைபொருள் வரவு வைத்து அந்தந்த கண்காணிப்பாளர் மேற்பார்வையில் விற்பனைக் கூடத்திலேயே வங்கி ஒன்று அமைத்து பட்டுவாடா செய்துவிட்டு வியாபாரிகளிடம் ஓரிரு நாட்கள் கழித்து வட்டியுடன் பணத்தை வசூல் செய்துகொள்ள தகுந்த ஏற்பாடு செய்தால் விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் நல்லது செய்ததாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக வியாபாரிகள், வட்டி தருவார்களா என்ற எண்ணம் வரும். வியாபாரிகள் அனைவரும் தின அடிப்படையில் கடன் வாங்குகிற காட்சிகளை நான் கண்டு இருக்கிறேன். டீசல் விலை உயர்ந்திருக்கின்ற காரணத்தால் விவசாயிகள் உபயோகப் படுத்தும் ஆயில் என்ஜின்களை குறைந்த மானிய விலையில் நிலத்தின் பரப்பளவைக் கொண்டு வழங்க அரசு முன்வர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். பூச்சிக்கொல்லி மருந்து தயக்கம் இல்லாமல் கிடைக்க ஏற்கெனவே உள்ள 783 விரிவாக்க நிலையங்களுடன் மேலும் 35.23 இலட்சத்தில் கூடுதலாக 1990-91-ஆம் ஆண்டில் 100 நிலையங்களை நிறுவ இந்த அரசு ஏற்பாடு செய்வதுடன், பூச்சிக்கொல்லி மருந்து தயாரிப்பினைப் பொறுத்தவரையில் தனியாருக்கும், கூட்டுறவு அமைப்புகளுக்கும் உரிமம் வழங்குவதை மத்திய அரசு 1985 முதல் நிறுத்தி வைத்திருப்பதை மாற்றி மீண்டும் அந்த அனுமதியை அளித்திட ஏற்பாடு செய்யவேண்டும். அந்த வகையில் புதிய பேக்டரிகளை ஏற்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

பம்ப்செட் அமைக்க கூட்டுப் பட்டாதாரர்களிடம் ஒப்புதல் வாங்கும் சட்டத்தைப்போக்கி நில உரிமை உள்ளவர்களுக்கு அந்த நிலத்தில் சர்வீஸ் கொடுக்க வழிவகை செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு கிணறுக்கு சர்வீஸ் பெற்றிருந்தால் அந்தக் கிணற்றிலே மறு சர்வீஸ் வழங்குவது கிடையாது.

12-50 மணி

அப்படி சர்வீஸ் பெற்றவர், அதே கிணற்றில் வேறொரு சர்வீசு இருந்து, அந்த சர்வீசை மட்டும் விலைக்கு வாங்கினால், அந்த சர்வீசை வாங்கிய சர்வீஸ்தாரருக்கு மாற்றிக்

கொடுப்பது கிடையாது என்பது தற்போது நடைமுறையில் உள்ள சட்டமாகும். எனவே, அதையும் மாற்றிக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

புதிய சர்வீஸ் வாங்க, தாசில்தார் சான்று தேவையில்லை வி.ஏ.ஓ. சான்று போதுமென திருத்திக்கொடுக்க வேண்டுமென நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். சர்வீஸ் கேட்கும் விண்ணப்பம் கொடுத்து, பல ஆண்டுகள் ஆவதால், விண்ணப்பதாரர் இறக்க நேர்ந்தால் இறந்த சான்று, வாரிசு சான்று வழங்க காலதாமதம் ஆகிறது. இறந்தவரைப் பதிவு செய்யத் தவறினால் கோர்ட் உத்திரவு வாங்க வேண்டியுள்ளது, ஆகவே, அப்படிப்பட்ட சூழ்நிலையில் உள்ளவருக்குக் கால வரையறையின்றி கால நீடிப்பு வழங்க அரசை நான் கேட்டுக் கொள்கிறேன். இல்லையானால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அப்படிப்பட்ட விண்ணப்பம் வந்தால் 15, 20 நாட்களுக்குள்ளாக, சான்றுகள் வழங்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

விவசாய பம்ப் செட்களுக்கு சர்வீஸ் வழங்க பல ஆண்டுகள் ஆவதைப் போக்க வேண்டும். அதைத் தவிர்க்கின்ற வகையில் ஒரு கம்பம் என்று உள்ள விதியை மாற்றி, 3 கம்பங்கள் வரை உடனடியாக, கிணற்றில் தண்ணீர் உள்ளவர்களுக்கு சர்வீஸ் கொடுக்கலாம் என்ற வகையில் அரசு ஆவன செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சர்வீஸ் கொடுக்க புதிய மோட்டார்கள் இருந்தால்தான் கொடுக்கப்படும் என்பதை மாற்றி, பழைய மோட்டார் இருந்தாலும் கொடுக்கலாம் என்ற வகையில் ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சென்ற ஆட்சிக் காலத்தில் அவர்களுடைய நிலங்களிலே சர்வீஸ் வாங்கிக் கொள்வதற்கு விதிமுறைகள் தளர்த்தப்பட்டிருந்தன. அது ஏனோ, அந்த ஆட்சிக் காலத்திலேயே நிறுத்தப்பட்டு விட்டது. எனவே, அதை மீண்டும் நம்முடைய கழக அரசு, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, விவசாயத்திற்கு சர்வீஸ் வழங்க வேண்டுமென்ற ஒரு நல்ல கோரிக்கையை நான் இந்த மாமன்றத்தில் தமிழக முதல்வருக்கு வைக்கின்றேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பஞ்சாட்சரம் அவர்கள் பேசுகின்ற பொழுது சென்ற ஆட்சிக் காலத்தில்

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எல்லாம் சர்வீஸ் வாங்கிக் கொள்ள தனிச் சலுகை வழங்கப்பட்டது என்று சொன்னார்கள். எனக்குத் தெரிந்தவரை அப்படியில்லை. ஒரு கட்டத்தில் சட்டப்பேரவை உறுப்பினர் நியாயமான கோரிக்கை கொடுத்தால் அதைப் பரிசீலிக்கலாம் என்று நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் பின்னாலே மாற்றிக் கொள்ளப்பட்டிருக்கிறது. அவ்வளவுதான் தெரியும்.

திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் ஒரு தவறான தகவலை சட்டமன்றத்திற்குத் தருகிறார். சட்டமன்ற உறுப்பினர்கள் தாங்கள் விண்ணப்பம் செய்கிறபொழுது அதற்கு முன்னுரிமை வழங்கி உடனடியாக மின்சார இணைப்பு தர வேண்டுமென்று அந்த ஆட்சிக்காலத்திலே தரப்பட்டது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆட்சிக்காலத்திலே சட்டமன்ற உறுப்பினருக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டார்கள். இல்லை; நான் சென்ற ஆட்சிக்காலத்திலேயும் உறுப்பினராக இருந்தேன். நானே விண்ணப்பம் செய்திருந்தேன். சீனியாரிட்டி படிதான் கிடைத்ததே தவிர, முன்னுரிமை கொடுத்து வழங்கப்படவில்லை யென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. செங் கோட்டையன் அவர்கள் நான் ஏதோ தவறான தகவல் இந்த அவைக்குத் தருவதாக இங்கே தெரிவித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. பஞ்சாட்சரம் பேசிய கொள்கைக்கு அவர் ஆதரவு தருவதற்காக வேண்டுமானால் நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அப்படி ஒரு முறை இருந்ததாக எனக்குத் தெரிய வில்லை.

திரு. ஆர். பஞ்சாட்சரம் : மேலும், எந்த ஒரு கிணற்றி லிருந்து மற்றொரு கிணற்றுக்கு சர்வீசை மாற்ற வேண்டு மென்றாலும் அதற்கு ஒரு பிரையாரிட்டி என்று விதிமுறைகள் வைக்கப்பட்டுள்ளன. அந்த பிரையாரிட்டி என்பது ஒரு கம்பம் உள்ளுக்கு வந்தால் பரவாயில்லை. அப்படிப்பட்ட சர்வீசை தற்போது 4 கம்பங்கள் வரை, அந்தக் கிணற்றி லிருந்து மற்றொரு கிணற்றுக்கு மாற்ற வேண்டுமானால், மாறுதல் செய்கின்ற செலவை மட்டும் பெற்றுக்கொண்டு, சர்வீஸ் கொடுக்க இந்த அரசு முன் வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

உணவு உற்பத்தியைப் பெருக்க, அரசு மேலும் பயிற்சி அளிப்பதை விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, விவசாயிகள் வாங்கும் விவசாயக் கருவிகள், டிராக்டர்கள், போன்றவை வாங்க வழங்கப்படும் கடனுக்கு வட்டி தற்போது $12\frac{1}{2}\%$ அல்லது 14% என்றிருப்பதை மாற்றி, 5% அல்லது 6% என வழங்க அரசு முன் வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். என்னதான் விவசாயிகள் ஓடி, ஓடி உழைத்தாலும் உழைக்கின்றபோது பயன்படுத்தும் உழவுகோல் கூட மீதமாவதில்லை என்பது பழமொழி. அது உண்மையும் கூட. வேளாண்மை என்ற சொல்லிலே அடங்கியுள்ள ஆண்மை தற்போது குறைந்துள்ளது. அதற்கு நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் மீண்டும் புத்துயிர் கொடுத்து, உயிர்ப்பிக்க வேண்டுமென்று கேட்டு, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

12-55 மணி

திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்திலே பல ஆண்டுகளாக பல்வேறு உறுப்பினர்கள் இந்த விவசாயத் துறையைப்பற்றி பல்வேறு சிறப்பான அம்சங்களை எடுத்து வைத்திருக்கிறார்கள். அதேநேரத்தில் எத்தனை காலங்கள் எவ்வளவு சொன்னாலும் விவசாயத்தைப் பொறுத்தவரையில் விவசாயிகளை முன்னேற்றம் செய்வதற்கு ஒரு வாய்ப்பு இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் விவசாயம் செய்கின்றவர்கள் விவசாய வல்லுநர்களின் உதவியோடு பல்வேறு வகையான இடுபொருள்களை வாங்கி, மிகுந்த விலை கொடுத்து வாங்கி, விவசாயத்தைப் பெருக்குகின்ற வகையிலே விவசாய உற்பத்தியைப் பெருக்கி, இந்த நாட்டு மக்களுக்குத் தருவதற்கு உதவியாக இருக்கிறார்களே தவிர அவர்கள் பயன்படுத்துகின்ற, அதிக விலை கொடுத்து வாங்குகின்ற உரத்திற்கோ அல்லது பூச்சிக்கொல்லி மருந்திற்கோ தகுந்தாற்போல் விவசாயிகளுக்கு விலை கிடைக்கவில்லை.

நாட்டிலே நிலங்கள் விரிவடைய வில்லை. இருக்கிற நிலங்களை வைத்துத்தான் நவீன வசதிகளைப் பயன்படுத்தி உணவு உற்பத்தியைப் பெருக்கி வருகிறார்கள். முன்பெல்லாம் இப்படிப்பட்ட நவீன வசதியை நாம் பயன்படுத்திக் கொண்டதில்லை. இப்போது நமக்கு சர்க்கரை அதிகமாகத் தேவைப்படுகிறது. ஒரு பருத்தி ஆடை பயன்படுத்தியதற்குப் பதிலாக இப்போது பத்து ஆடைகளைப் பயன்படுத்துகின்ற அவசியத்தில் நாம் இருக்கிறோம். இப்படி நம்முடைய தேவை அதிகரித்திருந்தாலும் நிலங்கள் விரிவடையவில்லை. அதை உன்

ளத்திலே வைத்துத் தான் விவசாயிகள் அதிகமான பணத்தைப் போட்டு விளைபொருள்களின் உற்பத்தியைப் பெருக்குகிறார்கள். அப்படி உற்பத்தியைப் பெருக்குகிறபோது அதற்கு ஏற்றவகையில் அவர்களுக்கு ஊக்கம் அளிக்கப்படவில்லை, வசதிகள் செய்து தரப்படவில்லை என்பதுதான் என்னைப் போன்ற விவசாயிகளின் குற்றச்சாட்டாக இருக்கிறது. இந்த மன்றத்திலே கூட பல உறுப்பினர்கள் விவசாயிகளாக இருந்தாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல அமைச்சர்களிலே கூட சிலர் விவசாயிகளாக இருந்தபோதிலும், அவர்களுக்கு எல்லாம் விவசாயிகளின் கஷ்டம் தெரிந்திருந்தாலும் விவசாயிகளுக்கு முன்னேற்றம் இல்லை.

விவசாயம் செய்கின்றவர்களிலே 50 சதவீதம் பேர் மானாவாரியை நம்பி இருக்கிறார்கள். மீதியுள்ள 50 சதவீதத்தில் 20 அல்லது 25 சதவீதம் பேர் இறைவைக் கிணற்றை நம்பி இருக்கிறார்கள். மீதி 25 சதவீதம் பேர் பாசனத்தை நம்பியிருக்கிறார்கள். மானாவாரியை நம்பி பயிர் செய்தால், மழை இல்லாமல் பொய்த்துப்போனால் அந்தப் பயிர் காய்ந்துபோகும். தோட்டக் கலையிலே இருப்பவர்கள், இறைவைப் பாசனத்தின் மூலமாக நெல் அல்லது மற்ற பயிர்வகைகளைப் பயிர் செய்கிறபோது கிணற்றிலே தண்ணீர் வற்றிவிட்டால் அந்தப் பயிர்கள் எல்லாம் காய்ந்து விடுகின்றன. அதைப்போன்று பாசனப் பகுதியை எடுத்துக் கொண்டால், காவேரி டெல்டா போன்ற இடங்களில் தண்ணீர் இல்லை என்றால் பயிர் காய்ந்து விடுகிறது; மழைக் காலங்களில் அதிக தண்ணீர் வந்து பயிர் நாசமடைந்து விடுகிறது. வாழை போன்ற பயிர்களுக்கு புயல் போன்ற இயற்கைச் சீற்றங்களினால் சேதம் ஏற்படுகிறது. இப்படி விவசாயப் பயிர்களுக்கு பெருமளவில் செலவு செய்தாலும் பாதுகாப்பு இல்லாமல் இருப்பதால், விவசாயிகளுக்கு நஷ்டயீடு கொடுக்கின்ற அடிப்படையில் பயிர் இன்சூரன்ஸ் திட்டம் மிக மிக அவசியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது பயிர் இன்சூரன்ஸ் திட்டம் இருந்தாலும் எல்லா இடங்களிலும் அந்த சலுகை கிடைக்கவில்லை. சில இடங்களை பிரித்து, பிரித்து வைத்திருப்பதால் அவர்களுக்கு இது பயன்படவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைக் கவனித்து எல்லோருக்கும் பயன் கிடைக்கும் வகையில் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று விவசாய விளைபொருள்களுக்கு எங்கோ இருந்து கொண்டிருக்கிற மத்திய அரசு விலை நிர்ணயம் செய்கிறது. அங்கே இருந்து விலை நிர்ணயம் செய்தாலும் விலை

நிர்ணயம் செய்பவர்களில் விவசாயிகள் அல்லது விவசாயம் தெரிந்தவர்கள் இடம் பெற்றிருக்கிறார்களா என்றால் இல்லை. படித்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் தான் விலை நிர்ணயம் செய்கிறார்கள். அந்த அந்த மாநிலத்திற்கு ஏற்ப கூலி உயர்வுக்கு ஏற்ப, நிலத்தின் தன்மைக்கு ஏற்ப, பாசன வசதிக்கு ஏற்ப அந்த அந்த மாநிலத்தில் இருப்பவர்களே விலை நிர்ணயம் செய்ய வேண்டுமே தவிர எங்கோ இருப்பவர்கள் விலை நிர்ணயம் செய்வதை நாம் அனுமதிக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

மத்திய அரசிலே இருந்து சில அதிகாரங்களை எடுக்க வேண்டுமென்று நாம் சொல்லும்போது—இது மிக முக்கியமான அதிகாரம் என்பதால், மத்திய அரசிடம் தற்போது இந்த மாநில அரசுக்கு அதிக ஈடுபாடு இருக்கின்ற காரணத்தால்—மத்திய அரசை வற்புறுத்தி, விலை நிர்ணயம் செய்கின்ற கமிஷனிலே இங்கே இருக்கிற அமைச்சர் இடம் பெறச் செய்ய வேண்டும் அல்லது விவசாயி அல்லது விவசாயம் தெரிந்த ஒருவர் இடம்பெறச் செய்ய வேண்டும். அதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லும் போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விவசாயத்திற்கு ஒரு ஹார்ஸ் பவருக்கு 50 ரூபாய் 'ஃபிக்சட் ரேட்' வைத்திருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையிலே ஓரளவுக்கு அது விவசாயிகளுக்கு சாதகம் என்றாலும் கூட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், விவசாய அமைச்சர் அவர்களையும் நான் கேட்டுக்கொள்வதெல்லாம், 9 லட்சம் பம்ப் செட்டுகள் இன்றைக்கு தமிழ்நாட்டிலே இருப்பதாகச் சொல்கிறார்கள்.

13-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் ஒப்புதலுடன் அவையின் நேரம் இரண்டு மணித் துளிகள் நீட்டிக்கப்படுகிறது.

திரு. அ. பாப்பா சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 9 லட்சம் பம்ப் செட்டுகளுக்கு 50 ரூபாய் என்று அவர்கள் வசூல் செய்தாலும் கூட அது 22 கோடி ரூபாய் அளவுக்குத்தான் எட்டும். ஆகவே, இது பெரிய இழப்பு அல்ல அரசாங்கத்துக்கு. இந்த அவையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், விவசாய அமைச்சர் அவர்களும் இந்த நஷ்டத்தை விவசாயிகள் தலையில் சுமத்தாமல் 22 கோடி ரூபாயையும் அரசு தள்ளுபடி செய்ய

1990 ஏப்ரல் 21] [திரு. அ. பாப்பா சுந்தரம்]

வேண்டும். மானியமாகவோ அல்லது இலவசமாகவோ விவசாயிகளின் நலன் கருதி இதை தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, கசிவுக் குட்டை அமைத்திருக்கிறார்கள். மத்திய அரசின் நிதி ஆதாரத்தோடு, நமது பி.டபிள்யூ.டி. துறை மூலமாக குளங்களை வெட்டுகிறார்கள். ஆனால் குளங்களுக்கு நீர் வருவதில்லை. காரணம் வரத்து வாரி தூர்ந்து போயிருக்கிறது.. மேலும் அந்தப் பகுதிகளில் சிலர் ஆக்கிரமிப்பு வேறு செய்திருக்கிறார்கள். ஆகவே, அதற்காக செலவு செய்கின்ற பணம் எல்லாம் வீண் விரயம் என்கிற அளவில் அது பயன்படவில்லை.

அடுத்து, தமிழகத்தில் நிறைய நிலத்தடி நீர் இருப்பதால் தயவு செய்து குளங்களையும், குட்டைகளையும் நல்ல முறையில் சீரமைத்து, வரத்து வாய்க்கால்களை சீரமைத்து, சுத்தம் செய்து விவசாயிகளுக்கு தண்ணீர் கிடைக்க முன்னுரிமை அளிக்க வேண்டும். அதற்காக வேண்டிய தொகையை செலவு செய்ய வேண்டும்.

அடுத்தபடியாக, கரும்பு விவசாயிகளைப் பற்றி பலரும் பேசினார்கள். அமைச்சர் அவர்கள் சொல்லும்போது சாதுர்யமாக ஒன்றைச் சொன்னார்கள். 'நாங்கள் 30 ரூபாய் சேர்த்து கொடுக்கிறோம்' என்று சொன்னார்கள். எனக்கு நன்றாக நினைவில் இருக்கிறது. 'மத்திய அரசு 200 ரூபாய் என்று நிர்ணயித்திருக்கும்போது இந்த அரசு 250 ரூபாய் கொடுத்தது' என்று அறிவித்தார்கள். ஆனால் இப்போது அதே மத்திய அரசு 220 ரூபாய் என்று அறிவித்த பிறகு நமது அரசு அதே 250 ரூபாயை கொடுப்பது ஏன் என்று எனக்குப் புரியவில்லை. இதுகுறித்து கரும்பு விவசாயிகள் ஏற்கெனவே அடிக்கடி கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் இதுகுறித்து கவனிப்பதாக சொல்லியிருக்கிறார்கள். முன்பு இருந்த கலைஞர் அரசாக இருந்தாலும் சரி, புரட்சித் தலைவருடைய அரசாக இருந்தாலும் சரி முத்தரப்பு மாநாடு போட்டு விவசாயிகளும், கரும்பு ஆலை அதிபர்களும், அமைச்சர்களும் உட்கார்ந்து கரும்பு விலையை நிர்ணயிப்பது என்பது தான் முன்பு நடைமுறையில் இருந்து வந்த ஒன்று. அந்த வகையில் எல்லோருடைய குறைகளையும் கவனித்து ஆவன செய்யப்பட்டு வந்தது. (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்களும், கரும்புக்கு விலை நிர்ணயிக்கிற போது, உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுடைய கருத்தை,

பிறகு விவசாயிகளுக்காக இருக்கின்ற சங்கத்திலிருப்பவர்களுடைய கருத்துக்களை அறிந்தார்கள். அதற்குப் பின்னால் கரும்பு ஆலைகள் வைத்திருப்பவர்களுடைய கருத்துக்களைக் கேட்டு, அதற்குப் பிறகு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஒரு டன்னுக்கு, 8.5 சதவிகித கட்டுமானத்திற்கு 250 ரூபாய் விலையை நிர்ணயித்திருக்கிறார்கள்.

திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் பகுதியிலுள்ள விவசாயிகள் சங்கத்தினர் எங்களை இந்த ஆண்டு அழைக்கவில்லை என்று சொன்னதால்தான் தகவலுக்காக இதை நான் இங்கே சொன்னேன்.

அடுத்தபடியாக, நான் மாண்புமிகு அமைச்சருக்கு சொல்வதெல்லாம், பர்சேஸ் டாக்ஸ் மூலமாக வசூல் செய்யும் போது, 1982–83, 1983–84 ஆகிய ஆண்டுகளில் பர்சேஸ் டாக்சிலிருந்து விவசாயிகளுடைய நலனை மனதில் கொண்டு, விவசாயிகளுக்கு ஒரு சிறு தொகை கொடுக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையில் பர்சேஸ் டாக்ஸ் ரிபேட் ஆக திருப்பி கொடுக்கும் நிலை இருந்தது. ஆனால் தமிழகத்தில் தான் இந்தியத் துணைக் கண்டத்திலேயே அதிகமாக பர்சேஸ் டாக்ஸ் வசூல் ஆகும் நிலையில் விவசாயிகளுக்கு ஏதாவது நன்மை செய்ய வேண்டுமென்ற அடிப்படையில் ஏதாவது ஒரு தொகையை மானியமாக திருப்பித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்கள் குளித்தலை தொகுதிக்கு—அவருடைய வெற்றிக்கு படியாக இருந்த தொகுதி அது ஆதலால், அந்தத் தொகுதிக்கு—சில நன்மைகளை செய்ய வேண்டுமென்று கேட்டு முடித்து விடுகிறேன் பஸ் ஸ்டாண்ட் அவர் வெற்றி பெற்றபோது எந்த நிலையில் இருந்ததோ அதே நிலையில்தான் இப்போதும் இருக்கிறது. அதற்கு ஆவன செய்ய வேண்டும். அதுபோல மணப்பாறையில் தண்ணீர் பஞ்சம் அதிகமாக இருக்கிறது. இன்று அந்தப் பகுதிக்கு ஏதோ உதவுவதாக கேள்விப்பட்டேன். இந்த இரண்டு திட்டங்களையும் அவர் காலத்திலேயே—அவர் ஏதோ இப்போது திருச்சிக்கு வருவதாக அறிகிறேன், அந்த நேரத்தில்—அவர் இதற்கும் அடிக்கல் நாட்டி உதவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, அவருக்குத் தெரியும். 'நடுப் பகுதி கசக்கும்' என்று அவரே சொல்லியிருக்கிறார். குளித்தலை, கரும்பு என்பது அவருடைய கருத்து. குளித்தலையை கரும்பின் அடிப்பகுதியாக பாவிக்க வேண்டும். அது போல தோகைமலை மையப் பகுதி. மணவைப் நுனிப் பகுதி. இந்த நடுப் பகுதியான தோகைமலைப் பகுதியிலுள்ள குளங்கள் எல்லாம் வறண்டு இருப்பதால் விவ

1990 ஏப்ரல் 21] [திரு. அ. பாப்பா சுந்தரம்]

சாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த குளங்களை எல்லாம், குறிப்பாக நல்லூர், புழுதேரி, கழுதூர், புத்தூர், வரகூர் போன்ற கிராமங்களில் இருக்கிற குளங்களை எல்லாம் நல்லமுறையில் வெட்டித் தர வேண்டுமென்று கேட்டு, இத்துடன் என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பாப்பா சுந்தரம் அவர்களுக்கு முன்னால் இருக்கிற ஒலி வாங்கியின் உயரம் சற்றுக் கூட்டப்படும். (சிரிப்பு).

7. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(இ) பேரவை அலுவல்கள்.

13-05 மணி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கிணங்கப் பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு நடைபெறும்:

23—4—1990 திங்கட்கிழமை	அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும்
24—4—1990 செவ்வாய்க்கிழமை முதல் 1—5—1990 செவ்வாய்க்கிழமை வரை	மாற்றம் ஏதுமில்லை
2—5—1990 புதன்கிழமை	36. பாசனம் 37. பொதுப் பணிகள்—கட்டிடங்கள். 38. பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும் கருவிகளும், தளவாடமும். 39. சாலைகளும், பாலங்களும். 52. பாசனம் குறித்த மூலதனச் செலவு

1990 ஏப்ரல் 21] **[திரு. அ. பாப்பா சுந்தரம்]**

சாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த குளங்களை எல்லாம், குறிப்பாக நல்லூர், புழுதேரி, கழுதூர், புத்தூர், வரகூர் போன்ற கிராமங்களில் இருக்கிற குளங்களை எல்லாம் நல்லமுறையில் வெட்டித் தர வேண்டுமென்று கேட்டு, இத்துடன் என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பாப்பா சுந்தரம் அவர்களுக்கு முன்னால் இருக்கிற ஒலி வாங்கியின் உயரம் சற்றுக் கூட்டப்படும். (சிரிப்பு).

7. அறிவிப்புகள்—(தொடர்ச்சி).

(இ) பேரவை அலுவல்கள்.

13-05 மணி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கிணங்கப் பேரவையின் அலுவல்கள் கீழ்க்கண்டவாறு நடைபெறும்:

23—4—1990 திங்கட்கிழமை	அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்தலும் நிறைவேற்றலும்
24—4—1990 செவ்வாய்க் கிழமை முதல் 1—5—1990 செவ்வாய்க் கிழமை வரை	மாற்றம் ஏதுமில்லை
2—5—1990 புதன்கிழமை	36. பாசனம்
	37. பொதுப் பணிகள்—கட்டிடங்கள்.
	38. பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும் கருவிகளும், தளவாடமும்.
	39. சாலைகளும், பாலங்களும்.
	52. பாசனம் குறித்த மூலதனச் செலவு

[பேரவைத் தலைவர்] [1990 ஏப்ரல் 21

	53. பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு
	54. சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு
	(பேரவை மாலையிலும் கூடும்)
3—5—1990 வியாழக்கிழமை மற்றும் 4—5—1990 வெள்ளிக்கிழமை	2. மாநில ஆயத் தீர்வைத் துறை 15. காவல் துறை 16. தீயணைப்புப் பணிகள்
5—5—1990 சனிக்கிழமை	(1) 7. மாநிலச் சட்டமன்றம் 8. தேர்தல்கள் (2) 1990-91 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் மற்றும் முடிவு பெறாத மானியக் கோரிக்கைகள் பொறுத்த வரை விவாதமின்றி 1.00 மணிக்கு வாக்கெடுப்பு (3) வாக்கெடுப்பிற்குப் பின் 1990-91 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவு—அறிமுகம் செய்தல்
6—5—1990 ஞாயிற்றுக் கிழமை.	விடுமுறை
7—5—1990 திங்கட்கிழமை	1990-91 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கச் சட்ட முன் வடிவு ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும்.

8—5—1990 செவ்வாய்க் கிழமை மற்றும் 9—5—1990 புதன்கிழமை	அரசினர் சட்ட முன்வடிவுகள் ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும்
10—5—1990 வியாழக்கிழமை	தனியார் அலுவல்கள்
11—5—1990 வெள்ளிக்கிழமை மற்றும் 12—5—1990 சனிக்கிழமை	தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1989-90-ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கை மற்றும் 1988-89 ஆம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கையின்மீது விவாதம்.

பேரவை வழக்கம்போல் காலை 9—00 மணிக்குக் கூடும்.

பேரவையின் இன்றைய காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் இன்று மாலை 16-00 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 13-06 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

16-00 மணி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வீ. பெ. துரைசாமி அவர்கள் தலைமையில் மாலை 16-00 மணியளவில் பேரவை மீண்டும் கூடியது.

10. மானியக் கோரிக்கைகள், 1990-91, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1990-91ஆம் ஆண்டுக்கான வேளாண்மைத் துறையின் மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக நன்றி. இந்த விவசாயிகளினுடைய மானியக் கோரிக்கையில் ஏற்கனவே இந்த அரசால் அனைத்து சிறு விவசாயிகளுக்கும் பழைய கூட்டுறவுக் கடன்களை முழுவதுமாக தள்ளுபடி செய்வதாகத் தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டு இருக்கிறது. இதுவரை முழுமையாக சிறு விவசாயிகளுக்குக் கடன்களை தள்ளுபடி செய்வதாகக் காணோம். அது மட்டுமல்லாமல் சிறு விவசாயிகளுக்கு அவர்கள் விவசாயம் செய்யும்போது அதற்கு ஏற்ற செலவு இருக்கும். அதுபோல் பெரிய விவசாயிகளுக்குக் கூடுதலான விவசாயப் பணிகள், செலவுகள் இருக்கும். ஆகையினால் அவர்களுக்கும் அந்த வட்டியையாவது தள்ளுபடி செய்ய வேண்டும். மத்திய அரசு அனைத்துச் சிறு விவசாயிகளுக்கும் 10 ஆயிரம் ரூபாய்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" மானியக் கோரிக்கை எண் 20—வேளாண்மை என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,35,47,14,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

(ஆ) கோரிக்கை எண் 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு.

திரு. ஆர். சிங்காரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

" மானியக் கோரிக்கை எண் 50—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,95,61,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, திங்கட்கிழமை (23—4—1990) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை 19-43 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

11. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

67. தமிழ்நாடு அரசு கட்டுமானக் கழகத்தின் 1988-89-ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

1990 ஏப்ரல் 21]

68. தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகத்தின் *1985-86*ஆம் ஆண்டிற்கான இருபதாவது ஆண்டறிக்கை [*1956*ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

121. கோரிக்கை எண். *20*—வேளாண்மை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, *1990-91* (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

122. வேளாண்மைத்துறை குறித்த செயல்வினை முறைத் திட்டம் *1990-91* (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

123. தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகம் மீதான ஆய்வுரை, *1989-90* (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

124. தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையம் மீதான ஆய்வுரை, *1989-90* (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

125. தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையம் மீதான ஆய்வுரை, *1990-91* (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1990 ஏப்ரல் 21]

68. தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகத்தின் *1985-86*ஆம் ஆண்டிற்கான இருபதாவது ஆண்டறிக்கை [*1956*ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் *1/1956*) *619*-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

121. கோரிக்கை எண். *20*—வேளாண்மை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, *1990-91* (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

122. வேளாண்மைத்துறை குறித்த செயல்வினை முறைத் திட்டம் *1990-91* (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

123. தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகம் மீதான ஆய்வுரை, *1989-90* (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

124. தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் பணிக் கூட்டுறவு இணையம் மீதான ஆய்வுரை, *1989-90* (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

125. தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையம் மீதான ஆய்வுரை, *1990-91* (தமிழ் மற்றும் ஆங்கிலம்).

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

இணைப்புகள்

[71-ம் பக்கத்திலுள்ள அடிக் குறிப்பைக் காண்க

வேளாண்மைத் துறையின் கொள்கை விளக்கம்.

வேளாண்மைப் பிரிவுகளை பொறுத்தவரை நிலையான வளர்ச்சியை அடைவதே நாட்டின் அனைத்து திட்டமிடுபவர்களின் முக்கிய குறிக்கோள். சுமார் 80 சதம் விளை நிலம் மிகக் குறுகிய அலகு அளவுள்ளதாகவும், நிலையற்ற பருவ மழையாலும், இயற்கை வளக் குறைவின் காரணமாக தற்போது உள்ளது போல், 5 அல்லது 6 ஆண்டுகளுக்கு ஒரு முறையேனும் நல்ல பருவ மழை கிடைக்காத நிலையாலும் குன்றிவரும் நிலைமைகளை சமாளிக்க வேண்டிய கட்டாயத்தில் விவசாயத் துறை உள்ளது.

ஆகையால் தமிழக அரசின் கொள்கைகள் மேம்பாடடைந்த தொழில் நுட்பம், தரமான இடுபொருள் விநியோகம் போன்றவற்றின் மூலம் உயர் உற்பத்தி அடைய வழி முறைகளை மேற்கொண்டாலும், மாநிலத்தின் மொத்த பயிரிடப்படும் பரப்பில் சுமார் 52 சதம் உள்ள மானாவாரி நிலங்களின் சாகுபடியின் தரத்தை மேலும் உயர்த்த சீரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் வேளாண்மைப் பிரிவில் உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைவது மற்றும் வேளாண்மையும் அதனைச் சார்ந்த கால்நடை, மீன் வளர்ப்பு மற்றும் காடு வளர்ப்பு போன்ற சார்புத் துறைகளையும் உள்ளடக்கி, நிலத்தைச் சார்ந்த தொழில் முறையாக ஆக்குவது ஆகிய இரண்டு முக்கிய அம்சங்களைக் கொண்டு திட்டம் தீட்டப்பட்டுள்ளது.

1989—90 ஆம் ஆண்டில் பயிர் நிலைமையும் உற்பத்தி அளவும்:

1989—90 ஆம் ஆண்டில் இயல்பான தென்மேற்கு பருவ மழையானது 308.6 மி. மீட்டருக்கும் அதிகமாக 341.8 மி.மீட்டர் மழை பெய்தது, வடகிழக்குப் பருவமழை 384.8 மி.மீட்டர் பெய்தது. இது வழக்கமாகப் பெய்யும் அளவான 448.4 மி.மீட்டரை விட குறைந்த அளவாகும். பல மாவட்டங்களில் குறைவான அளவு வடகிழக்கு பருவ மழை பெய்ததாலும், பரவலாக பெய்ததன் காரணமாக தென் பகுதியில் உள்ள வறட்சிக்கு இலக்காகும் மாவட்டங்கள் பயன் அடைந்த ஒரு மாறுபட்ட பலன்கள் கொண்ட ஆண்டாக அமைந்தது. இருப்பினும் மிகக் குறைவான மழையின் காரண

1990 ஏப்ரல் 21]

மாக வட ஆற்காடு மாவட்டம் பெரிதும் பாதிக்கப்பட்டது. மாத வாரியாக கிடைத்த மழையளவு பின்வருமாறு :—

	மி. மீட்டரில். இயல்பான அளவு.	மி. மீட்டரில். கிடைக்கப் பெற்ற அளவு.
1989—		
ஏப்ரல்	47.3	36.8
மே	71.9	50.1
ஜூன்	45.8	33.8
ஜூலை	60.6	137.7
ஆகஸ்டு	94.6	42.6
செப்டம்பர்	107.4	127.7
அக்டோபர்	186.4	152.2
நவம்பர்	182.6	181.8
டிசம்பர்	79.4	50.8
1990—		
ஜனவரி	29.7	101.4
பிப்ரவரி	15.3	8.7
மொத்தம் ..	921.0	923.6

இருப்பினும், ஆகஸ்டு மாத இயல்பான மழையளவான 94.6 மி.மீட்டர் என்ற அளவிற்கு குறைவாக 42.6 மி. மீட்டர் மழையே பெய்ததாலும், மேட்டூர் அணை பாசனத்திற்கு திறக்கப்படுவதில் வெகுவான கால தாமதம் ஏற்பட்டதாலும் நெல் மற்றும் சிறு தானிய பயிர்களின் பரப்பளவில் குறைவு ஏற்பட்டுள்ளது. 12—6—1989 அன்று திறக்கப்பட வேண்டிய மேட்டூர் அணை 20—8—1989 அன்றுதான் திறக்கப்பட்டதால் காவிரி நதிப் படுகை விவசாயிகள் ஒருபோக சாகுபடியுடன் திருப்தி அடைய வேண்டிய நிலை ஏற்பட்டது. மேலும்

[1990 ஏப்ரல் 21

ஒவ்வொரு போக சாகுபடியே காய்ந்துவிடும் அபாய நிலை டிசம்பர் மாத இறுதியில் ஏற்பட்டது. ஜனவரி மாதத்தில் கடலோர மாவட்டங்களில் பெய்த 101.4 மி.மீட்டர் மழையும், குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில் பெய்த 108 மி. மீட்டர், மழை மட்டும் கிடைக்கப் பெறாமலிருந்தால், நம் மாநிலம் மிக மோசமான பயிர் இழப்பை சந்திக்க வேண்டி இருந்திருக்கும். மாநிலம் முழுவதற்கும் வழக்கமாக பெய்யும் மழை அளவான 29.75 மி. மீட்டரை ஒப்பிடும்போது இது அதிகமாகும்.

மொத்தத்தில் 1989-90 ஆம் ஆண்டில் சாகுபடியாகும் பரப்பும் உற்பத்தியும் சென்ற ஆண்டின் மதிப்பீடுகளுடன் ஒப்பிட்டு கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

பயிர்.	இயல்பான பரப்பு.	1988—89 ஆம் ஆண்டின் பரப்பு.	1989—90 ஆம் ஆண்டின் பரப்பு.
		(இலட்சம் எக்டர்)	
(1)	(2)	(3)	(4)
அரிசி ..	24.00	18.87	19.50
சிறுதானியங்கள்	18.00	13.35	15.40
பயறு வகைகள்	9.05	8.91	10.59
பருத்தி ..	2.28	2.44	2.44
கரும்பு (வெல்லமாக)	1.89	2.20	2.00

	உற்பத்தி (இலட்சம் மெ. டன்கள்)		
	இலக்கு.	1988-89.	1989-90.
அரிசி ..	60.00	55.90	58.50
சிறுதானியங்கள்	18.00	13.53	15.82
பயறு வகைகள்	5.20	4.10	4.55
பருத்தி ..	5.20	4.76	5.20
..	(இலட்சம் பொதிகள்)		
கரும்பு (வெல்லமாக)	24.20	22.83	24.20

[1990 ஏப்ரல் 21

1990 ஆம் ஆண்டில் மழையளவு இயல்பாக இருக்குமெனவும் மேட்டூர் அணை ஜூலை 12 ஆம் நாள் திறக்கப்படும் எனவும் எதிர்பார்த்து 1990-91 ஆம் ஆண்டின் இலக்குகள் கீழ்க்கண்ட வாறு நிர்ணயிக்கப்பட்டுள்ளன:

அரிசி ..	60.00	இலட்சம் மெட்ரிக் டன்கள்
சிறுதானியங்கள்	16.50	ஷ்டி
பயறுவகைகள்	5.00	ஷ்டி
பருத்தி ..	5.30	இலட்சம் பொதிகள்
கரும்பு (வெல்லமாக)	24.25	இலட்சம் மெட்ரிக் டன்கள்

விதை பெருக்கத் திட்டம் :

தரத்தை உறுதி செய்யும் நோக்கத்துடன் சான்றிதழ் பெற்ற விதைகள் முன்கூட்டியே பைகளில் அடைக்கப்பட்டு வழங்க 1989-90 ஆம் ஆண்டில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. இதே போன்று சிறிய பைகளிலும் வழங்கப்பட்டது.

1989 டிசம்பர் முடிய சாதனை மற்றும் 1990-91 ஆம் ஆண்டின் இலக்கு ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

பயிர்.	மெ. டன்களில். டிசம்பர் 1989 முடிய சாதனை.	1990-91 திட்டம்.
(1)	(2)	(3)
நெல்	21,066	24,000
கேழ்வரகு	210	254
இரகச் சோளம்	289	287
வீரிய ஒட்டுச் சோளம்	38	60
கம்பு	369	477
மக்காச் சோளம்	159	117
பயறு வகைகள்	1,664	2,900
பருத்தி—		
மானாவாரி	245	340

[1990 ஏப்ரல் 21

இயங்கிவரும் 44 அரசு விதைப் பண்ணைகள் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகத்திடமிருந்து கிடைக்கப்பெறும் கருவிதையைக் கொண்டு ஆதார விதை உற்பத்தி செய்யும் பொறுப்பு வகிக்கிறது. சான்றிதழ் விதை உற்பத்தி முற் போக்கு விவசாயிகளின் நிலங்களில் அமைக்கப்படும். விதைப் பண்ணைகள் மூலம் துறையின் தொழில் நுட்ப கண்காணிப்பில் பெருக்கம் செய்யப்பட்டு துறையில் இயங்கும் 51 விதை சுத்திகரிப்பு இயந்திரங்கள் மூலம் சுத்தம் செய்யப் பட்டு மாநிலம் முழுவதும் பரவியிருக்கும் 780 வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் விநியோகம் செய்யப்படுகின்றன. 1990-91 ஆம் ஆண்டில் கூடுதலாக 100 வேளாண்மை விரி வாக்க மையங்கள் திறக்கப்படும்.

1990-91-ஆம் ஆண்டின் பயிர்வளர்ச்சி மேம்பாட்டுப் பணிகள்

நெல் :

1989-90 ஆம் ஆண்டில் சிறப்பு உணவு உற்பத்தித் திட்டம் தேர்ந்தெடுக்கப்பட்ட 9 மாவட்டங்களில் ரூ. 872 இலட்சம் மான்யத்துடன் செயல்படுத்தப்படுகிறது. (இத்திட்ட செலவில் 75 சதம் பங்கை மைய அரசும், 25 சதம் பங்கை மாநில அரசும் ஏற்கின்றன). 1989-90 ஆம் ஆண்டில் டிசம்பர் முடிய சாதனை விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

வரிசை எண்.	பொருள்.	செயல் முறை.	
		ஆண்டு இலக்கு.	டிசம்பர் 1989 முடிய சாதனை.
(1)	(2)	(3)	(4)
1.	விதை மான்யம் (டன்கள்)	18,450	16,473
2.	நுண்ணூட்டச்சத்து (துத்த நாக சல்பேட் மினிகிட்) எண்கள்.	1,30,545	1,18,195
3.	துத்தநாக சல்பேட் (50 சதம்) எக்டரில்.	89,280	68,510
4.	ஜிப்சம் விநியோகம் (75 சதம்) எக்டரில்.	46,860	46,245
5.	(அ) பயிர் பாதுகாப்பு மருந் துகள் (50 சதம்) எக்டரில்.	1,15,616	1,09,710
	(ஆ) களைக்கொல்லி மான்யம் (50 சதம்) எக்டரில்.	1,62,808	1,38,494

1990 ஏப்ரல் 21]

வரிசை எண்.	பொருள்.	செயல் முறை. ஆண்டு இலக்கு.	டிசம்பர் 1989 முடிய சாதனை.
(1)	(2)	(3)	(4)
6.	பயிர்ப் பாதுகாப்பு கருவிகள் (எண்கள்).	3,325	2,043
7.	வேளாண் கருவிகள் (எண்கள்)	29,990	6,646
8.	செயல் விளக்கங்கள் (எண்கள்)	3,285	3,285
9.	விவசாயிகளுக்கு பயிற்சி (எண்கள்).	23,400	21,900
10.	விவசாய தொழிலாளர்களுக்கு பயிற்சி (எண்கள்).	25,500	21,900

1989-90ஆம் ஆண்டை போலவே 1990-91-ஆம் ஆண்டிலும் இத்திட்டத்திற்கு 75 விழுக்காடு உதவி அளிக்கப்படும் என மத்திய அரசு அதனுடைய முடிவை தெரிவித்துள்ளது,

சிறுதானியங்கள் :

1989-90ஆம் ஆண்டில் 18 இலட்சம் எக்டரில் சிறு தானியப் பயிர்கள் பயிரிட்டு அதில் 10 இலட்சம் எக்டரில் உயர் விளைச்சல் இரகங்கள் பயிரிட இலக்கிட்டதில் டிசம்பர் 1989 வரை 12.78 இலட்சம் எக்டர் பயிராகி அதில் 8.26 இலட்சம் எக்டரில் உயர் விளைச்சல் இரகங்கள் பயிரிடப்பட்டன. 1990-91-ல் 18 இலட்சம் எக்டரில் சிறு தானியங்கள் பயிரிடவும், அதில் 10 இலட்சம் எக்டரில் உயர்விளைச்சல் இரகங்கள் பயிரிடவும் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

பயறு வகைகள் :

1989-90 ஆம் ஆண்டில் 5.20 இலட்சம் டன்கள் பயறு வகைகள் உற்பத்தி செய்ய 12 இலட்சம் எக்டர் பரப்பு திட்டமிடப்பட்டதில் டிசம்பர் 1989 வரை 6.88 இலட்சம் எக்டர் பயிரிடப்பட்டது. 1990-91 ஆம் ஆண்டிலும் 12 இலட்சம் எக்டர் பயிர் செய்யவும் 5.00 இலட்சம் டன்கள் உற்பத்தி செய்யவும் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கென கீழ்க்காணும் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

[1990 ஏப்ரல் 21

பயறுவகைகள் மேம்பாட்டுத் திட்டம்:

1989-90 ஆம் ஆண்டில் பயறு வகைகள் பரப்பில் 10 சதம் பரப்பிற்கு பொறுக்கு விதைகள் உற்பத்தி செய்து அளிக்கப்படுகிறது. அதன்படி ஆண்டு இலக்கான 2,850 டன்களில் டிசம்பர் 1989 வரை 1,664 டன்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. 1990-91ஆம் ஆண்டு 2,900 டன்கள் 12 சத பரப்பிற்கு விதை உற்பத்தி செய்து வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் அகில இந்திய அளவில் பயிராகும் ஐ. சி. பி. எல். 87 துவரை மற்றும் கே. 851 பச்சைப் பயறு போன்ற இரகங்களும் அடங்கும்.

வானவெளியில் உள்ள தழைச் சத்தை கிரகித்து பயிருக்கு அளிக்கவல்ல நுண்ணுயிர் கலவை பொட்டலங்கள் விதையுடன் விநியோகிக்கப்படுகின்றன. 1989-90 ஆம் ஆண்டு இலக்கான 6 இலட்சம் பொட்டலங்களில் டிசம்பர் 1989 வரை 3.39 இலட்சம் பொட்டலங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன, 1990-91-ம் ஆண்டில் 6.00 இலட்சம் பொட்டலங்கள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மினிகிட் விநியோகம்:

மைய அரசு உதவியுடன் செயல்படும் திட்டமான, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு 'மினிகிட்' விநியோகம் திட்டத்தின் மூலம் பயறு வகைகள் மினிகிட் ரூ. 5 விலையில் வழங்கப்படுகின்றன. 1989-90-ம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட 73,965 எண்களில் டிசம்பர் 1989 வரை 29,467 எண்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. 1990-91-ம் ஆண்டிலும் இத்திட்டம் தொடரப்பட்டு 1.50 இலட்சம் மினிகிட்டு பைகள் வழங்கப்படும்.

தேசியபயறு வகைகள் மேம்பாட்டுத் திட்டம்:

மைய அரசு மாநில அரசு சம பங்கேற்கும் இத் திட்டத்தில் மினிகிட் விநியோகம் பெரு விள்க்கப் பண்ணை அமைத்தல், அனுசரணை ஆராய்ச்சிகளை அமைத்தல், பயிர்ப் பாதுகாப்பு உயிரின கட்டுப்பாடு, விதை முன்னிருப்பு வைத்தல் போன்ற பணிகள் 33.52 இலட்சம் ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படுகிறது.

இத் திட்டம் சேலம், தென்னாற்காடு, வடாற்காடு, கோவை மற்றும் தஞ்சை மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. 1990-91-ம் ஆண்டிலும் இத் திட்டம் தொடரப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1990 ஏப்ரல் 21]

சிறப்பு உணவு உற்பத்தி திட்டத்தின் கிழ் துவரை காய்ப்புழு கட்டுப்படுத்தும் பயிர்ப் பாதுகாப்புத் திட்டம்:

தமிழ்நாட்டில் 10,000 எக்டர் பரப்பில் துவரை பயிரில் காய்ப் புழு கட்டுப்படுத்தும் பயிர் பாதுகாப்பு திட்டமாகும். இத் திட்டத்திற்காக மத்திய அரசு ரூ. 6 இலட்சம் நிதி உதவி அளித்துள்ளது. விவசாயிகள், துவரை காய்ப்புழு தாக்குதலைக் கட்டுப்படுத்த சிபாரிசு செய்யப்பட்ட விகிதத்தில், பூச்சிக்கொல்லி மருந்து உபயோகிக்க ஒரு எக்டருக்கு ரூ. 60 உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இத் திட்டம் முழுவதும் மைய அரசு உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது.

1989-90-ல் அதிகமாக 2,800 எக்டர் பரப்பில் மேற்படி பூச்சிகளை கட்டுப்படுத்த 1.68 இலட்சம் கூடுதல் மான்யம் அளித்துள்ளது. இத்திட்டம் 1990-91-ம் ஆண்டிற்கும் தொடரும்.

கோடையில் பயறு பெருக்கத் திட்டம் :

சிறப்பு உணவு உற்பத்தி திட்டத்தின்கீழ் கோடையில் பயறு பரப்பை பெருக்க மைய அரசு உதவியால் நடத்தப்படும் இத் திட்டத்தில் ரூ. 5 இலட்சம் செலவில் 10 கிலோ அடங்கிய 12,500 பயறு மினிகிட்டுகள் விநியோகம் செய்யப்படுகிறது. இந்தத் திட்டம் முழுவதும் மைய அரசால் நிதியுதவி அளிக்கப் படுகிறது. 1989-90-ம் ஆண்டில் நிர்ணயித்த இலக்கை விட மேலும் 5,040 மினிகிட்டுகள் விநியோகம் செய்ய ரூ. 1,016 இலட்சம் ரூபாய் மைய அரசு கூடுதல் மான்யம் அளித்துள்ளது. இத் திட்டம் 1990-91-ம் ஆண்டும் தொடரும்.

பருத்தி :

பருத்தி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1989-90-ம் ஆண்டில் 2.30 இலட்சம் எக்டர் பரப்பு இலக்கிடப்பட்டதற்கு டிசம்பர் 1989 வரை 2.34 இலட்சம் எக்டரில் பயிராகியது. 1990-91-ம் ஆண்டிலும் 2.30 இலட்சம் எக்டர் பயிரிட இலக்கிடப் பட்டுள்ளது. இம் மொத்தப் பரப்பிலும் பொறுக்கு விதைகள் மேம்பாடடைந்த உழவியல் முறைகள், சமசீர் உரமிடல் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படும். தீவிர பருத்தி சாகுபடி திட்டம் என்ற மைய அரசு உதவியுடன் செயல்படும் திட்டத்தின் மூலம் 1989-90-ம் ஆண்டில் 22,380 எக்டர் பரப்பில் 25 சத மான்ய உதவியுடன் பயிர்ப் பாதுகாப்பு முறைகள் மேற்கொள்ளவும், 1,050 எண்கள் பயிர்ப் பாதுகாப்பு கருவிகளை 50 சத விலையில் அளிக்கவும் திட்டமிடப்பட்டு டிசம்பர் 1989 வரை 2,628 எக்டரில் பயிர்ப்பாதுகாப்பும், 42 கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன. 1990-91-ம் ஆண்டில் இத் திட்டத்தின்கீழ் 20,000 எக்டர் பரப்பில் பயிர்ப் பாதுகாப்பு

முறைகள் மேற்கொள்ளவும், 1,050 பயிர்ப் பாதுகாப்பு கருவிகள் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. பருத்தி பயிரைத் தாக்கும் ''புரோடினியா'' புழுவை கட்டுப்படுத்த 1989–90-ம் ஆண்டில் 1,200 எக்டருக்கு ''வைரஸ்'' வளர்த்துவிட திட்டமிடப்பட்டு டிசம்பர் 1989 வரை 415 எக்டரில் இப்பூச்சி நாசினி விடப் பட்டுள்ளது. 1990-91-ம் ஆண்டில் இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும்,

கரும்பு மேம்பாட்டுத் திட்டம்:

1989-90-ம் ஆண்டில் 2 இலட்சம் எக்டர் பரப்பில் கரும்பு சாகுபடி செய்ய திட்டமிட்டதில் டிசம்பர், 1979 வரை 1,79 இலட்சம் எக்டரில் பயிரிடப்பட்டது. 1990-91-ம் ஆண்டில் 2 இலட்சம் எக்டரில் கரும்பு பயிரிட இலக்கிடப்பட்டுள்ளது, இந்த மொத்த சாகுபடி பரப்பில் சமசீர் உரமிடல் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட் டுள்ளது. சர்க்கரை ஆலைப் பகுதிகளில் கரும்பு பயிரில் தோன்றும் இளங்குருத்துப் புழு மற்றும் இடைக்கனுப் புழுவை ஒட்டுண்ணிகள் மூலம் கட்டுப்படுத்த 21 ஒட்டுண்ணி வளர்ப்பு நிலையங்கள் செயல்படுகின்றன. அவை மூலம் ஆண்டுக்கு 10,500 எக்டரில் ஒட்டுண்ணிகள் வளர்த்து விடுவிக்கப்படுகின்றன. டிசம்பர் 1989 வரை 7,310 எக்டரில் ஒட்டுண்ணிகள் வளர்த்து விடுவிக்கப்பட்டன. 1990-91-ம் ஆண்டில் நிலையங்களில் முழு திறனுக்கு இத்திட்டம் செயல்படும். மேலும் செயல் விளக்கங்கள் விவசாயிகளுக்கு கட்டுகோப்பு சாகுபடி முறைகளை விளக்கிட 575 செயல் விளக்கங்கள் அமைக்க திட்டமிட்டதில் டிசம்பர் 1989 வரை 372 செயல் விளக்கங்கள் அமைக்கப்பட்டன. 1990-91-ம் ஆண்டில் 575 செயல் விளக்கங்கள் அமைக்க திட்டமிடப் பட்டுள்ளது.

சிறுதளைப் பைகள்:

இத்திட்டத்தின் மூலம் புதிய இரகங்களை பரவச் செய்ய அனுசரணை ஆராய்ச்சியுடன் கூடிய செயல் விளக்கம் அமைக்க நெல் மற்றும் சிறு தானிய விதைகள் கொண்ட சிறுதளைப் பைகள் பெயரளவில் விலைக்கு வழங்கப்படுகின்றன. 1989-90-ம் ஆண்டில் 70,000 நெல் மற்றும் 59,200 சிறு தானிய விதைகள் கொண்ட சிறுதளைப் பைகள் வழங்க இலக்கிடப்பட்டு டிசம்பர் 1989 வரை 63,363 நெல் மற்றும் 61,373 சிறு தானியம் சிறு தளைப் பைகள் விநியோகிக்கப்பட்டன. மைய அரசால் முழுமை யாக நிதி அளிக்கப்படும் இத்திட்டம் 1990-91-ம் ஆண்டிலும் தொடரப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

எருவும் உரமும்:

1989-90-ம் ஆண்டில் 8.0 இலட்சம் டன்கள் தழை, மணி மற்றும் சாம்பல் சத்து உரங்கள் விநியோகம் செய்ய திட்ட மிட்டதில், டிசம்பர் 1989 வரை 3.41 இலட்சம் டன்கள் தழைச் சத்து, 1.50 இலட்சம் டன்கள் மணிச்சத்து மற்றும் 1.68 இலட்சம்

டன்கள் சாம்பல் சத்து கொண்ட மொத்தம் 6.59 இலட்சம் டன்கள் உரங்கள் விநியோகிக்கப்பட்டன. 1990–91-ம் ஆண்டில் 8.58 இலட்சம் டன்கள் தழை, மணி மற்றும் சாம்பல் சத்து உரங்கள் விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. தனியார் கடைகள் மூலம் விநியோகம் செய்யப்படும் உரங்களின் தரத்தை பாதுகாக்க 6 உர பரிசோதனை நிலையங்கள் ஆண்டொன்றுக்கு 11,000 உரமாதிரிகளை ஆய்வு செய்யும் திறனுடன் இயங்குகின்றன. டிசம்பர் 1989 வரை 8,427 உரமாதிரிகள் எடுக்கப்பட்டு ஆய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளன. தரக்குறைவான உர விநியோகம் செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

விவசாயிகளின் நிலங்களில் அமைக்கப்பட்ட ஆராய்ச்சிகளின் முடிவுகள் அளிக்கும் ஊக்கம் காரணமாக யூரியாவுடன் வேப்பம் பிண்ணாக்கு கலந்தும் மேலுரத்தை 2 பகுதிகளாக பிரித்து இடும் முறையையும் விவசாயிகளிடையே பரவிடச் செய்யப்படுகிறது.

நீலப் பச்சைப்பாசி, அசோலா, ரைசோலியம் மற்றும் அசோஸ் பைரில்லம் உயிரின உரங்களின் உபயோகம் அதிகரித்து வருவதால் அவைகளை இரசாயன உரங்களுடன் உபயோகிக்க விவசாயிகள் ஊக்குவிக்கப்படுகின்றனர். 1989-90-ம் ஆண்டில் 2.60 இலட்சம் எக்டரில் நீலப் பச்சைப் பாசியிட இலக்கிட்டத்தில் டிசம்பர் 1989 முடிய 2.17, இலட்சம் எக்டரில் நீலப் பச்சைப்பாசி இடப்பட்டது. மேலும் 12 இலட்சம் பொட்டலங்கள் அசோஸ் பைரில்லம் விநியோகம் செய்ய திட்டமிட்டதில் டிசம்பர் 1989 வரை 10.29 இலட்சம் பொட்டலங்கள் விநியோகம் செய்யப்பட்டது. 1990–91 ஆம் ஆண்டில் இத்திட்டங்கள் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

உற்பத்தி ஊக்கமளிப்பு:

காவிரி நதிப்படுகை விவசாயிகளை நெல் உற்பத்தியில் ஊக்கமளிக்க அவர்களால் தமிழ்நாடு நுகர்வோர் பொருள் வாணிபக் கழகத்திற்கு கொள்முதலுக்காக அளிக்கப்படும் ஒவ்வொரு குவிண்டால் நெல்லுக்கும் ரூ. 35 என்ற விகிதத்தில் ஊக்கத் தொகை அளிக்கப்படுகிறது. டிசம்பர் 1989 வரை ரூ. 24.50 கோடி செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டம் மூலம் 1990–91 ஆம் ஆண்டிலும் 35 கோடி ரூபாய் வழங்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

பயிர் பாதுகாப்பு :

1989–90 ஆண்டு உணவு மற்றும் உணவல்லாத பயிர்களில் பூச்சிதடுப்பு நடவடிக்கைகளை 58.35 இலட்சம் எக்டரிலும் நோய் தடுப்பு நடவடிக்கைகள் 20.29 இலட்சம் எக்டரிலும் செயல்படுத்த திட்டமிடப்பட்டு, டிசம்பர் 1989

வரை 46.63 இலட்சம் எக்டாரில் பூச்சி தடுப்பு நடவடிக்கைகளும் 19.18 இலட்சம் எக்டாரில் நோய் தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

1990-91 ஆம் ஆண்டு 58.74 இலட்சம் எக்டாரில் பூச்சி தடுப்பு நடவடிக்கைகளும் 20.47 இலட்சம் எக்டாரில் நோய் தடுப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளன.

பூச்சி நோய்கள் தாக்குதலுக்கான வாய்ப்பை முன்கூட்டியே விவசாயிகளுக்குத் தெரியப்படுத்தவும், அதற்குத் தேவையான தடுப்பு நடவடிக்கைகளை உடனடியாக செயல்படுத்தவும், பூச்சி நோய் கண்காணிப்புத் திட்டம் 1989-90-ஆம் ஆண்டு பெருமளவில் மேற்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு வாரமும் 7.124 திடல்களில் பூச்சி நோய்க் கண்காணிப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு இவ்விடங்களிலிருந்து பெறப்படுகின்ற புள்ளி புவரங்கள் மாவட்ட அளவில் ஒவ்வொரு வாரமும் விரிவாக்கப் பணியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகள் அடங்கிய கூட்டத்தில் ஆராயப்பட்டு, அவ்வாரத்திற்கு விவசாயிகளுக்கு அறிவிக்க வேண்டிய பூச்சி நோய் தாக்குதல் பற்றிய முன்னெச்சரிக்கை செய்திகள் தயாரிக்கப்படுகிறது. இச்செய்திகள் வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலமாகவும் மற்றும் விரிவாக்கப்பணியாளர்களின் மூலமாகவும் விவசாயிகளுக்குத் தெரியப்படுத்தப்படுகிறது. இத்திட்டம் 1990-91 ஆம் ஆண்டுகள் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1989-90 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு தொழில் நுட்பங்கள் பெருமளவில் பரிந்துரைக்கப்பட்டு கடைபிடிக்கப்பட்டு வருகிறது. பலதரப்பட்ட அதிக செலவில்லாத ஒருங்கிணைந்த பூச்சி நோய் ஒழிப்பு முறைகளான சாகுபடிமுறை கையினால் எடுத்து அழிக்கும் முறை, உயிரியல் முறை முதலியவை கடைபிடிக்கப்பட்டதோடு, தேவைப்பட்டால் மட்டுமே கடைசி நடவடிக்கையாக பூச்சி மருந்து தெளிக்கும் முறை செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு முறைகள் எல்லா விவசாயிகளுக்கும் தெரிவிக்கும் பொருட்டு 99 இடங்களில் பெருவிளக்கத் தளைகள் ஒவ்வொன்றும் 20 எக்டேரில் நீர் பாசன பகுதியில் நிறுவப்பட்டுள்ளது. மேலும் 84 இடங்கவில் நீர்பிடிப்பு பகுதிகளில் ஒவ்வொரு பெரு விளக்கத்தளை 40 எக்டேரில் அமைக்கப்பட்டுள்ளது. ஒரு உட்கோட்டத்தில் ஒரு கிராமம் வீதம் மொத்தம் 99 கிராமங்கள் ஒருங்கிணைந்த பூச்சி/நோய் நிர்வாகக் கிராமங்களாக ஏற்றுக் கொண்டு எல்லா ஒருங்கிணைந்த பூச்சி நோய் தடுப்புத் தொழில் நுட்பங்கள் பின்பற்றப்பட்டன. இத்திட்டம் 1990-91 ஆம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

1990 ஏப்ரல் 21]

ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்புத் தொழில் நுட்பத்தை விவசாயிகளுக்கு பரந்த அளவில் தெரிவிக்கும் பொருட்டு ஒரு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தில் ஒரு உட் கோட்டத்திற்கு 50 விவசாயிகள் வீதம் மொத்தம் உள்ள 99 கோட்டத்தை சேர்ந்த 4,950 விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு தொழில் நுட்பப் பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும் ஒரு ஹெக்டேருக்கு ரூ. 100 மதிப்புள்ள உபகரணங்கள் 50 சத மான்ய விலையில் எல்லா மாவட்டத்திலும் 14,640 எக்டேர் பரப்பில் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் டிசம்பர் 1986 வரை 1,200 விவசாயிகளுக்கு பயிற்சியும், 1,160 எக்டேர் பரப்பில் மானிய விலையில் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளது.

1990-91 ஆம் ஆண்டு இத் திட்டத்தில் ஒரு கோட்டத்திற்கு 100 விவசாயிகள் வீதம் மொத்தம் 9,900 விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கவும், 14,640 எக்டேரில் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு உபகரணங்கள் 50 சத மான்யத்தில் வழங்கவும் திட்டமிடப் பட்டுள்ளது.

பூச்சி நோய்களை ஒழிக்க மைய அரசின் நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்களின் 1989–90 ஆண்டுக்கான இலக்கு டிசம்பர் 1989 முடிய சாதனை மற்றும் 1990-91 இலக்குகள், ஆகியவை கீழே தரப்பட்டுள்ளன :—

வரிசை எண்:	பூச்சி நோயின் பெயர்.	1989–90 ஆம் ஆண்டு திட்ட மிடப் பட்ட பரப்பு.	டிசம்பர் 89 வரை செயல் படுத்தப் பட்ட பரப்பு.	1990-91 ஆம் ஆண்டு திட்ட மிடப் பட்டுள்ள பரப்பு.
(1)	(2)	(3)	(4)	(5)
		(இலட்சம் எக்டேரில்).	(இலட்சம் எக்டேரில்).	(இலட்சம் எக்டேரில்).
1.	நெல் புகையான் தாக்குதல்.	0.20	0.09	0.30
2.	குலை நோய் ..	0.20	0.08	0.40
3.	பச்சைத் தத்துப் பூச்சி.	0.18	0.03	0.30
4.	இலைச் சுருட்டுப் புழு.	0.18	0.18	0.40
5.	எலி ஒழிப்பு ..	1.00	0.33	2.00
6.	சோளம் தண்டு பூச்சி.	0.41	0.02	0.10

[1990 ஏப்ரல் 21

இத்திட்டத்தில் பூச்சி மருந்துகள் விவசாயிகளுக்கு 50 சத மான்யத்தில் வழங்கப்படுகின்றன. இத்திட்டம் 1990-91 ஆம் ஆண்டும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்தில் மான்யமாக செலவிடப்படும் தொகையை மத்திய மற்றும் மாநில அரசுகள் சம அளவில் ஏற்கின்றன. இத் திட்டம் சிறப்பு உணவு உற்பத்தி திட்டம் செயல்படும் மாவட்டங்கள் தவிர, இதர மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது.

விவசாயிகளுக்கு தரமான பூச்சி மருந்துகள் கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டு, பூச்சி மருந்துகளுக்கு தரக் கட்டுப்பாடு டணிகள் மேற்கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் 16,200 பூச்சி மருந்து மாதிரிகள் ஒன்பது பூச்சி மருந்து ஆய்வு நிலையங்களில் ஆய்வு செய்யப்படுகிறது. விவசாய விரிவாக்க மையங்களில் விற்பனை செய்யப்படும் பூச்சி மருந்துகள் பொறுத்த வரையில், மருந்துகள் மாதிரி எடுத்து ஆய்வு செய்து, தரமானது என தெரிந்த பின்னரே விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. மேலும் தனியார் விற்பனை நிலையங்களில் முன்னறிவிப்பின்றி பூச்சி மருந்து மாதிரிகள் எடுக்கப்பட்டு ஆய்வு செய்யப்படுகிறது. அதில் தரமற்றதாக உள்ள மருந்துகளை தயாரிப்பவர்கள் மற்றும் விற்பவர்கள் மீது குற்றத்திற்கு ஏற்ப பூச்சி மருந்து சட்டம் 1968-ன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

உழவர் பயிற்சி நிலையங்கள் :

மாநிலத்தில் மாவட்டத்திற்கு ஒன்று என கோவை, மதுரை, பசும்பொன் தேவர் திருமகன், காமராசர், சிதம்பரனார், திண்டுக்கல் காயிதே-மில்லத் மற்றும் திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டங்கள் தவிர்த்து, எல்லா மாவட்டங்களிலும் மொத்தம் 12 உழவர் பயிற்சி நிலையங்கள் இயங்குகின்றன. இந்நிலையங்கள் உற்பத்தி தொழில் நுட்பங்கள் பற்றி விவசாயிகளுக்கு நிலைய மற்றும் கிராம அளவில் பயிற்சி அளிக்கப்படுகின்றன. அதுவன்றி, உழவர் விவாதக் குழு அமைப்பாளர்களுக்கும் நிலையப் பயிற்சியும், பண்ணை மகளிருக்கு செயல் விளக்கப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. 1989-90 ஆம் ஆண்டின் இலக்கு, டிசம்பர் 1989 முடிய சாதனை மற்றும் 1990-91 ஆம் ஆண்டின் இலக்கு, ஆகியவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

வரிசை எண்ணும், பயிற்சியும்.	1989-90-ம் ஆண்டு இலக்கு.	டிசம்பர் முடிய சாதனை.	1990-91-ம் ஆண்டு இலக்கு.
(1)	(2)	(3)	(4)
1 விவசாயிகள் மற்றும் பண்ணை மகளிருக்கு நிலைய பயிற்சி (எண்கள்)	264	223	264

1990 ஏப்ரல் 21]

2. பண்ணை மகளிருக்கு செயல்விளக்கப் பயிற்சி (எண்கள்).	132	113	132
3. உழவர் மன்ற விவாதக் குழு அமைப்பாளர்களுக்கு நிலையப் பயிற்சி (எண்கள்).	120	120	120
4. கிராமப்புற பயிற்சி (எண்கள்).	1,320	1,050	1,320

1990-91 ஆம் ஆண்டில் உழவர் பயிற்சி நிலைய திட்டங்கள் யாவும் நிலைமைக்கேற்பவும், உழவர் புதிய உத்திகளில் தனித் திறனை பெறும் வாய்ப்புடனும் சீர் செய்யப்படும்.

வேளாண்மைப் பள்ளிகள் :

எட்டாவது வரை படித்த 18 முதல் 30 வயதிற்குட்பட்ட விவசாயக் குடும்பங்களைச் சார்ந்த கிராமப்புற இளைஞர்கள் அறிவியல் வேளாண்மை பயிற்றுவிக்க 1961 ஆம் ஆண்டு முதல் வேளாண் பள்ளிகள் செயல்படுகின்றன. தற்பொழுது மாவட்டத்திற்கு ஒன்று என பசும்பொன் தேவர் திருமகன், திண்டுக்கல் காயிதே-மில்லத், காமராசர், சிதம்பரனார், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்கள் தவிர மற்ற மாவட்டங்களில் மொத்தமாக 12 வேளாண் பள்ளிகள் உள்ளன. திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களிலிருந்து வரும் இளைஞர்கள் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள குடுமியான்மலையில் உள்ள பள்ளியிலும், திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்ட இளைஞர்கள் கிள்ளிகுளம் பள்ளியிலும், பசும்பொன் தேவர் திருமகன் மற்றும் காமராசர் மாவட்ட இளைஞர்கள் பரமக்குடி பள்ளியிலும், திண்டுக்கல் காயிதே-மில்லத் மாவட்ட இளைஞர்கள் மேலூர் பள்ளியிலும், கோயம்புத்தூர் மற்றும் பெரியார் மாவட்ட இளைஞர்கள் பவானிசாகரில் உள்ள வேளாண்மைப் பள்ளியிலும் சேர்க்கப்படுகின்றனர்.

[1990 ஏப்ரல் 21

1984-85 ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு பள்ளியும் தலா 25 பண்ணை இளைஞர்களுக்கு மாதம் ரூ. 100 உதவித் தொகை அளித்து பயிற்சி அளிக்கிறது. பயிற்சி காலம் செப்டம்பர் மாதம் தொடங்கி அடுத்த ஆகஸ்டு 31 வரை நீடிக்கும்.

	1989-90-ம் ஆண்டு இலக்கு.	டிசம்பர் 1989 முடிய சாதனை.	1990-91-ம் ஆண்டு இலக்கு.
(1)	(2)	(3)	(4)
வேளாண்மை பள்ளி மாணவர்கள்.	300	298	300

மாநில பயிற்சி நிலையம், குடுமியான்மலை :

இம்மாநில பயிற்சி நிலையம் செப்டம்பர் 1981-ல் பயிற்சி வழி தொடர்புத் திட்டத்தில் துவக்கப்பட்டது. இந் நிலையத்தின் நோக்கம்:—

(அ) புதிதாக அமர்த்தப்படும் வேளாண் அலுவலர்களுக்கு அறிமுகப் பயிற்சி அளித்தல் (15 நாட்கள்).

(ஆ) வேளாண் அலுவலர்கள் மற்றும் துணை வேளாண் அலுவலர்களுக்கு சிறப்பு பயிற்சி அளித்தல் (15 நாட்கள்).

(இ) கிராம விரிவாக்க பணியாளர்களுக்கு புத்துணர்வு பயிற்சி அளித்தல் (2 மாதங்கள்).

(ஈ) கிராம விரிவாக்க பணியாளர்களுக்கு சிறப்பு பயிற்சி அளித்தல் (15 நாட்கள்).

1989-90 ஆம் ஆண்டின் சாதனை மற்றும் 1990-91 ஆம் ஆண்டு இலக்கு கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

பயிற்சி.	பங்கு பெற்ற நபர்கள். 1989-90 ஆம் ஆண்டு இலக்கு.	டிசம்பர் 1989 வரை சாதனை.	1990-91 ஆம் ஆண்டு இலக்கு.
(1)	(2)	(3)	(4)
1. வேளாண்மை அலுவலர்களுக்கு அறிமுகப் பயிற்சி.	100	..	50

1990 ஏப்ரல் 21]

2.	வேளாண்மை அலுவலர் மற்றும் துணை வேளாண்மை அலுவலர் களுக்கு சிறப்பு பயிற்சி.	945	575	1,400
3.	கிராம விரிவாக்கப் பணி யாளர்களுக்கு சிறப்பு பயிற்சி.	1,000	814	2,000
	மொத்தம் ..	2,045	1, 389	3,450

தமிழக பண்ணை மகளிர் மேம்பாட்டுத் திட்டம் :

1986–87-ல் துவக்கப்பட்ட இத்திட்டம் 7 ஆண்டு காலத்திற்கு ரூபாய் 3.21 கோடி ''டேனிடா'' நிறுவன நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் செங்கை—அண்ணா, தென்னாற்காடு, தஞ்சை, இராமநாதபுரம், பசும்பொன் தேவர் திருமகன், மதுரை மற்றும் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டங்களில் உள்ள உழவர் பயிற்சி நிலையங்கள் மூலம் பண்ணை மகளிர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த செயல்படுகிறது. ஆண்டுதோறும், ஆடுதுறை மற்றும் குடுமியான்மலையில் 16 நிலையப் பயிற்சிகளும், 6 மாவட்டங்களில் 80 கிராம அளவு பயிற்சிகளும், ஒவ்வொரு பயிற்சியும் 30 பண்ணை மகளிர் பங்கேற்புடன் நடத்தப்படுகிறது. டிசம்பர் 1989 வரை 50 கிராமப் பயிற்சியும், 11 நிலையப் பயிற்சியும் அளிக்கப்பட்டன. 1990–91 ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடரப்படும்.

விரிவாக்கப் பிரிவை மாற்றியமைத்தல் :

வேளாண்மை மேம்பாட்டு பணிகளில் மக்கட் பிரதிநிதிகள் பங்கேற்கும் வகையில், வட்டார அளவில் உள்ள வேளாண்மை விரிவாக்கம் மற்றும் இடுபொருள் பிரிவுகளைச் சேர்ந்த பணியாளர்கள் அனைவரும் இணைக்கப்பட்டு மூத்த வேளாண்மை அலுவலரின்கீழ் (வேளாண் வளர்ச்சி அலுவலர் என்று மறு பெயரிட்டு) பணியாற்றும் அமைப்பு 1–6–1989 முதல் ஏற்படுத்தப்பட்டது. இவ்வேளாண்மை வளர்ச்சி அலுவலர் ஊராட்சி ஒன்றிய குழுவிற்கு வேளாண் வளர்ச்சி பணிகள் பற்றிய தகவல்களை அளிக்கும் பொறுப்பு வகிக்கிறார். அதே போல் வட்ட அளவில் உள்ள அவ்விரு பிரிவுகளும் இணைக்கப்பட்டு வட்டத்திற்கு ஒரே வேளாண்மை உதவி இயக்குநர் என்ற அமைப்பை உருவாக்கும் பிரேரணை 15–4–1990 முதல் நடைமுறைக்கு வருகிறது. உலக வங்கி நிதியுதவியுடன் தமிழ்நாடு வேளாண் மேம்பாட்டுத் திட்டம் என்ற திட்டப் வேளாண்மைச் சார்ந்த தீவன மேம்பாடு, கால்நடை வளர்ப்பு, நிலச் சீர்திருத்தம் போன்ற பிரிவுகளை உள்ளடக்கி செயல் படுத்தப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[1990 ஏப்ரல் 21

'சிடா' உதவியுடன் வேளாண் காடு வளர்ப்பு :

சிறு மற்றும் குறு உழவர்களின் சாகுபடிக்கு லாயக்கற்ற நிலங்களை உபயோகப்படுத்தும் நோக்கோடு ஸ்வீடன் நாட்டு நிறுவன உதவி நிதியுடன் வேளாண்மை காடுகள் திட்டம் 1988-89 ஆம் ஆண்டு முதல் ஐந்தாண்டு காலத்திற்கு செயல் படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் எரிபொருள், தீவன மரம் மற்றும் பழவகைகள் போன்றவற்றுக்கான கன்றுகள் அரசு விதைப் பண்ணைகளின் மூலமாகவும், விவசாயிகளின் நிலங்களில் அமைக்கப்படும் நாற்றங்கால் மூலமாகவும் தயார் செய்யப்படுகின்றன. சிறு மற்றும் குறு உழவர்களுக்கு குறிப்பாக மானாவாரி நிலங்களில் நட தேவைப்படும் கன்றுகளை வழங்கிட வேளாண் காடு வளர்ப்புத் திட்டம் ஏற்படுத்தப்பட்டது. 1989-90 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்ட 60 இலட்சம் கன்றுகளில் டிசம்பர் 1989 வரை 53,63 இலட்சம் கன்றுகள்/ஒட்டு மரக் கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. இக்கன்றுகளை பராமரிக்க நிலைப் பெற்றிருக்கும் கன்றுகளின் எண்ணிக்கைக்கொப்ப ஊக்கத் தொகை வழங்கப்படுகிறது. இத் திட்டம் 1990-91 ஆம் ஆண்டில் ரூ. 59 இலட்சம் செலவில் 70 இலட்சம் கன்றுகள் வழங்க திட்டமிடப்பட்டு செயல்பட உள்ளது. மேலும் ரூ. 63 இலட்சம் ஊக்கத் தொகையாக அளிக்கப்பட உள்ளது. இது தவிர பண்ணைத் திடல்கள் மற்றும் பெருவிளக்கப் பண்ணைகள் போன்றவைகளும் அமைக்கப்பட்டு வருகின்றன. 1990-91 ஆம் ஆண்டில் ரூ. 6.15 இலட்சம் செலவில் பண்ணைத் திடல்களும் மற்றும் பெருவிளக்கப் பண்ணைகளும் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மண் பரிசோதனை நிலையங்கள் :

விவசாயிகளின் நிலங்களிலிருந்து மண்மாதிரிகள் எடுத்து ஆய்வு செய்து, மண்ணின் வளத்திற்கேற்பவும் பயிருக்கேற்பவும் உர அளவுகள் சிபாரிசு செய்யப்படுகின்றன. 1956 ஆம் ஆண்டில் கோவையில் மண் பரிசோதனை நிலையம் முதன் முதலாக ஏற்படுத்தப்பட்டது. அது முதல், தமிழ்நாட்டில் மண் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுகின்றன. அதன்பின் பிரிக்கப்பட்ட மாவட்டங்களைத் தவிர்த்து இதர மாவட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு மண் பரிசோதனை நிலையம் மற்றும் நடமாடும் பரிசோதனை நிலையம் நிறுவப்பட்ட அளவிற்கு இப்பிரிவு வளர்ச்சியை கண்டுள்ளது. தற்சமயம் வேளாண் துறையில் 14 மண் பரிசோதனை நிலையங்களும், 15 நடமாடும் மண் பரிசோதனை நிலையங்களும் உள்ளன.

மண் பரிசோதனை திட்டத்திங்கீழ் டிசம்பர் 1989 முடிய அடையப் பெற்ற சாதனையும் மற்றும் 1990-91 ஆம் ஆண்டிற்கான இலக்குகளும் பின்வருமாறு :

1990 ஏப்ரல் 21]

	மண் மாதிரிகள் (இலட்சம் எண்களில்)		
	இலக்கு 1989–90	சாதனை டிசம்பர் 1989 முடிய	இலக்கு 1990–91
(1)	(2)	(3)	(4)
மண் பரிசோதனை நிலையங்கள்	7.08	4.99	7.09
நடமாடும் மண் பரிசோதனை நிலையங்கள்.	2.70	2.01	2.70

நில அளவை :

1990–91 ஆம் ஆண்டில் தற்பொழுது கிடைக்கப்பெறும் மண் பரிசோதனைகளின் முடிவுகளைக் கொண்டு ஒவ்வொரு முக்கிய பயிருக்கு கிராமவாரியாக உர சிபாரிசு தயாரிக்க திட்டமிடப் பட்டுள்ளது.

தொலை உணர்வின் உத்திகள் :

தமிழ்நாட்டில் மைய அரசின் உதவியுடன் தொலை உணர்வின் வழி பயிர் பரப்பு மற்றும் உற்பத்தி மதிப்பீட்டுத் திட்டத்தின் மூலம் அண்ணா பல்கலைக் கழகத்தில் தொலை உணர்வு நிலையம் ஒன்று கீழ் குறிப்பிட்ட முக்கிய நோக்கங்களுடன் 1989–90 முதல் 1991–92 ஆகிய மூன்று ஆண்டுகளுக்கு செயல்பட நிறுவப்பட்டுள்ளது.

நெல் பயிரிடும் பரப்பின் மதிப்பீடு மற்றும் உற்பத்தி முன்னறிதல் போன்றவற்றிற்கான உதவி செயலாக்கங்கள் பரிமாற்றம்.

வேளாண் துறையின் களப்பணியாளர்களின் மூலம் ஐ.ஆர். எஸ்.1--ஏ வின் வெளிக்கலத்தின் மூலம் பெறப்பட்ட சாகுபடி பரப்பு மற்றும் உற்பத்திக்கான புள்ளிவிவரங்களை மாதிரி அடிப்படையில் ஆய்வு மேற்கொள்ளுதல்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

[1990 ஏப்ரல் 21

தொலை உணர்வுத் திட்டத்தின் முக்கிய அடிப்படை நோக்கமே பயிரின் நிலை அறிந்து உரிய நிவாரண நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

பூச்சிக்கொல்லி மாதிரி ஆய்வுக்கூடங்கள்:

பூச்சிக்கொல்லி சட்டம், 1968-ன் பிரிவுகள்படி தரமான பூச்சி மருந்துகள் விவசாயிகளுக்கு சென்றடைவதை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு மாநில அரசுக்கு உள்ளது.

ஆண்டுக்கு 16,200 மாதிரிகளை ஆய்வு செய்யும் திறன் கொண்ட 9 ஆய்வகங்கள் இயங்குகின்றன. 1989-90-ல் டிசம்பர் மாதம் முடிய 13,390 மாதிரிகள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இவ்வாய்வகங்கள் மூலம் 1990-91-ல் 16,200 முன்மாதிரிகள் ஆய்வு செய்யப்படும்.

உரக்கட்டுப்பாடு ஆய்வகங்கள் :

தமிழகத்தில் ஆண்டுதோறும் சுமார் 16,600 கிராமங்களில் அமைந்துள்ள 15,000 உர விற்பனை நிலையங்கள் மூலம் 1.5 மில்லியன் டன்கள் உரம் விற்பனை ஆகிறது. அதன் தரத்தைக்கட்டுப்படுத்த 6 உர ஆய்வுக்கூடங்கள் மொத்தம் 11,000 மாதிரிகள் ஆய்வு செய்யும் திறனுடன் செயல்படுகின்றன. 1989 டிசம்பர் வரை 8,417 மாதிரிகள் ஆய்வுசெய்யப்பட்டன. 1990–91 ஆம் ஆண்டில் முழுத்திறனுக்குச் செயல்படும்.

நுண்ணூட்டக் கலவை தயாரிக்கும் திட்டம் :

பல்வேறு பயிர்களுக்கு நுண்ணூட்டக் கலவைகளின் இன்றியமையாமை குறித்த செயல் விளக்கம் தற்போது நடத்தப்பட்டுள்ளது. விவசாயிகளும் பல்வேறு பயிர்களுக்கு இடவேண்டிய நுண்ணூட்டச் சத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்துள்ளதால், இதன் தேவையும் நிலையாக அதிகரித்துள்ளது. உயர் தரமான நுண்ணூட்டக் கலவைக்களை வழங்கும் பொருட்டு குடுமியான் மலையில் ‘‘ நுண்ணூட்டக் கலவை ’’ தயாரிக்கும் திட்டத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது. இத்திட்டம் இலாப நட்டமின்றி செயல்படுத்தப்படுகிறது.

1989 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் முடிய 632 டன்கள் நுண்ணூட்டக் கலவை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. 1990–91-ல் 1,000 டன்கள் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

நுண்ணுயிர்க் கலவை உற்பத்தித் திட்டம் :

தற்போதுள்ள நவீன சாகுபடியில் உயிரியல் உரங்கள் மூலம் மண்வளத்தினைப் பாதுகாப்பது அதிமுக்கியத்துவம் அடைந்துள்ளது. மண்ணில் உள்ள உயிரினங்களுக்கு உயிரியல் உரங்கள்

எவ்விதப் பாதிப்பும் இல்லாததால் பயறு மற்றும் இதர தழைப் பயிர்களுக்கு ரைசோனியம் பயன்படுத்துவதற்கு உழவர்களிடையே அதிகத் தேவை எழுந்துள்ளது. சமீப ஆண்டுகளில் நெல், சிறு தானியங்கள், அசோடாபேக்டர் மற்றும் பாஸ்போபாக்டிரியம் போன்ற உயிரினங்கள் பயன்படுத்தப்படுகிறது. அசோஸ்பைரில்லம் நுண்ணுயிரின் தேவை நிலையாக அதிகரிக்கப்பட்டு அதற்கேற்ப உற்பத்தியும் அதிகரித்துள்ளது.

இவ்வாண்டு இலக்கான 20 இலட்சம் பொட்டலங்களில் 1989 டிசம்பர் முடிய 16.67 இலட்சம் பொட்டலங்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

1990–91 ஆம் ஆண்டில் கடலூர் மற்றும் இராமநாதபுரம் நிலையங்களின் மூலம் உழவர்களிடையே அதிகரித்துள்ள தேவைக்கேற்ப 20 இலட்சம் பொட்டலங்கள் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேற்கூறிய உத்திகள் மற்றும் நடவடிக்கைகள் மூலம் வேளாண் பொருட்கள் உற்பத்தி செய்வதில் தன்னிறைவு அடையவும் கிராம மக்களின் வாழ்வுவளம் பெறவும் இத்துறை குறிக்கோள் கொண்டு செயல்பட்டு வருகிறது.

சாகுபடியாகும் மொத்தப்பரப்பில் சுமார் 52 சதம் மானாவாரியாக உள்ளதால் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் 1990–91 ஆம் ஆண்டில் 150 இலட்சம் ரூபாய் செலவில் ஒருங்கிணைந்த மானாவாரி மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. அதன் மூலம் மானாவாரி சாகுபடி முறைகள் விவசாயிகளின் பங்கேற்புடனும் எக்டேருக்கு ரூ. 500 மானியத்துடனும் மேற்கொள்ளப்படும். மொத்தம் 45,000 எக்டேர் மானாவாரி நிலம் பயன் பெறும்.

எண்ணெய் வித்துக்கள் துறை.

இம்மாநிலத்தில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியைப் பெருக்குவது மற்றும் சமையல் எண்ணெய் விநியோகத்தை அதிகரித்து இதன் மூலமாக எண்ணெய் இறக்குமதியைக் குறைப்பது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு எண்ணெய் வித்து அபிவிருத்தித் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. நமது நாட்டில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்யும் மாநிலங்களில் குஜராத் மாநிலத்திற்கு அடுத்தபடியாக தமிழகம் முக்கிய அங்கம் வகிக்கின்றது.

1989–90 ஆம் ஆண்டில் 13.35 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பைச் சாகுபடிக்குக் கொண்டுவந்து 15 இலட்சம் மெ. டன் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி செய்திடத் திட்டமிடப்பட்டுள்ளது. 1990 பிப்ரவரி முடிய 12.26 இலட்சம் எக்டேரில் எண்ணெய் வித்துக்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

1990-91 ஆம் ஆண்டில் 13.41 இலட்சம் எக்டேரில் எண்ணெய் வித்துக்கள் சாகுபடி செய்து 15.20 இலட்சம் டன் உற்பத்தி செய்திட திட்டமிடப்பட்டுள்ளது.

எண்ணெய் வித்துக்கள் உற்பத்தித் திறனை மேம்படுத்திடத் தேவையான புதிய தொழில் நுணுக்கங்களைக் கண்டுபிடித்தல் மற்றும் கையாளுதல் தொடர்பாக எல்லா அளவிலும் விவாதிக்கப் பட்டு களப்பணியாளர்களுக்குப் புதுத் தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்குக் கிடைக்க பயிற்சியளிக்க நடவடிக்கை எடுக்கப் படுகிறது.

விதை உற்பத்தி மற்றும் விநியோகம் :

நிலக்கடலை சாகுபடியில் 5 சதவிகிதம், எள் சாகுபடியில் 15 சதவிகிதம், சூரியகாந்தி சாகுபடியில் 50 சதவிகிதம், ஆமணக்கு சாகுபடியில் 30 சதவிகிதம், பரப்பளவிற்குத் தேவையான விதைகளை உற்பத்தி செய்து விநியோகம் செய்யும் கொள்கையை எட்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நீட்டிக்கப்படும்.

தென்னை அபிவிருத்தி :

ஒவ்வொரு ஆண்டும் இத்துறையினால் பராமரிக்கப்படும் 29 தென்னை நாற்றங்கால் பண்ணைகளிலிருந்து 25 இலட்சம் தென்னங்கன்றுகள் உற்பத்தி செய்து விநியோகிக்கப்படுகின்றன.

விவசாயிகளுக்கு உதவி :

பூச்சி மற்றும் நோய்க்கொல்லி மருந்துகள், உயிரின உரம், வேதியியல் உரம், நுண்ணூட்டச்சத்து, திருந்திய வேளாண் கருவிகள், பயிர் பாதுகாப்புக் கருவிகள் போன்ற இடு பொருட்களை உபயோகிப்பதற்கும், சான்றளிக்கப்பட்ட விதைகள் உற்பத்தி செய்வதற்கும் விவசாயிகளுக்கு நிதி உதவி அளிக்கப்படுகிறது. பெரு விளக்கப் பண்ணைகள் மூலமாக திருந்திய சாகுபடி முறைகளைப் பெரும் அளவில் விவசாயிகள் கடைப்பிடிக்கவும் விவசாயிகளுக்கு இத்திட்டங்களின்கீழ் நிதி உதவி எல்லா மாவட்டங்களிலும் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையம்.

தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையம் ஜனவரித் திங்கள் முதல் நாள் 1981 ஆம் ஆண்டில் தேசிய பால்வள வாரியத்தில் எண்ணெய் வித்துக்கள் மற்றும் தாவர எண்ணெய் அபிவிருத்தித் திட்டங்கள் தமிழ்நாட்டில் அமல் படுத்தும் இணைப்பு நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டது.

1990 ஏப்ரல் 21]

குறிக்கோள் :

தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியாளர்கள் இணையம் கூட்டுறவுப் பிரிவில் எண்ணெய் வித்து உற்பத்தியாளர்கள் சமூக, பொருளாதார வளர்ச்சிக்கென்று தேசிய பால்வள வாரியத்தின் உதவியுடன் நிலக்கடலை உற்பத்தி பெருக்க கொள்முதல், பதப்படுத்துதல், விற்பனை ஆகியவைகளை ஒருங்கிணைத்து செயல்படுத்தி வருகிறது.

திட்ட முதலீடு :

இத்திட்டத்தின் மொத்த நிதி ஒதுக்கீடு ஏழு ஆண்டுகளுக்கு ரூ. 15.60 கோடி. அவற்றில் ரூ. 8.40 கோடி (54 சதவீதம்) கடனாகவும், ரூ. 7.20 கோடி (46 சதவீதம்) மானியமாகவும் தேசிய பால்வள வாரியத்தினால் அளிக்கப்படுகிறது.

திட்டப் பகுதி :

செங்கை-அண்ணா, தென்னாற்காடு, வடாற்காடு-அம்பேத்கார், திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டங்களில் நிலக்கடலை பயிரிடப்படும் 20 வட்டங்களில் 335 எண்ணெய் வித்து கூட்டுறவு சங்கங்களை அமைத்து 82,000 உற்பத்தியாளர்களை உறுப்பினர்களாக்கி 92,000 எக்டேர் நிலக்கடலை சாகுபடிப் பரப்பை திட்ட வளர்ச்சி பணியில் கொண்டுவர உள்ளது.

சாதனை :

1989 டிசம்பர் 31 வரை 335 எண்ணெய் வித்து கூட்டுறவு உற்பத்தியாளர்கள் சங்கங்களில் 62,406 உறுப்பினர்களாக்கி 1,09,555 எக்டேர் நிலப்பரப்பு சாகுபடிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு செயல்பட்டு வருகிறது.

பதப்படுத்துதல் :

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு (டான்பெட்) சொந்தமான இரண்டு எண்ணெய் பிழியும் ஆலைகளை (திருவண்ணாமலை மற்றும் விருத்தாசலம்) 1985 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்து உற்பத்தியாளர்கள் இணையம் (டான்காப்) அரசாங்கத்தின் மூலமாக ஏற்றுக் கொண்டன. அவைகள் ஒட்டுமொத்தமாக எண்ணெய் பிழியும் திறன் நாளொன்றுக்கு 166 டன்களாக உள்ளது.

விற்பனை :

இத்துடன் சென்னையில் உள்ள கிண்டியில் எண்ணெய் நிரப்புவதற்காக ஒரு கொள்கலன் நிரப்பு நிலையத்தினை (நாள் ஒன்றுக்கு 15 டன்கள்) திட்டத்தின் ஒரு அங்கமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது.

டி2 ஏ 53-122—30

TRUTH ALONE TRIUMPHS

[1990 ஏப்ரல் 21

இந்த பரப்பு நிலையம் 15 கிலோ (டின்கள்) ஐந்து கிலோ (அடைப்பான்களில்) 1 கிலோ (பாலிதின் பைகள், புட்டிகள்) 0.5 கிலோ (புட்டிகள், பாலிதின் பைகள்) நுகர்வோருக்கென்று பொது விற்பனைக்கு அளிக்க வழி செய்துள்ளது. இணையத்தின் இரண்டு எண்ணெய்களான 'பியூர்நட்' (பிழியப்பட்ட நிலக் கடலை எண்ணெய்), 'வின்னர்' (சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்) அங்காடிகளில் விற்பனைக்குக் கொண்டு வந்துள்ளது.

தமிழ்நாட்டில் பாமாலின் எண்ணெய் பொது விநியோக முறை :

இந்திய அரசாங்கம் அளிக்கும் பாமாலின் எண்ணெய் தமிழ் நாட்டில் பொது விநியோக முறையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

திட்ட விரிவாக்கம்:

தேசிய பால்வள வாரியத்தின் உதவியுடன் இத்திட்டம் மேலும் ஆறு மாவட்டங்களில் விரிவுபடுத்த பரிசீலனையில் உள்ளது.

தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை :

தமிழகத்தில் ஊட்டச்சத்து மிக்க பழங்கள், காய்கறிகள், கிழங்கு வகைகள் மற்றும் அன்னியச் செலாவணியைத் தரும் மலைப் பயிர்கள், வாசனைத் திரவியங்கள், முந்திரி போன்றவற்றின் உற்பத்தியினை அதிகரிக்கும் நோக்கத்துடன் தோட்டக் கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை செயற்பட்டு வருகிறது. 1989-90-ம் ஆண்டிற்கான உற்பத்தித் திட்டத்தில் தனியார் விவசாயிகள் மற்றும் தோட்டக்கலை துறையினராலும் 25.6 இலட்சம் மெட்ரிக் டன்கள் பழங்களும், 31·50 இலட்சம் மெட்ரிக் டன்கள் காய்கறிகளும், 1.25 இலட்சம் மெட்ரிக் டன்கள் மலைப் பயிர்களும், 2.45 இலட்சம் மெட்ரிக் டன்கள் வாசனைத் திரவியங்களும், 0.45 இலட்சம் மெட்ரிக் டன்கள் மலர்களும் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஆண்டு அனைத்து பயிர்களிலும் முழு சாதனை அடையப்படும்.

தமிழ்நாட்டில் பல ஆண்டு பழப்பயிர், வாசனைத் திரவியப் பயிர்களின் பரப்பினை அதிகப்படுத்தப்பட்டுள்ளன. தோட்டக் கலைத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 54 பண்ணைகளில் தரமான கன்றுகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. 1989-90 ஆம் ஆண்டில் 125 இலட்சம் தோட்டக்கலைச் செடிகளும் மற்றும் 45 மெட்ரிக் டன் தரமான காய்கறி விதைகளும் விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கண்டவைகளில் 1989-ம் வருஷம் டிசம்பர் மாதம் முடிய 95.07 இலட்சம் கன்றுகளும் 31.4 மெட்ரிக் டன்கள் காய்கறி விதைகளும் விநியோகிக்கப்பட்டன. 1990-91 ஆம் ஆண்டில் 150 இலட்சம் செடிகளும், 45 மெட்ரிக் டன் காய்கறி விதைகளும் உற்பத்தி செய்து விநியோகம் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

1990 ஏப்ரல் 21]

சிறப்பு மற்றும் பின்தங்கிய பகுதித் திட்டம்:

தமிழகத்தில் திருநெல்வேலி கட்டபொம்மன், கன்னியாகுமரி, மதுரை, கோயம்புத்தூர், காமராஜர், திண்டுக்கல்-காயிதே மில்லத் போன்ற மாவட்டங்களில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் பழங்கள், வாசனைத் திரவியங்கள், மலைப்பயிர்கள் போன்றவற்றின் உற்பத்தியை அதிகரிக்கவும், பசுமைப் பரப்பினை அதிகரிக்கவும் இயற்கைச் சூழ்நிலையைப் பாதுகாக்கும் பொருட்டும் மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் நீலகிரி மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பயிர் நடவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1989-90-ம் ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் ரூ. 116.33 இலட்சம் செலவில் தேயிலை மற்றும் பழப் பயிர்களின் கீழ் 535.49 ஹெக்டேர் பரப்பளவில் கொண்டு வரப்பட்டுள்ளது.

பழங்குடியினர் உப திட்டம் :

தமிழகத்தில் சேலம், வட ஆற்காடு—அம்பேத்கார், தென்னாற்காடு, திருச்சிராப்பள்ளி, தர்மபுரி மாவட்டங்களில் உள்ள பழங்குடியினரின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திடவும், பழங்குடியினர் நிலங்களில் பயிர் உற்பத்தியினை அதிகரிக்கவும் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது.

பயிற்சி வழித் தொடர்புத் திட்டம் :

நீலகிரி மாவட்டத்திலும், திண்டுக்கல்-காயிதே மில்லத் மாவட்டம், கொடைக்கானல் வட்டத்திலும் உற்பத்தியை அதிகப்படுத்தவும் அதிகமான மகசூல் மற்றும் வருவாய் மூலம் விவசாயிகள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தியும் தோட்டக் கலைத் துறையால் பயிற்சி வழித் தொடர்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மத்திய அரசு உதவி பெறும் திட்டங்கள் :

1989-90-ம் ஆண்டில் தமிழ்நாட்டில் பயிரிடப்பட்டு வரும் முந்திரியின் உற்பத்தியை அதிகப்படுத்தும் நோக்குடன் புதிய விவசாய உத்திகளைக் கடைப்பிடிக்கச் செய்யவும், உயர்ரக முந்திரிக் கன்றுகளை வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இருபது அம்சத் திட்டம் :

இத்துறையில் செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்களில் 2,600 பழங்குடியினர் குடும்பங்கள் பயனடைய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வேளாண்மைப் பொறியியல் துறை.

இம்மாநிலத்தில் மண் மற்றும் நீர் வளங்களைப் பாதுகாத்தல், பெருக்குதல் மற்றும் மேலாண்மை செய்தல் போன்ற பணிகளில் வேளாண்மைப் பொறியியல் துறை ஈடுபட்டு வருகிறது. இத் துறை விவசாயிகளுக்கு (1) மண் வளத்தைப் பாதுகாத்திடவும், (2) பாசன வசதிகளைப் பெருக்கிடவும், ஆற்றுப் பாசனம், ஏரி மற்றும் கிணற்றுப் பாசனத்தை முறையாக பயன்படுத்திடவும், (3) வேளாண்மைப் பணிகளை உரிய நேரத்தில் செய்திட தேவைப் படும் பண்ணைக் கருவிகள் கிடைத்திடவும் உதவுகிறது. இயற்கையின் சீற்றத்தால் நிகழும் வறட்சி மற்றும் வெள்ளம் போன்ற காலங்களில் நிவாரணப் பணிகளை இத்துறை மேற் கொள்கிறது. கிராமத்து மக்களுக்கு பெருமளவில் வேலை வாய்ப்பளிக்கக்கூடிய திட்டமான ஜவகர் வேலைவாய்ப்புத்திட்டம் போன்ற வேலை வாய்ப்பினைப் பெருக்கக்கூடிய திட்டங்களை இத்துறை செயல்படுத்துகிறது.

நில மேம்பாட்டுத் திட்டம் :

இத்துறையில் 120 மண் தள்ளும் இயந்திரங்களும் (புல்டோசர்) மற்றும் 177 உழுவைகளும் (டிராக்டர்) உள்ளன. இந்து, ஆதி-திராவிடர், சிறு மற்றும் குறு விவசாயிகளின் பண்ணைப்பணிகளின் தேவைக்காக இக்கருவிகள் சலுகை வாடகையில் வாடகைக்கு வழங்கப்படுகின்றன.

தமிழ்நாட்டில் விவசாயிகளுக்கு காலத்தே பண்ணைப் பணி கள் முடிக்க மேலும் அதிகமான பண்ணைக் கருவிகள் தேவை என்பது உணரப்பட்டுள்ளது. கிடைக்கின்ற மனித மற்றும் கால் நடைகளின் சக்தி திறமையின்மையாகவும், செலவினதாகவும் மற்றும் போதாமையாகவும் உள்ளன. அதிக அளவில் உழுவை யுடன் கூடிய உபகரணங்கள் விவசாயிகளுக்கு அளித்தலானது அவர்கள் பண்ணைப் பணிகளை குறைந்த செலவில் தேவையான நேரத்தில் திறமையாக முடித்திட உதவிடும். இதன் விளைவாக படித்து வேலையற்ற விவசாய குடும்பத்தைச் சார்ந்த இளைஞர் களை விவசாயப் பணிகளில் ஈடுபட ஊக்கத்தினை ஏற்படுத்தி, இப் பணிகளை தொடர்ந்து செய்யவும், அவர்கள் நகரங்களை நாடிச் செல்வதைத் தடுக்கவும் முடியும். எனவே மேலும் புதிய வேளாண் மைக் கருவிகளை வாங்கி வாடகைக்கு விடும் முறைகளை விரி வடையச் செய்து வேளாண்மைப் பொறியியல் துறையை மேலும் பலப்படுத்தும் நோக்கம் அரசின் கவனத்திலுள்ளது.

1990 ஏப்ரல் 21]

சிறு பாசனம் :

வேளாண்மைப் பொறியியல் துறை, 65 சுழல் துளைக் கருவிகளையும், (ரோட்டரி டிரில்ஸ்) 47 பெர்கஸன் துளைக் கருவிகளையும், 10 ஹாமர் துளைக் கருவிகளையும், 2 கேல்ஸ் துளைக் கருவிகளையும், 42 வேகன்/கிணறுக்குள் துளையிடும் துளைக் கருவிகளையும், 98 பாறை தகர்க்கும் கருவிகளையும் (Rock) Blasting Uimts) 47 நீள்துளைக் கருவிகளையும் (Long holey (equipments) 20 காற்றழுத்தக் கருவிகளையும் (Air (compresso s) 408 கைத்துளைக் கருவிகளையும் (H.B.Sets) 25 ரெஸிஸ்ட்டிவிட்டி மீட்டர் கருவிகளையும் மற்றும் இரண்டு எலக்டிரிகல் லாகிங் கருவிகளையும் பராமரித்து வருகிறது. மேற் கண்ட கருவிகள் மாவட்டங்களில் உள்ளன. அவை குழாய்க் கிணறுகள் மற்றும் வடிமுனைக் குழாய்க் கிணறுகள் புதிதாக அமைப்பதற்காகவும், நீர்வளம் குறைந்த கிணறுகளில் பக்க வாட்டில் துளை அமைப்பதன் மூலமும், வெடி வைத்து ஆழப் படுத்துவதன் மூலமும் நீர் வளத்தைப் பெருக்கிடவும், வாடகைக்கு விடப்படுகிறது.

சிறப்பு உணவு உற்பத்தி திட்டத்தின் கீழ், சிறு மற்றும் குறு விவசாயிகளின் கிணறுகளை ஆழப்படுத்தி மானியமாக ரூ. 50 லட்சம் 1989-90-ல் வழங்கிட அரசு ஒப்பளித்தது. இத் திட்டத்தின் கீழ் சிறு மற்றும் குறு விவசாயிகள் முறையே அதிக பட்சமாக ரூ. 3,000 மற்றும் ரூ. 4,000 வரை மானியம் பெற தகுதியுடையவர்களாவர்.

இத்துறை, தெளிப்பு/சொட்டு நீர் போன்ற தண்ணீர் சேமிப்பு பாசனத் திட்டங்களை விவசாயிகளிடையே பிரபலமாக்க முனைந் துள்ளது. இத்திட்டங்கள் குறித்து விவசாயிகளின் வரவேற் பினை உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டு, இத்திட்டத்தின் நன்மை களை அனைத்து விவசாயிகளும் பயன்படும் வகையில் மாற்றி யமைக்க ஆய்ந்து வருகிறது. கிணற்றுப் பாசனப் பகுதிகளில் நீர் மேலாண்மை குறித்த உதவிகள் மேலும் மேலும் விவசாயிகளுக்குத் தொடர்ந்து தேவைப்படுகிறது. இத்தேவைகளைப் பூர்த்தி செய்ய செயல்படுத் திட்டங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டி யுள்ளது.

1990-91 ஆம் ஆண்டிற்கான திட்டங்கள் :

	எண்கள்.
குழாய்க் கிணறுகள்	5,500
வடிமுனைக் குழாய்கள்	3,300
திறந்த வெளிக் கிணறுகளுக்கு புத்துயிர் அளித்தல்.	6,000

[1990 ஏப்ரல் 21

இதன் மூலம் மேலும் 15,000 எக்டேர் பரப்பிற்கு பாசன வசதி பெருக்கிடவும், ஏற்கெனவே பாசன வசதி பெற்று வரும் 15,000 எக்டேர் பரப்பிற்கு பாசன வசதியினை உறுதி செய்திடவும் திட்டமிடப்பட்டுள்ளது. வாடகை கட்டணங்களின் மூலம் நிகர வருமானம் ரூ. 1.50 கோடி கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

மண் மற்றும் நீர் வளப் பாதுகாப்பு:

இம்மாநிலத்தின் பெரும் பரப்பு, மண் அரிப்பினாலும் நிலச் சரிவினாலும் பாதிப்புக்குள்ளாவதைத் தடுக்க மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்புத் திட்டங்கள் செயல்படுத்தப் படுகின்றன. மண் இழப்பினைத் தடுத்து நீர் வளத்தைப் பாதுகாத்து குறிப்பாக மானாவாரி நிலத்தில் உற்பத்தித் திறனைப் பெருக்குவதில் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. வேளாண்மைப் பொறியியல் துறை சமவெளி மற்றும் மலைப் பகுதிகளிலும் காற்றரிப்புக்கிலக்காகும் பகுதிகளிலும், மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளிலும் நீலகிரி மாவட்டத்தில் மலைப் பகுதிகளிலும் குந்தா மற்றும் கீழ் பவானி நதிப் பள்ளத்தாக்கு நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும் மண் மற்றும் நீர்வளப் பாதுகாப்பு பணிகளைச் செயல் படுத்தி வருகிறது.

மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி நீர்ப்பிடிப்பு நிலை அறிக்கை தொலை உணர்வு தொழில் நுட்பம், பயன்படுத்தப் பட்டு தயாரிக்கப்பட்டு வருகிறது. இது மண்வளப் பாதுகாப்பு பணிகளை முன்கூட்டியே திட்டமிடுதலில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை எடுத்துக் காட்டுகிறது. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில் வளமிழந்த நிலங்களைப் பாதுகாத்திட எரிசக்தியளிக்கக்கூடிய செடிகளை நடும் புதியதொரு திட்டம் 523 எக்டேர் பரப்பில் ரூ. 52.30 லட்சம் செலவில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. மரக் கன்றுகள் நடும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் மாவட்டத்தில் பாதிக்கப்பட்டுள்ள நிலங்களுக்கு பராமரிப்பு வழங்கிட டானிடா (DANIDA) உதவியுடன் 17,500 எக்டேர் பரப்பில் ரூ. 6.25 கோடி செலவில் 1990-91 ஆம் ஆண்டு முதல் $3\frac{1}{2}$ ஆண்டுகளுக்கான திட்டம் எடுத்துக் கொள்ளப்படவிருக்கிறது.

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம் போன்ற சிறப்புத் திட்டம் இத்துறையினால் செயல்படுத்தப்படுகிறது. கசிவு நீர்க் குட்டைகள் அமைக்கும் பணி இத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படுகிறது. கசிவு நீர்க் குட்டைகள் நிலத்தடி நீர் எளிதாக கிடைப்பதற்கும், வேலை வாய்ப்புகளை உண்டாக்கு

வதற்கும் வழி வகுக்குகின்றன என்பது மெய்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் அவைகள் பல நோக்கு சமுதாய சொத்துகள் போல விளங்குகின்றன.

நதிப் பள்ளத்தாக்குத் திட்டம்.

பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் :

தமிழ்நாட்டில் தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) நதிப்பள்ளத்தாக்குத் திட்டம்— அவர்களால் காவிரி, கீழ் பவானி திட்டம், சாத்தனூர் திட்டம் மற்றும் பரம்பிக்குளம் ஆழியாறு திட்டங்கள் மைய அரசின் 50 சதவீத நிதி உதவியுடனும், பெரியார் வைகைப் பாசனப் பகுதி உலக வங்கியின் உதவியுடனும் பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், பண்ணை மேம்பாட்டு பணிகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இதனால், இப்பாசனப் பகுதிகளில் கிடைக்கும் நீரை, உரிய நேரத்தில் சரிசமமாகப் பங்கீடு செய்ய உத்தரவாதம் அளிக்கிறது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கமான உருவாக்கப்பட்ட பாசன நிலங்களை முழுமையாக பயன்படுத்துவதற்காக வேண்டி, இத்திட்டத்தை மேலும் விரிவான அளவில் செயல்படுத்த திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

விவசாயிகளின் பங்கேற்புடன் சுழற்சி முறைப் பாசனத் திட்டம் முன்னோடித் திட்டமாக, கீழ்பவானி பாசனப் பகுதியில் பரிசோதிக்கப்படுகிறது. இப்பாசனப் பகுதியில் விவசாயிகள் குழு அமைக்கப்பட்டு ஆரம்பத் திட்டமிடல் நிலையிலேயே விவசாயிகள் ஈடுபடுத்தப்பட்டும், கலந்தாலோசிக்கப்பட்டும் வருகிறார்கள். நீர் நிர்வாகம் குறித்து விரிவாக போதிக்கப்பட்டும், ஒருங்கிணைந்த நடவடிக்கைகளுக்கு முனைப்படுத்தப்பட்டும் வருகிறார்கள். இந்த முறை, நிலவுடைமைகளுக்கிடையே பாசன நீர் சம பங்கீட்டினை எளிதாக்குகிறது. விவசாயிகள் குழுவின் இந்த வினைமுறைத்திறம், கீழ் பவானி திட்டத்தின்கீழ் 'திண்டல்' பிரிவு வாய்க்காலில் குறிப்பிடத் தகுந்த வெற்றியைத் தந்திருக்கிறது. இம்முறை பிற பாசனப் பகுதிகளிலும் பின்பற்றப்பட்டு வருகிறது.

பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

(பரப்பு ; எக்டேரில்.)

வரிசை எண்ணும், பாசனப் பகுதி/பணித்திட்டமும்.	1989-90 ஆம் ஆண்டு திட்டம்.	டிசம்பர் 1989 முடிய திட்ட முன்னேற்றம்.	1990-91 ஆம் ஆண்டிற்கான திட்டம்.
(1)	(2)	(3)	(4)
1. மத்திய உதவியுடன் கூடிய பாசனப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்—			
பண்ணை மேம்பாட்டுப் பணிகள் :			
(1) காவிரிப் பாசனப் பகுதி	21,600	17,820	24,000
(2) கீழ்பவானி பாசனப் பகுதி	5,000	3,531	5,000
(3) சாத்தனூர் பாசனப் பகுதி	3,300	1,232	1,000
(4) பரம்பிக்குளம் ஆழியாறு பாசனப் பகுதி	11,000	6,774	11,000
	40,900	29,357	41,000

பி2 எ 53 122—31

2. வாரபந்தி (சுழற்சி முறைப் பாசனத் திட்டம்) :—

(1) காவிரிப் பாசனப் பகுதி	2,000	3,360	2,000
(2) கீழ்பவானி பாசனப் பகுதி	2,000		2,000

3. வெளி உதவித் திட்டம் :—

பண்ணை மேம்பாட்டுப் பணிகள் :—

(1) பெரியார், வைகை பாசனப் பகுதி ..	9,800	3,652	..
2) கதிரடிக்கும் களம் கட்டுதல்	100 (எண்கள்)	25 (எண்கள்)	..

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[1990 ஏப்ரல் 21

மலைப் பகுதிகளில் மண்வளப் பா்துகாப்பு :

மண் அரிப்பு என்பது ஒரு இயற்கையின் செய்முறையே ஆனாலும், ஒவ்வாத நில உபயோக முறையினாலும், மக்களின் தலையீட்டாலும் இதன் விளைவு பாதிப்பை ஏற்படுத்துகிறது. மலைப் பகுதிகளில் மண் அரிமானத்திற்கு அதிகமான மழையே முக்கிய காரணமாக இருந்தாலும், தவறான நில உபயோக முறை சரியற்ற சாகுபடி முறை, காடுகளை அழித்தல் போன்ற காரணங்கள் மண் அரிக்கப்படுவதற்கு ஏதுவாக அமைகிறது. மலைப் பகுதிகளில் ஏற்படும் மண் அரிமான முறைகளும் வண்டல் படியும் விதமும், சமதளப் பகுதிகளில் உண்டாகும் மண் அரிமானத்திலிருந்து வேறுபட்டிருப்பதால், மண் வளப் பாதுகாப்பு மற்றும் சுற்றுப் புற சூழல் காப்பதற்கு தேறிய அணுகுமுறை அவசியமாகிறது. இப்பணிகளின் மூலம் வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கவும், அணைகளில் மண் படிவைத் தடுக்கவும், நிலத்தடி நீரைப் பெருக்கவும் முடிகிறது.

தமிழ்நாட்டில் மலைப் பகுதிகளில் மண் வளப் பாதுகாப்பு கீழ்க்காணும் மூன்று திட்டங்களின் மூலம் செயலாக்கப்பட்டு வருகின்றது.

1. குந்தா மற்றும் கீழ் பவானி நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் நதிப் பள்ளத்தாக்குத் திட்டம்.

2. மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம் மற்றும்

3. நீலகிரி மாவட்டத்தில் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்.

மண் வளப் பாதுகாப்புப் பணிகள் குறு நீர் வடிநிலத்தை அடிப்படையாகக் கொண்டு திட்டமிடப்பட்டு, செயலாக்கப் பட்டு வருகிறது. இத்திட்டத்தின் பொறியியற் பணிகளான சம உயரக் கற்சுவர், பாத்திக் குழிகள், கல் அணைப்புகள், ஓடை சீரமைத்தல், தடுப்பணைகள், கசிவு நீர்க்குட்டைகள் போன்றவைகளைத் தவிர மரம் நடுதல் போன்ற உயிரியற் பணிகளையும் விரிவாக்கி, சூழ்நிலைச் சமனையும், மலைப் பகுதியின் ஒருசார்ந்த வளர்ச்சியையும் கொணர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டங்களில் மண் அரிமான நிலையைப் பொறுத்து நீர் வடி நிலங்களை வரிசைப்படுத்தவும், நில நீரியல் மாற்றங்களைக் கொண்டு வரவும், குறுநீர் வடிநில அளவில் நீர்ச்சமன் செய்யவும், மக்கள் சமூகத்தினர் தானாக முன்வந்து பங்கேற்கவும் ஆவன செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டங்களுக்கு 1989-90-க்கான குறியீடுகளும், டிசம்பர் 1989 வரையிலான சாதனைகளும் 1990-91 ஆம் ஆண்டுக்கான இலக்குகளும் கீழே தரப்பட்டுள்ளன :—

மண்வளப் பாதுகாப்பு பணிகள்.

அலகு — செயல் இலக்கு எக்டேரில்.

நிதி இலக்கு ரூபாய் இலட்சத்தில்.

வரிசை எண்.	திட்டம்.	1989-90 செயல்.		1989-90 நிதி.		1990-91-க்கான திட்டம்.	
		குறியீடு.	சாதனை (31-12-1989 முடிய).	குறியீடு.	சாதனை (31-12-1989 முடிய.)	செயல் (குறியீடு).	நிதி (குறியீடு).
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1.	குந்தா மற்றும் கீழ் பவானி நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் நதிப் பள்ளத்தாக்குத் திட்டம்.	3,499	2,566	140.00	105.33	3,500	176.41
2.	மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தித் திட்டம்.	1,819	1,371	188.00	139.52	3,410	340.00
3.	நீலகிரி மாவட்டத்தில் மலைப்பகுதி அபிவிருத்தித் திட்டம்.	1,276	677	124.00	71.40	1,300	140.00

விதைச் சான்றளிப்புத் துறை:

விதைச் சான்றளிப்புத்துறை, விதைச் சட்டம், 1966 மற்றும் விதை விதிகள் 1968-ன் அடிப்படையில் விதைச் சான்றளிப்புப் பணிகளை செயலாக்கி வருகின்றது. அதிக மகசூல் பெறுவதற்கு தரமான நல்விதைகளை இவ்வரசு நமது வேளாண் பெருமக்களுக்குத் தொடர்ந்து வழங்கி வருகிறது. வேளாண் பெருமக்களுக்குத் தரமான விதைகள் உற்பத்தி மற்றும் விநியோகம் செய்யும் முக்கியப் பணியில் இத்துறை, தரக்கட்டுப்பாட்டாளராக பணிபுரிகிறது.

விதைச் சான்று:

1989-90ஆம் ஆண்டில் (டிசம்பர் 1989 முடிய) விதைச் சான்றளிப்பின் கீழ் வெவ்வேறு பயிர்கள் விளையும் 25,641 எக்டேர் நிலப்பரப்பு பதிவு செய்யப்பட்டு 14,383 மெட்ரிக் டன் விதைகளுக்குச் சான்றளிப்பு செய்யப்பட்டுள்ளது. 1990-91ஆம் ஆண்டில் 27,500 எக்டேர் நிலப்பரப்பு சான்றளிப்பிற்காக பதிவு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

பயிற்சித் திட்டம்:

விதைச் சான்று துறையினுடைய களப்பணியாளர்களுக்கு விதை உற்பத்தி நுணுக்கங்கள் மற்றும் சான்று அளிப்பு நடைமுறைகள் குறித்து பயிற்சி தரப்படுகிறது. விதைச் சான்றளிப்புத் துறை அலுவலர்களால், சான்று விதை உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் சகோதரத்துறை அலுவலர்கள், தனியார் விதை உற்பத்தியாளர் மற்றும் விதை விற்பனையாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. விதைச் சான்று பயிற்சித் திட்டத்தின் மூலம் 1989-90 ஆம் ஆண்டில் (டிசம்பர் 1989 முடிய) 8,391 நபர்களுக்கு விதைச்சான்று சம்பந்தமான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும், 1990-91இல் 9,385 நபர்களுக்கு விதைச் சான்று பயிற்சி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

விதை ஆய்வு:

1989-90 ஆம் ஆண்டில் (டிசம்பர் 1989 முடிய) 6,541 விதை விற்பனை நிலையங்கள் இத்துறையின் விதை ஆய்வாளர்களால் ஆய்வு செய்யப்பட்டு 6,164 விதை மாதிரிகள் எடுக்கப்பட்டு, விதை பகுப்பாய்வு செய்யப்பட்டது. 1990-91 ஆம் ஆண்டில் 8,400 விதை விற்பனை நிலையங்களை ஆய்வு செய்யவும், 8,400 விதை மாதிரிகளை எடுக்கவும் விதை ஆய்வுத் திட்டத்தின் மூலம் திட்டமிடப்பட்டுள்ளது.

1990 ஏப்ரல் 21]

விதைப் பரிசோதனை :

விதைச் சான்றளிப்பின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட 3 விதைப் பரிசோதனை நிலையங்கள் கோவை, மதுரை மற்றும் குடுமியான் மலை ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. 1989-90 ஆம் ஆண்டில் (டிசம்பர் 1989 முடிய) 20,947 விதை மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. 1990-91 ஆம் ஆண்டில் 27,300 விதை மாதிரிகள் பகுப்பாய்வு செய்யவும் திட்டமிடப் பட்டுள்ளது.

வீரிய ஒட்டு விதையின் பயிர் இனத் தூய்மை அறியும் சிறப்பு சோதனைகளை ஆய்வு செய்திடும் வகையில் கோவையில் ரூ. 5 இலட்சம் செலவில் கண்ணாடி ஆய்வகம் கட்டி முடிக்கப்பெற்று ஆய்வுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. 1989-90-ல் (டிசம்பர் 1989 முடிய) 12 வீரிய ஒட்டுப் பருத்தி மற்றும் அதன் தாயாதி ரகங்கள் இனத்தூய்மை பரிசோதனை செய்யப்பட்டன. கண்ணம்பாளையம் அரசு விதைப் பண்ணையிலும் டிசம்பர் 1989 முடிய 292 வீரிய பருத்தி இனத் தூய்மை பரிசோதனை செய்து முடிக்கப்பட்டுள்ளன.

வேளாண்மை விற்பனைத் துறை.

வேளாண்மை விற்பனைத் துறை கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்துகிறது.

1. விற்பனைக் குழுக்கள் மூலமாக விற்பனைக் கூடங்களை நிறுவி செயல்படுத்துதல்.

2. நுகர்வோர் நலன் காக்க வேளாண்மை, கால்நடை மற்றும் வனப்பொருட்களை ''அக்மார்க்'' தரம் பிரித்து விநியோகிக்க வகை செய்தல்.

3. வணிக முறை தரம்பிரிப்பு.

4. ''அக்மார்க்'' சம்பந்தமாக பணியாளர்களுக்கு பயிற்சி அளித்தல்.

5. பருத்தி சான்றுறையும் சட்ட அமலும்.

6. உழவர்களின் விளைபொருள் விற்பனையில் காணும் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டி சர்வேக்கள் எடுத்தல்.

1. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் :

விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை நல்ல விலைக்கு விற்று பயன்பெற விற்பனைக் கூடங்கள் நிறுவப்பட்டுள்ளன. தற்போது 272 விற்பனைக் கூடங்கள் 14 விற்பனை குழுக்களின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றன. 1989-90 ஆம் ஆண்டு வரத்து, வருவாய் விபரம் (டிசம்பர் 1989 முடிய):

விற்பனைக் கூட வரத்து 3.59 இலட்சம் மெ.டன்.
விற்பனைக் கூட வருவாய் ரூ. 450 இலட்சம்.

72 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை செய்வதற்காக ரூ. 111.63 இலட்சம் ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 1989–90 மற்றும் 1990–91 நிதியாண்டுகளில் இரு பகுதிகளாக நிறைவேற்றப்படும். இச்செலவினம் விற்பனைக் குழுக்களின் நிதியிலிருந்து மேற்கொள்ளப்படும்.

விவசாயிகளிடமிருந்து ஆண்டுதோறும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு வரும் விளைபொருட்களின் அளவை மென்மேலும் பெருக்கவும், புதிய பொருட்களைச் சேர்க்கவும் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

மத்திய அரசு உதவியுடன் பெரிய நகரங்களில் காய்கறி மற்றும் பழங்கள் விற்பனை செய்ய ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களை நிறுவி அவற்றில் குளிர்சாதன சேமிப்பு வசதி, குடிநீர், மின்சாரம், சுகாதார வசதிகள் மற்றும் விற்பனைக்கூட வசதிகள் செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

விலை வீழ்ச்சியுறும் காலங்களில் சிறு மற்றும் குறு விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை இருப்பு வைக்க, மத்திய மாநில மான்யத்துடன் 89 ஊரக சேமிப்புக் கிடங்குகள் கட்டப்பட்டுள்ளன. 1990-91ஆம் ஆண்டு, மேலும் இரண்டு ஊரகக் கிடங்குகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருள் சந்தைபடுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 27/1989) இதற்கான புதிய விதிகள் இயற்றியபின், 1990–91ஆம் ஆண்டில் நடைமுறைக்குக் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. அக்மார்க் தரம் பிரிப்பு :

நுகர்வோர், நல்ல தரமான ஆரோக்கியமான கலப்படமற்ற பொருட்களை பெறவேண்டும் என்பதற்காக இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தற்போது தமிழ்நாட்டில் 35 ''அக்மார்க்'' ஆய்வுக்கூடங்கள் இயங்கி வருகின்றன. இவற்றின் மூலம் மத்திய கட்டுப்பாட்டிற்கு உட்பட்ட பொருட்களாகிய சமையல் எண்ணெய் வகைகள், நெய், தேன், மசாலாப் பொடிகள் தரம் பிரிப்பு செய்யப்படுகின்றன. 1989–90 நிதியாண்டில்

1990 ஏப்ரல் 21]

(டிசம்பர் முடிய) 1,70,038 குவிண்டால் வேளாண்மை, கால் நடை மற்றும் வனப் பொருட்கள் அக்மார்க் முறையில் தரம் பிரிப்பு செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் 7.13 லட்சம் கட்டண மாக வசூலிக்கப்பட்டுள்ளன. இவையன்றி, மத்திய கட்டுப்பா டற்ற அரிசி, பருப்பு வகைகள், உருளைக் கிழங்கு, மஞ்சள் மற்றும் பாக்கு ஆகியவைகளுக்கும் ''அக்மார்க்'' முறையில் தரம் பிரிப்பு செய்யப்படுகின்றன. 1989–90 நிதியாண்டில் (டிசம்பர் முடிய) 2,22,775 குவிண்டால் தரம் பிரிப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த ஆய்வுக்கூட பணிகளை மேற்பார்வையிட தமிழ்நாடு முதன்மை ஆய்வகம் ஒன்று திருச்சியை தலைமையிடமாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது. திருச்சி முதன்மை ஆய்வுக் கூடம் இதர ஆய்வக உதவியாளர்களுக்கு ஆய்வக பணிகளுக்கு பயிற்சியும் தருகிறது.

3. வணிக முறை தரம் பிரிப்பு:

தமிழ்நாட்டில் 102 வணிக முறை தரம்பிரிப்பு மையங்களும் 11 பருத்தி தரம்பிரிப்பு மையங்களும் மற்றும் ஒரு புகையிலை தரம் பிரிப்பு மையமும் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் செயல்பட்டு வருகின்றன. விற்பனைக்குக் கொண்டு வரப்படும் பல்வேறு விவசாயப் பொருட்கள் தரம் பிரிக்கப்படுகின்றன. இதன் மூலம் விவசாயிகள் பொருள்களின் தரத்திற்கேற்ப விலையினைப் பெறமுடிகிறது. 1989ஆம் நிதியாண்டில் டிசம்பர் மாதம் முடிய 32·30 இலட்சம் குவிண்டால் விளைபொருட்கள் தரம் பிரிக்கப்பட்டுள்ளன. இந்த தரம் பிரிப்பு மையங்களை 1—12—1989 முதல் சம்பந்தப்பட்ட விற்பனைக் குழுக்களுக்கு மாற்றப்பட்டுள்ளன. இதற்கான செலவினை சம்பந்தப்பட்ட விற்பனைக் குழுக்களே ஏற்கும்.

4. பருத்தி சான்றுரையும் சட்ட அமலும் :

பருத்தியின் சுத்தத் தன்மையைக் காக்கவும் பருத்தி அரவை மற்றும் பண்படுத்தும் தொழிற்கூடங்களில் பருத்தி மற்றும் பஞ்சில் கலப்பு ஏற்படுவதைத் தடுக்கவும், தமிழகத்திற்கு தேவைப்படும் பருத்தியின் அளவை ஆய்ந்து பிற மாநிலங்களி லிருந்து தருவிக்கப்படும் பருத்தி மற்றும் பஞ்சின் அளவினைக் கண்காணிக்கவும் செயல்படுகிறது. இத்தகைய செயல்பாட் டுக்கு 1989–90 ஆம் நிதியாண்டில் (டிசம்பர் 1989 முடிய) 59,424 உரிமங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 572 ஏக்கர் பருத்தி பயிர் சான்றுரை பதிவு செய்யப்பட்டுள்ளது. இவற்றுக் காக ரூ. 5.11 இலட்சம் கட்டணமாக கிடைக்கப்பெற்றுள்ளன.

மாநில வேளாண்மை விளைபொருள் விற்பனை வாரியம் :

இவ்வாரியம் பல்வேறு மாவட்ட விற்பனை குழுக்களின் பணி களை இணைத்து விவசாயிகளுக்கு விற்பனையில் உதவி புரிய சிறந்த வழிமுறைகளை வகுத்து வருகிறது.

இவ்வாரியத்தில் உள்ள கட்டுமானப் பிரிவு ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் கட்டிடங்கள், கிடங்குகள். உலர்களங்கள்,

ஏலக் கொட்டகை மற்றும் விவசாயிகள் தங்கும் அறைகள் கட்டுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ளுகின்றது.

இதனுடைய 'பயிற்சி பிரிவு' விற்பனை குழுக்கள், வாரியம் மற்றும் வேளாண் விற்பனைத் துறை பணியாளர்களுக்கு வணிக முறை, தரம் பிரிப்பு, விற்பனை தொடர்பான பணிகள் போன்றவைகளில் பயிற்சியளிக்கிறது.

கரும்பு சாலை அபிவிருத்தி திட்டம்.

கரும்பு சாலை அபிவிருத்தி திட்டம் கரும்பு செஸ் நிதியிலிருந்து வரும் பணத்திலிருந்து செயலாக்கப்பட்டு வருகிறது. தற்போது பிழியப்பட்ட கரும்புக்கு செஸ், டன் ஒன்றுக்கு ரூ. 5 வீதம் வசூலிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் இத்திட்டத்தின் கீழ் போடப்படும் புதிய சாலைகள் அரசால் தேர்வு செய்யப்படுகின்றன. பொதுவாக புதிய சாலைகள் போடுவதற்கு ரூ. 150 இலட்சத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் ஒதுக்கீடு செய்யப்பட்டு வருகிறது. இது தவிர கரும்பு சாலை அபிவிருத்தி திட்ட கண்காணிப்பு பொறியாளருக்கு, சாலைகளை பராமரிக்க சென்ற ஆண்டுகளில் ஆண்டு தோறும் ரூ. 50 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்கிறது.

1981ஆம் ஆண்டில் தனியார் சர்க்கரை ஆலைகள் கரும்பு செஸ் வசூலிப்பதை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தன. உயர்நீதிமன்றமும் செலுத்த வேண்டிய தொகையில் 25 சதவீதத்திற்கு வங்கி உறுதியில் சான்று அளிக்க வேண்டும் என்னும் அடிப்படையின் கீழ் இடைக்கால தடை உத்திரவினை பிறப்பித்துள்ளனர். கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகள், தனியார் துறை சர்க்கரை ஆலைகளுடன் சேராமல் அவர்கள் செலுத்த வேண்டிய கரும்பு செஸ் நிதியினை தவறாமல் செலுத்தி வருகிறார்கள்.

நகர்ப்புற கலவை உரத் திட்டம்.

தற்போது 98 நகராட்சிகள் மற்றும் 8 நகரியங்கள், நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ளன. நடப்பு ஆண்டில் 2,56,550 மெட்ரிக் டன் கலவை உரம் தயாரிக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நகராட்சிகள் தயாரிக்கும் கலவை எருவின் உற்பத்தித் திறனை நிர்ணயிக்க ஒவ்வொரு நகராட்சியின் கலவை எரு உற்பத்தி அதன் மக்கட் தொகையில் 3 சதவீதம் அளவில் கணக்கிடப்பட்டுள்ளது.

1990–91ஆம் ஆண்டில் நகராட்சிகளின் நிலைக்கேற்ப அதாவது சிறப்பு நிலை, தேர்வுநிலை, முதல்நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை மற்றும் பேரூராட்சிகள், கலவை எருப்போட்டி தனித்தனியே நடத்தி, கலவை எருவின் தரம் மற்றும் உற்பத்தி மற்றும் விற்பனையை அடிப்படையாகக் கொண்டு பரிசுகள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

1990-91ஆம் ஆண்டிலும் இதுபோன்ற போட்டிக்காக ரூ. 37,800 ஒதுக்கீடு செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கழிவு நீர்ப் பயன் திட்டம்:

23 நகராட்சிகள் தற்போது கழிவு நீர்ப்பண்ணையை நிர்வகித்து வருகின்றன. கழிவு நீர்ப்பண்ணைகளை முறைப்படி பராமரிக்கவும் பசும்புல் மற்றும் சில பயனுள்ள பயிர்களை பயிர் செய்யவும் தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்கப் படுகின்றன.

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம்.

வறட்சிக்கு இலக்காகும் பகுதிகள் திட்டம் மண்வளப் பாது காப்பு, மண் ஈரப் பாதுகாப்பு, நில மேம்பாடு, காடு வளர்ப்பு, மரம் வளர்ப்பு மற்றும் நீர் ஆதாரங்களின் மேம்பாடு ஆகிய சிறப்புப் பணிகளை உள்ளடக்கிய ஒருங்கிணைந்த முன்னேற்றத் திட்டமாகும். இத்திட்டத்திற்கான செலவை மைய மற்றும் மாநில அரசுகள் சரிபாதி விகிதத்தில் அளிக்கின்றன.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட இலக் கான 70,289 எக்டேர் பரப்பையும் கடந்து (13—12—1989 முடிய) 72,325 எக்டேர் பரப்பில் இத்திட்டம் செயல்படுத்தப் பட்டுள்ளது. இதுவரை ரூ. 2,479.72 இலட்சம் இத்திட்டத்திற் காக செலவிடப்பட்டுள்ளது. இத்திட்டம் இம் மாநிலத்தில் 43 ஊராட்சி ஒன்றியங்களில் பின்வருமாறு செயல்படுத்தப் படுகிறது:—

	மாவட்டங்களின் பெயர்.	வறட்சிக்கு இலக் காகும் பகுதிகள் அமல்படுத்தும் ஊராட்சி ஒன்றியங்களின் எண்ணிக்கை.
	(1)	(2)
1.	தர்மபுரி	12
2.	இராமநாதபுரம்	7
3.	பசும்பொன் முத்துராமலிங்கம் ..	6
4.	காமராசர்	5
5.	புதுக்கோட்டை	4
6.	வ. உ. சிதம்பரனார்	8
7.	திருநெல்வேலி-கட்டபொம்மன்	1
	மொத்தம் ..	43

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

டி2 ஏ 53-122—32

[1990 ஏப்ரல் 21

1989–90ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்காக ரூ. 657 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் டிசம்பர் 1989 முடிய ரூ. 350 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1990-91ஆம் ஆண்டிற்காக ரூ. 657 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் கழகம்:

வேளாண்மையை நவீனமயமாக்கவும், வேளாண்மை உற்பத்திப் பொருட்களை பதப்படுத்தவும், தொழிற்சாலைகளை தானே நிறுவி நடத்துவதில் தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம் ஈடுபட்டுள்ளது. விவசாயிகளுக்கு நியாயமான விலையில் உரங்கள், பூச்சி மருந்துகள், உதிரி பாகங்கள், டயர்கள், டியூப்புகள் முதலானவற்றை விற்கும் முகவர்களாக இக்கழகம் செயல்படுகிறது. 1989–90 ஆம் ஆண்டில் பல்வேறு நிறுவனங்கள் தயாரித்த 50,700 மெட்ரிக் டன் உரங்களையும், ரூ.265 இலட்சம் பெறுமான உதிரி பாகங்கள் மற்றும் கருவிகளையும், 72 டிராக்டர்களையும், 150 பவர் டில்லர்களையும் இக்கழகம் விற்க உள்ளது. இக்கழகத்தில் பூச்சிக் கொல்லி மருந்து தயாரிக்கும் பிரிவு 3,300 மெட்ரிக் டன் தூள் மருந்துகளையும், 1,68,800 லிட்டர் திரவ மருந்துகளையும் தயாரித்து விற்பனை செய்ய உள்ளது. மீன்பிடி வலை தயாரிக்கும் ஆலை 27 மெட்ரிக் டன் மீன்பிடி வலைகளை தயாரிக்கவுள்ளது. உடுமலைப்பேட்டையில் உள்ள குதிரை மசால் தயாரிக்கும் தொழிற்சாலை கால்நடை மற்றும் கோழி வளர்ப்புத் தீவனமான இலைப்புரத மாவினை 125 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யும். நடப்பு ஆண்டில் 8,850 மெட்ரிக் டன் சூரியகாந்தி விதைகளைப் பிழிந்து 2,640 மெட்ரிக் டன் சனோலா என்ற முத்திரையுள்ள சூரியகாந்தி எண்ணெய் உற்பத்தி செய்யும். நாமக்கல்லில் அமைந்துள்ள எண்ணெய் கரைத்து பிழிந்தெடுக்கும் ஆலை 2,450 மெட்ரிக் டன் அரிசித் தவிட்டினையும் மற்றும் சூரியகாந்தி எண்ணெய் பிண்ணாக்கும் பிழிந்தெடுக்கும். பொனக்குளத்தில் உள்ள ஆலை 2,400 மெட்ரிக் டன் அரிசி தவிடு மற்றும் தேங்காய் எண்ணெய் பிண்ணாக்கும் பிழிந்தெடுக்கும்.

2. 1990–91 ஆம் ஆண்டில் 60,000 மெட்ரிக் டன் உரங்களையும், 130 டிராக்டர்களையும், 280 பவர் டில்லர்களையும் விற்கவும், ரூ. 375 இலட்சம் பெறுமானமுள்ள உதிரி பாகங்கள் மற்றும் கருவிகள் விற்கவும், 6,000 மெட்ரிக் டன் தூள் பூச்சி மருந்துகளையும், 6 இலட்சம் லிட்டர் திரவ பூச்சி மருந்துகளையும், 45 மெட்ரிக் டன் மீன்பிடி வலைகளையும், 8,850 மெட்ரிக் டன் சூரியகாந்தி விதைகளையும் பதப்படுத்தவும் திட்டமிட்டுள்ளது. இக்கழகம் தமிழ்நாட்டில் மாநில அளவில் உணவு பதப்படுத்தும் துறைகளை ஒருங்கிணைத்து ஊக்குவிக்கும் முக்கிய முகவரமைப்பாக செயல்படவிருக்கிறது.

1990 ஏப்ரல் 21]

தமிழ்நாடு வேளாண்மைப் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவு இணையம் :

மாவட்ட மற்றும் வட்டார அளவில் வேளாண்மைப் பொறியியல் மற்றும் சேவைக் கூட்டுறவு மையங்களை நிறுவி அதன் மூலம் கிராமப்புற விவசாயிகளுக்கு செறிவான சேவைகளைச் செய்வதே இவ்விணையத்தின் முக்கியக் குறிக்கோளாகும். இவ்விணையம் கிராமப்புற விவசாயிகளுக்கு விவசாய இயந்திரங்கள் மற்றும் துணைக் கருவிகள் ஆகியவற்றை வாடகைக்கு விடும் பணி விவசாய இயந்திரங்களைச் செப்பனிடும் பணி, விதைகள், உரம், பூச்சிக் கொல்லிகள், விவசாயத் துளைக் கருவிகள், பயிர் பாதுகாப்புத் தளவாடங்கள் போன்ற விவசாய இடுபொருட்களை வழங்குதல் போன்ற இன்னபிற சேவைகளைச் செய்து வருகின்றது.

2. பிற திட்டங்கள்:

மேற்கூறிய வாலாய திட்டத்தைத் தவிர விவசாயக் கடன்தாரர்களுக்கு டீசல் இயந்திர பம்புசெட் மற்றும் மின் இயந்திர பம்புசெட் ஆகியவற்றை விநியோகம் செய்யும் ஒருமுனைப்படுத்தும் திட்டம் மற்றும் விவசாயிகளுக்கு தானிய சேமிப்புக் குதிர்களைத் தயாரித்து 25 சதவீத மானியத்தில் வழங்கும் திட்டமாகிய தானிய சேமிப்பு இயக்கத் திட்டம் ஆகிய அரசுத் திட்டங்களை இவ்விணையம் செயல்படுத்தி வருகின்றது.

3. மத்திய அரசின் சார்புத் திட்டத்தின் கீழ் விவசாயிகள் வேளாண் சேவை மையங்களை நிறுவுதல்:

இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன:

1. விவசாயச் சேவை மையங்களை நிறுவி 50 சதவீதம் மானியத்தில் வாடகைப் பணி இயந்திரங்களை அமைத்தல்,

2. மேம்படுத்தப்பட்ட வேளாண் கருவிகளையும் மற்றும் கைக் கருவிகளையும் கொண்டு செயல்முறை விளக்கங்கள் நடத்துதல், மற்றும்,

3. மேம்படுத்தப்பட்ட விவசாயக் கருவிகளையும், கைக் கருவிகளையும் பிரபலப்படுத்துவதற்காக, 50 சதவீதம் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்குதல்.

மத்திய அரசின் சார்புத் திட்டத்தின் கீழ் விவசாயிகள் வேளாண் சேவை மையங்கள் நிறுவும் திட்டம் தொடங்கப்பட்ட காலத்திலிருந்து, செம்மைப் படுத்தப்பட்ட வேளாண்மை கருவிகளை விவசாயிகளிடையே பிரபலப்படுத்துவதற்காக இதுவரைக்

கும் 9,400 செயல் விளக்கங்கள் நடத்தப்பட்டுள்ளன. மேலும், இந்தத் திட்டத்தின் கீழ் 28,400 செம்மைப் படுத்தப்பட்ட வேளாண்மைக் கருவிகள் மற்றும் 37,754 கைக் கருவிகள் ஆகியவை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

4. ஆழ்குழாய் கிணறு தோண்டும் வேலைகள்:

நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டம் மற்றும் தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் மாவட்ட ஆட்சியாளர்கள் சார்பிலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பிலும் 1988–89 ஆம் ஆண்டில், இணையம் 2,388 ஆழ் குழாய் கிணறுகளைத் தோண்டியுள்ளது. இதைப் போன்றே, 1989–90 ஆம் ஆண்டில் டிசம்பர் மாதம் முடிய மேற் குறிப்பிடப்பட்ட இரண்டு திட்டங்களின் கீழும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பிலும் இணையம் 1935 ஆழ்குழாய் கிணறுகளைத் தோண்டியுள்ளது.

5. மத்திய அரசு திட்டத்தின் கீழ் ஆயில் எஞ்சின் பம்பு செட்டுகள் குறை நிவர்த்தி செய்தல்:

இத் திட்டத்தின் அடிப்படை நோக்கம் ஆயில் என்ஜின்களின் செயல்திறனை அதிகரிப்பது மற்றும் எரிபொருளை சிக்கனப் படுத்துவதேயாகும். இரும்புக் குழாய்களுக்குப் பதிலாக பி.வி.சி. குழாய்களை இணைப்பது, உராய்வற்ற புட் வால்வுகளை, பொருத்துவது, தேவையற்ற வளைவுகளை குறைப்பது ஆகிய முறைகளின் மூலம் எரிபொருளை சிக்கனப்படுத்த முடியும். மைய அரசின் ஆதரவு பெற்ற திட்டம் மற்றும் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டுக் கழகத்தின் ஆயில் என்ஜின்கள் குறை நிவர்த்தி செய்யும் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் 1987 ஆம் ஆண்டிலிருந்து 720 ஆயில் என்ஜின்கள் குறை நிவர்த்தி செய்யப் பட்டுள்ளன.

6. தெரிவு செய்யப்பட்ட வட்டார வேளாண்மை மையங்களை வலுப்படுத்துதல்:

இணையத்தின் இணைப்பு சங்கங்களின் செயல்பாடுகளை வலுப்படுத்துவதற்காக, வேளாண்மை கருவிகளை பழுதுபார்ப் பதற்கும், அவற்றைத் தாங்களே உருவாக்கி நல்ல விலைக்கு விற்பதற்கும், ஏதுவாக துளைபோடும் கருவி, அரவைக் கருவி போன்ற பட்டறை கருவிகள் 88 வட்டார மையங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

1990 ஏப்ரல் 21]

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் :

வேளாண்மைக் கல்வி, ஆராய்ச்சி-விரிவாக்கக் கல்வி ஆகிய துறைகளில் இப் பல்கலைக் கழகம் புரிந்த சாதனைகள் இப் பல்கலைக் கழகத்தின் வருங்காலத் திட்டங்கள் ஆகியவை பற்றிய விவரங்கள் வருமாறு:—

திருச்சி மாவட்டம், குமுலூரில் அன்பில் தருமலிங்கம் வேளாண்மைக் கல்லூரி ஏற்படுத்தப்பட்டது.

விவசாயிகளின் / மீனவர்களின் மகன்களுக்கான / மகள்களுக்கான இட ஒதுக்கீடு 45-லிருந்து 92 ஆக உயர்த்தப்பட்டது.

1989–90 ஆம் ஆண்டில், பட்டப் படிப்பு நிலையில் 683 மாணவ, மாணவியர் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். இவர்களில் 240 பேர் பெண்கள். பட்ட மேற்படிப்பு ஆராய்ச்சிப் படிப்புகளில் சேர்க்கப்பட்ட 314 மாணவ-மாணவியரில், 115 பேர் பெண்கள். நம் மாநிலத்தில் பெண்கள் கணிசமான அளவு தொழிற் கல்வியைப் பயின்று முன்னேற்றமடைய உதவிய பெருமையை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம் பெறுகிறது.

பின்வரும் புதிய பட்ட மேற்படிப்புகள் தொடங்கப்பட்டன. (1) எம்.எஸ்.சி. (வனம் வளர்ப்புக் கலை), (2) எம்.எஸ்.சி. (சுற்றுச் சூழல் அறிவியல்). மதுரை வேளாண்மைக் கல்லூரி ஆராய்ச்சி நிறுவனத்தில் வேளாண்மைக் கல்வி தொடர்புடைய 6 பாடங்களில் ஆராய்ச்சித் திட்டங்கள் (பி.எச்.டி.) தொடங்கப்பட்டன. 1990 ஜனவரியில் பின்வரும் 15 புதிய பயிர் வகைகள் அறிமுகப்படுத்தப்பட்டன:—

1. நெல்—கோ. 45.
2. சோளம்—கே. 9.
3. பருத்தி—டி.சி.எச்.பி. 213.
4. நிலக்கடலை—வி. ஆர். ஐ. 3.
5. எள்—பையூர் 1.
6. பாசிப்பயறு—கோ. 5.
7. சோயா மொச்சை—ஏ.டி.டி. 1.
8. கரும்பு—கோ. க. 90063.
9. கரும்பு—கோ. 8021.
10. மிளகாய்—பி.கே.எம். 1.
11. மா—பி.கே.எம். 2.
12. எலுமிச்சை—பி.கே.எம். 1.
13. கத்தரி—பாலூர் 1.
14. வாள் அவரை—எஸ்.பிஸ். 1.
15. மான் காது வேலமரம் (அல்கேசியா ஹோலோசிரிசியா).

இப்புதிய பயிர் வகைகளின் தனித் தன்மைகளாவன: (i) உயர் விளைச்சல் அல்லது உயர்தரப் பயிர் வகைகள், (ii) சில வகைப் பயிர் பூச்சிகளின் தாக்குதல்களைச் சமாளிக்க வல்ல பயிர்வகைகள், (iii) பாசனப் பகுதிகளுக்கும் (மானாவாரிப் பகுதிகளுக்கும்) பொருத்தமான பயிர்வகைகள், (iv) சில மாவட்டங்களில் மட்டுமே பயிர் செய்யத்தக்க பயிர் வகைகள், (v) நல்ல தரத்துடன், குறைந்த காலத்தில் பயன்தர வல்ல பயிர் வகைகள், (vi) ஆண்டு முழுவதும் அல்லது எல்லா பருவங்களிலும் பயிர் செய்யத்தக்க பயிர் வகைகள்.

வேளாண் பொறியியல்:

பின்வரும் சாதனங்கள், எந்திரங்கள் மேம்படுத்தப்பட்டன:

1. விதை நடும் எந்திரம்.

2. மேம்படுத்தப்பட்ட ''கொர் கொர்ரு'' எந்திரம்.

3. அகலமான வரப்பு அமைத்து விதை நடும் எந்திரம் (டிராக்டரால் இயங்குவது).

4. நேரடியாக நெல் விதைக்கப் பயன்படும் (டிராக்டர்) எந்திரம்.

5. மின்சக்தியால் இயங்குகின்ற நிலக்கடலை தோல் நீக்கும் எந்திரம்.

6. நீர் புகாதவாறு கரையமைக்கும் சுழல்சுத்திச்சாதனம்.

7. தானாகவே சுழலுகின்ற நெல் அறுக்கும் எந்திரம்.

சோதனைக் கூடத்தில் தொடங்கி நிலத்தில் நடைமுறைப் பயிற்சி அளிக்கும் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின் ஆறு மையங்கள் 300 பண்ணைக் குடும்பங்களை ஏற்றுக்கொண்டு, அவற்றுக்குத் தொழில் நுட்ப ஆலோசனைகளை வழங்கியுள்ளன. மேலும், வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மனையியல், வேளாண் பொறியியல், பட்டுப்பூச்சி வளர்ப்பு ஆகியவை தொடர்பான துறைகளில் இலக்கு நிர்ணயித்த குடும்பங்களுக்கு இடுபொருட்களை வழங்குகின்றது.

வேளாண்மை, தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மீன் வளர்ப்பு, பட்டுப்பூச்சி வளர்ப்பு ஆகியவற்றில் பதினாறு வகைகளான அஞ்சல்வழிக் கல்வி வசதி அளிக்கப்பட்டது. இக்கல்வி வசதியைப் பெற 500-க்கும் மேற்பட்ட உழவர்கள் தங்கள் பெயரைப் பதிவு செய்தனர்.

1990 ஏப்ரல் 21]

கோயம்புத்தூர், கரும்புப் பயிர்ப் பெருக்க நிறுவனத்தின் ஒத்துழைப்புடன், கரும்புப் பயிர் வளர்ப்புக்கான புதிய ''ஆடியோ காஸட் பாடம்'' ஒன்று தயாரிக்கப்பட்டது. தென்னை, மர வள்ளிக் கிழங்கு, பட்டுப்பூச்சி வளர்ப்பு, பழ வகைகள் முதலியன போன்ற பல்வேறு பொருள்கள் பற்றிய, பதிவு செய்யப்பட்ட 117 காஸட்டுக்கள் வழங்கப்பட்டன.

தமிழ்நாடு வேளாண் பல்கலைக் கழகத்தின் புதிய திட்டப் பணிகள்:

1990-91-ல், மொத்தம் ரூ. 29.76 இலட்சம் செலவில் 21 புதிய ஆராய்ச்சித் திட்டங்களைச் செயலாக்கக் கருதப்பட்டுள்ளது.

புதிய திட்டங்கள்.

1. உலக வங்கியின் உதவியுடன் தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டம் ஒன்றை ரூ. 170 கோடி செலவில் செயல் படுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் வேளாண்மை விரிவாக்கப் பணிகளை சீரமைத்தல், சிறந்த விதை உற்பத்தி வசதிகளைப் படைத்தல், கால்நடை தீவன மேம்பாடு காணுதல், நீர்வரத்து பகுதிப் பாசன நிர்வாகத் திட்டங்களைத் தீட்டுதல் மற்றும் சிற்றூர் சாலைகள் அமைத்தல் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

2. சிதம்பரனார் மற்றும் திருநெல்வேலி கட்டபொம்மன் ஆகிய மாவட்டங்களில் புன்செய்ப் பயிர்த் திட்டம் ஒன்றை செயல்படுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது. இத் திட்டம் ரூ. 6.25 கோடி செலவில் 44,000 ஏக்கரில் செயல்படும். இத் திட்டத்திற்கு ''டேனிடா'' நிறுவனத்தின் உதவி பெறப்படும்.

3. மாநிலம் முழுவதும் புதிய ஒருங்கிணைந்த புன்செய்ப் பயிர்கள் திட்டம் ஒன்றை செயல்படுத்த முடிவெடுக்கப்பட்டுள் ளது. இத்திட்டத்தின் மூலம் 75,000 ஏக்கர் பரப்பளவு பயன் பெறும். இத்திட்டத்திற்கு ரூ. 1.5 கோடி செலவிடப்படும். இந்த புன்செய்ப் பயிர் உற்பத்தியின் உத்திகள் பற்றிய செயல் விளக் கங்கள் 300 இடங்களில் ஒவ்வொரு இடத்திலும் சுமார் 250 ஏக்கர் பட்டா நிலப் பரப்பு கொண்டதாக அமையும்.

1990-91 ஆம் ஆண்டில் பின்வரும் பகுதி இரண்டு திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

திட்டத்தின் பெயர்கள். (1)	1990-91க் கானச் செலவு (2) (ரூபாய் இலட்சத்தில்)
I. வேளாண்மைத் துறை:—	
1. அரசு விதைப் பண்ணைகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தல்.	8.00
2. தரக்கட்டுப்பாட்டுப் பணியாளர்களுக்கு இரசாயன உர சோதனைக் கருவிகள் அடங்கிய பெட்டிகளை வழங்குதல்.	0.20
3. மத்திய விதைக் கிடங்குகள் நான்கு கட்டுதல்	12.00
4. விதைப் பதப்படுத்தும் சிறிய பிரிவுகள் ஐந்து நிறுவுதல்.	5.00
5. பழனி, காஞ்சிபுரம், இருவேள்பட்டு, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் உள்ள விதைப் பதப்படுத்தும் பிரிவுகளுக்காக மின் உற்பத்திப் பொறிகள் வாங்குதல்.	9.70
6. திருவாரூர், மூங்கில் குடி அரசு விதைப் பண்ணையில் உள்ள விதைப் பதப்படுத்தும் பிரிவுக்காக கிடங்குக் கட்டுதல்.	5.75
7. பசுந்தழையுரச் செடி விதைகளைக் கொள் முதல் செய்து வழங்குதல்.	12.00
8. நூறு வேளாண்மை விரிவாக்க மையங்கள் அமைத்தல்.	35.23
II. எண்ணெய் வித்துக்கள் துறை:—	
9. பனையூர், வைகை அணை ஆகிய இடங்களில் உள்ள தென்னங்கன்று வளர்ப்புப் பண்ணைகளுக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல்.	5.28
10. நெய்வேலியிலுள்ள தாய் தென்னந்தோப்புக்கு அடிப்படை வசதிகள் செய்து கொடுத்தல்.	4.93 93
11. பி. ஜி. புதூர், வெள்ளாள விடுதி ஆகிய இடங்களில் உள்ள தென்னங்கன்று வளர்ப்புப் பண்ணைகளில் ஆறு பணியாளர் குடியிருப்புகள், அலுவலகங்கள் கட்டுதல்.	6.00

213995
சென்னை 600 009

திட்டத்தின் பெயர்கள். (1)	1990–91-க்கான செலவு. (2) (ரூபாய் இலட்சத்தில்.)
12. வெள்ளாள விடுதி குட்டை, நெட்டை தென்னங்கன்று வளர்ப்புப் பண்ணைக்கு முள் கம்பி வேலி அமைத்தல்.	0.60
III. தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை:—	
13. தெரிந்தெடுக்கப்பட்ட அரசு தோட்டக்கலை பண்ணைகளிலும், சென்னை தரமணி தோட்டக்கலைப் பயிற்சி நிலையத்திலும் பாசன வசதிகளைப் பெருக்கும் திட்டம்.	6.00
14. அரசு தோட்டக்கலைப் பண்ணைகள் 7-இல் கிடங்கு வசதிகள் செய்யும் திட்டம்.	8.50
15. திண்டுக்கல்—காயிதே மில்லத் மாவட்டத்தில் சமவெளிப் பகுதிகளில் தோட்டக் கலை நாற்றுப்பண்ணை ஏற்படுத்தும் திட்டம்.	10.91
IV. விதைச் சான்று அளிப்புத் துறை:—	
16. விதைப் பரிசோதனை ஆய்வுக் கூடம் ஒன்றை ஏற்படுத்தும் திட்டம்.	6.00
V. வேளாண்மைப் பொறியியல்:—	
17. இணைக்கருவிகளுடன், சக்கர வகை டிராக்டர்கள் 22-ம் ஐந்து டன் பளுதூக்கி இயந்திரம் தாங்கி டிராக்டர் ஒன்றும் வாங்குதல்.	35.00
VI. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம்:—	
18. ஆராய்ச்சி குறித்த புதிய திட்டங்களைச் செயல்படுத்தத் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்திற்கு நிதியுதவி.	29.76
பெரு மொத்தம்	200.86

LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jagannatham Book House, 55, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-17.

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.

6B
12-58

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS